# ஏழு முத்திரைகள்

## குதிங்கால் வகுப்பாரின் பார்வையில்



ஓர் ஆராய்ச்சிப் பாடம்

# வெளிப்படுத்தின விசேஷம்

## குதிங்கால் வகுப்பாரின் பார்வையில்

ஓர் ஆராய்ச்சிப் பாடம்

இவ்வூழியம் பரிசுத்தவான்களுக்காய்,

விசேஷமாக “அவரின் குதிங்கால் வகுப்பாருக்கும்” ...

விசுவாச வீட்டாருக்கும்

அர்ப்பணிக்கப்பட்டுள்ள அதே வேளையில்

... நமது பரமபிதாவிற்கும்,

நமது எஜமானரும்

“இராஜாதி இராஜா மற்றும் கர்த்தாதி கர்த்தரும்”

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கும்,

அவரது பரிசுத்த ஊழியஞ்செய்யக் கிட்டின இந்தச் சிலாக்கியத்திற்காக

நாங்கள் மிகுந்த நன்றிகளை ஏறெடுக்கின்றோம்.

www.foodfornewcreature.com

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முதலாம் முத்திரை | Page no. 6 |
| இரண்டாம் முத்திரை | Page no. 22 |
| மூன்றாம் முத்திரை | Page no. 32 |
| நான்காம் முத்திரை | Page no. 42 |
| ஐந்தாம் முத்திரை | Page no. 57 |
| ஆறாம் முத்திரை | Page no. 85 |
| ஏழாம் முத்திரையின் முன்னிகழ்வு | Page no. 115 |
| ஏழாம் முத்திரை | Page no. 184 |

**“அன்றியும், உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்த ஒரு புஸ்தகத்தைச் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய வலதுகரத்திலே கண்டேன். புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரவான் யாரென்று மிகுந்த சத்தமிட்டுக் கூறுகிற பலமுள்ள ஒரு தூதனையுங் கண்டேன்.”**
**– வெளிப்படுத்தல் 5:1 – 2**

# வெளிப்படுத்தல் 5:1-2

ஆம் சகோதர சகோதரிகளே, **வெளிப்படுத்தல் புஸ்தகத்திலுள்ள** ஏழு முத்திரைகளைத்தான் இப்போது தியானிக்கப்போகிறோம்.

அவை 6 –ஆம் அதிகாரம் வசனம்–1 – துவக்கி 8 – ஆம் அதிகாரம் ஆரம்பம் வரைக்கும்... துல்லியமாக சொல்லவேண்டுமானால், வசனம்–5 – இல் **முடிவடைவதைக்** காண்கிறோம்**...**

மேலும், 6 மற்றும் 8 – ஆம் அதிகாரங்களுக்கு இடையில் ஓர் இடைக்கால நிகழ்வாக / இடைக்காட்சியாக

**.... 7 ஆம் அதிகாரம்**
நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

.... இது “ஏழு முத்திரைகளில்” ஒரு பகுதியாக இல்லாத காரியத்தினை உள்ளடக்கியிருப்பதாகத் **தெரிகிறது**, ஆனபோதிலும், ஆறாம் முத்திரை விளக்கத்தின் முடிவுக்கும், ஏழாம் முத்திரை விளக்கத்தின் ஆரம்பத்துக்கும் இடையில் இந்த அதிகாரம் வைக்கப்பட்டுள்ளது.
**இதெல்லாம் எதைக் குறிக்கிறது என்பதைக் காணவிருக்கிறோம்.**

ஆனால் முதலில் வெளிப்படுத்தல் புஸ்தகத்தில் எந்த இடத்தில் “ஏழு முத்திரைகள்” தோன்றியதோ **அந்த இடத்திலிருந்தே துவங்கலாம்!**

ஆம்! அது நம்முடைய ஆதார வசனத்தில் பேசப்பட்டிருக்கும் அந்தப் “புஸ்தகமே” ஆகும் –



## வெளிப்படுத்தல் 5:1

**“...உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்த ஒரு புஸ்தகத்தை...”**

ஆம்! இதேதான்!

**இவற்றுக்கெல்லாம் என்ன அர்த்தம்?**

முதலாவதாக இது முற்றிலும் அடையாளப்பாஷையாகும், மேலும் அதை எவ்வகையிலும் நேரடியாக அர்த்தங்கொள்வதென்பது தவறானதாயும், பிழையானதுமாயும் இருக்கும்! இங்கே என்ன அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்பதைப் புரிந்துகொள்வதற்கு, இந்தத் தரிசனம் நடக்கும் காலக்கட்டத்தைப் புரிந்துகொண்டால் நமது ஆராய்ச்சிக்கு உதவியாயிருக்கும்.

பின்வரும் வசனத்தை வாசிக்கையில், நம்மால் அதை அடையாளம் காண முடிகின்றது –

**வசனம்–6**

**“...இதோ, அடிக்கப்பட்டவண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக்கண்டேன்....”**

ஆம்! இது மரித்து உயிர்த்தெழுந்த பிறகும் ... பரிசுத்த ஆவியின் பெந்தெகொஸ்தே வெளிப்பாட்டிற்கு முன்புமிருந்த இயேசுவைக் குறிக்கிறது!

இந்தக் கர்த்தரே கீழ்க்காணும் இந்த வார்த்தைகளை தம்முடைய சீஷர்களிடம் உரைத்திருந்தார் –

**மத்தேயு 28:18**

**“சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது....”**

ஆம்! இந்தக் கட்டத்தில், அவர் **ஏற்கனவே** **“புஸ்தகத்தைப்”** பெற்றிருந்தார்

**சரி! அப்படியானால் இந்தப் “புஸ்தகம்” எதைக் குறிக்கிறது?**

அது பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளதாகக் காண்கிறோம் –

**“...அன்றியும், உள்ளும் புறம்பும் எழுதப்பட்ட ... ஒரு புஸ்தகத்தைச் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய வலதுகரத்திலே ...”**

“புஸ்தகம்” என்பது ஏதோவொன்றின் பதிவைக் குறிக்கிறது –
இந்த விஷயத்தில் அது

**மனுக்குலத்திற்கான தேவனுடைய இரட்சிப்பின்
தெய்வீகத் திட்டமாக உள்ளது**

... அது “**அவருடைய வலதுகரத்திலே**” இருந்தது –
இதன் அர்த்தம் யாதெனில், “**கரம்**” என்பது
அது அவருடைய கட்டுப்பாட்டில் இருப்பதை
மாத்திரம் குறிக்காமல், கூடுதலாக “**வலது**” என்று
கொடுக்கப்பட்டுள்ளது கீழேயுள்ளபடி
அது **பிரியமான** ஒரு ஸ்தானத்தில் இருப்பதைக்
குறிக்கிறது –



- **மத்தேயு 25:34** - “வலது பக்கத்திலுள்ள” “செம்மறியாடுகள்”....

மற்றும்

- **எபிரெயர் 1:3** – கர்த்தராகிய இயேசு தாமே பிதாவின் “வலதுபாரிசத்திலே” வீற்றிருக்கிறார்.

ஆகவே, இந்த இரட்சிப்பின் தெய்வீகத் திட்டம் தேவனுக்கு மிகவும்
பிரியமான ஒன்றாகும், இது கீழுள்ள வசனத்தின் மூலம் நன்கு
உறுதிப்படுத்தப்படுகிறது –

**ஏசாயா 53:10**

**“கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்தநாளாயிருப்பார், கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்.”**

மீண்டும் இதே விஷயத்தைப்பற்றி பின்வரும் வசனத்தில் நாம் வாசிக்கிறோம் –

**எபேசியர் 1:10**

**“தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார்.”**

ஆம்! தேவனுடைய "**தயவுள்ள சித்தமாகிய**" இந்தத் தெய்வீகத் திட்டமானது இங்கே அடையாளரீதியில் –

"**அவருடைய வலதுகரத்திலே**" என்று கொடுக்கப்பட்டுள்ளது

இப்போது இந்தப் "**புஸ்தகத்தில்**" அந்தத் திட்டத்தைக் குறித்த எழுத்துக்கள் அல்லது **வெளிப்படுத்தல்கள்** "**உள்ளும் புறம்பும் எழுதப்பட்டதாக**" இருந்தன. "**உள்ளான**" பகுதியே ஏழு முத்திரைகள் மூலம் **முத்திரிக்கப்பட்டிருந்தது**!

"**புறம்பாக**" உள்ள பகுதியானது புலப்படக்கூடியதும் வாசிக்கக்கூடியதுமாய் இருக்கிறது; மேலும், இந்தப் பகுதி, தெய்வீகத் திட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டும், சுவிசேஷ யுகம் துவங்கும் வரையில் அவற்றில் பல நிறைவடையாததுமாயிருந்தவைகளை உள்ளடக்கியிருந்தது!

**ஆம்! இவைகள், பின்வரும் தெய்வீகத் திட்டத்தின் வெளிப்படுத்தல்கள் போன்றவைகள் ஆகும்....**

- **"ஸ்தீரியின் வித்து" மற்றும் "சர்ப்பத்தின் வித்து" பற்றிய தீர்க்கதரிசனம்**
- **"பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" என்னும் ஆபிரகாமிய வாக்குத்தத்தம்**
- **"மோசேயைப் போன்றதொரு" – மேசியாவின் வருகை**
- **ஆசரிப்புக்கூடாரமும், அதின் பலிகளும்**
- **நியாயப்பிரமாணமும், அதில் மறைந்துள்ள அனைத்து நிழல்களும்**

ஆம்! பிரகடனப்படுத்தப்பட்டு வெளிப்படுத்தப்பட்ட ஏதோவொன்று இருந்தாலும், எதுவுமே முற்றிலும் தெளிவாக இருந்ததில்லை!

இது ஒரு காகிதத்தில் பின்னோக்கி எழுதுவது போல இருந்தது, காகிதத்தை **வெளிச்சத்திற்கு நேராகப் பிடித்து, பின்னால் இருந்து பார்க்கும் வரை**, ஒருவருக்கும் அது விளங்காது!

ஆம்! **முழுமையாகப்** புரிந்துகொள்வதற்கு "**புஸ்தகத்திற்கு**" "**உள்ளாக**" இருக்கும் அந்தப் பகுதியினுடைய வெளிப்படுத்தல் தேவைப்படுகிறது. மேலும்

அதற்கு, புஸ்தகத்தைத் திறப்பதற்கும், அதின் முத்திரைகளை உடைப்பதற்கும் "**பாத்திரமான**" **ஒருவர்** தேவைப்பட்டது.

**ஆ! ஆம்! –**

"**பாத்திரவான் யார்**"? **என்னும் கேள்வியானது**

தெய்வீகத் திட்டத்தினை **நிறைவேற்றுபவருக்குத்** தேவன் திறந்திட்ட வாய்ப்பைக் குறிக்கிறது! மேலும் அவர், முழு மனுக்குலத்தையும் மீட்பதற்கான **மீட்கும் பொருளென ஆகி,** அதற்காய்த் தமது ஜீவனையே **வழங்குவதில்**, தெய்வீகச் சித்தத்திற்கு அடிபணிந்து தமது பாத்திரத்தன்மையை நிரூபிக்க வேண்டியதாயிருந்தது. மேலும் இவ்வாறு அவர் செய்தபோது, அவர் தேவன் மீதும், மற்றும் விழுந்துபோன மனுக்குலத்தின் மீதுமான தமது **உச்சபட்ச அன்பை** நிரூபிக்கலானார். மேலும் இவ்வாறாக அவர் –

அந்தத் திட்டத்தினை நிறைவேற்றுபவராக இருப்பதற்குப் "**பாத்திரவானாகவும்**" மற்றும் திட்டத்தைப் பற்றியும் அதன் நேரங்காலங்கள் பற்றியும் தெளிவுடன்கூடிய புரிதலை முழுமையாகப் பெற்றுக்கொள்வதற்குத் தகுதியுடையவரானார்!

இது நம்மை **புஸ்தகத்தினிடத்திற்கும்,** "**ஏழு முத்திரைகள்**" மூலம் அது முத்திரிக்கப்பட்டிருப்பதற்கும் அழைத்துச் செல்கிறது

இதுகுறித்து ஏழு முத்திரைகள் பற்றிய புரிதலில் நாம் பார்க்கவிருக்கிறோம்..... இது பின்வருபவையைக் குறிக்கிறது...

**சிறிது சிறிதாக வெளியரங்கமாகும் நிகழ்வுகளான...**

- **சபை மற்றும் அதன் இரட்சிப்பு பற்றிய நிகழ்வுகள்**

**மற்றும்...**

- **அந்த வியத்தகு "அக்கிரமத்தின் இரகசியத்தினுடைய" வளர்ச்சி (2 தெசலோனிக்கேயர் 2:7)**

ஆம்! கிறிஸ்து மற்றும் அந்திக்கிறிஸ்து ஆகிய இருவரும் இரகசியங்களே!!! **(கிறிஸ்து ஓர் இரகசியம்... உரோமர் 16:25)**

"முத்திரை" என்பது இந்த "**இரகசியங்களைக்**" குறிக்கிறது மற்றும் "ஏழு"

என்பது கிறிஸ்து அந்திக்கிறிஸ்து ஆகிய இருவருக்குமே, அவர்களின் வளர்ச்சியும் வரலாறும் சுவிசேஷ யுகத்தில் **ஏழு நிலைகளாக** அல்லது காலக்கட்டங்களாக இருக்கும் என்பதைக் குறிக்கிறது.

- கிறிஸ்துவுக்கு ➤ 144000 அங்கத்தினரைக் கொண்ட ஒரு "சரீரம்" வளர்ச்சியடைந்து, இறுதி மகிமைப்படுத்தப்படுதலில் நிறைவடைவதற்கென்று ஏழு காலங்கள் உள்ளதுபோல...
- அந்திக்கிறிஸ்துவுக்கு ➤ கள்ளச் சபை அமைப்பு நிறுவப்படுவதற்கும், கடைசியில் அதன் இறுதி அழிவுக்குமென அதே ஏழு காலங்கள் உள்ளது.

ஆம்! ஒருவர் "**ஏழு முத்திரைகளைப்**" பின்வருமாறு சுருக்கிக் கூறலாம் –

**சுவிசேஷ யுக காலத்தின் கிறிஸ்து மற்றும் அந்திக்கிறிஸ்துவினுடைய இரகசியங்களின் ஏழு மடிப்பான / பாகமான வெளிப்படுத்தல்.**

**இந்த விஷயத்தைப் பற்றிய அறிமுகத்தையும்,** கருத்துக்களையும் பார்த்தப் பிறகு .... இப்போது ஏழு முத்திரைகள் பக்கம் திரும்பி அவற்றை ஒவ்வொன்றாக ஆராய்ச்சி செய்வோமாக –

# முதலாம் முத்திரை

**(வெளிப்படுத்தல் 6: 1 – 2)**

**சபை காலக்கட்டம் : எபேசு**

**காலப்பகுதி : கி.பி. 33 – கி.பி. 70**

**வசனம்-1**

**"ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளில் ஒன்றை உடைக்கக்கண்டேன். அப்பொழுது நான்கு ஜீவன்களில் ஒன்று என்னை நோக்கி: நீ வந்து பார் என்று இடிமுழக்கம்போன்ற சத்தமாய்ச் சொல்லக்கேட்டேன்."**

இப்போது நாம் இங்கே "முத்திரைகளையும்," அதற்குப் பயன்படுத்தப்பட்ட

அடையாளங்களையும் புரிந்துகொள்ளும்போது, **இரண்டு விஷயங்களை நாம் நினைவில் வைக்க வேண்டியிருக்கிறது.**

#1. சுவிசேஷ யுக சபையின் ஏழு **காலக்கட்டங்களுடன் ஒத்ததாக இருக்கின்ற** இந்த “முத்திரைகளினுடைய” நிகழ்வுகள், வெளிப்படுத்தல் 2 – ஆம் மற்றும் 3 – ஆம் அதிகாரங்களில் வரையறுக்கப்பட்டுள்ளன.

எக்காளங்களுக்கும்கூட இது பொருந்தும்! எனவே, எங்கள் விளக்கம் இந்த இசைவினைக் கண்டிப்பாக பின்பற்றும், ஏனெனில் முத்திரைகளுக்கான “ஏழு” என்கிற எண்ணானது சுவிசேஷ யுகத்தின் அந்த **ஏழு காலப்பிரிவுகளுக்கு** ஒத்திருக்கிறது என்பது மிகவும் நியாயமானதாக இருக்கிறது.

#2. மேலும் **இரண்டாவதாக...** நமது விளக்கத்தில், அனைத்து ஏழு முத்திரைகளிலும், உண்மை திருச்சபை மற்றும் பொய்யான கள்ளச்சபை ஆகிய இரண்டையுமே நாம் காண்பது அவசியம். உண்மை திருச்சபையைப் பொறுத்தவரையில், வளர்ச்சி என்பது **தேவனுடைய ஒப்புதலுடன் இருக்கிறது**... கள்ளச்சபையின் வளர்ச்சியைப் **பொறுத்தவரையிலோ, அது தேவனுடைய அனுமதியின்பேரில் இருக்கின்றது**!!!

எனவே பயன்படுத்தப்பட்ட பின்வரும் பதங்கள் மற்றும் சொற்றொடர்கள் இவ்வாறாக உள்ளன –

**“அவரிடம் கொடுக்கப்பட்டது”**

**அல்லது**

**“அவருக்குக் கொடுக்கப்பட்டது”**

கீழ்க்காணும்படி இது தேவனுடைய தீமையின் அனுமதிக்கு ஒத்திருக்கிறது –

**லூக்கா 4:6**

**“இவைகள் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது”**



ஆம்! இது தனது அனுமதிக்கப்பட்ட அதிகாரத்தைப் பற்றி சாத்தான் பேசினதாகும்.

அதே காரியத்தைப் பற்றி பின்வரும் வசனங்களில் நம்மால் வாசிக்க முடியும் –

**யோபு 1:12 மற்றும் 2:6**

**"கர்த்தர் சாத்தானை நோக்கி: இதோ, அவனுக்கு உண்டானவையெல்லாம் உன் கையிலிருக்கிறது; அவன்மேல்மாத்திரம் உன் கையை நீட்டாதே என்றார்; அப்பொழுது சாத்தான் கர்த்தருடைய சந்நிதியைவிட்டுப் புறப்பட்டுப்போனான்."**

**"அப்பொழுது கர்த்தர் சாத்தானை நோக்கி: இதோ, அவன் உன் கையிலிருக்கிறான்; ஆகிலும் அவன் பிராணனைமாத்திரம் தப்பவிடு என்றார்."**

**ஆம்! மிகவும் தெளிவாக இருக்கிறது!**

இவ்வாறு ஏழு முத்திரைகளில், இவ்வகையான பாஷையிலிருக்கும் குறிப்புகள் மெய்த் திருச்சபையைக் குறிக்காமல், மாறாக கள்ளச் சபையையே குறிக்கின்றதாய் இருக்கின்றன !

இப்போது நாம் திரும்பவும் வாசிக்கலாம் –

**வெளிப்படுத்தல் 6:1**

**"...அப்பொழுது நான்கு ஜீவன்களில் ஒன்று என்னை நோக்கி: நீ வந்து பார் என்று இடிமுழக்கம்போன்ற சத்தமாய்ச் சொல்லக்கேட்டேன்....."**

இங்குள்ள நான்கு ஜீவன்களும் தேவனுடைய **நான்கு குணாதிசயங்களுக்கான** அடையாளங்கள் என்பதை நாம் அறிவோம்.... மேலும் இதை அந்த ஜீவன்கள் ஒவ்வொன்றும் "**வந்து பார்**" என்று அழைக்கும் **அடுத்த மூன்று முத்திரைகளிலும்**கூட காணலாம்.
இவ்வாறாக அவை மொத்தம் **நான்காக** உள்ளன!

இந்தப் பண்புகளின் வரிசையைப் புரிந்துகொள்வதற்காக நாம் **வெளிப்படுத்தல் 4:7** – ஆம் வசனத்துக்கு வரலாம். மேலும் முதலாம் ஜீவன், சிங்கத்தைப் போல் இருந்ததைக் கவனியுங்கள்!!

அப்படியானால் நாமும் இதே வரிசையை தான் பின்பற்ற வேண்டுமா???



**வெளிப்படுத்தல் 4 – ஆம் அதிகாரத்தினுடைய** இந்த “**நான்கு ஜீவன்கள்**”, அதிலும் குறிப்பாக (வெளிப்படுத்தல் 4) வசனம் – 7 – இல், “**முதலாம் ஜீவன் சிங்கத்திற்கொப்பாகவும்**” பற்றின ஆராய்ச்சி மற்றும் விளக்கத்தில், உலகெங்கிலும் உள்ள சகோதரர்களிடையே மிகவும் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன என்பது அனைவரும் அறிந்ததே. “**சிங்கத்திற்கொப்பாகவுள்ள முதலாம் ஜீவன்**” **தெய்வீக நீதியைக்** குறிக்கிறது மற்றும் “**காளைக்கொப்பாகவுள்ள இரண்டாம் ஜீவன்**” **தெய்வீக வல்லமையைக்** குறிக்கிறது என்று விளக்கும் ஒரு கருத்துத்தொகுப்பு (a school of thought) உள்ளது.

இக்கருத்தின் விவரங்களுக்குள்ளாகச் செல்ல இப்போது நமக்கு நேரம் இல்லை என்றாலும், அது ஒரு கருத்துத்தொகுப்பு மாத்திரமே (a school of thought) என்று சொல்வது போதுமானதாக இருக்கும்.

இந்த விஷயத்தை **தலைகீழ் முறையில்** விளக்கும் மற்றொரு சிந்தனைத்தொகுப்பு உள்ளது ... “**சிங்கம்**” என்பது தெய்வீக வல்லமையின் அடையாளம்.... மற்றும் “**காளை**” (**கிரேக்க** # 3448 - “**மொஸ்கோஸ்** / **moschos / mos'-khos**” என்பது இளங்காளையையும் குறிக்கும்) என்பது தெய்வீக நீதியை அடையாளப்படுத்துகிறது, மேலும் ஆசரிப்புக்கூடாரத்தில் பாவநிவாரணநாளினுடைய நிழற்படத்தில், தெய்வீக நீதியைப் பூர்த்தி செய்வதற்கான பலியினை நிறைவேற்றுவதற்கான வழிமுறையாக காளை இருப்பதால் (**லேவியராகமம் 16** ஆம் அதிகாரம்) இக்கூற்று கூடுதல் ஆதாரப்பூரவமாகிறது.

**இந்தக் கருத்தே எங்களுக்குச் சரியெனப்படுகிறது!**

மேலும், முதலாம் ஜீவனான சிங்கம் தெய்வீக வல்லமையின் அடையாளம் என்கிற கருத்தின்பக்கம் சாய்வதற்கு ஒரு வேதாகமப்பூர்வ ஆதாரமாக, நாம் சுட்டிக்காட்டுவது யாதெனில், தேவனைப் பற்றி புரிந்துகொள்ள வேண்டிய **முதலாம் அம்சம்** அவர் சர்வவல்லமையுள்ளவர் என்பதாகும், அதாவது அவர் தமது சிருஷ்டிகள் அனைத்தின் **சிருஷ்டிக்கர்த்தாவாக** மற்றும் **ஜீவன் கொடுப்பவராக ... ஜீவனின் ஊற்றாக** இருப்பதேயாகும்!

ஆகவே, தேவன் தம்மை முதன்முதலில், ஆபிரகாம் என்னும் மனிதனுக்கு வெளிப்படுத்தியபோது, அவர்
"**எல்–ஷடாய்**"
என்று அறியப்பட்டார் என்பதாகப் பின்வரும் வசனத்தில் காண்கிறோம் –

**யாத்திராகமம் 6:3**

"**சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தரிசனமானேன்...**"

**(எபிரெய # 410 & 7706 – "எல்–ஷடாய்" / "El-shaddai")**

**(மேலும் ஆதியாகமம் 17:1 / 28:3 / 35:11 / 48:3 –இலும் காணப்படுகிறது)**

மீண்டுமாக.... தேவன் தம்முடைய வெளிப்படுத்தப்பட்டதும், எழுதப்பட்டதுமான வார்த்தையான வேதாகமத்தைத் துவங்கும்போது, அவர் தம்மைச் சிருஷ்டிகரென்றே வெளிப்படுத்துகிறார் –

**ஆதியாகமம் 1:1**

"**ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.**"

ஆம்! சிருஷ்டிகராகவும், ஜீவன் கொடுப்பவராகவும் தேவனுக்கு இருக்கும் தெய்வீக வல்லமையே, அவர் மற்றும் அவரது குணலட்சணங்கள் பற்றிய வெளிப்பாட்டின் முதல் புரிதலாக இருக்க முடியும்.

**ஆகவே இந்தக் கருத்தே நாம் பொருத்தமானதாகவும் வேதாகமப்பூர்வமாக ஆதரிக்கப்படுவதாகவும் காண்கிறோம்!**

**வெளிப்படுத்தல் 6:1** எனும் நமது வசனத்தை மீண்டும் பார்த்தோமானால் –

…“**இடிமுழக்கம்போன்ற சத்தமாய்**” இருந்ததாக வாசிக்கிறோம்…

இது முதலாம் ஜீவனை **அடையாளப்படுத்துவதாக** அல்லது அதின் குறிகாட்டியாக உள்ளது!

**இதன் அர்த்தம் என்ன?**

அதற்குப் பின்வரும் வசனத்தை இப்போது நாம் வாசிக்கலாம் –

**வெளிப்படுத்தல் 10:3**

**“சிங்கம் கெர்ச்சிக்கிறதுபோல மகாசத்தமாய் ஆர்ப்பரித்தான்; அவன் ஆர்ப்பரித்தபோது ஏழு இடிகளும் சத்தமிட்டு முழங்கின.”**

ஆம்! இடியானது ஒரு **சிங்கத்தின் கர்ஜனைக்கு ஒப்பாக** ஒப்பிடப்படுகிறது!! ஆகவே இந்த “ஜீவன்களில்” **முதலாவது** மெய்யாகவே **சிங்கம்** தான், மேலும், **வெளிப்படுத்தல் 4:6** – ஆம் வசனத்தின் வரிசைக்கு ஒத்துமிருக்கிறது !!



“**சிங்கம்**” என்பது தேவனுடைய குணலட்சணமான **வல்லமை** –இன் **அடையாளமான பிரதிநிதியாகும்**

ஆம்! முதலாம் முத்திரை உடைக்கப்பட்டபோது… அங்கே வெளிப்பட்ட நிகழ்வுகளானது தேவனுடைய குணலட்சணமாகிய வல்லமையின்பக்கம் கவனத்தை ஈர்க்கிறது!!

**இதன் அர்த்தம் என்ன?**

சரி, இது ஏதோவொரு அடையாளத்தைக் குறிக்கிறதாயிருக்கிறது! அதாவது, விரைவில் வெளிவரப்போகின்றதும், முதலாம் முத்திரையில் அல்லது சபையின் முதலாம் காலக்கட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ளதுமான வளர்ச்சிகள், தேவனுடைய **சர்வவல்லமையுள்ள வல்லமை**யின் இருப்புக்கு ஒரு சவாலாகவும் **மிகவும் முரண்பாடாகவும்** இது தோன்றும்.

**சகல தீமைகளுக்கும் தொடர்பாக உள்ள** தேவனுடைய **சர்வவல்லமையுள்ள சக்தியைக்** குறித்த வேத வாக்கியங்களிலிருந்து இங்கே நாம் ஏதோவொரு விஷயத்தைப் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது! இந்த அற்புதமான விஷயத்தைப் புரிந்துகொள்ள நாம் சில வேத வாக்கியங்களை ஆராய வேண்டியுள்ளது! பின்வரும் வசனத்துடன் துவங்கலாம் –

**ஏசாயா 45:7**

**"ஒளியைப் படைத்து, இருளையும் உண்டாக்கினேன், சமாதானத்தைப் படைத்து தீங்கையும் உண்டாக்குகிறவர் நானே; கர்த்தராகிய நானே இவைகளையெல்லாம் செய்கிறவர்."**

இந்த வசனம், ஆரம்பத்தில் மனித சிந்தையால் புரிந்து, உணர்ந்துகொள்வதற்கு மிகவும் கடினமான, மிகவும் **வியக்க வைக்கும்** சத்தியத்தை விவரிக்கிறது! இங்கே தேவன் – "**கர்த்தர்** / *THE LORD*" **சகல தீமைகளுடனான** தமது உறவை மிகத் தெளிவாக விளக்குகிறார்!

கவனியுங்கள், "**ஒளி**" மற்றும் "**சமாதானம்**" தொடர்பாகத் தேவனுடைய செயல்கள் "**படைத்து**" (**"from" and "make"**) என்றுள்ளது, ஆனால் "**இருள்**" மற்றும் "**தீங்கு**" தொடர்பாகத் தேவனுடைய செயல்கள் "**உண்டாக்குதல்**" / "**create**" (**ஸ்ட்ராங்ஸ் – எபிரெய # H1254**) என்று விவரிக்கப்படுகிறது. இது முந்தைய வார்த்தையிலிருந்து வேறுபட்ட வார்த்தையாகும்.

**இதன் அர்த்தமென்ன?**

**சகோ ரசல் அவர்கள் R849 – இல் பின்வருமாறு எழுதுகிறார் ......**

**தேவன் மனிதனைக் குற்றவாளி என்று தீர்த்து, நீதியான தண்டனையாகிய மரணத்தைத் தீர்ப்பாக அறிவித்தார். அதைச் செயல்படுத்துவதில், மனிதனுக்கு எதிராக செயல்பட பல்வேறு கருவிகள் அனுமதிக்கப்படுகின்றன .இவ்வாறாக "தீங்கை உண்டாக்குகிறவர்" தேவன் என்று கூறப்படுகிறது [ஏசாயா 45:7]**

ஆகவே, தீமையைக் குறித்து நாம் காண்பது யாதெனில், தேவனுடைய அனுமதியே அல்லது அனுமதிக்கும் வல்லமையே இத்தகைய தீமைகளையும், எதிர்ப்பையும் வெளிப்படுத்தவோ அல்லது தோன்றுவதற்கோ அனுமதிக்கின்றது. நாம் கீழே வாசிக்கும்வண்ணமாக தேவன் இந்த விஷயத்தில் தமது மேற்பார்வையின் வல்லமையைப் பயன்படுத்துகிறார் –

**சங்கீதம் 76:10**

**"மனுஷனுடைய கோபம் உமது மகிமையை விளங்கப்பண்ணும்; மிஞ்சுங்கோபத்தை நீர் அடக்குவீர்."**

மீண்டுமாக, இது உலகில் – மனுக்குலத்தின் விவகாரங்கள் மற்றும் வரலாற்றின் மீதிருக்கிற தேவனுடைய இந்த மேற்பார்வையின் வல்லமையைப் பற்றி பேசுகிறது!

**மீண்டும் சகோ. ரசல் அவர்கள் R1778 – இல் பின்வருமாறு எழுதுகிறார் …**

**"மனிதன் மற்றும் பிசாசுகளின் கோபம், எவ்விதத்திலும் தேவனுடையதல்ல என்றாலும், அவைகள் தேவனுடைய மேற்பார்வையினால் இயக்கப்படுகிற அல்லது கட்டுப்படுத்தப்படுகிறவையாக இருக்கின்றன"**

ஆகவே, **எல்லாத் தீமைக்கும்** தேவன் எந்த வகையில் தொடர்புள்ளவராய் இருக்கிறாரென்றால், அதற்கான அவருடைய **அனுமதி** மற்றும் அதனை **மேற்பார்வையிடும் பராமரிப்பு** ஆகியவற்றினாலேயே என்பதைத் தெளிவாகக் காண்கிறோம்.



இவ்வாறாக, “**நீ வந்து பார்**” என்று சொல்லும் “**சிங்கம்**” அல்லது தேவனுடைய குணலட்சணமான **தெய்வீக வல்லமையானது,** சுவிசேஷ யுகத்தின் துவக்கத்தில், ஏதோவொன்று உருவாக – அதாவது எவ்வாறு **அந்திக்கிறிஸ்து** அமைப்பு உருவாக அனுமதிக்கப்பட்டது என்பதைக் குறிப்பதாக நாம் புரிந்துகொள்ளலாம்.

“**அக்கிரமத்தின் இரகசியமாகிய**” (**2 தெசலோனிக்கேயர் 2:7**)

இந்த அமைப்புக் குறித்து பின்னர் நாம் பார்க்கவிருக்கிறோம்.

இவ்வாறு முதலாம் முத்திரையின் இந்த முதல் வசனத்தைப் பற்றிய நமது கருத்துக்களை நிறைவு செய்கிறோம்.

இப்போது முதலாம் முத்திரையின் உள்ளடக்கங்களைப் பார்ப்போம் –

**வசனம் – 2**

**“நான் பார்த்தபோது, இதோ, ஒரு வெள்ளைக்குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவன் வில்லைப் பிடித்திருந்தான்; அவனுக்கு ஒரு கிரீடங் கொடுக்கப்பட்டது; அவன் ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான்.”**

**ஆ! ஆம்...**

“**ஒரு வெள்ளைக்குதிரை**” முதல் நான்கு முத்திரைகள் உடைக்கப்படும்போது, **வெவ்வேறு நிறங்கொண்ட குதிரை** ஒவ்வொன்றாக வெளிவருவதைப் பற்றி இங்கே நாம் காணவிருக்கிறோம். இங்கு “**குதிரை**” என்பது உபதேசத்துக்கான (**ஏசாயா 31:3**) அடையாளமாகும் ... மாறுபட்ட வண்ணங்கள் என்பது அந்தக் குறிப்பிட்ட காலக்கட்டத்தில் **உபதேசத்தின் நிலைமையைப்** பிரதிபலிக்கின்றன.



**ஆம்! இங்குள்ள “வெள்ளைக்குதிரை” முதலாம் சபை காலக்கட்டத்திலிருந்த சத்தியத்தின் பரிசுத்தமான உபதேசத்தைக் குறிக்கிறது.**

**ஆம்! இது, பின்னர் “பரிசுத்தவான்களுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட” (யூதா: 3) “மகா பரிசுத்தமான விசுவாசமாகும்.” இது சபையினுடைய அப்போஸ்தலரின் காலமாக இருந்தது; மேலும் அவர்கள் அந்த விசுவாசத்தின் ஆற்றலுடைய பாதுகாவலர்களாக இருந்து, சத்தியத்தை அதன் பரிசுத்தத்தில் வைத்திருக்க பிரயாசப்பட்டு “போராடவும்” செய்தார்கள்**

இப்போது நாம் குதிரையின் மீது **ஏறியிருந்தவருக்கு / சவாரி செய்பவருக்கு** வரலாம் – அவர் உபதேசங்களின் விசுவாசிகளை அடையாளப்படுத்துகின்றார்..


இங்கே விவரிக்கப்பட்டுள்ள ஏறியிருந்தவரை / சவாரி செய்பவரைப் பற்றிப் பார்க்கலாம் –

**“...அதின்மேல் ஏறியிருந்தவன் வில்லைப் பிடித்திருந்தான்; அவனுக்கு ஒரு கிரீடங் கொடுக்கப்பட்டது...”**

இங்கே “**வில்**” என்ற சொல், கிரேக்க வார்த்தையான “**டாக்ஸன்**” / “**toxon**” (ஸ்ட்ராங்கின் **கிரேக்கம் #** 5115) என்பதிலிருந்து வந்தது, இதன் பொருள் துகிலினாலான அல்லது துணியாலான ஒரு வில்!!



பல விரிவுரைகள் இந்த “**வில்**” – ஐ ஓர் ஆயுதமாகக் காட்டியுள்ளன. எனவே, இந்த ஏறியிருந்தவர் / சவாரி செய்பவர் **முற்றிலும் கள்ளச் சபை** எனப் பொருள் கொள்ளுமாறு விளக்கம் அளிக்கப்பட்டது!



ஆனால், வேதவசனங்களாலும்கூட ஆதரிக்கப்படும் **ஒரு மாறுபட்ட கருத்தினை** முன்வைக்க நாங்கள் விரும்புகிறோம்!



"**வில்**" - "**டாக்ஸன்**" என்பதற்கான கிரேக்க வார்த்தையைத் தேடும்போது, இது # 5088 – இல் உள்ள "**டிக்டோ**" / "**டெகோ**" ("**tikto**" / "**teko**") என்னும் மற்றொரு வார்த்தையுடன் தொடர்புடையதாகக் காண்கிறோம் – அதின் அர்த்தம் "**ஈனுதல் / bear**" அல்லது "**உண்டாக்குதல் / பிறப்பித்தல் / bring forth**."

எனவே, பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தையிலிருந்து இங்கே "**வில்**" என்பதன் அர்த்தமாக நாங்கள் அறிவுறுத்துவது யாதெனில்: –

## ➤ ஒரு விதையை / வித்தைக் கொண்டு பிறப்பித்தல்

மெய்யாக, இங்குள்ள ஏறியிருந்தவர் / சவாரி செய்பவர், புதுச்சிருஷ்டிகளாக புதிய ஜீவனுக்கு ஜெநிப்பிக்கப்பட்டு, "மகா பரிசுத்தமான விசுவாசத்தில்" நிறுவப்பட்ட மெய்த் திருச்சபையைக் குறிக்கின்றார்.

மெய்யாக, திருச்சபையின் முதலாம் காலக்கட்டத்திற்குக் **கட்டளைப் பணி ஒன்று வழங்கப்பட்டிருந்தது,** இது நமதாண்டவரும் எஜமானருமானவரின் இறுதி வார்த்தைகளில் காணப்படுகிறது … பின்னர் இது "**மாபெரும் பொறுப்புரிமை / the great commission**" என அழைக்கப்படலாயிற்று –

**மத்தேயு 28:19**

**"ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,…"**

ஆ! ஆம்! பூமியின் சகல ஜாதியையும் பாஷைக்காரரையும் அடையாளப்படுத்தும் **ஒரு தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பார்** அல்லது "**சரீர**" வகுப்பரைத் தேடிக் கண்டடைவதே அப்பணியாகும், இதைப்பற்றி நாம் வாசிக்கலாம் –

**வெளிப்படுத்தல் 5:9**

**"தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும்**

**பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு,..."**

ஓ! ஆம்! இங்குள்ள "**எங்கள்**" வகுப்பார், அடுத்த கிட்டத்தட்ட **2000 ஆண்டுகளில்** சுவிசேஷ யுகம் முழுவதிலும், **பூமியின் ஒவ்வொரு ஜாதியிலும், பாஷைக்காரரிலும் காணப்பட வேண்டியிருந்தது,** மேலும் இந்தப் பிரம்மாண்டமான வேலை மற்றும் **கட்டளைப் பணியானது** வெறும் **துவக்கம்** மாத்திரமே!

**"அதின்மேல் ஏறியிருந்தவன் வில்லைப் பிடித்திருந்தான்"**

**ஆம்! எஜமானரின் உண்மையுள்ள சீஷர்கள் அனைவரும் எஜமானரின் இந்தப் பொறுப்புரிமையை நிறைவேற்ற புறப்பட்டுப்போனார்கள்.**

ஆனால் ஏறியிருந்தவரின் / சவாரி செய்பவரின் இன்னொரு பகுதி இருக்கிறது, அதை நாம் அடுத்ததாக வாசிக்கலாம் –

**"...அவனுக்கு ஒரு கிரீடங் கொடுக்கப்பட்டது"**

ஆம்! சபைக்கு முதலாம் உயிர்த்தெழுதலில் இயேசுவுடன் "**மகிமையும் கனமும்**" கிடைக்கும் என்று **வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்தாலும் (2 தீமோத்தேயு 2:11, 12)**, ஆதிக்கால சபையில் சிலர், இந்த இம்மை வாழ்விலேயே **அதனைத் தேடலாயினர்.**

**அப்போஸ்தலர் பவுல்**, அவர்களைப் (சபையின் இந்த வகுப்பாரைப்) பற்றி பின்வருமாறு கூறுகிறார் –

**1 கொரிந்தியர் 4:8**

**"இப்பொழுது திருப்தியடைந்திருக்கிறீர்களே, இப்பொழுது ஐசுவரியவான்களாயிருக்கிறீர்களே, எங்களையல்லாமல் ஆளுகிறீர்களே; நீங்கள் ஆளுகிறவர்களானால் நலமாயிருக்கும்; அப்பொழுது உங்களுடனேகூட நாங்களும் ஆளுவோமே."**

... எபேசு எனும் இந்த முதலாம் சபைக்கான தம்முடைய செய்தியில் **கர்த்தர் அவர்களைப் பற்றி பின்வருமாறு கூறுகிறார் –**

**வெளிப்படுத்தல் 2:6**

**"நான் வெறுக்கிற நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகளை நீயும் வெறுக்கிறாய், இது உன்னிடத்திலுண்டு."**

ஆம்! இந்த "**நிக்கொலாய் மதஸ்தர்**" ...ஆதிக்கால சபைக்குள்ளே இருந்துகொண்டு, **ஆளுகையையும், பூமிக்குரிய மகிமையையும்** நாடின தனிப்பட்ட அங்கத்தினர்களைக் குறிக்கின்றார்கள்.

**ஆம்!... "அவனுக்கு (அவன் நாடின) ஒரு கிரீடங் கொடுக்கப்பட்டது..."**



"**கரு நிலையில்**" இருந்த இந்த அந்திக்கிறிஸ்துவின் உறுப்பினர், "**கருத்தரிக்க**" அல்லது வளரத் துவங்க தேவனால் அனுமதிக்கப்பட்டனர்!!


இதனால் வெள்ளைக்குதிரையில் "**ஏறியிருந்தவர்**" என்பது, **மெய்த் திருச்சபை** மற்றும் **கருநிலையிலிருந்த கள்ளச் சபை** ஆகியவற்றின் கலவையாகும், இந்தப் படம் தெளிவாக உள்ளது ... மீண்டுமாக பின்வரும் வசனத்திலும் காண்பிக்கப்படுகிறது –

**வெளிப்படுத்தல் 12:1, 2**

**"பிள்ளைபெறும்படி வருத்தப்பட்டு அலறினாள்..."**

ஆம்! இது **இந்த வெள்ளைக்குதிரையில்** "ஏறியிருந்தவரில்" **கச்சிதமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது!!**

இறுதியாக, நாம் வாசிக்கலாம் –

 **"...அவன் ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான்"**

மீண்டுமாக இங்கே, இரண்டு சிறப்பியல்புகள் இருப்பதாகக் காட்டும் இரட்டைப் பகுதிகள் / **TWIN element** உள்ளன !

ஆம்! சுயம், உலகம் மற்றும் எதிராளி என்னும் எதிரிகளை

ஜெயங்கொள்ளவேண்டிய ஒரு **யுத்தம்** மெய்த் திருச்சபைக்கு இருந்தது.... மேலும் கிறிஸ்தவ ஜீவியம் என்பது **ஜெயங்கொள்ளுகிறதாயும், உரோமர் 8:37 / வெளிப்படுத்தல் 3:21** – இல் நாம் வாசிப்பதுபோல் ஜெயங்கொள்ளுகிறவர்களாக மாறவும் வேண்டியிருந்தது ... வேண்டியிருக்கிறது.

**ஆனால் "கரு நிலையில்" இருந்த கள்ளச் சபைக்கும் கூட ஒரு வாஞ்சை மற்றும் விருப்பம் மற்றும் பணி (Mission) இருந்ததாகக் காண்கிறோம்**

**......ஜெயிப்பவனாகவும்**

**இந்த ஜெயம் பூமிக்குரிய மகிமை மற்றும் கனத்தின்மீது நோக்கம் கொண்டிருந்தது**

இங்கே இது –

ஒரு **விருப்பமாகவும்** (wish) மற்றும்

...ஓர் **எதிர்கால அர்த்தத்திலும்** விவரிக்கப்பட்டுள்ளது.

.... ஏனெனில் கள்ளச் சபை இன்னும் "**கரு நிலையில்**" இருந்தது, மேலும்,

**இன்னும் முழுமையான மற்றும் நிறைவான வடிவத்தை எடுக்க வேண்டியிருந்தது!!**

ஆம்! இந்த அந்திக்கிறிஸ்து அமைப்பான கள்ளச் சபையும் மற்றும் அதன் வளர்ச்சியும், வேதவசனங்களில் காட்டப்பட்டுள்ளபடி, **வெளிப்படுத்தல் 12 – ஆம் அதிகாரத்தில்** நாம் வாசிப்பதுபோல **மூன்று படிநிலைகளைக்** கொண்டதாக இருக்கிறது என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்...

**படிநிலை # 1** – ஆரம்பம்...

**வெளிப்படுத்தல் 12:2**

**"அவள் கர்ப்பவதியாயிருந்து, பிரசவவேதனையடைந்து, பிள்ளைபெறும்படி வருத்தப்பட்டு அலறினாள்."**

இது, மெய்த் திருச்சபையின் "சரீரத்திற்கு" **உள்ளே** "கருத்தரிக்கப்பட்ட" அந்திக்கிறிஸ்து அமைப்பின் **கண்ணுக்குத் தெரியாத** மற்றும் **வல்லமையற்ற** படிநிலையாகும்.

இதன் காலம் **முதலாம் நூற்றாண்டிலிருந்து கி.பி 325 – இல் நடந்த நைசியா கூட்டம்** (**council of nicaea**) வரை இருந்ததாகக் கூறப்படுகிறது.

பிறகு நாம் காண்பது... **பழநிலை # 2**

**வெளிப்படுத்தல் 12:5**

"**சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகைசெய்யும் ஆண்பிள்ளையை பெற்றாள்; அவளுடைய பிள்ளை தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்தினிடத்திற்கும், எடுத்துக்கொள்ளப்பட்டது.**"

இது, ஓர் "ஆண்பிள்ளை" வடிவத்திலுள்ள "பாவமனுஷனாகிய" அந்திக்கிறிஸ்து அமைப்பின் **கண்ணுக்குத் தெரிகின்ற**, ஆனால் **வல்லமையற்ற பழநிலையாகும்...**

இதன் காலம் **கி.பி 325 – இல் நடந்த நைசியா கவுன்சிலிலிருந்து** (**council of nicaea**), **கி.பி 539 – இல் ஜஸ்டினியன் பேரரசரிடமிருந்து** "**போண்டிஃபெக்ஸ் மாக்சிமஸ்**" என்கிற பட்டத்தைப் பெறும் வரை இருந்ததாகக் கூறப்படுகிறது.

இறுதியாக, நாம் காண்பது.. **பழநிலை # 3**

**வெளிப்படுத்தல் 12:7, 8**

"**வானத்திலே யுத்தமுண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதைச்சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை. வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற்போயிற்று.**"

மீண்டுமாக....

**2 தெசலோனிக்கேயர் 2:3, 4**

"**எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது. அவன் எதிர்த்துநிற்கிறவனாயும், தேவன் என்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும்,**

**தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்."**

இது அந்திக்கிறிஸ்து அமைப்பின் **கண்ணுக்குத் தெரிகின்ற** மற்றும் **வல்லமைவாய்ந்த** படிநிலையாகும், இது **கி.பி 539** – இல் ஆரம்பமாகியது எனக் கூறலாம் ... மேலும் தெய்வீகமாக அனுமதிக்கப்பட்ட பின்வரும் கால அளவுக்கான அதிகாரத்தின் (Authority) ஆரம்பம் ...

- **"ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமுமாம்" (வெளிப்படுத்தல் 12: 14)**

அல்லது....

- **"ஆயிரத்திருநூற்றறுபது நாள்" (வெளிப்படுத்தல் 12: 6)** அல்லது... மீண்டுமாக
- **"நாற்பத்திரண்டு மாதம்" (வெளிப்படுத்தல் 13: 5)**

காலக்கணக்கீட்டின்படி நிச்சயமாக இது...

## கி.பி 539 முதல் கி.பி 1799 வரையாகும் [1260 ஆண்டுகள் கொண்ட காலப்பகுதி]

இப்போது இந்த "**முதலாம் முத்திரையில்**," இந்த அமைப்பானது, அதன் துவக்கத்தில் கண்ணுக்குத் தெரியாததாயும், வல்லமையற்றதாயும், அப்போதுதான் "கருத்தரிக்கப்பட்ட" படிநிலையிலும் இருந்துள்ளது; ஆனால் மெய்த் திருச்சபையிலிருந்து **மிகவும் மாறுபட்ட பணியை** – அதாவது தேவன் மற்றும் "**அவருடைய இராஜ்யத்தின்**" பேரில் **பூமிக்குரிய வல்லமை, மகிமை மற்றும் அதிகாரம்** ஆகியவற்றை நாடிக் கொண்டிருந்தது, இது ஒரு **தவறான கூற்றாகும்**!

ஆம்! "**ஜெயிப்பவனாகவும்**"!

இவ்வாறாக முதலாம் முத்திரை உடைக்கப்பட்டபோது இந்த இரண்டு இரகசியங்களின் ஆரம்பம் இருந்தது... தேவனுடைய சர்வ வல்லமையின் குணலட்சணமானது, உருக்கொள்ள அனுமதிக்கப்பட்ட இத்தகைய பொய்யான கள்ள அமைப்பினை நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவருவதாகத் தெரிகிறது!

ஆம்! இது **அனுமதியின்கீழ் வெளிப்பட்ட** தெய்வீக வல்லமையாகும்!

**“நான்கு ஜீவன்களில் ஒன்று என்னை நோக்கி: நீ வந்து பார் என்று ...சொல்லக்கேட்டேன்!”**

# இரண்டாம் முத்திரை

**(வெளிப்படுத்தல் 6: 3 – 4)**

**சபை காலக்கட்டம் : சிமிர்னா**

**காலப்பகுதி : கி.பி. 70 – கி.பி. 313**

**வசனம்-3**

**“அவர் இரண்டாம் முத்திரையை உடைத்தபோது, இரண்டாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லக்கேட்டேன்.”**

ஆம்! இங்கே **“இரண்டாம் ஜீவனானது”** **வெளிப்படுத்தல் 4:7** – இல் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஜீவன்களின் **வரிசைக்கு** நம் கவனத்தைக் கொண்டுச் செல்கிறது, அங்கு இரண்டாம் ஜீவன் “**காளைக்கொப்பானதாய்**” இருந்தது; மேலும் இவ்வாறாக அது பின்வரும் தேவனுடைய **இரண்டாவது குணலட்சணப் பண்பினைக்** குறிக்கிறது –



**“நீதி”**

ஆம்! தேவனுடைய நீதியின் குணலட்சணமானது, இரண்டாம் முத்திரையின் **உள்ளடக்கங்களுக்கு நம் கவனத்தைக் கொண்டுச் செல்வதாகத்** தோன்றுகிறது!!

இப்போது உள்ளடக்கங்களைப் பார்க்கலாம் –

**வசனம்-4**

**"அப்பொழுது சிவப்பான வேறொரு குதிரை புறப்பட்டது; அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு, பூமியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலைசெய்யத்தக்கதாகச் சமாதானத்தைப் பூமியிலிருந்தெடுத்துப்போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது; ஒரு பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது!"**



முதலாவதாக, இங்கே "**குதிரை**" **மாறியதையும்**.... மேலும் அதின் நிறமும் கூட மாற்றமடைந்துள்ளதையும் கவனியுங்கள் – இது **உபதேசத்தில் ஏற்பட்ட ஒரு மாற்றத்தை** அடையாளப்படுத்தும்!

ஆம்! "**மகா பரிசுத்தமான விசுவாசத்தின்**" "**வெள்ளை**" இலிருந்து ஏற்பட்ட **ஒரு மாபெரும் மாற்றமாகும்**

இதனால் பின்வருமாறு வார்த்தைகள் இருப்பதாக நாம் கவனிக்கிறோம் –

**"அப்பொழுது சிவப்பான வேறொரு குதிரை புறப்பட்டது;..."**

**இப்போது அடையாளத்தில் "சிவப்பு" ஆனது எதனை அர்த்தப்படுத்துகிறது?**

நாம் அதற்கான பதிலைக் கீழுள்ள வசனத்தில் காண்கிறோம் –

**வெளிப்படுத்தல் 12:3**

**"...சிவப்பான பெரிய வலுசர்ப்பமிருந்தது"**

ஆம்! இது **உரோம பேரரசிற்கான** அடையாளமாகும்! "மகா பரிசுத்தமான விசுவாசத்தின்" பரிசுத்தமானது எவ்வாறு **உரோமானிய சாயல்களுக்கு ஒப்பாகத்** தொடங்கியது என்பதை "**சிவப்பு**" அடையாளப்படுத்துகிறது!

தயவுகூர்ந்து கவனிக்கவும்: தமிழ், இந்தி மற்றும் வேதாகமத்தின் வேறு சில மொழி மொழிபெயர்ப்புகளில், “சிவப்பு” மற்றும் “கருஞ்சிவப்பு (scarlet) / (Crimson – ஏசாயா 1:18)” ஆகிய வண்ணங்களுக்கு தனித்தனி வார்த்தைகள் இல்லை, ஆனால் அவை இரண்டும் ஒரே வார்த்தையால் குறிப்பிடப்பட்டுள்ளது!

இது ஒரு பெரிய சிக்கலை ஏற்படுத்துகிறது!
ஏனெனில் இரண்டு வண்ணங்களும், அடையாளமாக எடுக்கும்போது முற்றிலும் மாறுபட்ட அர்த்தமும் முக்கியத்துவமும் கொண்டவையாக இருக்கின்றன. ஆகவே, எந்தவொரு மொழியிலும் “சிவப்பு” மற்றும் “கருஞ்சிவப்பு (scarlet) / (Crimson)” என்பதற்கு இரண்டு தனித்தனி வார்த்தைகள் உள்ளன எனும் அறிவுறுத்தலோடு, இந்த ஆய்வை மேற்கொள்ளும்போது இந்த விஷயத்தைக் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்!

இது **எப்போது, எப்படி** நடந்தது?

அதற்கான பதிலை வாசிக்கலாம் –

**மத்தேயு 13:25**

**“மனுஷர் நித்திரை பண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான்.”**

ஆம்! இது காலப்பகுதியினைத் தெளிவாக நமக்குக் காட்டுகிறது. “**மனுஷர் நித்திரை பண்ணுகையில்**” என்கிற சொற்றொடரானது, **கடைசி அப்போஸ்தலரான அப்போஸ்தலர் யோவான் சுமார் கி.பி. 100** வாக்கில் மரித்ததோடு முடிந்திட்ட **அப்போஸ்தல சகாப்தத்தின்** முடிவைக் குறிக்கிறது, அத்துடன் இது இரண்டாம் சபையான சிமிர்னாவினுடைய காலப்பகுதியின் துவக்கமாயிருந்தது. இந்த உவமையும் கூட இந்த இரண்டாம் சபையின் காலப்பகுதியில் என்ன நடந்தது என்பதோடு தொடர்புடையதே.

ஆம்! கீழுள்ள வசனத்தில் அப்போஸ்தலர் பவுல் முன்னறிவித்தபடி சாத்தான் **தனது தப்பறையான உபதேசங்களுக்காக** திருச்சபையின் கிறிஸ்தவர்களிடமிருந்து **விசுவாசிகளை வெளியேற்றத்** துவங்கினான் –

**1 தீமோத்தேயு 4:1**

**“ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே**

**மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தைவிட்டு விலகிப்போவார்கள்.”**

ஆம்! படிப்படியாக **புறச்சமய உரோம நம்பிக்கைகள்** மற்றும் **நடைமுறைகள்** சபைக்குள் நுழையத் துவங்கின.

**களையின் விதைகள் “கோதுமைக்குள்” விதைக்கப்பட்டன என்பதை நினைவில் வையுங்கள்**

இப்போது **மற்ற அடையாளங்களைப்** புரிந்துகொள்ளாம்!!

**தேவனுடைய பார்வையிலிருந்து** சுவிசேஷ யுகத்தின் ஏழு காலப்பகுதிகள் ஒவ்வொன்றிலும் நடக்கும் நிகழ்வுகளின் அடையாள விளக்கங்களே இவை என்பதை நினைவில் கொள்வோமாக!!

இப்போது மீண்டும் வாசிக்கலாம் –

**வசனம்-4**

**“அப்பொழுது சிவப்பான வேறொரு குதிரை புறப்பட்டது; அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு, பூமியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலைசெய்யத்தக்கதாகச் சமாதானத்தைப் பூமியிலிருந்தெடுத்துப்போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது; ஒரு பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது!”**

இங்கே நாம் முதலில் கவனிக்க வேண்டிய விஷயம் ஏறியிருந்தவரையே – அவர் முன்பு ஏறியிருந்தவருக்கு முற்றிலும் மாறுபட்டவராய் இருக்கிறார்!

ஆம்! முதலாம் முத்திரையின் காலப்பகுதியின்போது, சத்தியத்தில், விசுவாசிகள் பெரும்பான்மை எண்ணிக்கையிலும், போலி அங்கத்தினர் **குறைந்த எண்ணிக்கையிலும்** இருந்தனர்.

…இங்கே, இரண்டாம் முத்திரை காலப்பகுதியில் **விஷயம் தலைகீழாக உள்ளது**!

**இந்தக் காலப்பகுதியிலோ, பொய்யான உபதேசங்களின் விசுவாசிகள் பெரும்பான்மை எண்ணிக்கையிலும், சத்திய விசுவாசிகள் குறைந்த எண்ணிக்கையிலும் என்றாகியிருந்தனர்!!**

ஆம்! மத்தேயு 13 – ஆம் அதிகாரத்தின் **இரண்டாவது உவமையைப்** போலவே, களைகள் முளைத்து கோதுமையின் மீது ஆதிக்கம் செலுத்தத் தொடங்கி இருந்தன –

**மத்தேயு 13:26**

**“மனுஷர் நித்திரை பண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான்.”**

ஆம்! பொய்யான உபதேசங்களின் விசுவாசிகள் தங்கள் **திட்டங்களில்** முன்னேறத் துவங்கியபோது, சத்தியத்தின் விசுவாசிகள் **பார்வையாளர்களாகக்** குறைக்கப்பட்டனர்!.

இப்போது வாசிக்கலாம் **(வெளி 6:4)** –

**“...அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு, ... சமாதானத்தைப் பூமியிலிருந்தெடுத்துப்போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது...”**

ஆம்! இந்தக் “களைகள்” ஆகிய (பெயர்ச்) சபை உறுப்பினர் எண்ணிக்கையில் வளருவதற்கும், **தங்கள் திட்டத்தில் முன்னேறுவதற்கும்** தேவனிடமிருந்து அதிகாரம் **வழங்கப்பட்டது**, மேலும் இது சத்தியம் பெரிதும் ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருந்தபோது **(முதலாம் சபைக்காலம்)**, சபை அனுபவித்து வந்த **அமைதியையும் / சமாதானத்தையும் மற்றும் ஒற்றுமையையும்** பெரிதும் பாதித்தது.

இந்த இரண்டாம் சபையின் காலப்பகுதியைப் பொறுத்தவரையில் “**சமாதானத்தைப் பூமியிலிருந்தெடுத்துப்போடுவது**” என்பது **இரண்டு இடங்களில் வெளிப்படுகிறது** –

**மத்தேயு 13:27**

**“வீட்டெஜமானுடைய வேலைக்காரர் அவனிடத்தில் வந்து: ஆண்டவனே, நீர் உமது நிலத்தில் நல்ல விதையை விதைத்தீர் அல்லவா? பின்னை அதில் களைகள் எப்படி உண்டானது என்றார்கள்.”**



ஆம்! “**களைகளின்**” பலனைக் கண்ட **வேலைக்காரரின் உணர்ச்சி** வெளிப்பாட்டில் அவர்கள் கலக்கமுற்றிருந்தார்கள் என்பது **இங்கே தெளிவாகத் தெரிகிறது**!

மீண்டும் நாம் வாசிக்கலாம் –

**வெளிப்படுத்தல் 2:9**

**"உன் கிரியைகளையும், உன் உபத்திரவத்தையும், நீ ஐசுவரியமுள்ளவனாயிருந்தும் உனக்கிருக்கிற தரித்திரத்தையும், தங்களை யூதரென்று சொல்லியும் யூதராயிராமல் சாத்தானுடைய கூட்டமாயிருக்கிறவர்கள் செய்யும் தூஷணத்தையும் அறிந்திருக்கிறேன்."**

ஆம்! இந்தக் கள்ள உறுப்பினர் ஆவிக்குரிய யூதர்கள் (அல்லது ஆவிக்குரிய இஸ்ரயேல்) என்றும் சொல்லிக்கொண்டனர்!

ஓ! ஆம்! சபையிலுள்ள இந்த அங்கத்தினர் தங்களது மாறுபட்ட "**கள்ள**" உபதேசங்களின் நம்பிக்கையுடன், **சத்தியத்திற்கு எதிரான** தங்களது தடுத்தல் மற்றும் எதிர்ப்பினாலும் ("**தேவதூஷணம்**") **மனரீதியாகவும், சரீரரீதியாகவும்** ("**உபத்திரவம்**") பெரும் குழப்பத்தை ஏற்படுத்தினர்.

இவ்வாறு "**பூமியின் சமாதானத்தை**" அல்லது மாம்சத்தில் உள்ள சபையிலிருந்த **சமாதானத்தின் ஆறுதல்** இந்த நபர்களின் நுழைவு மற்றும் அவர்களின் கள்ள உபதேசங்களால் **எடுத்துப்போடப்பட்டது!**



மேலும் நாம் வாசிக்கிறோம் –

**"... ஒருவரையொருவர் கொலைசெய்யத்தக்கதாக ..."**

சபையிலுள்ள கள்ள உபதேசங்களின் விசுவாசிகள் மேலும் குறிப்பாக மூப்பர்கள் மற்றும் ஆயர்கள் என்னும் தலைமை பதவிகளிலிருப்பவர்கள் தங்கள் அதிகாரத்தைத் தவறாக பயன்படுத்துவதை இது குறிக்கிறது.

சபையில் இந்தப் "**பதர்**" **வகுப்பாரின்** விரைவான வளர்ச்சியுடன், காலப்போக்கில் தேர்ந்தெடுக்கப்பட்ட **மூப்பர்கள்** மற்றும் **கண்காணிகள்கூட** "**பதர்**" வகுப்பாரைச் சேர்ந்தவர்கள் ஆனார்கள் என்பதை நம்மால் நன்றாக கற்பனை

செய்ய முடிகிறது, **3 யோவான் 1:9, 10** – இல், **அப்போஸ்தலர் யோவானையே எதிர்த்த மூப்பரான தியோத்திரேப்பில்** இதற்கான ஓர் உதாரணத்தைப் பார்க்கிறோம்.

இங்கு "**கொலைசெய்யத்தக்க**" என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்றால் –

... **கொல்லப்படுதல்...** அல்லது

... "**அறுப்புண்டுபோகுதல்**" ஆகும் (சங்கீதம் 37:9 – ஐக் காணவும்)

ஆம்! "**ஒருவரையொருவர் கொலைசெய்யத்தக்கதாக**" பயன்படுத்தப்பட்ட வல்லமையானது, சபையினுடைய அதிகாரம் சுயநலமாகப் பயன்படுத்தப்பட்டதைக் குறிக்கிறது, அதாவது அவர்கள் **போதகர்களாகவும் தலைவர்களாகவும்** தங்களில் ஒருவரையொருவர் **அழிக்கவும், சபைநீக்கஞ்செய்யவும்** நாடினதைக் குறிக்கிறது.




"**கோதுமைக்குள்**" (மத்தேயு 13:25) **சத்துரு**வால் விதைக்கப்பட்ட களைகள்... துளிர்விட ஆரம்பித்ததிலிருந்து... சபை கூடுகைகளில் **பெரும்பான்மையினரோ** அல்லது அதிக எண்ணிக்கையினரோ இவ்வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்! இப்படியாக, தேர்தல்கள் நடந்தபோது... **தேர்ந்தெடுக்கப்பட்ட மூப்பர்களில்** பலர் இந்தப் "**பதர்**" வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்திருப்பார்கள் என்று நம்மால்

கற்பனைசெய்து பார்க்க முடிகிறது! மேலும் சபைகளில் “**ஊழியம்**” செய்வதற்காக இருந்த இந்தத் **தெய்வீகமாக நியமிக்கப்பட்ட அதிகாரமானது** எவ்வாறு **சத்தியத்தின் உண்மையான** ஊழியர்களுக்கு எதிரான **அதிகாரமாக** விரைவாகப் பயன்படுத்தப்பட்டது என்பதை ஒருவரால் எளிதில் கற்பனைசெய்து பார்க்க முடியும்!

ஆம்! அவர்கள் நிச்சயமாக பெரும்பான்மையினராக இருந்திருக்க வேண்டும் என்பதால், பின்வரும் வசனப்பகுதியில் குறிப்பிடப்படும் சூழலில் ஏறெடுக்கப்படும் தனிநபர்களுக்கு எதிரான **ஒழுக்க நடவடிக்கையில்**, அன்பினிமித்தமான நடவடிக்கையான தெய்வீக ஏற்பாட்டைத் தவறாகப் பயன்படுத்தினர் – **சபைநீக்கம்** அல்லது சபைக்குரிய அங்கத்துவத்திலிருந்து நீக்குதலைச் செய்தனர் –




மத்தேயு 18:17, 18

“**அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து; சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக. பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**”

ஆம்! தெய்வீக உடன்படிக்கையைக் / சம்மதத்தைக் கொண்டிருக்கும் முடிவுகளை எடுக்க சபைக்கு இந்தத் **தெய்வீக அதிகாரமானது** வழங்கப்பட்டது! இது **மனந்திரும்புதல்** மற்றும் **சீர்திருத்தத்தை** ஏற்படுத்த எடுக்கப்பட்ட ஓர் **உச்சஉயர்வான** நடவடிக்கையாகும்... மேலும் இது தற்காலிகமானதேயொழிய **நிரந்தரமானது அல்ல**!

( **எபேசு** எனும் முதலாம் சபைக்காலக்கட்டத்தின்போது இருந்த கொரிந்து எக்ளீசியாவில் ஓர் **உதாரணத்தைப்** பார்க்கிறோம்– **1 கொரிந்தியர் 5:1 – 5** – இல் பாலியல் ஒழுக்கக்கேட்டில் சிக்கிய ஒரு நபர் சபையால், குறிப்பாக அப்போஸ்தலனாகிய பவுலின் அறிவுறுத்தல்களால் “**நீக்கப்பட்டார்**” ...ஆனால்

அதே அப்போஸ்தலனாகிய பவுல், கொரிந்தியர்களுக்கு எழுதிய 2 – ஆம் நிருபத்தில், தண்டனை போதுமானது என்றும், அந்த நபர் **மன்னிக்கப்பட்டு**, ஆறுதல்செய்ய வேண்டும் என்றும் கூறுவதைக் காண்கிறோம்
**– 2 கொரிந்தியர் 2:6 – 10)**

ஆம்! பின்வரும் வசனத்தைப் போன்று எஜமானரின் **அறிவுறுத்தலிலிருக்கும்** இந்தப் போதனைகள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகளைப் பற்றி இந்த ஆயர்களும் மூப்பர்களும் மறந்துபோயிருக்கலாம் அல்லது புறக்கணித்திருக்கலாம் அல்லது **ஒருபோதும் கேள்விப்படாமல்** இருந்திருக்கலாம் –

**லூக்கா 22:26**

**"உங்களுக்குள்ளே அப்படியிருக்கக்கூடாது; உங்களில் பெரியவன் சிறியவனைப்போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப்போலவும் இருக்கக்கடவன்."**

ஆம்! **மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்வதற்குப்** பதிலாக, வீணான மகிமையினாலும் பெருமையினாலும் சுயத்திற்கு ஊழியஞ்செய்யத் துவங்கி, தெய்வீக அறிவுறுத்தல்களைத் தவறாகப் பயன்படுத்தினார்கள் –

மேலும் **இறுதியாக** நாம் வாசிக்கலாம் –

**"...ஒரு பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது"**

கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி இங்கேயுள்ள "**பெரிய பட்டயம்**" என்பது தேவனுடைய வார்த்தையைக் குறிப்பதாகும் –

**எபேசியர் 6:17**

**"... தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்."**

(# 3162 – ஸ்ட்ராங்ஸின் கிரேக்கம் – "**மச்சா–ஈரா** / **macha-ira**")

ஆம்! "**தேவனுடைய வார்த்தையான**" வேதாகமம், இந்தச் சுயநலமான சபைத் தலைவர்களினால் ஆதிக்கம் செலுத்தப்படவும் அல்லது அவர்களது **கட்டுப்பாட்டிற்குள்** செல்லவும் அனுமதிக்கப்பட்டது. பழைய ஏற்பாட்டு புஸ்தகங்களின் பிரதிகள் அல்லது சுருள்கள் மற்றும் புதிய ஏற்பாட்டின் பின்னர் இயற்றப்பட்ட புஸ்தகங்கள் கிடைப்பதற்கான கட்டுப்பாடுகள் மூலம் அது நிறைவேற்றப்பட்டது. ஆம்! **அப்போஸ்தலர்களான பவுல், பேதுரு, யோவான், யாக்கோபு** போன்றவர்களின் **கடிதங்கள்** அப்போது சபைகளிடையே பரப்பப்பட்டன **(2 கொரிந்தியர் 10:11 / கொலோசெயர் 4:16 / 1 தெசலோனிக்கேயர் 5:27 / 2 தெசலோனிக்கேயர் 3:14)**. இந்தச் சபைக் காலத்தில்தான் புதிய ஏற்பாடு **27**

**புஸ்தகங்கள் கொண்ட வடிவத்தை** எடுத்தது! நான்கு சுவிசேஷங்களுக்கு மேல் இருந்தன ("**தோமாவின் சுவிசேஷமும்**" "**யூதாஸ்காரியோத்தின் ஒரு சுவிசேஷமும்**" கூட இருந்தன) பல நிருபங்களும் இருந்தன, அவை அனைத்தும் பரிசுத்த வேதவாக்கியங்கள் என்று உரிமைக்கோரப்பட்டன. எனவே இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில், புதிய ஏற்பாடாக உலகளவில் அங்கீகரிக்கப்படும் அந்தப் புஸ்தகங்களை அடையாளம் காண வேண்டியது அவசியமாயிற்று.

ஆரம்பகால சபை தலைவரான "**ஐரேனியஸ் / Irenaeus**" **(கி.பி. 120 – 200)** – இன் பெயர் இந்த வேலையுடன் தொடர்புபடுத்தப்படுகிறது.



ஆம்! இந்தப் புஸ்தகங்கள் அனைத்தும் அப்போது சுருள்களின் வடிவத்தில் இருந்தன!

**அந்தச் "சுருள்களிலும்" கூட இந்தத் தலைவர்களது ஆதிக்கம் இருந்திருக்கலாம்.**

**இதன் விளைவாக என்ன நடந்தது?**

காலப்போக்கில், தேவனுடைய வார்த்தையின் தனிப்பட்ட ஆராய்ச்சியை ஊக்கப்படுத்தாமல், படிப்படியாகவும் முறையாகவும் "**விசுவாசப்பிரமாணங்கள்**" அல்லது விசுவாசத்தின் சுருக்கமான அஸ்திவாரம் என்பவைகளைக் கொண்டு அது மாற்றீடு செய்யப்பட்டது... இவைகள் மாத்திரமே எந்தவொரு கிறிஸ்தவ விசுவாசியும் வேத வசனங்களைப் பற்றி அறிந்து நம்ப வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

எவ்வாறாயினும், இந்த "**விசுவாசப்பிரமாணங்களின்**" முழு நிஜமான வளர்ச்சியும் கண்ணுக்குத் தெரிகின்ற வெளிப்பாடும் அடுத்த முத்திரை அல்லது சபை காலப்பகுதியில் வெளிவரவிருந்தன.

ஆம்! தேவனுடைய **எல்லையற்ற நீதியின் குணாம்சமானது**, இந்தச் சபை காலக்கட்டத்தில் **மேலோங்கியிருப்பதற்காக** தெய்வீகமாக அனுமதிக்கப்பட்ட இத்தகைய **அநீதிகள்** மற்றும் **அநியாய நடத்தைகளுக்கு** நம் கவனத்தைக் கொண்டுச் செல்வதாகத் தோன்றுகிறது!

ஆம்! **"இரண்டாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லக்கேட்டேன்!"**

# மூன்றாம் முத்திரை

**(வெளிப்படுத்தல் 6: 5 – 6)**

**சபை காலக்கட்டம் : பெர்கமு**

**காலப்பகுதி : கி.பி. 313 – கி.பி. 1157**

**வசனம்-5**

**"அவர் மூன்றாம் முத்திரையை உடைத்தபோது, மூன்றாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லக்கேட்டேன். நான் பார்த்தபோது, இதோ, ஒரு கறுப்புக்குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவன் ஒரு தராசைத் தன் கையிலே பிடித்திருந்தான்."**



இப்போது, இந்த "**மூன்றாம் ஜீவன்**" என்பது வெளிப்படுத்தல் 4:7 – இல் பட்டியலிடப்பட்டுள்ள "**மனுஷமுகம்போன்ற முகமுள்ள**" மூன்றாம் ஜீவனைக் குறிக்கிறது என்பது நாம் அறிந்ததே, மேலும் இது பின்வரும் தேவனுடைய **மூன்றாவது குணலட்சண பண்பினைக்** குறிக்கிறது –

## அன்பு

ஆம்! தேவனுடைய குணமான **எல்லையற்ற அன்பு** மூன்றாம் முத்திரையின் உள்ளடக்கங்களுக்கு நம் கவனத்தைக் கொண்டுச் செல்கிறது!

இப்போது நாம் தொடர்ந்து வாசிக்கலாம் –

**வசனம்-5,6**

**"நான் பார்த்தபோது, இதோ, ஒரு கறுப்புக்குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவன் ஒரு தராசைத் தன் கையிலே பிடித்திருந்தான். அப்பொழுது, ஒரு பணத்துக்கு ஒருபடி கோதுமையென்றும், ஒரு பணத்துக்கு மூன்றுபடி**

வாற்கோதுமையென்றும், எண்ணெயையும் திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே என்றும், நான்கு ஜீவன்களின் மத்தியிலிருந்து உண்டான சத்தத்தைக் கேட்டேன். "

முதலில் குதிரையும் அதன் நிறமான – **கறுப்பு** நிறத்தையும் கவனிக்க வேண்டும்!

"**நான் பார்த்தபோது**" என்னும் வார்த்தைகளையும் கவனியுங்கள் –

இந்தக் "**கறுப்புக்குதிரை**" வெளிப்படுவதற்கு **முன்பு**, மூன்றாம் சபை காலப்பகுதியில், **சிறிது காலம்** கடந்து சென்றதை இது குறிக்கிறது.



ஆம்! வேதவசனங்களில் தரிசனங்களின் பாஷையில் "**நான் பார்த்தபோது**" என்ற வார்த்தையின் பயன்பாடு சிறிது நேரம் கடந்து செல்வதைக் குறிக்கிறது.

இது தானியேலின் தரிசனங்களிலும் நமக்காக உறுதி செய்யப்படுகிறது –

**தானியேல் 7:4**

"நான் பார்த்துக்கொண்டிருக்கையில், அதின் இறகுகள் பிடுங்கப்பட்டது;...."

எனவே இது இந்த சபைக் காலப்பகுதியின் ஆரம்பமான **கி.பி. 313** – இல் **உடனடியாக அல்லாமல்**, மாறாக படிப்படியாகவும், ரொம்ப காலத்திற்குப் பின், **கி.பி. 539** – இல் போப் மார்க்கம் நிறுவப்பட்ட பிறகும், அதையும் தாண்டி ... அம்மார்க்கம் **கி.பி. 799** முதல் மகிமையில் ஆட்சி செய்யத் துவங்கிய **பின்னரும்**, பரிசுத்த உரோம சாம்ராஜ்யமும் இருண்ட யுகங்களும் வெளிவந்த பின்னருமே இந்தக் கறுப்புக்குதிரை வெளிப்பட்டது. கறுப்பு என்பது **இருளின் நிறம்**, எனவே இந்தக் காலப்பகுதியில் திருச்சபையின் உபதேசங்கள் அந்தகாரமாகியிருந்தன,

தேவனுடைய சத்தியங்களும் அவருடைய வார்த்தையும் முறையாகத் திட்டமிடப்பட்டு **அசத்தியங்கள் கொண்டு** (இருள்) மாற்றீடு செய்யப்பட்டன.

**விசுவாசப்பிரமாணங்களுடன் கூடுதலாக, அழியாத ஆத்துமா, வேதனைக்குரிய நரகம், உத்தரிக்கும் ஸ்தலம், திரித்துவம் மற்றும் குருமார்கள் மற்றும் மரியாள் வழிபாடு என்னும் உபதேசங்களனைத்தும் இந்தக் காலப்பகுதியிலேயே உருவாக்கப்பட்டன.....**

மேலும், சுவிசேஷ யுகத்து சபை வரலாற்றில் மற்றனைத்தைக்காட்டிலும் **மிகவும் நீண்ட** காலப்பகுதியாக இருந்த இந்தக் காலப்பகுதியில்தான்...

- **உரோம கண்காணி** இந்தக் காலப்பகுதியினை ஓர் இரகசியமான இலட்சியத்துடன் துவக்கியிருந்தார்
- பின்னர் **கி.பி. 320** – வாக்கில் உரோம **பேரரசரான கான்ஸ்டன்டைனின்** ஆதரவைப் பெற்றார்...
- பின்னர் **கி.பி. 325** – இல், நைசியா சங்கத்தின் (council of nicaea) ஏற்பாட்டில் கனப்படுத்தப்பட்டார்....
- பின்னர் இந்த ஆதரவு மேலும் **வளர்ந்து... கி.பி. 539** – இல் **பேரரசரான ஜஸ்டினியனிடமிருந்து** "**பொன்டிஃபெக்ஸ் மாக்சிமஸ்**" என்ற பட்டத்தை அவர் பெற்றுக்கொள்ளச் செய்தது, மேலும் உரோம சாம்ராஜ்யத்தின் மீது **மதத் தலைமைப் பொறுப்பை** ஏற்றுக்கொண்டு **பப்பாஸ் (ஆங்கிலத்தில் போப் மற்றும் இலத்தீன் மொழியில் தந்தை என்று பொருள்)** என்னும் தலைப்பினை எடுத்துக்கொண்டார்....
- மேலும் **கி.பி. 799** – இல், **போப் லியோ III** என்பவர் உயர்த்தப்பட்டு, அந்த அதே ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட **பரிசுத்த உரோம சாம்ராஜ்யத்தின்** முதல் **பேரரசராக முடிசூட்டப்பட்டார்** – அதில் "தெய்வீகமாக நியமிக்கப்பட்ட" பேரரசரராக, **மதம்** மற்றும் **அரசியல் சக்தி** ஆகிய இரண்டையும் வைத்திருந்த போப் ஆனவர் இருந்தார்!!

**ஓ! ஆம்! இந்தச் சபை காலப்பகுதியின் முடிவில், உரோம கண்காணி அப்போது ஒரு சிங்காசனத்தின்மீது ஒரு சக்திவாய்ந்த இராஜாவாக இருந்தார்!**

ஆம்! **கிறிஸ்தவ நம்பிக்கைக்குப்** பதிலாக திட்டமிட்டப்படியே **கிறிஸ்தவ மதம்** என்றானது.

**கிறித்துவம், சபைகள் மயமான மார்க்கத்திற்கு (churchianity) வழிவகுத்தது!!**

ஒருவேளை அதனால்தான், **கி.பி. 539 – ஆம் ஆண்டின் தேதியைக் கொடுக்கும்** கால தீர்க்கதரிசன வசனத்தில் காணப்படும் **விசித்திரமான வார்த்தைகள்** நமக்குள்ளன போலும்.

வாசிக்கலாம் –

**தானியேல் 12:11**

**"அன்றாடபலி நீக்கப்பட்டு, பாழாக்கும் அருவருப்பு ஸ்தாபிக்கப்படுங்காலமுதல்…"**

**ஆம்! இது கி.பி. 539 ( "காலமுதல்" ) பற்றிய குறிப்பாகும், உண்மையான கிறிஸ்தவமும் போதனைகளும் அர்ப்பணிப்பின் ஆவியும் ( "அன்றாடபலி நீக்கப்பட்டு" ) மாற்றியமைக்கப்பட்டு, சபைகள் மயமான மார்க்கமான (churchianity)அந்திக்கிறிஸ்து அமைப்பால் ( "பாழாக்கும் அருவருப்பு" ) மூழ்கடிக்கப்பட்டது.**

ஆம்! மெய்யாக இந்த அமைப்பின் "**அமைவு**" **கி.பி. 539** – இல் ("**காலமுதல்**") துவங்கியது!

ஆனால் **கவனிக்க வேண்டிய மற்றொரு விஷயம்** இருக்கிறது, அதை ஏறியிருந்தவரைப் பற்றி வாசிக்கும்போது நம்மால் காண முடியும்

**வசனம்-5**

**"அதின்மேல் ஏறியிருந்தவன் ஒரு தராசைத் தன் கையிலே பிடித்திருந்தான்"**



முத்திரைகளின் முன்னேறுதலின் காரணமாக, இந்த ஏறியிருந்தவர் **யார்** என்பது பற்றி இப்போது நமக்கு ஒரு யோசனை கிடைக்கிறது. ஆம்! இது அதிகாரத்தில் இருக்கும் பேப்பசி (போப்)

சபை அமைப்பினைக் குறிக்கிறது! இதனால் **சத்தியமும்** தேவனுடைய வார்த்தையும் (தோற்சுருள் பிரதிகள்) மெய்யாகவே **பற்றாக்குறையாகத்** துவங்கின!



இது கீழே நாம் வாசிக்கும்வண்ணமாக, **பற்றாக்குறையை** அடையாளப்படுத்தும் "**தராசு**" என்பதன் மூலம் குறிக்கப்படுகிறது –

**லேவியராகமம் 26:26**

**"அதைத் திரும்ப உங்களுக்கு நிறுத்துக்கொடுப்பார்கள்; நீங்கள் சாப்பிட்டும் திருப்தியடையமாட்டீர்கள்"**

...மீண்டுமாக

**எசேக்கியல் 4:16, 17**

**"நான் எருசலேமிலே அப்பம் என்னும் ஆதரவுகோலை முறிக்கிறேன்; அவர்கள் அப்பத்தை நிறையின்படியே விசாரத்தோடே சாப்பிட்டு"**

"**தராசை**" ... "**தன் கையிலே பிடித்திருந்தான்**" என்பது ஒரு முக்கியமான விஷயமாகும்; மேலும் இது தேவனுடைய வார்த்தையான வேதவாக்கியங்களானது இந்த அமைப்பின் **கட்டுப்பாட்டில்** இருந்தன என்பதையும், அவர்களால் கொண்டு வரப்பட்ட போதனைகள் **அதிகதிகமான** தப்பறையையும், அசத்தியத்தையும், **மிகக்குறைவான** சத்திய வார்த்தையினைக் கொண்டிருந்தன என்பதையும் அடையாளப்படுத்துகிறது.

- **அனைத்து ஆராதனை முறைமைகளும் இலத்தீன் பாஷையில் இருந்தன, மேலும் ஜனங்கள் தங்கள் சொந்த பாஷைகளில் தேவனுடைய வார்த்தை கிடைக்காமல் பசியாயிருந்தனர்.**
- **ஆராதனைகளில் மாத்திரமே சில வசனங்களை வாசிப்பதற்காக வேதாகமம் வெளியே கொண்டுவரப்பட்டது.**

உண்மை!! இந்தக் காலகட்டத்திற்கான உபதேசங்கள் மற்றும் போதனைகளின் நிலைக்கான அடையாளமானது உண்மையில் பின்வருமாறு விவரிக்கப்படுகிறது –

**"நான் பார்த்தபோது, இதோ, ஒரு கறுப்புக்குதிரையைக் கண்டேன்"**

இப்போது நாம் தொடர்ந்து வாசிக்கலாம் –

**வசனம்-6**

**"அப்பொழுது, ஒரு பணத்துக்கு ஒருபடி கோதுமையென்றும், ஒரு பணத்துக்கு மூன்றுபடி வாற்கோதுமையென்றும், எண்ணெயையும் திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே என்றும், நான்கு ஜீவன்களின் மத்தியிலிருந்து உண்டான சத்தத்தைக் கேட்டேன்...."**

**இந்தச் "சத்தம்" யாருடையது?**

இது நான்கு ஜீவன்களின் "**மத்தியிலிருந்து**" வருகிறது! பொதுவாக இது **தேவனையே** (வெளி. 4:6) குறிக்கும், ஆனால் "**...நான்கு மிருகங்களின் நடுவில்**" என்று விவரிக்கப்பட்டுள்ள வேறொன்றையும்கூட கீழே உள்ள வசனத்தில் காண்கிறோம் –

**வெளிப்படுத்தல் 5:6**

**"இதோ, அடிக்கப்பட்டவண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும்,... மத்தியிலே நிற்கக்கண்டேன்...."**

ஆ! ஆம்! இது இப்போது "**உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே**" (எபிரெயர் 1:3) அமர்ந்திருக்கும் **கர்த்தராகிய இயேசுவைப்** பற்றிய குறிப்பாகும்.

**சில விரிவுரைகள்** இந்தச் "சத்தம்" பிதாவுடையதாக இருக்கலாம் என்றும், சில இயேசுவுடையதாக இருக்கலாம் என்றும் விளக்குகின்றன!!

**நாம் முடிவுக்கு வருவதற்கு முன்பு** "சத்தத்தால்" பேசப்பட்ட வார்த்தைகளை வாசிக்கலாம் –

**வசனம்-6**

**"அப்பொழுது, ஒரு பணத்துக்கு ஒருபடி கோதுமையென்றும், ஒரு பணத்துக்கு மூன்றுபடி வாற்கோதுமையென்றும், எண்ணெயையும் திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே என்றும், நான்கு ஜீவன்களின் மத்தியிலிருந்து உண்டான சத்தத்தைக் கேட்டேன்...."**

**மீண்டும், வார்த்தையின் பொருளைப் புரிந்துகொள்வதற்கு முன்பாக, பயன்படுத்தப்பட்டுள்ள அடையாளங்களை முதலில் புரிந்துகொள்வோம்!**

**"கோதுமை" – உண்மைக் கிறிஸ்தவர்களுக்கான** ஓர் அடையாளம் தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், சத்திய வசனத்தினால்

"ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட" புது சிருஷ்டிகளுக்கான ஓர் அடையாளம் **(மத்தேயு 3:12 / 13:30)**

**"வாற்கோதுமை"** – இது ஒரு விபச்சாரியுடன் தொடர்புபடுத்தப்படுவதாகக் பின்வரும் வசனத்தில் காண்கிறோம்

**ஓசியா 3:1, 2**

**"அப்பொழுது நான் அவளை எனக்கு... ஒன்றரைக்கலம் வாற்கோதுமைக்கும் கொண்டு,"**

மீண்டுமாக வாற்கோதுமை என்பது துரோகம்பண்ணினாளா என்று சந்தேகிக்கப்படும் ஒரு மனைவிக்கான எரிச்சலின் காணிக்கையிலும் தொடர்புபடுத்தப்படுவதாகக் காண்கிறோம்

**எண்ணாகமம் 5:15**

**"ஒரு எப்பா அளவான வாற்கோதுமை மாவிலே பத்தில் ஒரு பங்கை..."**

ஆகவே, வாற்கோதுமை, விபச்சார ஆவியுடன் உலகத்துடனான நட்புக்கொண்ட போப் அமைப்பின் பெயர் கிறிஸ்தவர்களை அடையாளப்படுத்துகிறது: கீழேயுள்ள வேத வசனத்தில் இதற்கான எச்சரிக்கையை வாசிக்கலாம் –

**1 யோவான் 2:15 – உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.**

**"பணம்"** – இது **மத்தேயு 20: 8, 9**-ல் உள்ளது போல வேலையின் தினக்கூலிக்கான அடையாளமாகும், இதனால் "**பணம்**" என்பது வேலையின் பலனைக் குறிக்கின்றது.

**"எண்ணெய்"** – தேவனுடைய பரிசுத்த ஆவிக்கான அடையாளம் **(மத்தேயு 25:3,4)**

**"திராட்சரசம்" –** உபதேசங்கள், தேவனுடைய சத்தியங்கள் – சுவிசேஷ செய்தி ஆகியவற்றுக்கான ஓர் அடையாளம் (வேதாகம விளக்கவுரையில் (EBC) பக்கம் 51 – ஐப் பார்க்கவும்) **(மத்தேயு 9:17 / ஆமோஸ் 9:13 பொதுவான சத்தியங்கள்!)**

## இப்போது இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?

இது பெர்கமுவினுடைய இந்தக் காலப்பகுதியின் **நிலைமையைக்** குறிக்கிறது, அங்கு சுவிசேஷ ஊழியக்காரரின் **பலன்** விளக்கப்பட்டும், தெய்வீகக் கண்ணோட்டத்தில் இருந்து வெளிப்படுத்தவும்படுகிறது.

“**கிறிஸ்தவர்கள்**” என்று அழைக்கப்படுபவர்களில் பெரும்பான்மையானவர்கள் கிறிஸ்தவ ஆவிக்குரியவர்கள் அல்ல, மிகச் சிறிய **சிறுபான்மையினர்** மாத்திரமே உண்மையில் “கோதுமை” ஆக – **அழைக்கப்பட்ட கிறிஸ்தவர்களாக** (ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட புதிய சிருஷ்டிகள்!) இருக்க முடிந்தது!

முன்பு சாத்தானால் விதைக்கப்பட்ட கள்ள உபதேசங்கள், அதற்கென பெரியளவிலான பின்னடியார்களைக் கொண்டுவரத் துவங்கிய காலம் அது!

சத்தியத்தின் தரநிலையாகிய வேத வசனங்களைப் பின்பற்ற விரும்பியவர்கள் **மிக மிகக் குறைவாகவே** இருந்தார்கள்!!

இந்தச் சபை காலப்பகுதியைக் குறித்து கர்த்தர் பேசிய உவமையில் இதுகுறித்த முழுச் சித்திரமும் காணப்படுகிறது –

**மத்தேயு 13:31, 32**

“**வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: பரலோகராஜ்யம் கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான். அது சகல விதைகளிலும் சிறிதாயிருந்தும், வளரும்போது, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத்தக்க மரமாகும் என்றார்.**”

ஆம்! **நம்முடைய கர்த்தராலும்** (“**ஒரு மனிதன்**”) மற்றும் அவரது அப்போஸ்தலர்களாலும், வயலில் – உலகில் – விதைத்த சுவிசேஷ செய்தியானது, ஒரு காலப்பகுதியளவும் **வளர்ந்தது** … அப்போது இரண்டாம் உவமையில் (**மத்தேயு 13:25, 26**) காண்கிறபடி, “**சத்துரு**” வந்து கோதுமை வயலுக்குள் “**தனது விதைகளை**” விதைத்து, முழு வயலிலும் “**களைகள்**” வளரச் செய்திருந்தான்… அல்லது இந்த உவமையில் காட்டப்பட்டுள்ளபடி, ஒரு தாவரமாக (ஒரு குத்துச்செடியாக) மாத்திரமே வளரும் ஒற்றை கடுகு விதையானது **ஒரு மரமாகுமளவுக்கு அசாதாரண** மற்றும் **இயற்கைக்கு** மாறான “**வளர்ச்சியை**” அடைந்தது!

ஆம்! கள்ள உபதேசங்களால் போதிக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவின் “சபை” – ஆனது, சுவிசேஷ சத்தியத்தால் **ஜெநிப்பிக்கப்பட்ட வெகு சிலர்** மாத்திரம் உள்ளடக்கிய பெரிய உறுப்பினரைக் கொண்ட ஓர் **அமைப்பாக** மாறத் துவங்கியது!!

ஆனால் கட்டளை என்ன என்பதைக் கவனியுங்கள் –

**“எண்ணெயையும் திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே”**

எப்படி இந்த நிலைமைகள் அனைத்தையும் தாண்டி, **சத்தியத்தின் பரிசுத்த ஆவி** மற்றும் **சத்தியத்தின் உபதேசங்கள்** – சுவிசேஷ செய்தியானது, முற்றிலும் அழிக்கவோ அல்லது சிதைக்கவோ **அனுமதிக்கப்படவில்லை** என்பதை இது குறிக்கிறது!

இது நிச்சயமாக, பெர்கமு சபை காலக்கட்டத்தின் மிகவும் சீரழிந்த சூழ்நிலைகளுக்கு மத்தியிலும், சத்திய வார்த்தையால் (**யாக்கோபு 1:18**) ஜெநிப்பிக்கப்பட்ட “புதுசிருஷ்டியின்” அங்கத்தினரைக் கண்டுபிடித்து வளர்த்துவதற்கான தெய்வீக நோக்கங்களின் தொடர்ச்சியைக் குறிக்கின்றது!

ஆம்! அது இன்னும் “**ஒருபடியில்**” பாதுகாக்கப்பட்டு வந்தது.

இது இந்தக் காலக்கட்டத்தில் **ஏரியஸ்** என்பவரால் (**Arius**) நிறைவேற்றப்பட்டது; அவருடைய சத்திய உபதேசங்கள் “**ஏரியனிசம்**” (**Arianism**) என்று அழைக்கப்பட்டன. ஏரியசின் உபதேசங்கள் மற்றும் போதனைகள் பற்றிய கூடுதல் விவரங்களை எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை, ஆனால் **கி.பி.325** – இல் நடைபெற்ற “**நைசியா சங்கத்தில்**” (**council of nicaea**), **யோவான் 10:30** - “**நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்**” என்பது சொல்லர்த்தமாகவே அவர்கள் இருவரும் ஒருவராக இருப்பது என்னும் விஷயத்தில், இயேசு தேவனாகவே இருப்பதாகக் கூறும் அத்தனேசியசின் (**Athanasius**) தேவதூஷணமான போதனைகளை அவர் கடுமையாக எதிர்த்தார் மற்றும் மறுத்தார் என்பதை நாம் நன்கு அறிவோம்.



**அத்தனேசியஸின்** இப்போதனையானது ஏழாம் நூற்றாண்டில் உருபெற்ற **திரித்துவமெனும்** மோசமான தேவதூஷண உபதேசத்திற்கு வழிவகுத்தது!

இந்த நேரத்தில், உண்மையுள்ள கிறிஸ்தவர்களாகவும், “கோதுமையாகவும்,” அலெக்ஸாண்ட்ரியாவைச் சுற்றியுள்ள ஆப்பிரிக்காவின் வடக்குப் பகுதியில் இருந்தவர்கள் முக்கியமாக ஏரியர்களாக இருந்தார்கள்.

**இறுதியாக,** “**நான்கு ஜீவன்களின் மத்தியிலிருந்து**” வந்த அந்தச் “**சத்தம்**” யாருடையது?

**தேவனுடைய வார்த்தையையும், அவருடைய தெய்வீகத் திட்டத்தையும் இந்தச் “சத்தம்” குறிக்கின்றது என்று நாம் நினைக்கின்றோம்!**

… இந்தச் சத்தம் **இந்த** எல்லாவற்றையும், **வரவிருக்கும்** அனைத்தையும் முன்னறிந்திருந்தது… மேலும், அநேகமாக மூன்றாம் முத்திரை உடைக்கப்படும்போது இங்கே வெளிப்பட்ட “**சத்தம்**” – ஆனது, சபை வரலாற்றில் இப்போது **இருண்ட யுகங்கள் என்றழைப்பட்டதின்** விடியல் உட்பட எல்லாமே தேவனுடைய **கட்டுப்பாட்டில்** இருக்கின்றன என்னும் உண்மையுள்ள கிறிஸ்தவர்களின் **விசுவாசத்தை மீண்டும் உறுதிப்படுத்துவதற்காக** இருந்திருக்கக்கூடும்!!

ஆம்! தேவனுடைய வார்த்தையிலிருந்து பெயர்ச்சபை அமைப்பின் இந்த வளர்ச்சிகளைக் குறித்து பேசும் **சில சத்தியங்களையும்** போதனைகளையும் ஏரியஸ் அவர்கள் புரிந்து **போதித்திருக்கக்கூடும்**… ஆனால் அவரின் அந்த **எழுத்துக்கள்** பற்றிய பதிவுகள் ஏதும் இல்லாத காரணத்தால், ஆதாரங்களுடன் **எங்களால் நிரூபிக்க முடியவில்லை** என்று நாங்கள் கருதுகிறோம் !

ஆம்! சுவிசேஷ யுகத்திற்கான தேவனுடைய திட்டத்தின் **வெளிப்பாடுகள்** … மற்றும் படிப்படியாக வெளிப்பட்டு வந்துக்கொண்டிருந்த “**பரிசுத்த உரோம சாம்ராஜ்யத்தில்**” விரைவில் வளர்ச்சியுரவிருந்த **இருண்ட யுகங்கள்** மற்றும் இந்தப் **போப் அமைப்பின்** ஆதிக்கம் என அனைத்தையும் தேவன் முன்னறிந்திருந்தார் … மேலும் அவை தெய்வீக ஞானத்தால் அனுமதிக்கப்பட்டன… மேலும் இவைகளின் **ஊடே** தேவன் தமது குமாரனாகிய

இயேசுவின் மூலம் அவருடைய மெய்த் திருச்சபையை நிலைநிறுத்துவதற்கும் அதைக் காப்பதற்கும் தேவன் வல்லவராயிருந்தார் ... "**எண்ணெயையும் திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே**" என்பது ஏரியசின் எழுத்துக்கள் மற்றும் போதனைகள் மூலம் சத்தியத்தின் "**சத்தம்**" – ஆக இருந்ததாக நாங்கள் நம்புகிறோம். அவர் கர்த்தருடைய "**வலதுகரத்திலே (இருந்த) ஏழு நட்சத்திரங்களில்**" ஒன்றாகவும் (**வெளிப்படுத்தல் 1:16**), **வெளிப்படுத்தல் 2:17** – இல், பெர்கமுவில், கர்த்தர் **காதுள்ளவன் கேட்கக்கடவன்**" என்று குறிப்பிடுகிற வகுப்பாருக்கு தூதுகொடுக்கும் இந்தச் சபைக்கான "**தூதன்**" ஆகவும் இருந்தார்.

ஓ! நாம் **ஏரியசின்** அந்த எழுத்துக்களைப் பார்த்திருந்தாலோ அல்லது அந்தப் **போதனைகளைக் கேட்டிருந்தாலோ** நன்றாயிருந்திருக்கும்! ஆனால் அந்தோ! அவை அனைத்தும் அவருடைய எதிரிகளால் அழிக்கப்பட்டு எரிக்கப்பட்டன! (**வெளிப்படுத்தல் 2:13**)

மேலும், ஆம்! தேவனுடைய **எல்லையற்ற, அன்பின்** ஒவ்வொரு **கொள்கைக்கும் விரோதமாக** சென்று, தேவன் மற்றும் கிறிஸ்துவின் பெயரால் அனைத்தையும் செய்திட்ட இப்படிப்பட்ட அமைப்பு **தெய்வீக அனுமதியின்கீழ்** நிறுவப்பட்டது என்பதற்கு நம்முடைய கவனத்தைக் கொண்டுச் செல்கிறது என்பதாகத் தோன்றுகிறது !!

ஆம்! "**மூன்றாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லக்கேட்டேன்...**"

# நான்காம் முத்திரை

**(வெளிப்படுத்தல் 6: 7 – 8)**

**சபை காலக்கட்டம் : தியத்தீரா**

**காலப்பகுதி : கி.பி. 1157 – கி.பி. 1367**

**வசனம்-7**

"**அவர் நாலாம் முத்திரையை உடைத்தபோது, நாலாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லுஞ் சத்தத்தைக் கேட்டேன்.**"

ஓ! ஆம்! இந்த "**நாலாம் ஜீவன்**" என்பது கீழே பட்டியலிடப்பட்டுள்ள நான்காவது ஜீவனைக் குறிக்கும் என்பதை நாம் அறியவிருக்கிறோம் –

**வெளிப்படுத்தல் 4:7**

**"...பறக்கிற கழுகுக்கு ஒப்பாகவுமிருந்தன"**



இது பின்வரும் தேவனுடைய **நான்காம் குணலட்சணப் பண்பினைக்** குறிக்கிறது –

## ஞானம்

ஆம்! தேவனுடைய குணமான எல்லையற்ற ஞானமானது நான்காம் முத்திரையின் உள்ளடக்கங்களுக்கு நம் கவனத்தை ஈர்க்கின்றது! இப்போது நாம் தொடர்ந்து வாசிக்கலாம் –

**வசனம்-8**

**"நான் பார்த்தபோது, இதோ, மங்கினநிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர்; பாதாளம் அவன்பின் சென்றது. பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்டமிருகங்களினாலும், பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலைசெய்யும்படியான அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது."**



## இவற்றுக்கெல்லாம் என்ன அர்த்தம்?

முதலாவதாக … குதிரையைப் பார்ப்போம், அதன் நிறத்தைக் கவனிப்போம் – "**மங்கின நிறம்**" இது கிரேக்க வார்த்தையான "**குளோரோஸ் / chloros**" (**ஸ்ட்ராங்கின் – கிரேக்கம் # 5515**) என்பதிலிருந்து வந்தது, இது "**பச்சை நிறம்**" என்று வரையறுக்கப்படுகிறது!!

ஏற்கனவே பார்த்தபடி, "குதிரை" என்பது **உபதேசங்கள்** மற்றும் **போதனைகளுக்கான** ஓர் அடையாளமாகும், மேலும் "**பச்சையான மங்கின நிறம்**" என்பது சபையின் தியத்தீரா காலப்பகுதியின்போதிருந்த உபதேசங்களின் நிலைமையைக் குறிக்கிறது!



மெய்யாகவே! மூன்றாம் முத்திரையின் காலக்கட்டத்தில் காணப்பட்ட "கறுப்புக் குதிரை" இப்போது பழைய கெட்டுப்போகும் ரொட்டி மற்றும் உணவில் உருவாகும் பூஞ்சையில் காணப்படுவது போல் "**பச்சை**" நிறமாக மாறியது! மெய்யாகவே, கறுப்பு நிறமானது **பிரகாசமான பச்சை அல்லாத, மங்கின பச்சை** நிறத்தோடுக் கலந்த மாதிரியான ஒரு நிறத்தைப் பெறுகிறது!

**ஆம்! "பச்சையான மங்கின நிறம்" ஒரு மரண நிலைமையையும், அழுகிப்போனதன்மையையும் கூடக் குறிக்கின்றது!!**

மெய்யாக! திருச்சபையின் இந்தக் காலப்பகுதியில் காணப்பட்ட உபதேசங்கள் பற்றி, திருச்சபையின் **இந்தக் காலக்கட்டத்தை விவரிக்கும் உவமையில்** கர்த்தர் பின்வருமாறு விவரிக்கின்றார் –

**மத்தேயு 13:33**

**"…புளித்த மாவுக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு ஸ்திரீ எடுத்து, முழுவதும் புளிக்கும் வரைக்கும், மூன்றுபடி மாவிலே அடக்கிவைத்தாள் …"**



ஆம்! இங்கே "**புளித்தமாவு**" கள்ள உபதேசங்களையும் "**மனுஷருடைய**" போதனைகளையும் (**கொலோசெயர் 2:22, 23**) குறிக்கின்றது; அப்போது முழு வல்லமையிலும் அதிகாரத்திலுமிருந்த உரோம கத்தோலிக்க (போப் மண்டலம்) சபை அமைப்பைக் குறிக்கின்ற இந்த "**ஸ்திரீ** " யானவள், சத்திய வார்த்தையின் ஒவ்வொரு வெளிப்பாட்டையும் தடுத்து நிறுத்த பிரயாசப்பட்டுக்கொண்டிருந்தாள்!

இந்த "**ஸ்திரீ** "யைக் குறித்து அடையாளமாக "**தியத்தீரா சபையின் தூதனுக்கு**" நமது கர்த்தரால் உரைக்கப்பட்ட செய்தியில் விவரிக்கப்பட்டுள்ளது ...

**வெளிப்படுத்தல் 2:20**

**"ஆகிலும், உன்பேரில் எனக்குக் குறை உண்டு; என்னவெனில், தன்னைத் தீர்க்கதரிசியென்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்திரீயானவள் என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம்பண்ணவும் விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் அவர்களுக்குப் போதித்து, அவர்களை வஞ்சிக்கும்படி நீ அவளுக்கு இடங்கொடுக்கிறாய்."**

ஆ! இங்கே **மத்தேயு 13:33** – இல் உள்ள உவமையில் வருகிற "**ஸ்திரீ**" - "**யேசபேல்**" எனும் அடையாளத்தால் குறிப்பிடப்படுகிறது.

( "**யேசபேல் என்னும் ஸ்திரீயானவள்**" – **வெளிப்படுத்தல் 2:20** – க்கான விளக்கவுரை (EBC) கருத்துக்கள் – ஆகாப் இராஜாவின் விக்கிரகாராதனையுள்ள மனைவி (1 இராஜாக்கள் 19:14) இவரிடமிருந்துதான் தனது உயிருக்காக எலியா வனாந்தரத்திற்கு ஓடிப்போனார். R5993 / R4741 / R3794 / R3326 / B256. பூமிக்குரிய அரசாங்கங்களைத் திருமணம் செய்துகொண்ட கள்ளக் கிறிஸ்தவ சபை அமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது – R5751 )

வெளிப்படுத்தல் 2:20 – இன் ஆடையாள வார்த்தைகளை கூர்ந்துநோக்குகையில், சுவிசேஷத்தில் உள்ள **சத்திய உபதேசங்களைக் கிட்டத்தட்ட முற்றிலுமாக** அழிக்கப் பயன்படுத்தப்பட்ட **கள்ள உபதேசங்களையும்** "**மனுஷருடைய உபதேசங்களையும்**" கர்த்தர் குறிப்பிடுகிறார் என்பது தெளிவாகிறது.

ஆ! ஆம்! சுவிசேஷ செய்தியிலிருந்த **அனைத்து சத்திய** உபதேசங்களான....

- இரட்சிப்பு,
- பாவமன்னிப்பு,
- மனித ஆத்துமா,
- பாவத்தின் சம்பளம்,
- பரமஅழைப்பு,
- தேவ ஆராதனை,
- ஞானஸ்நானம்,
- உயிர்த்தெழுதல்,
- இராஜ்யம்

**போன்ற அனைத்துமே ஆம், அனைத்துமே கெடுக்கப்பட்டது!!!**

உபதேசங்களில் சத்தியத்தின் "**ஜீவன்**" இனி ஒருபோதும் இராமல் போனது (யோவான் 6:63).

**அது ஜீவனற்று அழுகிப்போனது**

இது மெய்யாகவே சபை வரலாற்றின் இருண்ட யுகங்களாக இருந்தது! அப்போது சத்தியம் முற்றிலும் காணாமல் போயிருந்தது!!

மத்தேயு 13 ஆம் அதிகாரத்தின் முதல் மூன்று உவமைகளில் "**விதைக்கிறவன்**" - "**மனுஷன்**" இங்கே **முற்றிலும் காணமல் போயிருந்ததின் மூலம்** இது சான்றளிக்கப்படுகின்றது!

- **# 1. ஆம்! கிறிஸ்தவத்தின் நிறுவனர் பற்றிய சத்தியம் மறக்கப்பட்டது**
- **# 2. ... அதின் இடத்தைத் திரித்துவம் எடுத்துக்கொண்டது**
- **# 3. குமாரன்... இப்போது பிதாவாகவும் தேவனாகவும் புரிந்து கொள்ளப்பட்டார்!**
- **# 4. உண்மையில் அந்த "ஸ்திரீ " இப்போது அதிகாரத்திலும், முக்கியத்துவம் வாய்ந்த இடத்திலும் இருந்தாள்!**

**ஒரு பரலோக அழைப்பாக இருந்த உண்மையான சபை, ஒரு மாபெரும் மற்றும் பிரமாண்டமான மதத்தைக் கொண்ட சபையாக மாற்றப்பட்டது!**

இப்போது **ஏறியிருந்தவருக்கு** வரலாம், கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்தை வாசிக்கலாம்!

**வசனம்-8**

**"நான் பார்த்தபோது, இதோ, மங்கினநிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன்;**

**அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர்; பாதாளம் அவன்பின் சென்றது. பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்டமிருகங்களினாலும், பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலைசெய்யும்படியான அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது."**

குதிரைகள் மற்றும் அவற்றின் நிறத்தால் குறிக்கப்பட்ட அந்தந்த உபதேசங்களின் **விசுவாசிகளே** இந்த **முந்தைய** முத்திரைகளில் விவரிக்கப்பட்ட ஏறியிருந்தவர்கள் என்பது இப்போது அனைவருக்கும் தெளிவாகியிருக்கும்!

எனவே இங்கே பயன்படுத்தப்படும் அடையாளங்கள் பின்வருவதைக் குறிக்கின்றன:

**தன் முழு வல்லமையிலிருந்த போப் அமைப்பு!!**

புளிப்பைச் சேர்த்த "**ஸ்திரீ** " யின் உவமையில் இது உறுதிப்படுத்தப்பட்டதை நாம் ஏற்கனவே பார்த்தோம்

சரியாக இங்கு என்ன அர்த்தப்படுத்துகிறது என்பதைப் புரிந்துகொள்ள இப்போது இந்த அடையாளங்களைப் பற்றி ஆராயலாம்...

**"அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர்"**

ஆம்! இங்கு "**பெயர்**" என்பது அடையாளம் / தனித்துவத்தையும்.... "**மரணம்**" என்பது ஜீவனற்றத்தன்மையையும் குறிக்கும்.

**"பாதாளம் அவன்பின் சென்றது"**

இங்கு.... "**பாதாளம்**" என்பது கிரேக்க வார்த்தையான ஹேடீஸ் (**ஸ்ட்ராங்கின் கிரேக்கம் #86**) ஆகும் மற்றும் "**கல்லறை**" என்று பொருள்படும், இது ஒரு ஜீவனற்ற நிலைமையைக் குறிக்கும்.

**இவற்றுக்கெல்லாம் என்ன அர்த்தம்?**


இவை இந்த **இருண்ட யுகக்** காலப்பகுதியின் நிலைமையை விவரிக்க தேவனால் பயன்படுத்தப்படும் **அடையாளங்களாகும்!** "**மங்கினநிறமுள்ள குதிரை**" ஆனது போதிக்கப்பட்ட முற்றிலும் **சீரழிந்த** உபதேசங்களைக் குறிக்கும்

அதேவேளையில், இங்கு ஏறியிருந்தவர், **மத்தேயு 13:33** – இல் உள்ள உவமையில் வருகிற "**ஸ்திரீ** " மற்றும் **வெளிப்படுத்தல் 2:20** – இன் "**யேசபேல்**" ஆகியவற்றுக்குமான ஒரு குறிப்பாகும்..... அது

## உரோம கத்தோலிக்க (போப்) சபை அமைப்பே

தேவனுடைய சத்திய வார்த்தை மற்றும் "**ஜீவன்**" **(யோவான் 6:63)** ஆகியவற்றை அவர்கள் முழுமையாகப் பயன்படுத்தாதது மற்றும் அவர்கள் **கள்ள உபதேசங்களின்** பரப்புரையாளர்களாக இருப்பது பின்வரும் இந்த வார்த்தைகளில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது

**"அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர்"**



**ஜீவவார்த்தை** இல்லாதபோதும் **தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்ளும்** இந்த அமைப்பின் விசுவாசிகளும் பின்னடியார்களுமானவர்களை, இயல்பாக, **ஜீவனற்ற (மரித்த) நிலையில்** இருப்பதாக மாத்திரமே குறிப்பிட முடியும்!!

ஆம்! ... "**பாதாளம் அவன்பின் சென்றது.**"

ஆம்! இந்த **எறியிருந்தவர் அந்திக்கிறிஸ்து அமைப்பு** மற்றும் அதைப் பின்பற்றுபவர்களுக்கான குறிப்பாகும், மேலும் அவர்கள் இதற்கொப்பான ஒன்றோடு கீழேக் குறிப்பிடப்படுகிறார்கள்

**வெளிப்படுத்தல் 12:7**

**"… மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும்"**

ஆம்! இந்த அமைப்பு மற்றும் அது துவக்கத்தில் நிறுவப்பட்டபோதிருந்த (கி.பி. 325 மற்றும் கி.பி. 539 – க்கு இடையில்) அதன் **ஆதரவாளர்கள்** அல்லது "**பின்பற்றுபவர்கள்**" என்பவைகளைக் குறித்தே இங்கு சித்தரிக்கப்பட்டுள்ளன. இங்கு மிகாயேல் என்பவர் உரோமின் ஆடம்பரமான கண்காணிக்கும், **அவரது மகத்தான தெய்வீகக் கூற்றுகளுக்கும் / அறிக்கைகளுக்கும்** அடையாளமாக இருக்கிறார்!

இங்கே ஒருவரால் கூடுதலான ஒரு படத்தையும் காணமுடியும், அதைப்பற்றி வாசிக்கலாம் –

**யோவான் 11:25**

**"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்"**

**ஆம்! அதைக் கவனித்தீர்களா?**

- **கிறிஸ்து என்பவர் உயிர்த்தெழுதலும் ஜீவனுமாக இருந்தால்...**
- **பின்னர் அந்திக்கிறிஸ்து அதற்கு மிகவும் நேர்மாறான மரணம் மற்றும் பாதாளத்தைக் குறிப்பதாக இருக்கும்!!**

நாம் இப்போது மேற்கொண்டு பின்வரும் வசனத்தை வாசிக்கலாம் –

**வசனம்–8**

**"....பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்டமிருகங்களினாலும், பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலைசெய்யும்படியான அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது."**

இங்கே "**அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது**" என்பது போப் அமைப்புக்கும் மற்றும் அதன் ஆதரவாளர்களுக்கும் வழங்கப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட தெய்வீக அனுமதியைக் குறிக்கிறது.

ஆம்! இது உண்மையில் தீமைக்குரிய ஒன்றிக்கான தெய்வீக அனுமதிக்குப் பயன்படுத்தப்படும் ஒரு பதமாகும், உதாரணத்திற்கு நாம் வாசிக்கலாம் –

**லூக்கா 4:6**

**"இவைகள் எல்லாவற்றின்மேலுமுள்ள அதிகாரத்தையும் இவைகளின் மகிமையையும் உமக்குத் தருவேன், இவைகள் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது"**

பிசாசு மற்றும் தீமையின் வல்லமையினுடைய அனுமதியைப் பெற்றுக்கொண்டதை அவன் ஒப்புக்கொள்ளுதல் ஆகியவற்றுக்கான குறிப்பாகும்!

ஆ! ஆம்! அப்படியானால் பின்வரும் தேவனுடைய வார்த்தைகளுக்கு இதுவே அர்த்தமாகும் –

**ஏசாயா 45:7**

**"சமாதானத்தைப் படைத்து தீங்கையும் உண்டாக்குகிறவர் நானே; கர்த்தராகிய நானே இவைகளையெல்லாம் செய்கிறவர்"**

ஆம்! பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும்... நன்மை தீமை என இரண்டுமே பரமபிதாவின் முழுமையான கட்டுப்பாட்டில் இருக்கின்றன!

**நாம் தொடரலாம் ...**

இந்த "**அதிகாரம்**" "**பூமியின் காற்பங்கிலுள்ளவர்கள்**" மீது கொடுக்கப்பட்டது.

அந்த நேரத்தில் குடியேற்றப்பட்டு அறியப்பட்ட நான்கு நிலப்பரப்புகள் அல்லது கண்டங்களை இது குறிக்கிறது

1. **ஐரோப்பா**
2. **ஆப்ரிக்கா**
3. **ஆசியா**
4. **அமெரிக்காக்கள்**

இந்த "**அதிகாரம்**" காற்பங்கின் மீதாக இருக்க வேண்டியிருந்தது, மேலும் அது இங்கே இந்த நான்கு பரப்பில் ஒரு பரப்பினைக் குறிக்கிறது; அது இந்த அந்திக்கிறிஸ்து அமைப்பானது நிறுவப்பட்டு, அதன் மாபெரும் **செல்வாக்கைப்** பயன்படுத்தி வருகிற **ஐரோப்பாவைக்** குறிப்பதாக நாங்கள் நம்புகிறோம்!

இறுதியாக நாம் பின்வரும் வார்த்தைகளை வாசிக்கிறோம் –

"**பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்டமிருகங்களினாலும், ... கொலைசெய்யும்படியான**"

ஆம்! இங்கே "**அதிகாரமானது**" பின்வரும் நான்கு முறைகள் என விவரிக்கப்படுபவைகளின் மூலம் "**கொலைசெய்ய**" பயன்படுத்தப்பட்டது –

- **... பட்டயத்தினாலும்**
- **... பஞ்சத்தினாலும்**
- **... சாவினாலும்**
- **...பூமியின் துஷ்டமிருகங்களினாலும்**

தெளிவாக இவையெல்லாம் **அடையாளப்பாஷையே** ... மாறாக சொல்லர்த்தமாக எடுத்துக்கொள்ளக்கூடாது! இது "**அப்போக்டினோ** / apokteino" **(ஸ்ட்ராங்கின் – கிரேக்கம் # 615)** என்னும் கிரேக்க வார்த்தையாகும் – இதன் பொருள் "**அழிக்க**" அல்லது "**கொலை செய்ய**" என்பதாகும்.

இங்கே அது இந்த அந்திக்கிறிஸ்து போப் அமைப்பை எதிர்த்த அனைவருக்கும், இந்த விஷயத்தில் **பெரும்பான்மையான** தேவனுடைய **உண்மை**

பிள்ளைகளுக்கு **எதிராகப்** பயன்படுத்தப்பட்ட உபத்திரவங்கள் மற்றும் எதிர்ப்பு முறைகளைக் குறிக்கும்!!

ஆம்! இது இந்த நாலாம் சபை காலப்பகுதியின் “**தூதனான**,” **பீட்டர் வால்டோ**வையும் அவரது போதனைகளையும் – பெருமளவிலான தேவனுடைய உண்மையான பிள்ளைகள் பின்தொடர்ந்த சபையின் காலப்பகுதியாகும்....

ஆம்! அவர்கள் “**வால்டென்ஸ்கள்** / *THE WALDENSES*” என்று அழைக்கப்பட்டனர்

இப்போது இங்கு பயன்படுத்தப்பட்ட மற்றும் குறிப்பிடப்பட்ட முறைகளைப் பற்றி ஆராயலாம் –

## “பட்டயத்தினாலும்”

தேவனுடைய வார்த்தையின் சத்தியங்களை முன்னிலைப்படுத்திய சீர்திருத்தவாதிகளுக்கு **விரோதமாக** மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட **வேதாகமப்பூர்வ அல்லது உபதேச சர்ச்சையின்** மூலம் “**மாபெரும் பட்டயமாகிய**” தேவனுடைய வார்த்தையையே பயன்படுத்தியதை இது குறிக்கிறது. சீர்திருத்தவாதிகள் முன்வைத்த **சத்தியங்கள்** வேத வாக்கியங்களின் **சரியான விளக்கங்கள் அல்ல**, அவை தப்பறையானது என்று **போப்** அமைப்பாலும், அதின் அதிகாரத்தாலும், ஊழியர்களாலும் கூறப்பட்டது! இது பொது மக்களின் புரிதலில் / அறிவில் **குழப்பத்தை** உண்டுபண்ணுகிற முயற்சியாக இருந்தது!



இதற்காக அவர்களால் பயன்படுத்தப்பட்ட வார்த்தை –

"**மதபேதம் / மார்க்கபேதம் / வேதப்புரட்டு / HERESY**" ஆகும்.

தேவனுடைய வார்த்தையிலிருந்து சத்தியத்தைப் பிரசங்கித்த இந்தச் சீர்திருத்தவாதிகள் "**வேதப்புரட்டர்கள்** ( **HERESY** )" என்று அழைக்கப்பட்டனர்!

அடுத்து பயன்படுத்தப்பட்ட முறை –

"**பஞ்சத்தினாலும்**"

இது "**லிமோஸ்** / **Limos** – (**ஸ்ட்ராங்கின் – கிரேக்கம் # 3042**) என்னும் கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது – இது "உணவு பற்றாக்குறை," "வறுமை," "பஞ்சம்" என வரையறுக்கப்படுகிறது. ஆகவே இது தேவனுடைய வார்த்தையைக் கேட்பதற்கான பெரும் **பற்றாக்குறையை** அடையாளப்படுத்தும், ஏனெனில் அது அப்போதிருந்த அமைப்பின் **கட்டுப்பாட்டில்** இருந்தது, மேலும் பெரும்பாலும் **இலத்தீன் மொழியில்** இருந்ததால் பொதுவான ஜனங்களுக்குப் புரியாமலும் இருந்தது.

மெய்யாகவே! **திருப்பலியின்**போது வேதவசனங்கள் **குறிப்பிட்ட** "வாக்கியங்கள்" மட்டும் வாசிக்கப்பட்டன, அதுவும்கூட **இலத்தீன் மொழியில்**தான் இருந்தது! கையெழுத்துப் பிரதிகளும் சுருள்களும் கூட **எபிரேய / கிரேக்க** மற்றும் **இலத்தீன்** மொழிகளில்தான் இருந்தன. அத்துடன் இந்தக் கையெழுத்துப் பிரதிகள் கிட்டத்தட்ட பொது மக்களுக்கு அணுக முடியாதவையாக இருந்தன. இது பின்வரும் **இரண்டாவது முத்திரையில்** நாம் வாசிக்கின்ற ஒரு காரியம் வளர்ச்சியடைந்து வந்ததின் ஒரு படமாகும் –

**வெளிப்படுத்தல் 6:4**

**"… ஒரு பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது"**

ஆம்! எல்லா கையெழுத்துப் பிரதிகளும் (அந்த நேரத்தில் அது விலங்குகளின் தோலில் கையால் எழுதப்பட்ட சுருள்களாக இருந்தன) **போப் அமைப்பின்** கைகளில் இருந்ததாலும், அச்சு இயந்திரம் இன்னும் **கண்டுபிடிக்கப்படவில்லை** என்பதாலும் வேதவசனங்களை அணுகுவது மிகவும் கடினமாக இருந்தது!! உண்மையில் இந்த நேரத்தில்தான் வேதாகமத்தை மொழிபெயர்க்கும் முதல் முயற்சி **பீட்டர் வால்டோவால்** மேற்கொள்ளப்பட்டது, அவர் பிரெஞ்சு மொழியில் அதனை மொழிபெயர்ப்பதற்காக பாதிரியார் **ஸ்டீபனஸ் டி எவிசா**வை **(Stephanus de Evisa)** நியமித்து பணமும் கொடுத்தார் !!

இந்த விஷயத்தில் நாங்கள் வைத்திருக்கும் நம்பகமான தகவல்களைப் பொறுத்தவரையில், வேதாகமத்தை **பிரெஞ்சு மொழியில்** (ப்ரோவென்ஸ் எனப்படும் பிரெஞ்சு மொழியின் பேச்சுவழக்குக்கு) **மொழிபெயர்த்தல்** என்னும் இந்த வேலையில் சுவிசேஷங்களும், புதிய **ஏற்பாடு** மாத்திரமே மொழிபெயர்க்கப்பட்டன என்று நமக்கு கூறுகின்றன **(சான்றாதாரம்: விக்கிபீடியா)**. எந்த வகையில் பார்த்தாலும், இது மிகவும் கடினமான பணியாகவே இருந்ததாகத் தெரிகிறது, ஏனெனில் வேதாகமத்தின் சுருள்களை அணுகுவது என்பது பெரும்பாலும் உரோம கத்தோலிக்க சபையினரால் மாத்திரமே முடிந்தது, ஆகவே அணுகலை / அனுமதியைப் பெறுவதற்கு, வால்டோ இந்தப் பாதிரியாரை பயன்படுத்தியிருக்க வேண்டும், அநேகமாக மிகவும் அதிகமான விலையைக் கூட கொடுத்திருக்க வேண்டும்!

அடுத்து பயன்படுத்தப்பட்ட முறை –

“**சாவினாலும்**” ஆகும்

சொல்லர்த்தமாக எடுத்துக்கொண்டால், பின்வருமாறு சொல்வது மிகவும் விசித்திரமாக இருக்கும் –

“**சாவினாலும் ... கொலைசெய்யும்படியான**”

ஆனால் “**கொலை**” மற்றும் “**சாவு**” இரண்டையும் அடையாளமெனப் புரிந்துகொள்ளும்போது, அது தெளிவாகிறது! சாவு என்பது “**துண்டிக்கப்படுதல்**” என்று பொருள்படும், இது தேவனுடைய வார்த்தையின் போதனைகளைப் பிரசங்கித்து பரவச்செய்தவர்கள் மீதான துன்புறுத்தல்களின் ஒரு பகுதியாக அந்திக்கிறிஸ்து போப் அமைப்பால் செய்யப்பட்ட துண்டித்தலைக் குறிக்கும்.

ஆம்! அது பின்வருமாறு அழைக்கப்பட்டது –

“**சபை நீக்கம்**”

**(EXCOMMUNICATION)**



இதற்கு ஆளான **கிறிஸ்தவர்**, பொது அவமானத்தை அனுபவித்தார், திருச்சபையின் உறுப்பினர் என்பதிலிருந்து நீக்கப்பட்டார், மேலும் சமூகத்தில்கூட பெரும் **போராட்டங்களையும், கஷ்டங்களையும்** எதிர்கொண்டார், ஏனெனில் போப் அமைப்பின் "**சபை**" ஆனது சமூக வாழ்க்கையில் கூட அந்த நேரத்தில் மிகப் பரவலான செல்வாக்கைக் கொண்டிருந்தது, ஐரோப்பாவில் பெரும்பான்மையானவர்கள் உரோம கத்தோலிக்க சபையின் உறுப்பினராக இருந்தனர்!

சீர்திருத்தம் இன்னும் எதிர்காலத்திற்குரியதாகவும், **பிரோட்டஸ்டண்டிஸம் (PROTESTANTISM)** இனிமேல்தான் உருவாக வேண்டியிருந்ததாலும், இந்த (உரோம கத்தோலிக்க) சபை **மாத்திரமே** அப்போது இருந்ததை நாம் மனதில் கொள்ள வேண்டும். **இதனால் சபையின் செல்வாக்கானது வர்த்தகம், கல்வி மற்றும் வாழ்க்கையின் வணிகரீதியான துறைகளிலும் விரிவடைந்திருந்தது.** எனவே திருச்சபையிலிருந்து விலக்கப்பட்டவர் ஒரு பொதுக் காட்சிப்பொருளாக மாற்றப்பட்டது மாத்திரமல்லாமல், ஒரு சாதாரண ஜீவியத்தை நடத்துவதுகூட அவருக்குக் கடினமாக மாறிற்று!

இறுதியாக நாம் வாசிப்பது –

"**பூமியின் துஷ்டமிருகங்களினாலும்**"

"**ஜீவன்கள்**" அந்தப் "**பூமியின் காற்பங்கின்**" இராஜ்யங்களை அடையாளப்படுத்துவதால் இதைப் புரிந்துகொள்வது எளிது – அது ஐரோப்பா ஆகும்! ஆம்! ஐரோப்பாவின் இராஜாக்களே!

உலக இராஜ்யங்களைக் குறிக்கும் இந்த "**மிருகங்களின்**" அடையாளம் **தானியேல் 7:3** – இல் காணப்படுவதை நாம் நினைவுக்குக் கொண்டு வரலாம், அங்கு அந்த "**நான்கு பெரிய மிருகங்கள்**" அந்தத் "**தரிசனத்தில்**" காணப்படும் நான்கு இராஜ்யங்களையும் உலகளாவிய உலகப் பேரரசுகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. ஆனால், இங்கே நாம் அந்த பேரரசுகளில் **நான்காவது** பேரரசான – **உரோமப் பேரரசின்** காலத்தில் இருக்கிறோம்!!

ஆம்! அது ஐரோப்பாவின் பரிசுத்த உரோம பேரரசின் "**இராஜாக்களும்**" **இராஜ்யங்களுமே!** தேவனுடைய சத்தியங்களை வெளிக்கொணரவும், பிரசங்கிக்கவும், மற்றும் போதிக்கவும் முயன்ற மெய்த் திருச்சபையின் உறுப்பினரைத் **துன்புறுத்துவதற்கான வழிமுறையாகவும்**, கருவிகளாகவும் இந்த இராஜாக்களும் கூட பயன்படுத்தப்பட்டனர்!

இதை நாம் வேத வசனங்களில் தெளிவாகக் காண்கிறோம் –

**வெளிப்படுத்தல் 12:13**

**"வலுசர்ப்பமானது தான் பூமியிலே தள்ளப்பட்டதை அறிந்து, அந்த ஆண்பிள்ளையைப்பெற்ற ஸ்திரீயைத் துன்பப்படுத்தினது......"**

**ஆம்! இது மிகவும் தெளிவாகத் தெரிகிறது!**

இங்குள்ள "**வலுசர்ப்பம்**" ஆனது, பின்னர் பரிசுத்த உரோம சாம்ராஜ்யமாக இருந்ததின் அங்கமாக இருந்த ஐரோப்பாவின் **சமுதாய சக்தி** (civil power) என்னும் "**மிருகங்களாகும்**"! **போப் அமைப்பினுடைய உத்தரவின்** பேரில் **சமுதாய அதிகாரகளிலிருந்து** (civil power) வந்த துன்புறுத்தல்களின் சம்பவங்கள் பல இருக்கின்றன!

**பரிசுத்த உரோமப் பேரரசின்** ஏற்பாட்டில், போப்புகள் இராஜரீகத்தின் (Kingship) தெய்வீக அதிகாரத்தைக் கோரினர் **(இதனால் அவர்கள் தலையில் கிரீடங்களை அணிந்தனர்)** மேலும் ஐரோப்பாவின் மன்னர்கள் தங்கள் அதிகாரத்தின் "**கீழ்**" இருக்க வேண்டுமெனவும் கோரினர் ...



இதனால், தங்களுடைய கட்டளைகள் தேவனிடமிருந்து வருபவை என்று கூறி தங்களுடைய சொந்த கட்டளைகளை நிறைவேற்ற மன்னர்களுக்குக் கட்டளையிட்டனர் என்பதை நாம் நினைவுப்படுத்தி, புரிந்து கொள்ள வேண்டும். "**பூமியின் துஷ்டமிருகங்கள்**" சிவில் / சமுதாய அதிகாரத்தைப் பயன்படுத்தும் **இராஜாக்கள்**, எவ்வாறு போப் அமைப்பின் எதிரிகளை – இந்த நிகழ்வுகளில் – தேவனுடைய உண்மையான பிள்ளைகளைத் துன்புறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர் என்பதற்கு **இரண்டு** நிகழ்வுகளை / உதாரணங்களை இங்கே தருகிறோம்!

1160 – ஆம் ஆண்டில், ... வால்டென்ஸ்களின் (Waldenses) ஒரு குழு, மக்கள் முன்னிலையில் வாரினால் அடிக்கடிப்படவும், கன்னத்தில் முத்திரைபோட சிவப்புச் சூடான இரும்பினால் சூடுப்போடப்படவும், குளிர்காலத்தின்போது நகரத்திலிருந்து அரை நிர்வாணமாக விரட்டப்படவும், யாரும் அவர்களுக்கு உதவ அனுமதிக்கப்படாமலும், **இங்கிலாந்தின் மன்னர் II – ஆம் ஹென்றியால்** உத்தரவிடப்பட்டது!!

மற்றொரு நிகழ்வு 1224 – இல் நிகழ்ந்தது, **ஜெர்மனியின் பேரரசரான ஃபிரடெரிக்** பல வால்டென்ஸ்களை **உயிருடன் எரிக்கவும்**, அவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படவும் தண்டனை விதித்தார்!



ஆம்! தேவனுடைய **எல்லையற்ற ஞானமானது** இத்தகைய மோசமான **தீய** மற்றும் **கள்ள அமைப்பை** இவ்வளவு **ஆதிக்கம் செலுத்துவதற்கும், செழித்து வளர்வதற்கும்,** தேவனுடைய பிள்ளைகளை கிட்டத்தட்ட முற்றிலுமாக அழிக்கவும் **எப்படி** மற்றும் **ஏன்** அனுமதித்தது என்பது ஒரு பெரிய கேள்விக்குறியாக இருந்தது!!

**இந்த அழிவும் மரணமனைத்தும் எந்த நன்மையைச் சாத்தியமாக்கிற்று?**

**தேவ மைந்தனாகிய இயேசு** அனுபவித்த கொடூரமான கோர பயங்கரத்தை **நமக்கு நினைவுப்படுத்தப்படுகிறது**... 6 மணிநேர கடும்வேதனையான வியாகுலத்திற்குப் பிறகு சிலுவையில் மரணம் அடைந்தார் ... மேலும் கீழுள்ள வசனத்தை நினைவில் கொள்ளுங்கள் –

**ஏசாயா 53:10**

**“கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்...”**

இந்த அனைத்து **தெய்வீக அனுமதிகளுக்கான “காரணங்கள்”** நமக்கு **முழுமையாகத் தெரியாவிட்டாலும்,** பரமபிதாவாகிய தேவன் “தவறு” செய்யாதளவுக்கு மிகவும் ஞானமுள்ளவர் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம், மேலும் பின்வரும் கர்த்தருடைய வார்த்தைகளையும் நினைவில் கொள்ளுங்கள் –

**ஏசாயா 55:8**

**“என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்.”**

ஆம்! “**தாமிது**” **வகுப்பாரின்** அன்பான சகோதர சகோதரிகளே, நாம் பின்வரும் வசனத்தில் வாசிப்பதுபோல சொல்ல வேண்டும் –

**சங்கீதம் 139:6**

**“இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது.”**

**ஓ! ஆம்! “நாலாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லுஞ் சத்தத்தைக் கேட்டேன்.”!**

# ஐந்தாம் முத்திரை

**(வெளிப்படுத்தல் 6 : 9 – 11 )**

**சபை காலக்கட்டம் : சர்தை**

**காலப்பகுதி : கி.பி. 1367 – கி.பி. 1517**

**வசனம்-9**

**“...அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின்கீழே கண்டேன்.....”**

இப்போது முதல் நான்கு முத்திரைகளும் “**அக்கிரமத்தின் இரகசியத்தின்**”

படிப்படியான வளர்ச்சி, வெளிப்பாடு மற்றும் ஸ்தாபித்தலைக் காட்டுவதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளன.

**மாபெரும் அந்திக்கிறிஸ்து...**
**மற்றும்**
**கள்ளக் கிறிஸ்து அமைப்பு**

நாலாம் முத்திரைக் காலப்பகுதியில் இது மாபெரும் வல்லமையிலும் மகிமையிலும் நிறுவப்பட்டது, மேலும் தேவனுடைய மாபெரும் சத்தியங்கள் கிட்டத்தட்ட அனைத்துமே **கெட்டும்போயிருந்தன**!! இந்த அதிதீவிர சூழ்நிலைகளுக்கு மத்தியில் **மெய்ச் சபையின் நிலைமை** என்னும் ஒரு புதிய காட்சிக்கு இப்போது **தெய்வீக வெளிப்பாடானது** நம் கவனத்தைத் திருப்புகிறது!!

ஆம்! அந்திக்கிறிஸ்து அமைப்பினுடைய சரித்திர வளர்ச்சியின் அதே படிநிலையை விவரிக்கும் மற்ற வேத வசனப்பகுதியிலும் இதே போன்ற படம் காணப்படுகிறது!

ஆம்! இது **வெளிப்படுத்தலின் 12 – ஆம் அதிகாரத்தில் காணப்படுகின்றது**.....

**வசனம்–14**

"**ஸ்திரீயானவள் ... வனாந்தரத்திலுள்ள தன் இடத்திற்குப் பறந்துபோகும்படி பெருங்கழுகின் இரண்டு சிறகுகள் அவளுக்குக் கொடுக்கப்பட்டது....**"


ஆம்! அந்திக்கிறிஸ்து அமைப்பின் வரலாறு மற்றும் **வளர்ச்சியை** விவரிக்கும் 7 வசனங்களுக்குப் பிறகு (**வசனம் 7 – 13**), கவனமானது, இங்கே **வசனம்** 14 – இல் உள்ள ஒரு வேறுபட்ட காட்சியான – **மெய்ச் சபைக்குத்** திருப்பப்படுகிறது!

**இதேபோல், ... இங்கேயும்,** அந்திக்கிறிஸ்து அமைப்பின் வளர்ச்சியை விவரிக்கும் நான்கு முத்திரைகள் கழித்து, **ஐந்தாம் முத்திரையில்** அந்திக்கிறிஸ்துவின் துன்புறுத்தல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கவனம் திருப்பப்படுகிறது!

ஆம்! ஒவ்வொரு முத்திரை உடைக்கப்பட்டபோதும் வெவ்வேறு நிறங்கொண்ட ஒரு குதிரை வெளிப்பட்ட முதல் நான்கு முத்திரைகள் போலல்லாமல்... இங்கே காணப்பட்டதோ... **ஒரு தியாக பலிபீடம்**!

**இதன் பொருள் என்ன?**

இது அப்போஸ்தலர் யோவான் **கண்ட** ஒரு **தரிசனமாக** இருந்தது... மேலும் பல பலிகளைச் செலுத்தப்பட்ட **ஒரு சொல்லர்த்தமான பலிபீடத்தின்** காட்சியை உள்ளடக்கியிருப்பதாகத் தெரிகிறது... எனவே பலியின் இரத்தத்தால் பெரிதும் கறைபட்டிருந்தது... இந்தத் தரிசனம் மற்றும் இந்த வார்த்தைகளின் உண்மையான அர்த்தத்தை அடையாளப் பாஷையில் புரிந்து கொள்ள வேண்டும்!



ஆகவே இந்தப் "**பலிபீடம்**" என்பது உண்மைச் சபையை அதன் **நிலைமையில்** குறிக்கின்றது, அதுமாத்திரமல்லாது, இந்தச் சுவிசேஷ யுகத்தின்போது, குறிப்பாக சபையின் இந்த சர்தை காலப்பகுதியின்போது பலி செலுத்துவதற்காக அது பெற்றிருந்த **மாபெரும் வாய்ப்பையும்** குறிக்கிறது.

உண்மையில் கர்த்தர் தம்முடைய மாபெரும் "**பலிபீடத்தைத்**" திறந்திருந்தார், அதை நாம் வாசிக்கலாம் –

**யாத்திராகமம் 20:25, 26**

**"எனக்குக் கல்லினால் பலிபீடத்தை உண்டாக்கவேண்டுமாகில், அதை வெட்டின கல்லுகளால் கட்டவேண்டாம்; அதின்மேல் உளியிட்டவுடனே, அதை அசுசிப்படுத்துவாய்."**
**"என் பலிபீடத்தின்மேல் உன் நிர்வாணம் காணப்படாதபடிக்கு, படிகளால் அதின்மேல் ஏறவும் வேண்டாம்."**

ஆம்! தேவனுடைய மாபெரும் தெய்வீக இரட்சிப்பின் திட்டத்தில், தேவனுடைய வார்த்தையானது, இரண்டு யுகங்களில் உள்ள இரண்டு இரட்சிப்புகளைப் போதிக்கின்றது என நாம் புரிந்துகொள்ள வேண்டும்: ஒன்று சுவிசேஷ யுகத்தின் "**இவ்வளவு பெரிதான இரட்சிப்பு**" (**எபிரெயர் 2:3**) மற்றொன்று அதனைப் பின்தொடர்ந்து வருகிற ஆயிரமாண்டு யுகத்தின் "**பொதுவான இரட்சிப்பு**" (**யூதா 1:3**).

கிறிஸ்தவ சுவிசேஷ யுக இரட்சிப்பு என்பது பலி – சார்ந்த இரட்சிப்பாகும். இது "**பலியினால் உடன்படிக்கை**" (**சங்கீதம் 50:5**) செய்வதுடன் தொடங்குகிறது ... மேலும் "**தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்**"

எனப் பல இடங்களில் எஜமானரால் குறிப்பிடப்படும் பலிக்கான அடையாளக் குறிப்பை மிகத் தெளிவாக உள்ளடக்கியிருக்கிறது **(மத்தேயு 16:24 / லூக்கா 9:23 / மாற்கு 8:34 / மாற்கு 10:21)**

இயேசு ஒரு **சொல்லர்த்தமான** மர சிலுவையைப் பற்றி **பேசவில்லை,** ஆனால் **பலியைப்** பற்றி பேசுகிறார் என்பது தெளிவாகிறது! தேவனுடைய திட்டத்தில், இந்தச் சுவிசேஷ யுகம் என்பது **நிஜமான பாவநிவாரண நாள்** ஆக இருக்கிறது... அதில் "**விசேஷித்த பலிகள்**" **(எபிரெயர் 9:23)** முதலில் இயேசுவின் ஈடுபலியின் மூலம் நிறைவேற்றப்பட்டது... அதைத் தொடர்ந்து "அவரது சரீர" அங்கத்தினர்கள் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன – இவர்கள் தங்களையே "**பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து ... புத்தியுள்ள ஆராதனையைச் செய்யும்**" கிறிஸ்துவின் மெய்த் திருச்சபை ஆவர். (உரோமர் 12:1)

ஆம்! இது இயேசுவிலிருந்து துவங்கி அவரது சரீர அங்கத்தினர்களால் தொடர்கின்ற சுவிசேஷ யுகத்தின் "விசேஷித்த பலிகளின்" நிழலான அடையாளமாகும். மாபெரும் நிஜமான பாவநிவாரண நாள்!

இப்போது நாம் தொடர்ந்து வாசிக்கலாம் –

**வசனம்-9**

***"...தேவவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின்கீழே கண்டேன்....."***

இது நேரடி பாஷையில் இல்லாமல், அனைத்தும் அடையாளப் பாஷையில் உள்ளது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்!

இங்கேயுள்ள "**கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்கள்**" என்பது சபையின் இந்தச் சர்தைக் காலக்கட்டத்தின்போது இருந்த அர்ப்பணிக்கப்பட்ட சபையை அல்லது "**பரிசுத்தவான்களைக்**" குறிக்கிறது. அவர்கள் "**பலிபீடத்தின்கீழே**" இருந்தது, அவர்கள் கிறிஸ்துவின் தலைமையின் கீழ் (அ) அவரது தலைமைக்கு மாத்திரம் அவர்கள் அடிப்பணிந்து இருந்ததையும், கள்ள போப் அமைப்பின் தலைமைத்துவத்தை ஏற்க மறுத்துவிட்டதையும் அடையாளப்படுத்துகிறது! அந்தக் காலக்கட்டங்களில், இதனைச் செய்ய மிகவும் தைரியம் தேவைப்பட்டது!

**ஆம்! இவர்கள் சர்தை சபைக் காலப்பகுதியில் வாழ்ந்த "பரிசுத்தவான்களே" !**

இந்த ஐந்தாம் முத்திரை வெளிப்படுதலில் இந்தப் "**பரிசுத்தவான்கள்**" இங்கே முன்னிலைப்படுத்தப்படுமளவுக்கு அவர்களில் எது அதி விசேஷமாக இருந்தது?

பதில், அவர்கள் வாழ்ந்த அக்காலம் தான் விசேஷமே.

ஆம்... தேவனுடைய வார்த்தையானது தன்னைச் சூழ்ந்திருந்த இருளிலிருந்து **எழுச்சிக் கொள்ள ஆரம்பித்த சீர்திருத்தத்திற்கு முந்தைய காலம் அது**!!!

ஆம்! இந்தக் காலக்கட்டத்தைப் பற்றிய நமதாண்டவரின் உவமையில் இது குறித்து வாசிக்கலாம் –

**மத்தேயு 13:44**

"**...புதைந்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் கண்டு...**"

ஆம்! சபையின் இந்தக் காலக்கட்டத்தின் **நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டுவதற்காக** பேசப்பட்ட ஆண்டவரின் இந்த ஐந்தாம் உவமை, ஒரு புதைக்கப்பட்ட **பொக்கிஷம்** கண்டறியப்பட்டதைப் பற்றி பேசுகிறது!

**இந்தப் பொக்கிஷம் எதைக் குறிக்கிறது?**

ஆ! அது தேவனுடைய வார்த்தையே! இது சபையின் இந்தக் காலக்கட்டத்தில் எபிரேயு, கிரேக்கு மற்றும் இலத்தீன் ஆகிய வழக்கொழிந்த பண்டைய மொழிகளின் "**புதைக்கப்பட்ட**" நிலைமையிலிருந்து தேவனுடைய வார்த்தையானது பிரஞ்சு மற்றும் ஆங்கில மொழியில் வெளிப்படத் துவங்கியது!!

இந்தக் காலப்பகுதியைப் பற்றி மீண்டும் நாம் வாசிக்கலாம் –

**வெளிப்படுத்தல் 12:14**

"**ஸ்திரீயானவள் பறந்துபோகும்படி ... பெருங்கழுகின் இரண்டு சிறகுகள் அவளுக்குக் கொடுக்கப்பட்டது...**"

ஆம்! இந்தப் பெருங்கழுகின் இரண்டு சிறகுகள் தேவனுடைய வார்த்தையான வேதாகமத்தின் **இரண்டு பிரிவுகளின்** ஓர் அடையாளக் குறிப்பாகும்!!

மேலும் "**அவளுக்குக் கொடுக்கப்பட்டது**" என்று வாசிக்கிறோம்

மெய்தான்! இந்தப் "**பெருங்கழுகின் இரண்டு சிறகுகள்**" என்பது, எவ்வாறு **சபையின் ஐந்தாம் காலக்கட்டமான சர்தையில், இரண்டு ஏற்பாடுகள்** உள்ளடங்கிய



முழு வேதாகமும், **ஜான் விக்ளிஃப்** என்பவரால் **ஆங்கில வேதாகம** மொழிபெயர்ப்பில் **முதல் முறையாக** கிடைக்கப்பெற்றது என்பதைக் குறிக்கிறது.

மேலும், எவ்வாறு அனைத்து கொடூரமான **துன்புறுத்தல்களுக்கும், இருண்ட யுகங்களுக்கும்** பின்னர், உண்மைச் சபைக்குப் பிரஞ்சு மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்புகளின் மூலம், **பீட்டர் வால்டோ** மற்றும் **ஜான் வைக்லிஃப்** ஆகியோரால் வார்த்தையானது "**வழங்கப்பட்டதை**" இது குறிக்கிறது.

ஆகவே, "**பரிசுத்தவான்களின்**" "**புரிந்துகொள்ளும் கண்கள்**" தேவனுடைய வார்த்தையின் மூலம், தங்கள் முன் இப்போது **வல்லமையிலும், மாபெரும் அதிகாரத்திலும்** இருந்த பெயர்ச் சபை அமைப்பின் **உண்மைத் தன்மையை** அறியும்படியாகத் **திறக்கத்** துவங்கின!

**எனவே, அன்பான வாசகர்களே, இங்கு வசனம் 9 – இல், அடையாளங்களில் விவரிக்கப்பட்டுள்ளதாக நாம் இவ்வளவு நேரம் பார்த்திருப்பது, தங்களுடைய அர்ப்பணிப்பின் "ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட" நிலையில், இயேசு கிறிஸ்துவின் தலைமைத்துவத்தின் கீழ் மாபெரும் நிஜமான பாவநிவாரண நாளின் "விசேஷித்த பலிகளில்" பங்குபெறும் சிலாக்கியம் மற்றும் வாய்ப்பினைப் பெற்றிருக்கும் கிறிஸ்துவின் மெய்த் திருச்சபையின் நிலை பற்றிய ஓர் அழகான குறிப்பாகும்... மேலும் குறிப்பாக இது சர்தை "பரிசுத்தவான்கள்" பற்றின படமாகும்! இப்போது இந்தக் "கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்கள்" சொல்லர்த்தரீதியில் மரிக்கவில்லை, மாறாக உண்மையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மை அடுத்த வசனத்தில் நமக்குத் தெளிவாகத் தெரிகிறது!**

ஆகவே பின்வருமாறு நாம் வாசிக்கிறோம் –

**வசனம்-10**

**"அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்."**

**இதன் அர்த்தமென்ன?**

இது **சர்தையின்** "**பரிசுத்தவான்களால்**" தேவனிடம் ஏறெடுக்கப்பட்ட விசாரிப்பிற்கான ஒரு குறிப்பாகும். இந்த வார்த்தைகளின் பொருளைச் **சரியாகப்** புரிந்துகொள்ள, இந்த நேரத்தில் **சர்தையின்** "**பரிசுத்தவான்களுக்கு**" வெளிப்படுத்தப்பட்ட **இரண்டு** முக்கியமான விஷயங்களை நாம் மனதில் வைக்க வேண்டும்.

**#1. பிரஞ்சு (பீட்டர் வால்டோ மூலம்)** மற்றும் **ஆங்கிலம் (ஜான் விக்லிஃப் மூலம்)** ஆகிய பொது மொழிகளில் பரிசுத்த வேதாகமத்தை மொழிபெயர்த்தது மற்றும் கிடைக்கச்செய்தது … இவை படிப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்ததன் மூலம் சத்தியத்தின் "**ஒளி**" பற்றிய அறிவை அதிகரிக்கச் செய்தது.

**#2. போப் அமைப்பு** மற்றும் சபை அமைப்பைக் குறித்து **சர்தை**யில் இருந்த "**பரிசுத்தவான்களின்**" கண்களுக்கு முன்பாக மிகவும் **விசித்திரமான** மற்றும் **தனித்துவமான** ஒன்று நடந்தது.

1378 – ஆம் ஆண்டில், **போப் கிரிகோரி XI** – இன் மரணத்துடன் மிகவும் ஆச்சரியமான வளர்ச்சி ஒன்று – அதாவது, **இரண்டு எதிரணியரான போப்புகளின்** தேர்தல் வந்தது



**உரோமின் போப் அர்பன் VI**

**மற்றும்**

**பிரான்சின் அவிக்னியோனின் போப் கிளெமென்ட் VII**



இருவரும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு, ஒவ்வொருவரும் தங்களையே பூமியில் கிறிஸ்துவினுடைய



**விகார் / பிரதிநிதி** (Vicar) என்று கூறிக்கொண்டார்கள்! இது, எந்தத் தீர்வுமில்லாமல், **31 வருடங்களுக்கு,** 1409 வரை தொடர்ந்தது, அப்போது **தி கவுன்சில் ஆஃப் பீசா (the Council of Pisa)** இவர்கள் இருவரையும் தவிர வேறு ஒருவரை போப்பாக நியமிக்க முடிவு செய்தது!! ஆம்! மூன்றாவது போப்பாக **அலெக்சாண்டர் V** – ஐ நியமித்தது, அவர் சில மாதங்களுக்குப் பிறகு மரித்துப்போனதால், அவருக்குப் பிறகு, மிகவும் பிரபலமாக அறியப்பட்ட **போப் ஜான் XXIII** என்பவர் வந்தார்.

இவ்வாறு **1378 – 1409 வரை இரண்டு** போப்களும் ... மேலும் **1409 – 1418 வரை மூன்று** போப்களும் இருந்துள்ளனர்!

உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா?

இவை 40 வருட முழுமையான குழப்பம் மற்றும் ஒழுங்கற்ற நிலையாக இருந்தன! 31 நீண்ட வருஷங்களாக **இரண்டு** எதிரணியான போப்புகள் இருந்துள்ளனர், கூடுதலாக அடுத்த 9 வருஷங்களுக்கு இது **மூன்று** போப்புகளாக உயர்ந்தது!! இவை அனைத்தும் போப் அமைப்பின் **உண்மைத் தன்மைக்குப்** பலரின் “**கண்களைத் திறக்க**” உதவின.

ஆகவே, இவ்வாறு **சர்தையின்** இந்தக் காலத்துப் பரிசுத்தவான்கள் மாபெரும் சபை அமைப்பின் உண்மையான தன்மை மற்றும் அநேகமாக அதன் **அந்திக்கிறிஸ்து** அடையாளத்தின் தெளிவான **நுண்ணறிவையும் சான்றையும்** பெற்றபடியால், ஒட்டுமொத்த மனவுணர்வை பின்வருமாறு வெளிப்படுத்தினர் –

**“ஆண்டவரே ... எதுவரைக்கும் ...”**

... அநேகமாக ... அப்போதிருந்த **சர்தை** பரிசுத்தவான்களிடையே துவங்கப்பட்ட வேதாகம ஆய்வின் மூலமாக, **தீர்க்கதரிசனம்** மற்றும் **காலவரிசையில்** இந்தச் சபை அமைப்பைக் குறித்த தேவனுடைய திட்டத்தைப் பற்றியும், நியாயத்தீர்ப்பு நாளுக்கான **காலங்கள்** மற்றும் **பருவங்கள்** பற்றியுமான ஒரு தெளிவான புரிதல்வேண்டி ஏறெடுக்கப்பட்ட அவர்களுடைய **தேடல்** மற்றும் **நாடலை** இது குறிக்கக்கூடும்.

ஆ! ஆம்! கர்த்தரின் “**பரிசுத்தவான்கள்**” **பழிக்குப்பழி வாங்குதல் அல்லது**

**நீதியைச் சரிக்கட்டுதல்** என்னும் எந்தப் பழிவாங்கும் ஆவிகளையும் நிச்சயமாகக் கொண்டிருக்கவில்லை, மாறாக கீழே நாம் வாசிக்கும்படி முதல் **இரத்தசாட்சியான ஸ்தேவானில்** சுருக்கமாகக் காட்டப்பட்ட ஆவியினையே அவர்கள் கொண்டிருந்தார்கள் –



அப்போஸ்தலர் 7:60

**“ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்”**

ஆம்! மாறாக, இது **தேவனுடைய காலங்கள் மற்றும் பருவங்களின்** கூடுதல் விவரங்களை அறிய விரும்பும் ஓர் உண்மையான தேடலாகும்!!

இந்த நிகழ்வைப் பொறுத்தவரையில், இப்போது தெளிவாகவும் ஆதாரப்பூர்வமாக உள்ள **பெயரளவிலான கள்ளச்சபை** அமைப்பு மீதான அவரது நியாயத்தீர்ப்பைப் பற்றிய புரிதலைக் குறித்ததாகும்!

இவ்வாறு நாம் தொடர்ந்து வாசிக்கலாம் –

**வசனம்–11**

**“அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது; அன்றியும், அவர்கள் தங்களைப்போலக் கொலைசெய்யப்படப்போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரையும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங்கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது!”**

இது இந்தப் பரிசுத்தவான்களால் பெறப்பட்ட **பதிலையும்**, இந்த **ஐந்தாம்** சபை சர்தையின் காலத்திற்காகவும் மற்றும் காலத்தின்போதும் இருந்த **தெய்வீகப் பார்வையையும்** அடையாளப்படுத்துகிறது!

இப்போது நாம் இந்தப் பதிலைக் காணலாம் –

➤ **“அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது...”**

**இதன் அர்த்தமென்ன?**

பதிலுக்காக, சபையின் இந்தச் **சர்தைக்** காலத்திற்கு எழுதப்பட்ட கர்த்தரின் செய்தியில் பதிவு செய்யப்பட்டுள்ள **அவருடைய வார்த்தைகளைக்** காண்போமாக –

**வெளிப்படுத்தல் 3:4, 5**

**"ஆனாலும் தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் சர்தையிலும் உனக்குண்டு; அவர்கள் பாத்திரவான்களானபடியால் வெண்வஸ்திரந்தரித்து என்னோடேகூட நடப்பார்கள். ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்…"**

இங்கே "**வெண்வஸ்திரம்**" என்பது இறுதியாக ஜெயங்கொண்ட ஒரு நிலைமையைக் குறிக்கிறது, ஏனென்றால் பின்வரும் ஆண்டவரின் வார்த்தைகளைக் கவனியுங்கள் –

"**தரிப்பிக்கப்படும்**"

இது **எதிர்காலத்திற்குரியதும்**, கூடுதலாக அவர்கள் ஜெயங்கொள்ளுகிறதற்கு உட்பட்ட ஒன்றைப் பற்றிப் பேசுகிறது!

ஐந்தாம் முத்திரையில் இங்கு விவரிக்கப்பட்டுள்ள "**வெண்வஸ்திரம்**" என்பதன் பொருள் இதுதானோ?

பதில் – **இல்லை** என்பதே!!

ஜெயங்கொள்ளுதலை அடையாளப்படுத்தும் "**வெண்வஸ்திரம்**" என்பது மரணத்தில் ஒருவர் தனது ஓட்டத்தை முடித்தப்பின் கிடைக்கிறது, ஆனால் இங்கே "**வெண்வஸ்திரம்**" பெற்றவர்கள் "**பலிபீடத்தின் கீழே காணப்படுகிற கொல்லப்பட்ட ஆத்துமாக்களாகிய**" சர்தை சபை காலக்கட்டத்தில் மாம்சத்திலிருந்த பரிசுத்தவான்களைக் குறிக்கின்றார்கள்!

எனவே "**வெண்வஸ்திரம்**" – த்திற்கான இந்தப் பொருள் இங்கே பொருந்தி வரவில்லை!!

நாம் ஆராய்ச்சி செய்யும் வசனத்தில் உள்ள வார்த்தைகளை மேலும் கவனிக்கலாம் –

**வசனம்-11**

**"அவர்கள் ஒவ்வொருவருக்கும் … கொடுக்கப்பட்டது…"**

இந்தக் காலக்கட்டத்தின் அனைத்து "**பரிசுத்தவான்களும்**" ஜெயங்கொண்டார்களா?

அதற்கான பதில் பின்வரும் வசனப்பகுதியில் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது –

**வெளிப்படுத்தல் 3:2 மற்றும் 4**

**“…உன் கிரியைகள் தேவனுக்குமுன் நிறைவுள்ளவைகளாக நான் காணவில்லை! தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் … உனக்குண்டு…”**

**இங்கே நமக்கு மிகவும் தெளிவாக இருக்கிறதல்லவா!!?**

அப்படியானால் அனைவரும் பெற்ற இந்த வெண்வஸ்திரம் **எதைக்** குறிக்கிறது?

பதில் பின்வரும் வசனத்தில் காணப்படுகிறது –

**வெளிப்படுத்தல் 19:8**

**“சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது…”**

ஆம்! இது விசுவாத்தால் நீதிமானாக்கப்படுதலை அடையாளப்படுத்தும் “**நீதியின் வஸ்திரமாகும்.**” மெய்யாகவே! இந்தப் பரிசுத்தவான்களின் விசுவாசம் அவர்களுக்கு **எபிரெயர் 6:4** – இன் பரம ஈவாக இருக்கும் நீதியின் வஸ்திரத்தைப் பெற்றுத்தந்தது.

**இப்போது நாம் தொடரலாம்…**

**“அவர்கள் … இன்னுங்கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும்…”**

**இதன் அர்த்தமென்ன?**

இங்கே “**இளைப்பாறுதல்**” என்பது அடையாளமாகும், மேலும் மீண்டுமாக சபைக்கு அடையாளரீதியில் குறிப்பிடப்படும் “**இளைப்பாறுதல்**” – ஆனது **இரண்டு வகைகளாக** உள்ளதென அப்போஸ்தலர் பவுல் விவரிக்கிறார் –


**எபிரெயர் 4:3**

**“விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்… என்றார்…”**

இந்த “**இளைப்பாறுதல்**” என்பது நமது ஆண்டவருடைய ஈடுபலியின் மீதான விசுவாசத்தின் மூலம் வரும் பாவத்திற்கான தண்டனையிலிருந்து கிடைக்கும் **இரட்சிப்பை… நீதிமானாக்கப்படுதலைக்** குறிக்கிறது….

இப்போது இந்த நீதிமானாக்கப்படுதல் என்பது **பாவங்களை மெய்யாக மன்னிப்பதும்**, பாவத்தின் தண்டனையிலிருந்து **இரட்சிக்கப்படுவதும்** ஆகும்,

ஒருவர் தொடர்ந்து **மாம்சத்தில் (விழுந்துப்போன நிலையில்)** இருக்கும் வரையில் பாவத்திலிருந்து முழுமையான இரட்சிப்பு அடையப்படுவதில்லை.




ஆனால் அதே **எபிரெயர் 4** – ஆம் அதிகாரத்தில் நாம் **இன்னொரு இரண்டாம்** “**இளைப்பாறுதல்**” பற்றி வாசிக்கிறோம் –

**எபிரெயர் 4:9**

**“ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனிவருகிறதாயிருக்கிறது.”**

பாவம் மற்றும் பாவம்பிணைக்கப்பட்ட **மாம்ச சரீரத்திலிருந்து** முழுமையாக இரட்சிப்படைவதை இது அடையாளப்படுத்துகிறது, இது முதலாம் உயிர்த்தெழுதலில் நிகழும், அப்போதுதான் புது சிருஷ்டியின் “**புதிய சிந்தை**” மற்றும் “**புதிய சித்தத்திற்கு**” முற்றிலும் இசைந்துப்போகக்கூடிய தெய்வீகச் சுபாவத்தின் பூரணமான சரீரங்கள் கிடைக்கப்பெறும்.

ஆகவே **இங்கே**, நாம் ஆராய்ந்துவருகிற வசனத்தில் **(வெளி. 6:11)** வருகிற “**இளைப்பாறுதல்**” ஆனது, **முதல் வகையான** “**இளைப்பாறுதலைக்**” விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலைக் குறிக்கிறது என்று நாம் உணர்கிறோம்!

“**இன்னும்... இளைப்பாறவேண்டும்**” என்பதின் அர்த்தமென்ன?

**இந்த வகையான “இளைப்பாறுதல்” ஆனது எதிர்காலத்திற்குக் கொஞ்சக்காலம் தொடர்வதை இது குறிக்கிறது, ஏனெனில் இரண்டாம் வகையான “இளைப்பாறுதல்” வெளிப்பட வேண்டிய ஏற்றக்காலம் இன்னும் வந்திருக்கவில்லை, இது நிச்சயமாக முதலாம் உயிர்த்தெழுதலை குறிக்கிறது, மேலும் நம்மை அடுத்த வசனப்பகுதிக்கு இட்டுச் செல்கிறது...**

**...கொஞ்சக்காலம்...**

இது ஆராயப்படும் விஷயத்திற்காகவுள்ள **தெய்வீக ஏற்பாட்டின் ஒரு தேதி**யாகும், ஆனால் ஒரு **காலத் தீர்க்கதரிசனத்தின்** மூலம் வழங்கப்பட்டுள்ளது.

ஆம்! இது பின்வருபவைக்காக தேவனால் நியமிக்கப்பட்ட வருடத்தைச் **சுட்டிக்காட்டுகிறது ...**

**பாபிலோனின் பெயர்ச் சபை அமைப்பு மீதான நியாயத்தீர்ப்பு உரைக்கப்படுதல்**

மற்றும் ...

**முதலாம் உயிர்த்தெழுதலின் ஆரம்பம்.**

இந்தக் காலத் தீர்க்கதரிசனத்தின் கணக்கீடு, "**காலம்** / time" எனப் பொருள்படும் "**குரோனோஸ்** / Chronos" என்னும் கிரேக்க வார்த்தையுடன் தொடர்புடையது; இது தீர்க்கதரிசனப் பாஷையில், 360 தீர்க்கதரிசன "நாட்கள்" கொண்ட ஒரு தீர்க்கதரிசன "ஆண்டு" காலத்தைக் குறிக்கிறது (**வெளிப்படுத்தல் 12:14**) – இது சொல்லர்த்தத்தில் **360 ஆண்டுகளைக்** குறிக்கிறது.

**இந்த 360 ஆண்டுக்காலம் எங்கிருந்து துவங்குகிறது?**

இங்குதான் நாம், பெயர்ச் சபை அமைப்புகளுக்கு மனந்திரும்ப தேவன் **இரண்டு காலங்களைக்** கொடுத்திருந்தார் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்... இதுகுறித்து பின்வரும் வசனத்தில் வாசிக்கலாம் –

**எரேமியா 51:9**

"**பாபிலோனைக் குணமாக்கும்படிப் பார்த்தோம், அது குணமாகவில்லை...**"

ஆம்! இந்தப் பெயர்ச் சபை அமைப்புக்கு அதன் வழிகளிலிருந்து மனந்திரும்புவதற்கு தேவன் கொடுத்த **சந்தர்ப்பங்களையும் வாய்ப்புகளையும்** இது அடையாளப்படுத்துகிறது! அவை உண்மையில் **இரண்டு வாய்ப்புகளை** அடையாளப்படுத்துகின்றன, **ஒவ்வொரு** வாய்ப்பும், சீர்திருத்தத்திற்கு **முன்பும் பின்பும் 360** சொல்லர்த்தமான ஆண்டுகளின் காலத்தை உள்ளடக்கியிருந்தது.

சீர்திருத்தத்திற்கு முன்னர் எனும்போது, அது யேசபேலின் அடையாளத்தினைக் குறிக்கிறது, இதுகுறித்து பின்வரும் வசனத்தில் வாசிக்கலாம் –

**வெளிப்படுத்தல் 2:21**

"**அவள் மனந்திரும்பும்படியாய் அவளுக்குத் தவணைகொடுத்தேன்**"

ஆம்! இங்கே "யேசபேல்" என்பது குமாரத்திகள் பிறப்பதற்கு முன்பிருந்த அல்லது **சீர்திருத்தத்திற்கு** முன்னிருந்த "**தாய்**" அமைப்பினைக் குறிக்கும் ஓர்

அடையாளமாகும். இந்த "**குரோனோஸ்**" காலம் "**தவணை / space**" என்றழைக்கப்படும் முதல் காலம், 1157 - இல் தியத்தீரா சபைக்காலக்கட்டத்தில் தொடங்குகிறது.

**ஆனால் நாம் ஆராய்ந்து வருகிற ஐந்தாம் முத்திரைக்கான வேத வாக்கியத்தில், "பாபிலோன்" என்னும் தாய் மற்றும் குமாரத்திகளின் கலவை பற்றியும், சீர்திருத்தத்திற்குப் பிறகு மனந்திரும்புதலுக்காக தேவன் ஒதுக்கின காலத்தைப் பற்றியும் குறிப்பிடப்படுகின்றது!**

இந்தக் "**குரோனோஸின்**" இரண்டு காலங்களைப் பற்றி கொஞ்சம் இங்கே சொல்ல வேண்டியிருக்கிறது. அது என்னவெனில்...

➡ **முதல்** "**குரோனோஸ்**" அல்லது 360 ஆண்டுகளின் காலம் சீர்திருத்தத்தில் அல்லது **அக்டோபர் 31, 1517** அன்று முடிந்தது.
**(1157 – இல் தொடங்கி 1517 வரை 360 ஆண்டுகள் ஒழயது).**

| **1157** | **+** | **360 ஆண்டுகள்** | ➡ | **கி.பி. 1517** |
|---|---|---|---|---|
| **(இந்தக் காலம் தியத்தீராவில் வெளிப்படுத்துதல் 2:21 இல் தொடங்குகிறது)** | | **("குரோனோஸ்" என்பது "தவணை"யின் காலம் – சொல்லர்த்தமாக 360 ஆண்டுகள்)** | | **(அக்டோபர் 31, 1517 இல் முழவடைந்தது மேலும் மார்ட்டின் லூதரின் நடவழக்கையும் நடந்தது)** |

➡ ஆனால் "**குரோனோஸின்**" **இரண்டாம்** காலப்பகுதியானது அல்லது 360 ஆண்டுகளின் மற்றொரு காலப்பகுதியானது அந்தத் தேதியிலேயே **உடனழயாகத் துவங்கவில்லை!**

கர்த்தரின் ஏற்பாடுகள் மற்றும் கணக்கீட்டின்படி

**(இதற்கு எந்த வசனமும் இல்லை!)**

...இந்த இரண்டாவது "**குரோனோஸ்**" அல்லது 360 வருட காலத்தைத் துவங்குவதற்கு முன், **ஆறு மாதங்கள்** இடைவெளி இருக்க வேண்டியிருந்தது. அது **ஏப்ரல் 1518** தேதிக்கு நம்மை அழைத்துச் செல்லும் (அக்டோபர் 31, 1517

இலிருந்து 6 மாதங்கள்). ஆயினும் இந்த விஷயம் இரண்டாம் வருகையின் **இணைகள் மூலம் தெய்வீகமாக நிரூபிக்கப்பட்டுள்ளது,** அதை இந்த ஆய்வில் சற்று அப்புறமாக காணப்போகிறோம்.

(அந்த ஆறு மாதங்களில் இலத்தீன் மொழியில் முதன்முதலில் பிரகடனப்படுத்தப்பட்ட மார்டின் லூதரின் சீர்திருத்த செய்தியானது ஜனவரி 1518 – இல் ஜெர்மன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது, மேலும் சில மாதங்களுக்குப் பிறகு, பல ஐரோப்பிய மொழிகளுக்கும் மொழிபெயர்க்கப்பட்டது.)

இவ்வாறு இந்த **360 சொல்லர்த்த ஆண்டுகளுக்கான “குரோனோஸ்”** காலம் சீர்திருத்தத்துடன் துவங்கியது, மேலும் **குறிப்பாக அக்டோபர் 31, 1517** அன்று “தூண்டப்பட்ட” சீர்திருத்தத்தின் துவக்கத்திலிருந்து **6 மாதங்களுக்குப் பிறகு** இக்காலம் துவங்கியது.

**மேலும்....இவ்வாறாக அது ஏப்ரல் மாதம் 1518 வருஷத்துக்குக் கொண்டுச்செல்லும்.**

**இது தான் துவக்கப் புள்ளி!**

**மேலும் அதினோடு 360 வருடங்கள் கூட்டினால் –**

**1518 (ஏப்ரல்) + 360 = 1878 (ஏப்ரல்) – க்கு வருவோம்**

**ஆம்! ஏப்ரல் 1878 – இல் நடந்தது...**

**#1. “பாபிலோன்” மீதான நியாயத்தீர்ப்பின் அறிவிப்பு (வெளிப்படுத்தல் 18:2)**

**மற்றும்...**

**#2. முதலாம் உயிர்த்தெழுதல் துவங்கியது (1 தெசலோனிக்கேயர் 4:16)**

கீழேயுள்ள சர்தையின் பரிசுத்தவான்களிடமிருந்து வந்த அந்தக் கூக்குரலுக்கு தேவன் பதிலளிக்கும் விதத்தை இங்கே கவனிப்பது சுவாரஸ்யமாகவுள்ளது –

**“பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர்...?”**

ஆம்! பரிசுத்தவான்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பற்றிய விஷயங்களை அவரிடம் விசாரிக்கும்போது, உண்மையில் கர்த்தர் ...

**"...நிறைவாகுமளவும் இன்னுங்கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும்..."**

... என்று பதிலளிப்பதன் மூலம் ... அவர் ஏப்ரல் 1878 என்னும் முதலாம் **உயிர்த்தெழுதலின்** தேதியினை சர்தையின் பரிசுத்தவான்களுக்குச் **சுட்டிக்காட்டியிருக்கிறார், அத்துடன்** இது **பாபிலோன் மீதான தெய்வீக நியாயத்தீர்ப்பை** அறிவிக்கும் தேதியுமானது!!

**ஏன் கர்த்தர் இவ்வாறு செய்ய வேண்டும்?**

ஏனென்றால், சர்தையின் இந்தப் பரிசுத்தவான்கள் உண்மையில் போப் அமைப்பின் மீதான **தெய்வீக நியாயத்தீர்ப்பைப்** பார்ப்பதற்கும் "**காண்பதற்கும்,**" அவர்கள் **முதலாம் உயிர்த்தெழுதலில்** மீண்டும் **உயிரடைவது** அவசியமாயிருந்தது!!

ஆகவே, **ஏப்ரல் 1878** – இல், **கர்த்தரிடம்** விசாரிக்கும்வண்ணமான கூக்குரலிட்ட சர்தையின் பரிசுத்தவான்கள், அவர்கள் மாம்சத்தில் இருந்துபோது, அவர்கள் விண்ணப்பித்ததின் நிறைவேற்றத்தை தாங்களே பார்க்கக்கண்டார்கள்!!



**மெய்யாகவே, தேவனுடைய வழிகள் என்னே அற்புதமானவை!!**

இப்போது முன்னிலைப்படுத்தப்பட வேண்டிய மற்றொரு முக்கியமான விஷயமாக பின்வரும் வார்த்தைகள் உள்ளன –

**"எங்கள் இரத்தத்தைக்குறித்து (எதுவரைக்கும்) நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர்..."**

**ஆம்! இந்த வார்த்தைகளுக்கு ஜாக்கிரதையான கவனத்தைச் செலுத்துகையில், பாபிலோன் அமைப்புகளின் மீது வரவிருக்கும் இறுதி நியாயத்தீர்ப்புகள் மற்றும் அதன் விதம் குறித்த மிக அற்புதமான சத்தியத்தினை நமக்களிக்கிறது!**

ஆம்! "**நியாயத்தீர்ப்பு**" என்ற சொல் கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி பாபிலோன் அமைப்புகளின் மீதான தெய்வீக நியாயத்தீர்ப்புகளின் பிரகடனத்தைக் குறிக்கிறது –

**வெளிப்படுத்தல் 18:2**

"**அவன் பலத்த சத்தமிட்டு: மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது!...**"

பாபிலோனின் இந்த **ஆவிக்குரிய தெய்வீகக்** கண்டனமானது, **ஏப்ரல் 1878** – இல் இயேசுவின் இரண்டாம் வருகைக்குப் பிறகு அவரால் செய்யப்பட்டது, ஆனால் நிஜத்தில் அது பாபிலோன் மீதான நியாயத்தீர்ப்பு செயல்முறையின் **ஆரம்பம்** அல்லது **முதல் படி மாத்திரமே**.

"**பழிவாங்குதல்**" என்ற சொல் பாபிலோன் மீதான இந்த நியாயத்தீர்ப்பு செயல்முறையின் **முடிவை** அல்லது **முடிவு படியைக்** குறிக்கிறது, இது அதன் இறுதி அழிவை ஏற்படுத்துகிறது; இதுகுறித்து சற்று நேரம் கழித்து விரிவாக பார்க்கவிருக்கிறோம்.

(இதனை ஏழாம் முத்திரையின் விளக்கத்தில், **வெளிப்படுத்தல் 8:2** – இல் ஆராயவிருக்கிறோம் – இந்தப் புஸ்தகத்தில் பக்கம் 213– இல் அதனைக் காணலாம்!)

ஆம்! ரொம்ப காலத்திற்கு மேல் நடந்த இந்த **இரண்டு படிநிலையான நியாயத்தீர்ப்பு செயல்முறையானது,** பரிசுத்த ஆவியின் அறிவொளி பிரகாசிப்பிக்கப்பட்ட வெளிப்பாடாகும், இது அன்றைய சர்தையின் விசாரிக்கும் "**பரிசுத்தவான்களால்**" முழுமையாகப் புரிந்துகொள்ளப்படவில்லை. உரோம சபை அமைப்புக் குறித்த தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பற்றிய அவர்களின் விசாரிப்பில், அது **கணநேரமாயும் சடுதியாகவும்** இருக்கும் என்கிற சிந்தனையும்கூட உள்ளடக்கியதாக இருந்திருக்ககக்கூடும். ஆனால் இது மிகவும் வித்தியாசமாகவும், **நீண்ட காலத்திற்கான ஒரு செயல்முறையை** உள்ளடக்கி இருந்துள்ளது (இதனை, இப்போது லவோதிக்கேயா வாசகர்களாக இருக்கும் நாம் புரிந்துகொள்கிறோம்!) என்பது பரிசுத்த ஆவியால் வழங்கப்பட்ட பின்வரும் வார்த்தைகளில் மறைக்கப்பட்டுள்ளது –

"**.... நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும்....**"

சர்தையின் "**பரிசுத்தவான்கள்**" இந்த அந்திக்கிறிஸ்து அமைப்பு பற்றிய புரிதலுக்கு **அப்போதுதான் வந்து கொண்டிருந்தனர்**, இதனால் அதன் எதிர்கால நியாயத்தீர்ப்பைப் பற்றிய பொதுவான கேள்வியினைக் **(enquiry)** கேட்டனர். ஆனால் பரிசுத்த ஆவியின் தெய்வீக வல்லமையின் மூலம் வேத வசனங்களில்

பதிவு செய்யப்பட்ட அந்தக் கருத்துகள், நீண்ட காலத்திற்கு மேல் நடக்கும் அந்த நியாயத்தீர்ப்பினுடைய **இரண்டு படிநிலை செயல்முறையின்** விவரங்களின் மறைவான இரகசியத்தைத் தன்னகத்தேக் கொண்டுள்ளது!

**இப்போது நாம் முடிவு பகுதிக்கு வரலாம்......**

**"...அவர்கள் தங்களைப்போலக் கொலைசெய்யப்படப்போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரையும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும்"**

இது, சபை வரலாற்றின் "**பிலதெல்பியா**" மற்றும் "**லவோதிக்கேயா**" என்கிற இன்னும் இரண்டு காலப்பகுதியினை உள்ளடக்கியிருக்கும் சுவிசேஷ யுகத்தின் மீதமுள்ள பகுதியின் கிரியையைக் குறிக்கிறது! அப்போது மாத்திரமே கிறிஸ்துவின் சரீரம் நிறைவடையும்!

"**தங்களைப்போலக் கொலைசெய்யப்படப்போகிறவர்களாகிய**" என்ற வார்த்தைகள் "**பலியினால் உடன்படிக்கைச் செய்தோரைக்**" (சங்கீதம் 50:5) குறிக்கின்றன, இதன் மூலம் கிறிஸ்தவர்களிடையே "**தெரிந்தெடுக்கப்பட்டவர்களாக**" மாறும் "**சிலர்**" (மத்தேயு 22:14) வளர்ச்சியின் ஒரு செயல்முறையின் வழியாகச் செல்கின்றனர்; அதில் **உரோமர் 12:1** – இல் உள்ள அப்போஸ்தலர் பவுலின் வார்த்தைகளில் நாம் வாசிப்பதுப் போல தங்கள் சரீரங்களை "**ஜீவபலியாக**" ஒப்புக்கொடுக்கவேண்டுவதே **அழைப்பாகும்**.

**இது "புது சிருஷ்டியின்" ஆவியின் ஜெநிப்பிக்கப்படுதலுக்கு வழிவகுக்கிறது, இது மாம்சீகச் சுபாவம் மற்றும் மாம்சீக வாழ்க்கை ஆகியவை "கொலை" மற்றும் "மரிக்கச்" செய்வதன் மூலம் பரலோக சுபாவத்துக்கான வளர்ச்சியை ஏற்படுத்துகின்றன !!**

பரலோக சுபாவத்துக்கான இந்த வளர்ச்சியானது, கீழுள்ள வார்த்தைகளில் வெளிப்படும் இரண்டு வகைகளில் உள்ளது –

**"தங்கள் உடன்பணிவிடைக்காரரையும்... தங்கள் சகோதரருமானவர்களின்"**

இது எவ்வாறு புது சிருஷ்டியானது உருவாகி இறுதியாக பின்வரும் இரண்டு சுபாவங்களில் வெளிப்படும் என்பதைக் குறிக்கிறது –

**#1. தெய்வீகச் சுபாவம்**

**#2. தூதர் சுபாவம்**

ஆம்! மாம்சத்தில் இருக்கும்போது இந்தப் புது சிருஷ்டிகளின் வளர்ச்சியும் கூட இரண்டு வகைகளில் உள்ளது, அதை நாம் வாசிக்கலாம் –

**மத்தேயு 25:2**

**"அவர்களில் ஐந்துபேர் புத்தியுள்ளவர்களும், ஐந்துபேர் புத்தியில்லாதவர்களுமாயிருந்தார்கள்."**

ஆம்! "**புத்தியுள்ள கன்னிகைகள்**" இங்கே உடன்பணிவிடைக்காரர் என்றும், "**புத்தியில்லாத கன்னிகைகள்**" சகோதரருமானவர்கள் என்றும் குறிப்பிடப்படுகிறார்கள்.



மேலும் ஆம்! "**தங்கள் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கும்**" "**பலியினால் உடன்படிக்கை**" செய்ததில் அவர்கள் இருவரும் "**கொல்லப்படுகிறார்கள்**" !!

மாம்சத்திலிருக்கும் அர்ப்பணிக்கப்பட்ட அங்கத்தினர்களிடையே உள்ள **இரண்டு** வகுப்பாரின் இந்த வேறுபாடானது **வேத வசனங்களில் மிகவும் தெளிவாகத் தெரிகிறது.**

இப்போது சில உதாரணங்களை நாம் காணலாம் –

**நீதிமொழிகள் 31:15**

**இருட்டோடே எழுந்து தன் வீட்டாருக்கு ஆகாரங்கொடுத்து, தன் வேலைக்காரிகளுக்குப் படியளக்கிறாள்.**

கிறிஸ்துவின் "**மணவாட்டி**" – க்கு அடையாளமாக இருக்கும் "**ஒரு குணசாலியான ஸ்திரீ**" பற்றிய விளக்கத்தை இந்த வேத வசனத்தில் நாம் காணலாம்.

அவள் "**தன் வீட்டாருக்கு**" "**ஆகாரங்கொடுத்து**" மற்றும் "**தன் வேலைக்காரிகளுக்குப் படியளக்கிறாள்**" என்று காண்பிக்கப்படுவதைக் கவனியுங்கள். இவர்களே இங்கு காட்டப்படுகிற அந்த மாம்சத்தில் இருக்கும் இரண்டு வகுப்பாராவர்!

மீண்டும் அதையே பின்வரும் வசனத்திலும் காண்கிறோம் –

**ஆதியாகமம் 24:61**

**"அப்பொழுது ரெபெக்காளும் அவள் வேலைக்காரிகளும் எழுந்து ஒட்டகங்கள்மேல் ஏறி..."**

"**ஒட்டகங்கள்மேல் ஏறி**" சவாரி செய்வது, சுவிசேஷ யுகத்தில் சத்தியத்தின் "**மகா பரிசுத்தமான விசுவாசத்துடன்**" மேற்கொள்ளும் பிரயாணத்தைக் குறிக்கிறது என்பதைக் கவனியுங்கள்! "**ரெபெக்காள்**" மற்றும் "**...அவளுடைய வேலைக்காரிகள்**" இரண்டு தனித்தனி வகுப்பாரை அடையாளப்படுத்துவதையும் கவனியுங்கள்.

இறுதியாக இதை மீண்டும் பின்வரும் வசனத்தில் காண்கிறோம் –

**2 இராஜாக்கள் 2:11**

**"அவர்கள் பேசிக்கொண்டு நடந்துபோகையில், இதோ, அக்கினிரதமும் அக்கினிக் குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து இருவரையும் பிரித்தது..."**



இங்கேயும் நாம் "**எலியா**" மற்றும் "**எலிசா**" ஆகியோரை ஒன்றாகக் காண்கிறோம், ஆனால் யோர்தானின் தண்ணீரை அடித்தவர் எலியா மட்டுமே, எலிசா அவருடன் கூட மட்டுமே இருந்தார்... கடைசியாக "**எலியா**" "**சுழல்காற்றிலே**" எடுத்துக்கொள்ளப்பட்ட **பின்னரே**, எலிசா எலியாவின் சால்வையை எடுத்து "**யோர்தானை அடித்தார்**".

இது மீண்டும் "**எலியா**"– வை "**புத்தியுள்ள கன்னிகை**" வகுப்பாராக அடையாளப்படுத்துகிறது – அவர்கள் தேவனுடைய தெய்வீக ஊழியத்தின் "**ஊழியக்காரர்களாக**" இருக்கிறார்கள், அதேசமயம், "**எலிசா**" "**புத்தியில்லாத கன்னிகை**" யைக் குறிக்கிறார், இவர்கள் சரீரம் நிறைவடைந்த பிறகு, அவர்களின் சொந்த மனந்திரும்புதல் மற்றும் சுத்திகரிப்புக்குப் பின்னரே ஊழியம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்...

இதுகுறித்து கீழே குறிப்பிடப்பட்டுள்ளது –

**2 இராஜாக்கள் 2:12**

**“அதை எலிசா கண்டு... புலம்பினான்; அவனை அப்புறம் காணாமல், தன் வஸ்திரத்தைப் பிடித்து இரண்டு துண்டாகக் கிழித்தான்.”**

**இது மிகவும் தெளிவாக இருக்கிறதல்லவா?!**

“**ஊழியர்கள்**” வகுப்பாராக மாறுவதற்கான அடிப்படை என்ன என்று கேட்பவர்களுக்கானப் **பதிலை இரண்டு வசனங்களில்** நாம் காணலாம் –

**ஏசாயா 52:11**

**“புறப்படுங்கள், புறப்படுங்கள், அவ்விடம்விட்டுப் போங்கள்; அசுத்தமானதைத் தொடாதிருங்கள்; கர்த்தருடைய பாத்திரங்களைச் சுமக்கிறவர்களே அதின் நடுவிலிருந்து புறப்பட்டு உங்களைச் சுத்திகரியுங்கள்.”**

இங்கே “**உங்களைச் சுத்திகரியுங்கள்**” என்பதற்கு முக்கிய அழுத்தம் அளிக்கப்படுகிறது, இது கீழே கர்த்தர் கூறினதைப் பின்பற்றுவதன் மூலம் “**நீதியின் சால்வை**” (**ஏசாயா 61:10**) சுத்தமாக வைத்திருப்பதைக் குறிக்கிறது

**லூக்கா 21:36**

**“பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்...”**

இது நிச்சயமாக புது சிருஷ்டி தான் இப்போது குடியிருக்கும் விழுந்துபோன பலவீனமான மாம்சத்தின் **எண்ணங்கள், வார்த்தைகள்** மற்றும் **செயல்களுக்கு** “**விழித்திருப்பது**” பற்றிய குறிப்பாகும், மேலும் “**எப்பொழுதும் ஜெபம்பண்ணி**” என்பது அந்தப் பாவங்களை அறிக்கையிடுவதன் மூலம் உடனடியாக **சுத்திகரித்துக்கொள்வதைக்** குறிக்கிறது. (**1 யோவான் 1:9**)

மற்றொரு வேத வசனத்தையும் வாசிக்கலாம் –

**தானியேல் 12:10**

**“அநேகர் சுத்தமும் வெண்மையுமாக்கப்பட்டு புடமிடப்பட்டவர்களாய் விளங்குவார்கள். துன்மார்க்கரோ துன்மார்க்கமாய் நடப்பார்கள்;**



**துன்மார்க்கரில் ஒருவனும் உணரான்.”**

ஆம்! இங்கே “**துன்மார்க்கனாய்**” இல்லாமல் இருப்பதற்கு முக்கிய அழுத்தம் கொடுக்கப்படுகிறது.

**இந்தத் துன்மார்க்கன் யாரைக் குறிக்கிறார்?**

(விரிவாக்கப்பட்ட வேதாகம விளக்கவுரையில் **(EBC)** , (ஆங்கில) பக்கம் 343 இல் நாம் வாசிப்பதுபோல, இது தாங்கள் “**பலியினால் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு**” “**துன்மார்க்கராயிருந்தவர்களை**” குறிக்கிறது ...)

... அதைப் பற்றி நாம் வாசிக்கலாம் –

**நீதிமொழிகள் 6:16, 17**

**“ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார்... மேட்டிமையான கண், பொய்நாவு...”**

ஆம்! கர்த்தருடன் தாங்களே செய்த உடன்படிக்கைக்கு உண்மையற்றவர்களாய் இருந்தவர்கள் இவர்கள்!

**ஆகவே, “ஊழியக்கார” வகுப்பராக இருப்பதற்கான அடிப்படையானது “அங்கியை” சுத்தமாய் வைத்துக்கொள்வதும், பலியினால் செய்யப்பட்ட உடன்படிக்கைக்கு உண்மையாயிருப்பதுமே ஆகும்.**

**நாம் இப்போது பார்த்தவற்றின்** இந்த அம்சத்தை, **லேவியராகமம் 8** – ஆம் அதிகாரத்தில், குறிப்பாக பின்வரும் வசனங்களில், ஆரோன் மற்றும் அவருடைய குமாரரின் **அபிஷேகம் செய்யும் முறைமையின்** நிழலில் காட்டப்பட்டுள்ள இராஜரிக ஆசாரியத்துவத்தின் **பிரதிஷ்டைக்காக** விவரிக்கப்பட்டுள்ள அடையாளப் பிரதிநிதித்துவத்தில் காணப்படும் “**பணிவிடைக்காரர்கள்**” வகுப்பாராக இருப்பதற்கான அடிப்படையாகப் பார்க்கிறோம் –

**லேவியராகமம் 8:25, 26**

**“கொழுப்பையும், வாலையும், குடல்கள்மேலிருந்த கொழுப்பு முழுவதையும், கல்லீரலின்மேலிருந்த ஜவ்வையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின் கொழுப்பையும், வலது முன்னந்தொடையையும் எடுத்து, கர்த்தருடைய சந்நிதியில் வைத்திருந்த புளிப்பில்லா அப்பங்களின் கூடையிலுள்ள புளிப்பில்லா அதிரசத்தில் ஒன்றையும், எண்ணெயிட்ட அப்பமாகிய அதிரசத்தில்**

**ஒன்றையும், ஒரு அடையையும் எடுத்து, அந்தக் கொழுப்பின்மேலும், முன்னந்தொடையின்மேலும் வைத்து,"**

இது ஆரோனும் அவரது குமாரர்களும் தங்கள் கைகளை அதின் தலைமேல் வைத்த "**பிரதிஷ்டையின் ஆட்டுக்கடா**" என்பதிலிருந்து வந்தது (**லேவியராகமம் 8:22**) – அதாவது இது அவர்களையும், அவர்களின் அர்ப்பணிப்பின் பலிக்குரிய அனுபவங்களையும் குறிக்கிறது.

(EBC)/ விளக்கவுரை "**தங்கள் கைகளை வைத்தார்கள்**" அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதைக் குறிக்கிறது (ஆங்கில ப. 49).

நாங்கள் பின்வருவதை அறிவுறுத்த விரும்புகிறோம்...

- **வசனம் 25** – இது சுத்திகரிப்பு அல்லது அநுதின பரிசுத்தமாக்கப்படுதல் பற்றிய இந்த விஷயத்திற்கான ஒரு குறிப்பாகும்.

- **வசனம் 26** – இது "**பலியினால் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு**" காண்பிக்கப்படும் உண்மைத்தன்மையின் விஷயத்திற்கான ஒரு குறிப்பாகும்.

**சுருக்கமாக இங்கே விளக்குகிறோம்...**

**வசனம் 25** – இல், "**வால்**" என்பதற்கான குறிப்பானது ஸ்ட்ராங்ஸ் **எபிரேயு #451** "**alyah / அல்யா**" ஆகும், அர்த்தம் "**செம்மறியாட்டின் கொழுத்த வால்**", இது ஒரு கிழக்கத்திய அருஞ்சுவை உணவாக இருந்தது! இவ்வாறு இந்த வசனத்தில் இரண்டு சிறுநீரகங்கள், கல்லீரலின்மேலிருந்த ஜவ்வு, மற்றும் **நிறைய கொழுப்பு** ஆகியவற்றுக்கான ஒரு குறிப்புள்ளது!

**இது எதைக் குறிக்கும்?**

"**சிறுநீரகங்கள் மற்றும் கல்லீரல்**" எனும் இந்த இரண்டு உறுப்புகளும் உடலின் உயிருக்கு ஊறுவிளைவிக்கும் அனைத்து நச்சுப்பொருட்களிலிருந்து **சுத்தப்படுத்தும்** பணியில் பிரதானமாக ஈடுபடுபவை என்பதை நாங்கள் பரிந்துரைக்க விரும்புகிறோம். இவ்வாறாக இங்குள்ள அடையாளக் குறிப்பானது... **பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படுதல்** என்று பொருள்படும்!

இப்போது "**அவைகள் மேலிருந்த கொழுப்பு**" என்பது **பாவத்திலிருந்து** இந்தச் **சுத்திகரிக்கப்படுதலில்** கவனமாகவும் உடனடியாகவும் இருப்பதில் இருக்கும் **வைராக்கியத்தையும், பக்தியையும்** பிரதிநிதித்துவப்படுத்துகிறது ... **உண்மையான** பரிசுத்தமாக்கப்படுதலை வெளிப்படுத்துகிறது.

**வசனம் 26** – இல், "**புளிப்பில்லா அப்பங்களின் கூடை**" என்கிற குறிப்பானது, இந்தச் சுவிசேஷ யுகத்தின் புது சிருஷ்டிக்கான "**கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டு**" (**1 கொரிந்தியர் 1:30**) இருக்கும் **தெய்வீக ஏற்பாட்டின்** பிரதிநிதியாகும், அங்கு நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல் மற்றும் மகிமைப்படுத்தல் ஆகியவற்றின் இந்த முன்னேற்றமான செயல்முறைகள்… இறுதியாக **உண்மைத்தன்மையின்** காரணத்தால் அடையப்படுகின்றன… இது பின்வரும் வார்த்தைகளால் இங்கே குறிப்பிடப்படுகிறது –

"**… அந்தக் கொழுப்பின்மேலும், முன்னந்தொடையின்மேலும் வைத்து**"

ஆம்! "**தொடை / shoulder**" என்பது "**பலியினால் செய்துகொண்ட உடன்படிக்கையை**" நிறைவேற்றுவதற்கான பொறுப்பைக் குறிக்கும் … மேலும் "**கொழுப்பு**" என்பது அதைச் செய்வதற்கான **வைராக்கியம்** மற்றும் **பக்தியின்** பிரதிநிதியாக இருக்கிறது … இது தலையும் எஜமானருமானவரிடத்தில் பரிபூரணமாகக் குறிப்பிடப்படுகிறது

**லூக்கா 12:50**

"**ஆகிலும் நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்.**"

**ஆ, ஆம்! இது மிகவும் தெளிவாக இருக்கின்றது!**

இப்போது இந்த ஐந்தாம் முத்திரை உள்ளடக்கங்களைப் பற்றிய புரிதலை கீழுள்ள வார்த்தைகளில் கவனிக்க வேண்டிய ஒரு சுவாரஸ்யமான கருத்துடன் நிறைவுக்குக் கொண்டு வரலாம் –

"**… நிறைவாகுமளவும் …**"

ஆம்! இங்கே மற்றொரு **புதைக்கப்பட்ட / மறைவாக்கப்பட்ட சத்தியம்** உள்ளது! மேற்கண்ட வசனங்களிலிருந்து நாம் இதுவரை பெற்றுள்ள அனைத்து புரிதல்களிலிருந்தும் அதன் அர்த்தத்திலிருந்தும், "**அளவும் (until)**" என்னும் இந்த வார்த்தையின் பின்னால் உள்ள பொருளை இப்போது புரிந்துகொள்ளலாம். இது எந்த வசனத்தில் தோன்றியதோ அந்த வசனத்தைப் பார்ப்பதன் மூலம் இதைச் செய்வோமாக … அது….

**வசனம் 11**

"**அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது; அன்றியும், அவர்கள் தங்களைப்போலக் கொலைசெய்யப்படப்போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரையும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை**

**நிறைவாகுமளவும் இன்னுங்கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது."**

இந்த வசனத்தின் முழு சூழலும் என்னவென்றால், பாபிலோன் மீதான எதிர்கால தெய்வீக நியாயத்தீர்ப்பைக் குறித்து, "**ஆண்டவரே... எதுவரைக்கும்**" என்ற கூக்குரலுக்கான தெய்வீக மாறுத்தரவு சார்ந்ததாய் இருக்கிறது – இந்த பாபிலோனில் அதுவரை உரோம கத்தோலிக்க போப் அமைப்பு மாத்திரமே இருந்தது (**வெளிப்படுத்தல் 2:20**).

எனவே, இந்த **நியாயத்தீர்ப்பு** நிறைவேற்றப்படுவதற்கு முன்பதாக, சர்தையின் கண்ணோட்டத்தில், சுவிசேஷ யுக சபை வரலாற்றில் இன்னும் பிலதெல்பியா மற்றும் லவோதிக்கேயா என்னும் இன்னும் **இரண்டு** பகுதிகள் இருந்தன என்று எதிர்காலத்தை கர்த்தர் மேலும் சுட்டிக்காட்டுகிறார்.

#1. எனவே "**அளவும் (until)**" என்பது முதலில், விசாரித்துக் கேட்கப்பட்ட **தெய்வீக நியாயத்தீர்ப்பானது** கடைசி சபைப்பகுதியான **லவோதிக்கேயா**வின் போது நடைபெறும் எனும் அர்த்தத்தை எடுக்கிறது.

#2. மேலும், "**அளவும் (until)**" ... பின்வரும் வார்த்தைகளின் சூழலை நாம் கவனமாக கவனிக்கும்போது – "**அவர்கள் தங்களைப்போலக் கொலைசெய்யப்படப்போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரையும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும்**".

**.... ஆழமான ஒன்றை வெளிப்படுத்துகிறது!**

**அது என்னவாக இருக்கும்?**

இதுகுறித்து **வசனம் 10** – இல் வந்த நியாயத்தீர்ப்பைப் பற்றின வார்த்தைகளின் **ஆழமான அர்த்தத்தில்** நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம் –

"**எங்கள் இரத்தத்தைக்குறித்து (எதுவரைக்கும்) நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர்.**"

ஆம்! பாபிலோன் மீதான இந்த நியாயத்தீர்ப்பானது நீண்ட காலத்திற்கான ஒரு **செயல்முறையாக** இருக்க வேண்டும் என்பது இப்போது நமக்குத் தெளிவாகத் தெரிகிறது, இது ஏப்ரல் 1878 – இல், வழங்கப்பட்ட "**நியாயத்தீர்ப்பி**"லிருந்து துவங்கி, கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி "**ஏழாம் கலசத்தை**" ஊற்றும்போது நடக்கும் "**பழிவாங்கலுடன்**" முடிவடையும் –

**வெளிப்படுத்தல் 16 : 19**

**"…மகா பாபிலோனுக்கு தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரத்தைக் கொடுக்கும்படி அது அவருக்கு முன்பாக நினைப்பூட்டப்பட்டது."**

**இன்றைய நமது கண்ணோட்டத்திலிருந்து கூட நிச்சயமாக இது இன்னும் எதிர்காலத்திற்குரியதாக இருக்கிறது!**

ஆம்! இந்த இறுதி அழிவானது நாம் கீழே வாசிக்கும்படி முழு சரீரமும் முழுமையாக **மகிமையடைந்த பிறகே** நிகழ்கிறது –

**வெளிப்படுத்தல் 14:10**

**"…அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்குமுன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்குமுன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான்."**

ஆ! ஆம்! இதுதான் … **சுவிசேஷ யுகத்தின் முடிவில்** நடக்கும் "**கலைகள் (கட்டுகள்) சுட்டெரிக்கப்படுதல்**" ஆகும் (**மத்தேயு 13:30**)!

அதில் நாம் இப்போது "**அளவும் (until)**" – இல் காணும் **ஆழமான விஷயம்** என்னவென்றால், இந்த வேத வசனம் இப்போது நமக்கு **தெளிவாக** பின்வருவதைக் **கற்பிக்கிறது**… – பாபிலோனின் இறுதி அழிவானது, "**சிறு மந்தை**" யான கிறிஸ்துவின் சரீரம் முழுமையடைந்த பின்னரே நடக்கும், அது மாத்திரமல்லாது கூடுதலாக, அது "**திரள்கூட்ட வகுப்பார்**" நிறைவடைந்த பிறகு தான் நிகழும்!!

**ஆம்! "நிறைவாகுமளவும்" என்னும் வார்த்தையைக் கவனியுங்கள்!**

இது நிச்சயமாக **யோசுவா 6:2 – 24** – இல், **எரிகோவின் அலங்கம் இடிந்து விழுந்த** காரியத்தின் நிழலிலிருந்து நாம் கற்றுக்கொண்ட **அதே சத்தியத்தை இது ஆதரிக்கிறது…**

இது நிச்சயமாக, பாபிலோனின் அழிவை அடையாளப்படுத்தியது, அதில் "**ஏழு நாட்கள்**" என்பது சுவிசேஷ யுக சபையின் ஏழு பகுதியினைச் சித்தரித்தன. "**கொம்பு எக்காளங்கள்**" என்பது தேவனுடைய வார்த்தையின் சாட்சியைச் சித்தரிக்கின்றன.

ஏழாம் நாளில் "**பட்டணத்தை ஏழுதரம் சுற்றிவருதல்**" **வெளிப்படுத்தல் 16** – ஆம் அதிகாரத்தின் "**ஏழு கலசங்களைச்**" சித்தரிக்கிறது, இது திருச்சபையின் ஏழாம் பகுதியான – லவோதிக்கேயாவில் பாபிலோனின் இறுதி வீழ்ச்சியைக் கொண்டுவரும்.



மேலும், 20 – ஆம் வசனத்தில், "**எக்காளங்களை ஊதுகையில், ஜனங்கள் தாங்களே ஆர்ப்பரித்தபின்,**" எரிகோவின் அலங்கம் இடிந்து விழுந்தது என்பது – எவ்வாறு மாம்சத்திலிருக்கும் கடைசிப் பரிசுத்தவான்களால் "**இராஜ்யத்தினுடைய சுவிசேஷம்**" (**மத் 24:14**) என்று சொல்லப்படுகிற தேவனுடைய தெய்வீகத் திட்டத்தைப் பற்றி கடைசிச் சபை அங்கத்தினரால் கொடுக்கப்படும் இறுதி பொது சாட்சியை உள்ளடக்கியிருக்கும் "**ஏழாம் கலசத்திலிருந்து**" (**வெளி 16:17**) மாபெரும் இறுதி ஊற்றப்படுதலுக்குப் பிற்பாடு,

**(உலகெங்கிலும் உள்ள அனைத்து தொலைக்காட்சி சேனல்களிலும் "நேரடி செய்தி" "முக்கிய செய்தி" என ஒளிபரப்பப்படலாம்!)**

... இது "**அக்கிரமத்தின் இரகசியம்**" ஆன அந்திக்கிறிஸ்துவின் **உண்மையான சுபாவத்தை** அறிவதற்கும், வெளிப்படுவதற்கும் வழிவகுக்கும்... இப்படியாக இது அப்படிப்பட்ட வெளிப்பாட்டின்போது ஒரு மாபெரும் **பொதுஜன எழுச்சிக்கு / புரட்சிக்கு (PUBLIC OUTBURST)** வழிவகுக்கும் (**2 தெச 2:8 / வெளி17:16**) என்பதைச் சித்தரிக்கிறது.

இப்போது நாம் உண்மையில் சுட்டிக்காட்டும் கருத்தானது அடுத்துள்ள "**ராகாப் என்னும் வேசி மற்றும் அவளது வீட்டாரையும் உயிரோடே வைத்து**" (**வசனம் 23**) என்பதில் வருகிறது.

இது **இரண்டாம் உயிர்த்தெழுதலில்** நிகழும் "**திறள்கூட்ட வகுப்பாரின்**" முழுமையான இரட்சிப்பைக் குறிக்கிறது.

**ஆம்! யோசுவா 6:23 – இல் உள்ள வார்த்தைகளைக் கவனியுங்கள்**
**"ராகாபையும் அவள் தகப்பனையும் அவள் தாயையும் சகோதரர்களையும் அவளுக்குள்ள யாவையும் அவள் குடும்பத்தார் அனைவரையும் வெளியே அழைத்துக்கொண்டு வந்து....."**
**ஆ! ஆம்! ராகாப்பின் முழு "வீட்டாருமே" காப்பாற்றப்பட்டார்கள்!**

மேலும் ... **இதற்கு பின்னரே...** "**எரிகோ பட்டணத்தின்**" சுட்டெரிக்கப்படுதல் நடந்தது... இது **பாபிலோனின் இறுதி அழிவைச் சித்தரிக்கிறது** "**தேவனுடைய கோபாக்கினை**" தெய்வீக நியாயத்தீர்ப்புகள் ஊற்றப்படுகின்றன...

"**பழிவாங்க**" !

**மேலும், ஆ, ஆம்! பாபிலோன் மீதான இறுதி நியாயத்தீர்ப்பை நிறைவு செய்யும் "அளவும் (until)" என்பது, "சிறு மந்தை" ( "உடன்பணிவிடைக்காரர்கள்" ) மற்றும் "திறள்கூட்டம்" ( "அவர்களுடைய சகோதரர்கள்" ) ஆகிய இரண்டும் முழுமையடைந்து நிறைவடையும் ( "நிறைவாகும்" ) வரை காத்திருக்க வேண்டியிருக்கும் என்பது மிகவும் தெளிவாக உள்ளது.**

ஆ! மெய்யாகவே! **சர்தை** சபை விசாரித்துக் கேட்ட இந்த **வார்த்தைகளிலுள்ள** இந்த மாபெரும் சத்தியங்கள் எவ்வளவு **அற்புதமானவை,** அவை பாபிலோன் குறித்த இந்த நியாயத்தீர்ப்புகள் நமது கண்களுக்கு முன்பாக **நிறைவேறி வருகிற** காலத்தில், மாம்சத்தில் **வாழ்கின்ற** லவோதிக்கேயா பரிசுத்தவான்களாகிய நமக்கு **தீர்க்கதரிசனத்தின் வெளிச்சமாக** விளங்குகின்றன!

ஆம்! **முடிவாக, அந்த அற்புதமான ஒளியை வீசிய** அந்த வசனத்தை மீண்டும் பார்க்கலாம் –

**அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது; அன்றியும், அவர்கள் தங்களைப்போலக் கொலைசெய்யப்படப்போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரையும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை**

**நிறைவாகுமளவும் இன்னுங்கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது."**

**அருமை....மற்றும், ஆமென்!**

# ஆறாம் முத்திரை

**(வெளிப்படுத்தல் 6: 12 – 17)**

**சபை காலக்கட்டம் : பிலதெல்பியா**

**காலப்பகுதி : கி.பி. 1157 – கி.பி. 1874**

**வசனம்-12**

**"அவர் ஆறாம் முத்திரையை உடைக்கக்கண்டேன்; இதோ, பூமி மிகவும் அதிர்ந்தது; சூரியன் கறுப்புக் கம்பளியைப்போலக் கறுத்தது; சந்திரன் இரத்தம்போலாயிற்று."**

**ஆறாம்** முத்திரை உள்ளடக்கங்கள் சபை வரலாற்றின் **சீர்திருத்தத்திற்குப் பிந்தைய** காலத்தையும், குறிப்பாக, அந்தக் காலத்தின்போது "**அமைப்புகளின் அமைப்பாக**" உருவாகியிருந்த அந்திக்கிறிஸ்து அமைப்பையும் விவரிக்கிறது.

ஆம்! "**தாய்**" மற்றும் "**குமாரத்திகள்**" ஆகியவற்றின் ஓர் அமைப்பாக இருந்த "**பாபிலோன்**" – இன் வளர்ச்சி.

பல விரிவுரைகள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இந்தப் "**பூமியதிர்ச்சி** " என்பது 1789 இல் துவங்கிய **பிரெஞ்சு புரட்சி** என்று விளக்குகின்றன, மேலும் அது 10 ஆண்டுகளுக்குப் பிறகு 1799 – இல் நெப்போலியன் போனபார்ட்டால், போப் அதிகாரத்திற்கும் பரிசுத்த உரோம சாம்ராஜ்யத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்க வழிவகுத்தது!!

**இதையே நாம் விளக்கமாக எடுத்துக் கொள்ளலாமா?**

இந்த விளக்கத்தை ஏற்றுக்கொள்வதில் காலம் (TIME) எனும் காரணி பற்றி நமக்கு ஒரு சிக்கல் உள்ளது.

**ஆறாம் முத்திரை, சபையின் “பிலதெல்பியா” காலத்தின் துவக்கத்தில், அதாவது 1517 – ஆம் ஆண்டின்போது உடைக்கப்பட்டது. கிட்டத்தட்ட 272 ஆண்டுக் காலஇடைவெளி நமக்குக் கிடைக்கிறது! (1517 முதல் 1789 வரை).**

கூடுதலாக, வசனத்தின் பாஷையையும் நாம் கவனிக்கலாம் –

**வசனம்-12**


**“அவர் ஆறாம் முத்திரையை உடைக்கக்கண்டேன்; இதோ, பூமி மிகவும் அதிர்ந்தது; ...”**

**நீங்கள் அதைக் கவனித்தீர்களா?**

இந்த முத்திரையை கிட்டத்தட்ட உடைத்த உடனேயே மற்றும் அந்தக்கணமே “**பூமியதிர்ச்சி**” ஏற்பட்டது என்பதை “**இதோ**”என்ற வார்த்தை நமக்குக் கற்பிக்கின்றன.

**இந்தப் “பூமியதிர்ச்சி” எதைக் குறிக்கிறது? என்பதை இப்போது புரிந்துகொள்வோம்**

ஒரு “**பூமியதிர்ச்சி**” என்பது பழைய ஒழுங்கை அழித்து, புதிய ஒழுங்கை எழும்பச்செய்யும் புரட்சிக்கான அடையாளமாகும்.



**அப்படியானால், 1517 – ஆம் ஆண்டில் ஆறாம் முத்திரையை உடைத்தவுடன் எந்தப் பூமியதிர்ச்சி அல்லது புரட்சி உண்டானது?**

**ஆ! ஆம்! இது 1517 – ஆம் ஆண்டு அக்டோபர் 31 – ஆம் தேதி அன்று மார்டின் லூதர் தனது 95 ஆய்வறிக்கைகளை ஜெர்மனியில் உள்ள விட்டன்பெர்க் என்ற சிறிய நகரத்தில் உள்ள பிரதான தேவாலயத்தின் வாசலில் தொங்கவிட்டபோது துவங்கிய சீர்த்திருத்தம் எனும் “மாபெரும் பூமியதிர்ச்சி” ஆகும்**

ஆம்! இது தேவனால் முன்னரே தீர்மானிக்கப்பட்டிருந்த **போப்** மற்றும் **உரோம கத்தோலிக்க சபை** ஆகியவற்றின் மீது வந்த “**மாபெரும் பூமியதிர்ச்சி** ” ஆகும், இதைப்பற்றி நாம் பின்வரும் ஏழாம் எக்காளம் குறித்த தீர்க்கதரிசன வேத வாக்கியங்களில் தெளிவாக வாசிக்கலாம் –

**வெளிப்படுத்தல் 9:15**

“... **ஒருமணிநேரத்திற்கும், ஒரு நாளுக்கும், ஒரு மாதத்திற்கும், ஒரு வருஷத்திற்கும் ஆயத்தமாக்கப்பட்டிருந்த அந்த நான்கு தூதர்களும் அவிழ்த்துவிடப்பட்டார்கள்.**”

பலர் இந்த “**மாபெரும் பூமியதிர்ச்சி** ” பிரெஞ்சு புரட்சி என்று நினைக்க முற்படுகின்றனர்.

ஆக, இந்தக் கருத்தை நாம் ஏன் ஏற்க மறுக்கிறோம் என்பதற்கான வேதாகமப்பூர்வக் காரணங்களை இங்கே முன்வைக்கிறோம்...

**வெளிப்படுத்தல் 9:14 – 16** – இல் உள்ள “**ஆறாம் எக்காளத்தை**” விவரிக்கும் வசனங்களைப் பார்க்கும்போது, சீர்திருத்தமே பிலதெல்பியா என்னும் ஆறாம் சபைக் காலத்தில் பிரதான கவனமாக இருந்தது என்பதாகக் காண்கிறோம்.

அவ்வாறே **வெளிப்படுத்தல் 3:8** – இல் உள்ள பிலதெல்பியா சபைக்கான கர்த்தரின் செய்தியை நாம் பார்க்கும்போது –

“**உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், ... இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்...**”

இங்கே இந்தத் “**திறந்தவாசல்**” என்பது தேவனுடைய வார்த்தையை **வெளிப்படுத்தவும்**, அதற்காக **உறுதியாக நிற்கவும்**, தேவனுடைய எழுதப்பட்ட மற்றும் வெளிப்படுத்தப்பட்ட வார்த்தையாக வேதாகமத்திடம் பாமர மக்களின் கவனத்தைத் திருப்புவதற்குமான வாய்ப்பைப் பற்றிய தெளிவான குறிப்பாகும்!

அதுதான்... **சீர்த்திருத்தம்.**

முந்தைய 7 – **ஆம் வசனத்தில்** வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி இந்த “**வாசல்**” தெய்வீக வல்லமையால் திறக்கப்பட்டது.

மீண்டுமாக, சுவிசேஷ யுகத்தின் ஏழு சபை காலங்களின் நிகழ்வுகளைச் சுருக்கமாக விவரிக்கும் **மத்தேயு 13 – ஆம் அதிகாரத்தில்** உள்ள கர்த்தரின் ஏழு

உவமைகளில் **ஆறாம்** உவமையைப் பார்க்கும்போது –

**மத்தேயு 13:45, 46**

“**...பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது: அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு....**”

இங்கே குறிப்பிடப்பட்டுள்ள இந்த “**வியாபாரி**” வேறு யாருமல்ல மார்ட்டின் லூதரே, மேலும் அவர் கண்டறிந்த “**விலையுயர்ந்த ஒரு முத்து**” என்பது வேதாகமத்தில் உள்ள கீழே கொடுக்கப்பட்ட வசனத்தில் அவர் கண்டறிந்த நீதிமானாக்கப்படுதலின் செயல்முறை மற்றும் உபதேசத்தின் புரிதலே என்பது நமக்குத் தெளிவாகின்றது –

**உரோமர் 1:17**

“**விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது.**”

இந்த மாபெரும் **சத்தியத்தின்** உணர்தல் தான் ஓர் உரோம கத்தோலிக்க பாதிரியாராக இருந்த மார்ட்டின் லூதரை தனது “**95 ஆய்வறிக்கைகளை**” எழுத தூண்டியது, உரோம சபைக்கு எதிரான இந்தக் கருத்து–எதிர்ப்பினுடைய பிரகடனத்தின் மூலம் சீர்த்திருத்தத்தை “**தூண்டிவிட்டது.**”

ஆகவே, பிலதெல்பியாவின் ஆறாம் சபைக் காலத்திற்கான அனைத்து குறிப்புகளும் சீர்த்திருத்தம்மீது முதன்மையாக கவனம் செலுத்துகிறது என்பது நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. பிரெஞ்சு புரட்சியே இந்தச் சபை காலத்தில் போப்பின் “**ஆயிரத்து இருநூற்று அறுபது நாட்கள்**” முடிவுக்குக் கொண்டு வந்த அடுத்த முக்கிய நிகழ்வு என்றாலும், இது இந்தச் சபை காலத்தின் துவக்கத்தில் அல்லாமல் அதன் முடிவுக்கு அருகாமையில் நிகழ்ந்தது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்!

மேலும்... ஆம், பிரஞ்சு புரட்சி உண்மையில் ஒரு “**பூமியதிர்ச்சி**” என்றாலும், நாம் கீழே காணும்படி அதற்கு இரண்டாம்நிலை கவனமே செலுத்தப்படுகிறது –

**வெளிப்படுத்தல் 11:13**

“**அந்நேரத்திலே பூமி மிகவும் அதிர்ந்தது, உடனே அந்த நகரத்தில் பத்திலொருபங்கு இடிந்து விழுந்தது; மனுஷரில் ஏழாயிரம்பேர் பூமியதிர்ச்சியினால் அழிந்தார்கள்; மீதியானவர்கள் பயமடைந்து பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்தினார்கள்.**”

அப்போதைய **பரிசுத்த உரோம சாம்ராஜ்யத்தின் – "நகரத்தில் பத்திலொருபங்கு"** ஆன பிரான்சில் நிகழ்ந்திட்ட **பிரெஞ்சு புரட்சிப்** பற்றிய தெளிவான குறிப்பாகும்!



(இங்குள்ள "**பத்து**" என்பது **தானியேல் 7:7, 8** – இன் "**நான்காவது மிருகத்தின்**" "**பத்து கொம்புகளைக்**" குறிக்கிறது, இது உரோம பேரரசு மற்றும் அதன் பத்து பிரிவுகளைக் குறிக்கிறது, அதில் "**நகரத்தில் பத்திலொருபங்கு**" "**இடிந்து விழுந்தது**" என்பது பிரான்ஸ் மற்றும் பிரெஞ்சுப் புரட்சியின் சூழ்நிலைகளைக் குறிக்கிறது)

இந்த **வெளிப்படுத்தல் 11** – ஆம் **அதிகாரத்தில் 13 மற்றும் 14 ஆகிய வசனங்கள், 9 – ஆம் அதிகாரத்தில் வசனம் 13** – இல், தன் விளக்கத்தைத் துவக்கும் "**ஆறாம் எக்காளத்தின்**" தொடர்ச்சி/விரிவாக்கம்/நீட்டிப்பாக இருப்பதைக் கவனியுங்கள்.

**இப்படியாக, எப்படி ஆறாம் முத்திரை விளக்கத்திலும் மற்றும் அதன் துவக்கத்திலேயே வந்த "ஒரு மாபெரும் பூமியதிர்ச்சி" ஆனது, ஆறாம் சபை காலப்பகுதியின் முடிவில் நிகழ்ந்திட்ட பிரெஞ்சு புரட்சியைக் குறிக்கிறது என ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்று நாங்கள் ஆச்சரியப்படுகிறோம் ??**

**அதைப் பார்த்தப்பிறகு... இப்போது நாம் தொடரலாம் –**

**வசனம் 12**

**"... சூரியன் கறுப்புக் கம்பளியைப்போலக் கறுத்தது; சந்திரன் இரத்தம்போலாயிற்று..."**

**இவற்றுக்கெல்லாம் என்ன அர்த்தம்?**

தீர்க்கதரிசன வசனத்தின் இந்த அடையாளங்களைப் புரிந்துகொள்ள முயற்சிக்கும் முன், இந்த ஏழு முத்திரைகள் என்பது கீழுள்ள இரண்டின் வளர்ச்சியின் விஷயங்களை விவரிக்கின்றன என்பதை எப்போதும் நம்முடைய மனங்களில் வைத்திருப்போமாக...

**கிறிஸ்துவின் சபை,**

**மற்றும்...**

**அந்திக்கிறிஸ்து சபை...**

**இந்தக் கண்ணோட்டத்தில்தான் நாம் இதைப் பார்க்க வேண்டும்...**

இப்போது நாம் மேலும் ஆராய்வதற்கு முன்பதாக, இந்த அடையாளங்கள் “**கிறிஸ்துவின்**” **சபை மற்றும்** “**அந்திக்கிறிஸ்துவின்**” **சபை** ஆகிய இரண்டிற்கும் பொருந்தும் என்பதால், அவற்றை முதலில் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.

| **கிறிஸ்துவின் சபை**<br>**(மெய்ச் சபை)** | **அந்திக்கிறிஸ்து சபை...**<br>**(கள்ளச் சபை)** |
|---|---|
| **சூரியன்** – இது ஜீவனுள்ள வார்த்தையான (**யோவான் 3:34, எபி. 1: 2, யோவான் 1: 9**) இயேசு கிறிஸ்துவின் மூலமாக பேசப்பட்ட மனிதனுக்கான தெய்வீகத் திட்டமான தேவனிடமிருந்து வந்தச் சுவிசேஷச் செய்தியின் உண்மையான வெளிச்சமாகும். மேலும் பூமியிலுள்ள அனைவருக்கும் ஒளியையும், ஜீவனையும் வழங்குகிற சூரியனைப் போலவே, சுவிசேஷமானது தெய்வீக நிலைப்பாட்டிலிருந்து **சத்தியத்தின் வெளிச்சத்தையும்,** அனைவருக்கும் **ஜீவன் வழங்கும் திட்டத்தையும்** வழங்குகிறது. | **சூரியன்** – இது திருச்சபையின் தலைமைத்துவத்தைக் கோரிய போப்பினுடைய அலுவலின் மூலம் அதிகாரம் கோரும் **போப் அமைப்பின்** தவறான மற்றும் கள்ள செய்தி மற்றும் **போதனைகளாகும். குழந்தை ஞானஸ்நானம், கன்னி மரியாள் வழிபாடு** (Mariolatry), **உலகளாவிய சபைமீதான போப்பின் தலைமைத்துவம், பரிசுத்தவான்கள் மூலம் வணங்குதல் மற்றும் ஜெபப் பரிந்துப்பேசுதல் போன்ற போப் அமைப்பின் பல போதனைகளும் உபதேசங்களும்** இதில் அடங்கும். |

| | |
|---|---|
| **சந்திரன்** – இது வேதவசனங்களின் **பழைய ஏற்பாட்டின்** பகுதியை உருவாக்கும், மோசே மூலம் வெளிப்படுத்தப்பட்ட நியாயப்பிரமாணத்தையும், **தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளையும்** அடையாளப்படுத்துகிறது, அவை தேவனுடைய வார்த்தைகளை குறிப்பதாகயிருந்தாலும், **தெளிவற்ற** தீர்க்கதரிசனப் பாஷை மற்றும் **அடையாளங்களில்** இருந்தன. இவையெல்லாம் மனிதனுக்கான தேவனுடைய நற்செய்தியைப் பற்றியதாக இருந்தன (**வெளிப்படுத்தல் 2: 1, எபி. 1: 1**) ஆம்! பிரகாசமான மற்றும் தெளிவான ஒளியாக அல்லாமல், **தெளிவற்ற வகையில்** – சுவிசேஷத்தின் ஒளியினைப் பிரதிபலிக்கிறது! | **சந்திரன்** – உரோம சபையின் **சமயச் சட்டம்** (CANON LAW), ... மற்றும் அதன் உறுப்பினரைப் பிணைக்கின்ற "**புல்ஸ்** எனப்படும் போப்பின் கட்டளைகள்" மற்றும் "**அரசாணைகள்** / edicts" போன்ற பல்வேறு அறிவிப்புகள்... மேலும் அவை ஒவ்வொன்றிற்கும் வேதாகம அடிப்படையும், தோற்றமும் கோரப்பட்டது. இவற்றில் "**ஏழு சடங்குகள்,**" **திருவழிபாட்டு ஏற்பாடுகள், கேட்டகிசம்** (Catechism)**போன்றவையும்** அடங்கும். |
| **நட்சத்திரங்கள்** – சத்திய வார்த்தையினை எடுத்துச்செல்பவர்கள் மற்றும் **தூதுவர்கள்**..... முக்கியமாக **வெளி. 12:1** – இல் உள்ள "**பன்னிரண்டு நட்சத்திரங்கள்**" குறிக்கும் **பன்னிரு அப்போஸ்தலர்கள்** மற்றும் .... **வெளிப்படுத்தல் 1:16** – இல் வரும் "**ஏழு நட்சத்திரங்கள்**" குறிக்கும் சுவிசேஷ யுக சபையின் ஏழு காலப்பகுதியின் **ஏழு தூதர்களைக்** குறிக்கிறது. | **நட்சத்திரங்கள்** – போப் அமைப்பின் **பல்வேறு ஊழியர்கள் – கண்காணிகள்; பேராயர்கள், கார்டினல்கள் போன்றவர்கள்.** ஆம்! இவர்கள்தான் கள்ள மற்றும் பொய்யான ஒளியின் தூதுவர்கள். இது உச்சி பகுதியில் போப்பையும், கடைசி பகுதியில் **சபை பாதிரியார்களையும்**, **இறையியலாளர்களையும்** கொண்டுள்ள **ஒரு படிநிலை** ஆகும். |

**எந்தச் சபையின் சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் இங்கு குறிப்பிடப்படுகின்றன ??**

**இது உண்மைச் சபையினுடையதா... அல்லது கள்ளச் சபையினுடையதா ?**

"**ஆறாம் முத்திரையின்** துவக்கத்தில் **வசனம்** 12 – இல் "**மாபெரும் பூமியதிர்ச்சி** " என்பது சீர்த்திருத்தமே என்பதை நாம் உணரும்போது பதில் தெளிவாகிறது.

உண்மையில், அடுத்த சில வசனங்களின் அடையாள அர்த்தத்தின் விளக்கமானது, சீர்த்திருத்தமே இந்தப் "**பூமியதிர்ச்சி** " என்று முன்வைக்கப்பட்ட சிந்தனையே சத்தியத்தின் வெளிச்சம் என்பதைத் தெளிவாக நிறுவுவதாய் இருக்கின்றது!

ஆம்! **வசனம் 12 மற்றும் 13** – இல் குறிப்பிடப்பட்டுள்ள "**சூரியன்**" "**சந்திரன்**" மற்றும் "**நட்சத்திரங்கள்**" ஆகியவை கள்ளச் சபையையே குறிக்கின்றன.

**அப்படியானால், இவை எதனை அர்த்தப்படுத்துவதாய் இருக்கின்றன?**

இது இந்தக் கள்ள உரோம சபை மீதான சீர்த்திருத்தத்திலிருந்து வெளிவந்த முடிவுகளை அல்லது விளைவுகளைக் குறிக்கின்றன. இங்கு சுட்டிக்காட்டப்பட்ட வளர்ச்சிகள் **1517 – இல் உடனடியாக நிகழவில்லை** என்பதையும் ... மாறாக **காலம் செல்லச்செல்ல** வெளிப்பட்டது என்பதையும் நாம் உணர வேண்டும்.

இப்போது, பயன்படுத்தப்பட்ட அடையாளங்களைப் புரிந்துகொள்வதன் மூலம் தீர்க்கதரிசனத்தின் பொருள் என்ன என்பதைப் பார்க்கலாம்.

"**சூரியன் கறுப்புக் கம்பளியைப்போலக் கறுத்தது**"

ஆம்! இது சீர்த்திருத்தத்துடன் வந்த போப் அமைப்பு மீதான **விளைவைக்** குறிக்கும், மேலும் **1799 – ஆம் ஆண்டில்** நெப்போலியன் போனபார்ட்டின் கைகளில் **இந்த விஷயம் முடிவடையும்** வரையில் அது தொடரப்பட்டது.

உண்மையில் இது **ஓர் அதிகார அலுவலையுடைய போப் அமைப்பை மாத்திரம் குறிக்கவில்லை, அதன் போதனைகள், உபதேசங்கள்** மற்றும் அது உரிமை கோரிக்கொண்ட சபையின் தலைமை அதிகாரம் ஆகியவற்றையும் குறிக்கும் ... அவ்வதிகாரம் கேள்விக்குள்ளாகி இறுதியாக பலரால் பொய்யானவை என்று கண்டறியப்பட்டது!

"**கறுப்புக் கம்பளியைப்போலக் கறுத்தது**" **என்பதன் அர்த்தம் என்ன?**

மூன்றாம் முத்திரையில் குதிரை "**கறுப்பு**" ஆகக் காணப்படுவது போல, கறுப்பு என்ற அடையாளம் **இருளை** அல்லது **ஒளிக்கு நேர்மாறானதைக்** குறிக்கிறது.

இவ்வாறாக சீர்த்திருத்தத்திற்குப் பிறகு, **லூதர், சார்லஸ் மற்றும் ஜான் வெஸ்லி, ஹூஸ், உல்ரிச் ஸ்விங்லி போன்ற** சீர்த்திருத்தவாதிகள், போப் அமைப்பின் உபதேசங்கள் **வேதாகமப்பூர்வமானதல்ல**, மேலும் அவர்கள் கோரினப்பிரகாரம் அவைகள் தெய்வீகத் தோற்றம் கொண்டவை அல்ல என்பது போன்ற உண்மையை எவ்வாறு வெளிப்படுத்தத் துவங்கினார்கள் என்று நாம்

இவ்வாறு நீண்ட காலமாக வெளிச்சமாக கருதப்பட்ட இந்தப் போதனைகள் மற்றும் உபதேசங்கள் **இருள்** அல்லது "**கறுப்பு**" என்று வெளிப்படுத்தப்பட்டன!

மேலும் கீழே நாம் வாசிக்கும்படி "**கறுப்பு**" என்பதற்குக் **கூடுதலான ஓர் அர்த்தம்** இருப்பதாக காண்கிறோம் –

**சகரியா 6:6**

**"ஒன்றில் பூட்டப்பட்டிருந்த கறுப்புக்குதிரைகள் வடதேசத்துக்குப் புறப்பட்டுப்போயின; வெண்மையான குதிரைகள் அவைகளின் பின்னாலே புறப்பட்டுப்போயின; புள்ளி புள்ளியான குதிரைகள் தென்தேசத்துக்குப் புறப்பட்டுப்போயின."**

நாம் அனைவரும் அறிந்த வண்ணமாக, இங்குள்ள "**கறுப்புக்குதிரைகளின்**" **இரதம்** என்பது சகரியாவின் இந்தத் தரிசனத்தின் "**நான்கு ரதங்களில்**" ஒன்றைக் குறிக்கிறது. இது தங்களது மனித சுபாவத்தைப் பலியாக செலுத்தும் அல்லது **மரணத்திற்குள்ளான உடன்படிக்கை** செய்த "**சிறு மந்தையாகிய**" சபை வகுப்பாரைக் குறிக்கும் ஓர் அடையாளமாகும்.

ஆம்! இங்கே "**கறுப்பு**" என்பது **மரணத்திற்கான** ஓர் அடையாளமாகும். அதேபோல, போப் அமைப்பின் உபதேசங்களுக்கும் "**கறுப்பு**" என்று குறிப்பிடுவது அவைகளுக்கு எந்த **விவிலிய அடிப்படையோ** அல்லது "**ஜீவனோ**" (யோவான் 6:63) இல்லாததால் அவை **ஜீவனற்றவையாக** வெளிப்படுவதைக் குறிக்கிறது.

"**கறுப்பு**" எதைக் குறிக்கிறது என்பதை இப்போது பார்த்தோம், இப்போது அடுத்த விஷயத்தைப் பார்க்கலாம் –

### "கம்பளியைப்போலக்"

"**கம்பளி**" என்கிற வார்த்தைக்கு "**சக்கோஸ் / Sakkos**" #4526 என்பது கிரேக்க வார்த்தையாகும் – **இது 11 – ஆம் அதிகாரத்தின் 3 – ஆவது வசனத்தில்** மீண்டும் காணப்படுகிறது, அங்கு "**இரண்டு சாட்சிகள்**" பற்றிய குறிப்பு உள்ளது, அது ஒரு **தாழ்மையான நிலைமைக்கு** அடையாளமாகும் என்பதை நாம் அறிவோம்.



உண்மையில், எவ்வாறு பழைய ஏற்பாட்டில், "**இரட்டு / sackcloth**" என்பது சொல்லர்த்தமாக, மனந்திரும்புதலைக் காண்பிக்கும் விதத்தில் தன்னைத் தாழ்த்துவதைக் காட்டுவதற்கான செயல்முறையின் ஒரு பகுதியாக இருந்தது என்பதாகக் காண்கிறோம்!

- **I இராஜாக்கள் 21:27** – ("**தன் சரீரத்தின்மேல் இரட்டைப்போர்த்துக்கொண்டதன்** மூலம் ஆகாப் இராஜா தான் மனந்திரும்பினதைக் காண்பித்தார்)

- **II இராஜாக்கள் 6:30** – (யோராம் இராஜா தன்னுடைய ஜனத்தின் துயரத்தைப் பார்த்து, "**தன் சரீரத்தின்மேல் இரட்டு உடுத்தி**" மனந்திரும்புதலைக் காண்பித்தார்)

- **II இராஜாக்கள் 19:1** – ("**இரட்டு உடுத்திக்கொண்டு, கர்த்தருடைய ஆலயத்தில் பிரவேசித்ததன்**" மூலம் எசேக்கியா இராஜா தன்னை தேவனுக்கு முன்பாக தாழ்த்தினார்)

- **I நாளாகமம் 21:16** – (இராஜாவாகிய தாவீதும், இஸ்ரயேலர்களின் மூப்பர்களும் "**இரட்டுப் போர்த்துக்கொண்டு முகங்குப்புற விழுந்ததன்**" மூலம் தங்களைத் தேவனுக்கு முன்பாக தாழ்த்தினார்கள்)

எனவே, "**இரட்டு / Sakkos**" என்பது தன்னைத்தான் தாழ்த்திக்கொள்வதற்கான ஓர் அடையாளமாக இருந்தது என்பது இந்நேரத்திற்கு மிகத் தெளிவாகியிருக்கும்.

**இப்போது, இறுதியாக நாம் பின்வரும் வார்த்தையைக் கவனிக்கிறோம் –**

➡ "**சூரியன் (கறுப்பு) ஆனது / become....**"

இப்போது இந்த வார்த்தை "become / **ஆனது**" என்பது **ஸ்ட்ராங்க்ஸ் கிரேக்கம் #1096** - "ginomai / **கெனோமாய்**" ஆகும், அதாவது "**நிஜத்திற்கு வருதல்** / to come into existence" அல்லது "**நடைபெறுதல்** / to come" என்பது அர்த்தமாகும். இங்கே மறைமுகமாக கூறப்படுவது என்னவென்றால், இந்த வளர்ச்சி உடனடியாகவோ அல்லது குறுகிய காலத்திலோ **நடக்கவில்லை** ... மாறாக, **மார்ட்டின் லூதர்** துவக்கி, சீர்த்திருத்தவாதிகளால் தேவனுடைய **வார்த்தையாகிய வேதாகமத்திற்கான** சாட்சியானது

படிப்படியாகவும் இறுதியாகவும் இந்த வளர்ச்சிக்கு வழிவகுத்த, நீண்ட காலத்தின் **விளைவாக** ஏற்பட்டது.

ஆகவே இது, சீர்த்திருத்தவாதிகளின் **சீர்த்திருத்தங்களும்** மற்றும் செய்திகளும் போப் அமைப்பின் போதனைகள் மற்றும் உபதேசங்களின் **வேதாகமப்பூர்வமற்றத்தன்மையை** எவ்வாறு படிப்படியாகவும் பிற்காலத்திலும் **(1517 முதல் 1799 வரை)** அம்பலப்படுத்தின என்பதைக் குறிக்கும் ... இது மக்கள் மீது அவ்வமைப்பு **ஒருகாலத்தில் வைத்திருந்த வலுவான பிடிப்பைத் தளர்த்தியது** ...



மேலும் **நெப்போலியன் போனபார்டையும்** கூட **போப் பையஸ் VI** – ஐ **(தானியேல் 11:37)** அவமானப்படுத்த வழிவகுத்தது – இவ்வாறாக அது **1799** – இல் போப் அதிகாரத்தின் முடிவுக்குவர வழிவகுத்தது.

**ஆம்! போப் அமைப்பினுடைய செல்வாக்கின் மாபெரும் தாழ்ச்சி!**

பிறகு நாம் வாசிக்கிறோம் –

**"சந்திரன் இரத்தம்போலாயிற்று"**

இங்கேயும் கள்ளச் சபையின் "**சந்திரன்**" தான் குறிக்கப்பட்டுள்ளது அதாவது **சமயச் சட்டம்** (CANON LAW) மற்றும் தங்களது உறுப்பினரையே ஆணைக்கடங்கி கட்டுப்படச் செய்த உரோம சபையின் பல்வேறு அறிவிப்புகள் தான் குறிக்கப்பட்டுள்ளது.

**அப்படியானால் எப்படி "சந்திரன் இரத்தம்போலாயிற்று"** ?

இவை அடையாளங்கள் மாத்திரமே, சொல்லர்த்தமாக எடுக்கக்கூடாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்!

ஆகவே "**இரத்தம்**" என்பது நாம் கீழே வாசிக்கும்படி "**ஜீவனுக்கு**" அடையாளமாகும்

**லேவியராகமம் 17:11**

"**மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது:**"

**பாவநிவாரணநாளின்போது** மகா பரிசுத்த ஸ்தலத்திலிருந்த கிருபாசனத்தின் மேல் பிரதான ஆசாரியரால் இரத்தம் தெளிக்கப்பட்டது நினைவிருக்கிறதா பிரியமானவர்களே?

ஆம்! ஏனென்றால் அது தெய்வீக நீதிக்குத் தேவைப்பட்டது... "**ஜீவனுக்கு ஜீவன்**" **(யாத். 21:23).**

ஆம்! தெளிக்கப்பட்ட இரத்தம் ஜீவனுக்கான தேவையினைத் திருப்திப்படுத்தியது, ஏனெனில் "**இரத்தம்**" என்பது ஜீவனுக்கான ஓர் அடையாளமாகும்.

**இப்போது எப்படி போப் அமைப்பின் சமயச் சட்டமானது ஜீவனாக "மாறியது"?**

எவ்வாறெனில், உரோம சபை தனது பல்வேறு அறிவிப்புகளைப் பயன்படுத்துவதன் மூலம், வேதாகம வசனங்களைப் பயன்படுத்தி போப் அமைப்பின் **தப்பறைகளை அம்பலப்படுத்தவும், வெளிப்படுத்தவும்** செய்த சீர்த்திருத்தவாதிகளின் தாக்குதலிலிருந்து தனது சொந்த இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள முயன்றது.

ஆகவே உரோம சபையின் உறுப்பினரிடமிருந்து சிலரை சபைநீக்கம் செய்வதற்காக "**புல்ஸ் எனப்படும் போப்பின் கட்டளைகள்**" வழங்கப்பட்டன, உதாரணமாக, மார்டின் லூதருக்கு நடந்ததுப் போல... மற்றவர்கள் **வேதப்புரட்டர்களாக (heretics)** கருதப்பட்டனர்... அதே நேரத்தில் ஐரோப்பாவின் மன்னர்கள் போப் அமைப்பு மற்றும் அதன் போதனைகளை எதிர்க்கும் அனைவரையும் **வேரறுக்க (அழிக்க)** வலியுறுத்தப்பட்டனர்.

**"எடிக்ட்ஸ்(edicts)" – ன் பிரகடனம்/ அரசாணை என்று அழைக்கப்படும் போப் அமைப்பிடமிருந்து உத்தரவுகள் வழங்கப்பட்டன**

("**புல்ஸ் எனப்படும் போப்பின் கட்டளைகள்**" என்பது சமயச் சட்டத்தின் **(CANON LAW)** ஆவணங்களாகும், இதில் தனிநபர்களுக்கு எதிரான கண்டனம்/தீர்ப்பு உத்தரவுகள் இருந்தன. மறுபுறம் "**ஆணைகள் /(edicts)**"

என்பது பலரைக் கொண்ட குழுக்களுக்கு எதிரானவையாகும்!)

கத்தோலிக்கர்கள் கட்டளைகளினால் **கட்டுப்பட்டிருந்தனர்**, இது அவர்களின் தெய்வீகக் கடமை என்று அறிவிக்கப்பட்டது, மேலும் அதற்காக அவர்கள் தேவனிடமிருந்து வெகுமதியைப் பெறுவார்கள் என்றும் அவர்களுக்குச் சொல்லப்பட்டது!

ஆகவே **1572** – ஆம் ஆண்டில், புனித பர்த்தலோமியுவின் தினமான ஆகஸ்ட் 23 – ஆம் தேதி அன்று பிரெஞ்சு கத்தோலிக்கர்கள், (**ஹுகினோஸ் -** (huguenots என்றழைக்கப்பட்ட) **70,000** புராட்டஸ்டன்ஸ்களைக் கொன்றார்கள். இது **புனித பர்த்தலோமியு தினப் படுகொலை** என்று அழைக்கப்பட்டது. தெருக்களில் இரத்தம் பாய்ந்தது, அதே சமயம் **போப் கிரிகோரி XIII** திருப்பலி (MASS) கொண்டாடி ஜனங்களை வாழ்த்திக்கொண்டிருந்தார்.



கேன்டர்பரியின் பேராயர் **தாமஸ் கிரான்மர்** மற்றும் **வில்லியம் டின்டேல்** போன்ற பல முக்கிய எதிர்ப்பாளர்கள் / புராட்டஸ்டன்ட்டுகள் மற்றும் சீர்த்திருத்தவாதிகள் **கம்பத்தில் கட்டி வைக்கப்பட்டு எரிக்கப்பட்டனர்.**

**1614** – இல், அயர்லாந்தில் (Ireland), **30,000** புராட்டஸ்டன்ஸ்களை ஐரிஷ் கத்தோலிக்கர்கள் படுகொலை செய்தனர்.

ஆம்! போப் அமைப்பு தனது **சமயச் சட்டத்தைப்** பயன்படுத்தி அதன் உறுப்பினரைத் தூண்டிவிட்டு, **தனது சொந்த ஜீவனைத் தக்க வைத்துக் கொள்வதற்காக** அதன் பயங்கரமான தப்பறைகளை அம்பலப்படுத்தியவர்களின் இரத்தத்தைச் சிந்தச்செய்தது!

ஆம்! நாம் கீழே வாசிக்கும்படி அது அதன் சொந்த ஜீவனைச் சார்ந்த விஷயமாக இருந்தது –

**வெளிப்படுத்தல் 13:14**

**"...பட்டயத்தினாலே காயப்பட்டுப் பிழைத்த மிருகத்திற்கு ஒரு சொரூபம் பண்ணவேண்டுமென்று பூமியின் குடிகளுக்குச் சொல்லிற்று."**

**ஆம்! அதைக் கவனித்தீர்களா?**

இது சீர்த்திருத்தத்திலும், அதற்குப் பிறகும் இருந்த தேவனுடைய வார்த்தையின் "**பட்டயம்**" ஆகும்.

இவ்வாறாக மெய்யாகவே போப் அமைப்பின் "**சந்திரன் இரத்தம்போலாயிற்று**"!

இப்போது நாம் வாசிக்கலாம் –

**வசனம்–13**

**"அத்திமரமானது பெருங்காற்றினால் அசைக்கப்படும்போது, அதின் காய்கள் உதிருகிறதுபோல, வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது."**

**இவற்றுக்கெல்லாம் என்ன அர்த்தம்?**

முதலாவதாக, இங்கே பயன்படுத்தப்படுவது **அடையாளப் பாஷை** என்பதை எப்போதும் நினைவில் கொள்வோமாக.

இரண்டாவதாக, இங்கேயுள்ள "**நட்சத்திரங்கள்,**" நாம் ஏற்கனவே பார்த்த அதே "**சூரியன்**" மற்றும் "**சந்திரன்**" கொண்ட வானங்களின், அதாவது, **கள்ள "உரோம"** சபையின் ஒரு பகுதியாகும்.

- **இது இங்கே குறிப்பிடப்பட்டிருக்கும் கள்ளச்சபைக்கான இறுதியான சான்றாகவும் உள்ளது, ஏனென்றால் "சூரியன் மற்றும் சந்திரன்" மெய்ச் சபையினுடையதாகவும், "நட்சத்திரங்கள்" கள்ளச் சபையினுடையதாகவும் இருக்க முடியாது அல்லது அதற்கு எதிர்மாறாகவும் இருக்க முடியாது!**
- **அவையனைத்தும் ஒன்றினுடையதாக இருக்க வேண்டும்!**

இப்போது இந்த "**நட்சத்திரங்கள்**" போப் அமைப்பின் ஒளி ஏந்திகள் அல்லது அதன் **ஊழியர்களான** – பாதிரியார்கள், பேராயர்கள், ஆயர்கள், கார்டினல்கள் போன்றவர்களுக்கான குறிப்பாகும்.

சீர்த்திருத்தத்திற்குப் பிறகு அவர்களுக்கு என்ன பாதிப்பு ஏற்பட்டது என்ற விளக்கத்தை இப்போது வாசிக்கலாம் –

**"வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது"**

**இங்கே முதற்கண் கவனம் "விழுந்தது" என்ற வார்த்தைக்கு உள்ளது!**

ஆம்! சீர்த்திருத்தம் மற்றும் சீர்த்திருத்தவாதிகளால் தேவனுடைய வார்த்தை அறிவிக்கப்பட்டதின் விளைவாகவும், போப்புகள், கார்டினல்கள், பேராயர்கள் போன்றவர்களுக்கு **எந்த வேதாகமப்பூர்வ அதிகாரமுமில்லை** என்ற லூதரின் வெளிப்படையான கூற்றின் விளைவாக, பரலோக அல்லது ஆவிக்குரிய மத செல்வாக்கு மங்கத் துவங்கியது, அதிகதிகமாக அவர்கள் சாதாரண ஜனங்களால் **வெறும் மனிதர்களாகவே** பார்க்கப்பட்டனர்…!

**ஆம்! "வானத்தில்" இருந்து "பூமியிலே விழுந்தது"!**

பிறகு நாம் வாசிக்கிறோம் –

**"அத்திமரமானது பெருங்காற்றினால் அசைக்கப்படும்போது, அதின் காய்கள் உதிருகிறதுபோல"**

இங்கே "**அத்தி மரத்தின்**" அடையாளம் **உருவகரீதியில்** பயன்படுத்தப்படுகிறது. வேதவாக்கியங்களில் உள்ள அத்திமரம் தேவனுடைய **மாம்சீக வீடாகிய (மத்தேயு 24:32 / எரேமியா 24)** இஸ்ரயேல் தேசத்தைக் குறிக்கிறது என்பது நன்கறிப்பட்டதே.

**ஆகவே, சுவிசேஷ யுகத்தின் நிகழ்வுகள் யூத யுகத்தின் நிகழ்வுகளுடன் ஒப்பிடப்படுகின்றன என்பதுபோல் இங்கே தோன்றும்.**

ஆம்! இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இஸ்ரயேலின் "**மாம்சீக**" வீட்டின்மீது வந்த **நியாயத்தீர்ப்புகள்**, இங்கு இஸ்ரயேலின் "**ஆவிக்குரிய**" வீடு மற்றும் அதன் மீது வரும் நியாயத்தீர்ப்புகள் குறித்ததாயும் குறிப்பிடப்படுகின்றன.

"**பெருங்காற்று**" என்பது வரவிருக்கும் உபத்திரவங்களுக்கான ஓர் அடையாளமாகும், அப்படியாக இந்த விஷயத்தில் சீர்த்திருத்தம் போப் அமைப்புக்கு எப்படி மாபெரும் உபத்திரவமாக இருந்ததைக் குறிக்கிறது.

**அப்படியானால் "அதின் காய்கள் உதிருகிறதுபோல" என்னும் குறிப்பானது எதைக் குறிக்கக்கூடும்?**

இங்கே விளம்பப்படும் கருத்தினைக் கற்றுக்கொள்ள ஓர் உண்மையான அத்தி மரத்தின் சில **உண்மைகள்** மற்றும் **அம்சங்களைப்** பற்றிய புரிதல் / அறிவு நமக்கு மிகவும் பயனுள்ளதாகவும் உதவியாகவும் இருக்கும்!!



**அத்தி மரங்களைப் பொறுத்தவரை** அத்திப்பழ **அறுவடைக்கு மூன்று நிலைகள்** இருப்பதாகக் காண்கிறோம் –

**#1. முதிராத அத்திப்பழங்கள்** (UNTIMELY FIGS) – மார்ச் மாத இறுதியில் தோன்றும் சின்னஞ்சிறிய அத்திப்பழங்கள் முதிர்ச்சியடையாதவையாக இருக்கும், மேலும் அந்த நேரத்தில் அடிக்கும் பலத்த காற்றினால் தரையில் விழுந்துவிடும். இவை எவ்வகையிலும் அத்திப்பழங்களாக முதிர்ச்சியடைந்திருக்காது. இவ்வாறு அவை – "**முதிராத**"வை என்று சொல்லப்படுகின்றன.

**#2. ஆரம்ப அறுவடை** (EARLY HARVEST) – தரையில் விழாத இந்த முதிராத அத்திப்பழங்கள் சில **ஜுன் மாத வாக்கில் முழுமையான பழுத்த நிலைக்கு** வரும். இந்த அத்திப்பழங்களின் அறுவடை "ஆரம்ப அத்திப்பழங்கள்" என்று அழைக்கப்படுகிறது. ஆனால் இது இன்னும் அத்தி மரத்தின் உண்மையான மற்றும் இறுதி அறுவடை அல்ல.

**#3. இரண்டாவது அல்லது பொது அறுவடை** (THE SECOND OR GENERAL HARVEST) – **ஜுன் மாதத்தில்**, உயர்ந்த கிளைகளில் பூக்கள் தோன்றும் … பின்னர் அவை **ஆகஸ்ட் மாதத்தில் பழுத்து**, அத்தி மரத்தின் இறுதி அறுவடைக்குத் தயாராக இருக்கும்.

ஆம்! "**அத்திமரம்**" அல்லது மாம்சீக இஸ்ரயேல் நிழலாகக் காண்பிக்கிற "**ஆவிக்குரிய**" இஸ்ரயேல் மீது கர்த்தரின் நியாயத்தீர்ப்புகள் எந்த விதத்தில் வரும் என்று அத்தி மரத்தில் ஒரு பாடத்தை விட்டுச்செல்லுவதற்காக, கர்த்தர் இந்த விஷயத்தை இங்கே ஏற்பாடு செய்திருப்பதாகத் தோன்றும்.

**எப்படி என்று இப்போது பார்க்கலாம் –**

கி.மு. 606 – இல் ஏற்பட்ட கடைசி இராஜாவாகிய சிதேக்கியாவின் வீழ்ச்சியுடனும், பாபிலோனில் 70 ஆண்டுகளளவும் சிறைப்படுத்தப்பட்ட நிலைக்கு வித்திட்ட காரியமான ஆலயமும் எருசலேமும் அழிக்கப்படுதலுடனும், இஸ்ரயேலின் மீது வந்த இறுதி நியாயத்தீர்ப்பின் **ஒரு நிழலினை** அது கொண்டிருந்தது.

இவையனைத்தும் மேசியாவை நிராகரிக்கும்போது **இரண்டு படிநிலைகளில்** தேசத்தின்மீது வரவிருந்த **இறுதி நியாயத்தீர்ப்புகளை நிழலாகக் காண்பித்தன.**

**கி.பி. 33** – இல் – தெய்வீக நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளை, **மத்தேயு 23:38** – "**இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்**" என்று இயேசு அறிவித்தார் ... ஆனால் இது **இறுதி அழிவோ** அல்லது **பின்னர் வந்த, ஆம்! மிகவும் பிற்பாடு வந்த,** தேவனுடைய நியாயத்தீர்ப்புகளின் நிறைவேற்றமோ அல்ல...!

**கி.பி. 69 – 70** – இல், **தானியேல் 9:26** – இல் வருகிற தீர்க்கத்தரிசனத்தின் நிறைவேற்றமாக, உரோம தளபதியான தீத்துவின் கீழ் இஸ்ரயேல் முற்றுகையிடப்பட்டு, "**நகரம்**" மற்றும் "**ஆலயம்**" ("Sanctuary / **பரிசுத்த ஸ்தலம்**" – KJV) இரண்டும், அழிக்கப்பட்டு, ஜனங்கள் அனைவரும் உலகம் முழுவதும் சிதறடிக்கப்பட்டனர் ... இவ்வாறு இஸ்ரயேல் தேசம் பாழாய்க்கிடந்தது (**சகரியா 7:14**).



இவையே இஸ்ரயேல் (அ) “**அத்திமரம்**” மீதான **இறுதி நியாயத்தீர்ப்புகளாக இருந்தன.**

இவையனைத்தும் **கி.மு. 606 முதல் கி.மு. 536 வரையிலான** பாபிலோனிய சிறையிருப்பின் அந்த **70 ஆண்டுகளில், எசேக்கியேல் 37 – ஆம் அதிகாரத்தில்** எசேக்கியேலுக்குக் காட்டப்பட்ட “**உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கு**” தரிசனத்தில் நிழலாகக் காண்பிக்கப்பட்டுள்ளன.

“**அத்திமரம்**” அல்லது மாம்சீக இஸ்ரயேல்மீது வந்த அனைத்தும், **சுவிசேஷ யுகத்தின்போது ஆவிக்குரிய இஸ்ரயேலின்மீது என்னென்ன வரும்** என்பதை நிழலாகக் காண்பிக்கின்றன.

**அதனால்தான் [வெளிப்படுத்தல் 6 – வசனம் 13 – இல் உள்ள] “போல” என்ற வார்த்தையை நாம் கவனிக்கிறோம்**

ஆவிக்குரிய இஸ்ரயேலின் அறுவடைக்கு **தொடர்புடைய** “**அத்தி மரத்தின்**” மூன்று நிலைகளின் **நிஜத்தினை / பொருளினை** (Antiypes) இப்போது பார்க்கலாம்.

முதலாவதாக, அறுவடை என்பது **பழங்களைச்** சேகரிக்கும் காலமாக மட்டுமல்ல, கீழே வாசிக்கும்படி **கழிவுப் பழங்களை அழிப்பதற்கான** காலமாகவும் இருப்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் –

**மத்தேயு 3:12**

“**தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான்.**”

இங்கே, அறுவடை காலத்தின் **அந்த இரண்டு கிரியைகளும் யூத யுகத்தைக்** குறிக்கிறதைக் கவனியுங்கள்.

மீண்டும் நாம் வாசிக்கிறோம் –

**மத்தேயு 13:30**

“**அறுப்புக்காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி: முதலாவது களைகளைப்பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்கு கட்டுகளாகக் கட்டுங்கள்;
கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்துவையுங்கள் என்பேன் என்று சொன்னான் என்றார்.**”

இங்கேயும் சுவிசேஷ யுக அறுவடையின் முடிவில் நிகழும் **அதே இரண்டு கிரியைகள்** காணப்படுகின்றன.

ஆகவே, இஸ்ரயேலின் ஆவிக்குரிய வீட்டின்மீதான நியாயத்தீர்ப்புகளைப் பார்க்கும்போது, அந்த **அதே மூன்று நிலைகளை நாம் காண்கிறோம்** –

**1517 – இல் சீர்த்திருத்தம் துவக்கி, 1789 – இல்** பிரெஞ்சு புரட்சி வரையும் மற்றும் 1799 – இல் போப் அமைப்பின் முழுமையான வீழ்ச்சியுடன் முடிவடைந்த காரியமானது, யுகத்தின் முடிவில் அந்த அமைப்பின் மீது வரவிருக்கும் இறுதி நியாயத்தீர்ப்புகளுக்கான ஒரு **நிழலாக** இருந்தன!

இந்த நியாயத்தீர்ப்புகள் **முதிராக்காலத்தில்** நடந்தது, அதில் “**யேசபேல்**” அமைப்பு (**வெளி. 2:20, 21**) தாய் மற்றும் “**குமாரத்திகளுடன்**” ஒரு “**மகா பாபிலோனாக**” – (வெளி. 17:5) இன்னும் மாறவேண்டியிருந்தது.

ஆம்! அந்த **இறுதி நியாயத்தீர்ப்பும்** கூட **இரண்டு நிலைகளில்** வருகின்றன

**கி.பி. 1878** – இல் – திரும்பி வந்த இராஜாவும் “**மணவாட்டியும்**” பின்வரும் தெய்வீக நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளை அறிவித்தபோது

**வெளிப்படுத்தல் 18:2**

“**அவன் பலத்த சத்தமிட்டு: மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது! அது பேய்களுடைய குடியிருப்பும், அசுத்த ஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று.**”

ஆனால் இது இறுதி நியாயத்தீர்ப்புகளோ அல்லது தேவனுடைய நியாயத்தீர்ப்புகளின் நிறைவேற்றமோ அல்ல. இது சபையின் நிறைவடைதலுக்காகவும், தேவனுடைய கோபத்தினுடைய “**ஏழாம் கலசம்**” **ஊற்றப்படுவதற்காகவும் காத்திருக்கிறது.** இதுபற்றி நாம் பின்வருமாறு வாசிக்கிறோம்

**வெளிப்படுத்தல் 16:19**

“**அப்பொழுது மகா நகரம் மூன்று பங்காகப் பிரிக்கப்பட்டது, புறஜாதிகளுடைய பட்டணங்கள் விழுந்தன. மகா பாபிலோனுக்கு தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரத்தைக் கொடுக்கும்படி அது அவருக்கு முன்பாக நினைப்பூட்டப்பட்டது.**”

**ஆம்! இவையெல்லாம் மிகவும் தெளிவாக உள்ளது!**

இவ்வாறாக பார்த்திட்ட, **ஆய்வின் கீழுள்ள வேத வசனத்தின்** குறிப்பானது **வெளிப்படுத்தல் 6:13 - “அத்திமரமானது பெருங்காற்றினால் அசைக்கப்படும்போது, அதின் காய்கள் உதிருகிறதுபோல, வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது.”**

...இப்போது மிகவும் தெளிவாக உள்ளது, இது **பிரஞ்சு புரட்சியின்** கொடூரமான அனுபவங்களுக்கான **ஒரு குறிப்பாகும்**; இங்கே அது “**பெருங்காற்று**” – ஆல் தெளிவாக அடையாளப்படுத்தப்படுகிறது! மெய்யாகவே போப் அமைப்பின் “**நட்சத்திரங்கள்**” ஒரு **மாபெரும் பயங்கரமான நியாயத்தீர்ப்பு அனுபவத்தைக்** கொண்டிருந்தன, இது “**வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது**” என்பதில் பொருத்தமாக விவரிக்கப்பட்டுள்ளது.

ஆனால் சபையின் கடைசிக் காலக்கட்டத்திற்கும், யுகத்தின் முடிவிற்கும் காத்திருந்த இறுதி நியாயத்தீர்ப்புகள் **இன்னும் வராததால்,** அது உண்மையில் “**முதிராத**” தாக இருந்தது!

**இவ்வாறு கீழ்க்காணும் உருவகத்தின் அழகிய அர்த்தத்தைக் கண்டோம் –**
**“அத்திமரமானது..., அதின் காய்கள் உதிருகிறதுபோல”**

இப்போது நாம் பின்வரும் வசனத்திற்கு வரலாம் –

**வசனம்-14**

**“வானமும் சுருட்டப்பட்ட புஸ்தகம்போலாகி விலகிப்போயிற்று; மலைகள் தீவுகள் யாவும் தங்கள் இடங்களைவிட்டு அகன்றுபோயின.”**

**இவற்றுக்கெல்லாம் என்ன அர்த்தம்?**

மேலும் எந்த “**வானம்**” இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது?

இது நாம் படித்த “**சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள்**” கொண்ட அதே “**வானம்**” பற்றிய குறிப்பாகும்.

ஆம்! **பெயர்** சபையின் “**வானம்**”

**இது சீர்த்திருத்தத்திற்குப் பிறகும் மற்றும் பிரெஞ்சு புரட்சிக்குப் பிறகும் நிகழ்ந்த வளர்ச்சியைக் குறிக்கிறது.**

ஆம்! 1260 "**நாட்கள்**" அல்லது **கி.பி. 539 – 1799** வரையிலான 1260 ஆண்டுக்கால போப் அமைப்பின் அனுமதிக்கப்பட்ட அதிகாரத்திற்கான காலத்தின் **முடிவு.**

மேலும் பரிசுத்த உரோம சாம்ராஜ்யத்தை உருவாக்குவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம் **கி.பி. 799 – இல் துவங்கி 1799 – இல் முடிவடைந்த** போப் அமைப்பின் ஆயிர வருட அதிகாரத்தின் முடிவு.

பிரான்சின் நெப்போலியன் போனபார்ட் போப்பை சிறையில் அடைத்து, போப் அமைப்பின் தேசங்களை / அரசாங்கங்களைப் பறிமுதல் செய்து, போப் அமைப்பின் அதிகாரத்தை வீழ்த்தியபோது இது நடந்தது.

ஆம்! "**வானமும் … புஸ்தகம்போலாகி விலகிப்போயிற்று**".

**ஏன் "ஒரு புஸ்தக" த்துடன் ஒப்பீடு** செய்யப்படுகிறது? என்று நாங்கள் ஆச்சரியப்படுகிறோம்!

இது நடந்த **ஆண்டையும்**, மற்றும் அதன் **விசேஷித்த அர்த்தத்தையும்** நாம் உணரும்போது இந்த விஷயத்தை நம்மால் புரிந்துகொள்ள முடியும்!

**ஆம்! 1799 – ஆம் ஆண்டு வேதாகமப்பூர்வமாக அறியப்பட்ட "முடிவுகாலம்" (தானி. 12:4,9) என்னும் ஒரு காலப்பகுதியைத் துவக்கியது.**
**இது 1799 துவக்கி சுவிசேஷ யுகத்தின் இறுதி வரை மற்றும் இஸ்ரயேலில் இராஜ்யத்தின் கண்ணுக்குத் தெரிகின்றப் பாகம் நிறுவப்படுதல் வரையிலான காலமாகும்.**

இவ்வாறாக, 1799 – இல் என்ன நிகழ்ந்ததோ அது, அந்த வருஷத்தில் நடந்ததுபோல வானத்தின் வல்லமை மாத்திரம் அகற்றப்படாமல், முழு "**வானமும்**" நிரந்தரமாக அகற்றப்படவிருக்கிற "**முடிவுகாலத்தின்**" இறுதியில் என்ன நடக்கும் என்பதை மாத்திரம் நிழலாகக் காண்பித்தது.

இதுகுறித்து மிகவும் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ள பின்வரும் வசனத்தில் நாம் வாசிக்கிறோம் –

**ஏசாயா 34:4**

"**வானத்தின் சர்வசேனையும் கரைந்து, வானங்கள் புஸ்தகச்சுருளைப்போல்**

**சுருட்டப்பட்டு, அவைகளின் சர்வசேனையும் திராட்சச்செடியின் இலைகள் உதிருகிறதுபோலவும், அத்திமரத்தின் காய்கள் உதிருகிறதுபோலவும் உதிர்ந்து விழும்.”**



ஆகவே, “**புஸ்தகச்சுருள்**” எனக் காட்டப்படும் இந்த “**வானத்தின்**” கலவை இரண்டு எதிர் முனைகளைக் கொண்டுள்ளது, ஒரு “**சுருள்**” திறக்கப்படும்போது உள்ளது போல, இது கத்தோலிக்கம் மற்றும் புராட்டஸ்டன்டிசத்தின் துவக்க நிலையைக் குறிக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்! அதாவது ஒருவருக்கொருவர் **எதிர்ப்பு மற்றும் தூரமாக** இருக்கும் நிலையைக் குறிக்கிறது.

**ஆனால், இந்தப் “புஸ்தகச்சுருள்” இறுதியாக இறுதி நீக்குதலுக்காக “சுருட்டப்படும்” என்பதால், இரண்டு எதிரெதிர் முனைகளும் படிப்படியாக நெருங்கி வரத் துவங்கும்.**

இது, **கத்தோலிக்கம்** மற்றும் **புராட்டஸ்டன்டிசம்** ஆகிய இரண்டும் **ஐக்கியம்** கொள்ள / **ஒன்றுபட** முயற்சிகளை மேற்கொள்ளுகிற, அதே நேரத்தில் அவற்றின் தனித்துவமான அடையாளங்களைப் பராமரித்துக்கொள்ளுகிற சபையின் லவோதிக்கேயா காலக்கட்டத்தின் **தற்போதைய** நிலையை அடையாளப்படுத்துகிறது.

(ஏன் தெய்வீக எழுத்தானது, அடையாளமானது... ஒரு “**புஸ்தகச்சுருள்**” இரண்டு முனைகள்... ஒன்று திறக்கப்படும் நிலையிலும்... மற்றொன்று மூடும் நிலையிலும் குறிப்பிடப்படுகிறது என்பதற்கான தெளிவான காரணம்.)

ஆம்! கீழேயுள்ள தீர்க்கதரிசனத்தில் நாம் மிகத் தெளிவாகப் வாசிக்கும்வண்ணமாக அவை **இறுதியாக அழிக்கப்படும் போது அவைகள் இரண்டும் ஒருமிக்க இருக்கும்** –

**வெளிப்படுத்தல் 19:20**

**“அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது; மிருகத்தின் முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும் அதின் சொரூபத்தை வணங்கினவர்களையும்**

**மோசம்போக்கின கள்ளத்தீர்க்கதரிசியுங்கூடப் பிடிக்கப்பட்டான்; இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள்.**”

இவ்வாறாக ஒரு “**புஸ்தகச்சுருள்**” உடன் ஒப்பிடப்படுவது, பிலதெல்பியா என்னும் ஆறாம் சபை காலத்தின் பார்வையில் இங்கே இருக்கும் **ஒரு தீர்க்கதரிசன அறிக்கையுமாகும்**… இது **லவோதிக்கேயாவின் முடிவில்** பின்னர் நிகழும் ஒன்றைக் காட்டுகிறது!

ஆம்! 1799 – இல் “**வானங்கள்**” நிழலாக நீக்கப்பட்டது … காலப்போக்கில் மிகவும் பின்னாட்களில் நிகழவிருக்கும் நிஜமான அகற்றத்தைச் சுட்டிக்காட்டுகிறது!

பின்னர் நாம் வாசிக்கிறோம் –

“**மலைகள் தீவுகள் யாவும் தங்கள் இடங்களைவிட்டு அகன்றுபோயின**”

**இதன் அர்த்தம் என்ன?**

இது சுமார் 1799 துவக்கி இருந்து வருகிற அதே காலகட்டத்தைக் குறிக்கிறது.

நாம் அறிந்தவாறு “**மலை**” என்பது இராஜ்யங்களுக்கான அடையாளமாகும்… “**தீவு**” என்பது **ஜனநாயகங்களின்(democracies)** ஓர் அடையாளமாகும், அதிலுள்ள **தண்ணீர்(கள்) என்பது மக்களைச் சித்தரிக்கிறது** (வெளிப்படுத்தல் 17:15) … **தண்ணீர்கள் தீவின் நிலப்பரப்பைச் சுற்றியும் இருக்கும்,** இது பின்வரும் ஜனநாயகக் கருத்தை சரியாகச் சித்தரிக்கிறது…

“**மக்களுடைய, மக்களால் மற்றும் மக்களுக்காக**”.

இது 1799 – இல் போப் அமைப்பின் வீழ்ச்சி மற்றும் பரிசுத்த உரோம சாம்ராஜ்யத்தின் முடிவிற்குப் பிறகாக எப்படி, “**மலைகள்**” (அ) இராஜ்யங்கள் அல்லது “**தீவுகள்**” (அ) ஜனநாயகங்கள் என்று இருக்கும் தற்போதுள்ள அனைத்து நாடுகளையும் பாதித்த ஒரு மாற்றம் ஏற்பட்டது என்பதற்கான குறிப்பாகும் …

**இதன் அர்த்தம் என்ன?**

**இது (தானியேல் 2 – ஆம் அதிகாரத்தின் “சிலை”யினுடைய) “பத்து கால்விரல்கள்”– இன் எழுச்சியாக இருந்தது!**

ஆம்! ஐரோப்பாவின் பத்து இராஜ்யங்களும், கிறிஸ்தவ இராஜ்யங்கள்



என்ற போர்வையில் உலக நாடுகள் அனைத்திலும் குடியேறத் துவங்கின. (பத்து கால்விரல்களும்... "**பாதிகுயவனின் களிமண்ணும், பாதி இரும்புமாயிருக்க**" **– தானியேல் 2:42**).

இவ்வாறு "**தங்கள் இடங்களைவிட்டு அகன்றுபோயின**" என்பது... உலகின் அனைத்து காலனியாதிக்க நாடுகள்மீதும் **பட்டயம்** மற்றும் **பலத்துடன்** வந்த இந்தப் புதிய கிறிஸ்தவ செல்வாக்கினைக் **குறிக்கிறது. மதம், சமூகம், கலாச்சாரம்** போன்ற விஷயங்களில் இந்த அனைத்து காலனி நாடுகளிலும் ஒரு பெரிய மற்றும் **கடுமையான மாற்றம்** ஏற்பட்டது.

இப்படியாக நாம் தொடரலாம் –

**வசனம் – 15**

"**பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத்தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும், பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு,**"

**இதின் அர்த்தம் என்ன?**

முதலாவதாக, இந்த வசனமானது **வசனம் 16 மற்றும் 17** என்னும் அடுத்த இரண்டு வசனங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதை வாசகர்களுக்கு நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அதையும் நாம் இப்போது வாசிக்கலாம் –

**வசனம் – 16,17**

"**பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி: நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்; அவருடைய கோபாக்கினையின் மகா நாள் வந்துவிட்டது, யார் நிலைநிற்கக்கூடும் என்றார்கள்.**"

ஆம், **இந்த மூன்று வசனங்களும் ஒரே விஷயத்தைப்** பற்றியே பேசுவதையும் விவரிப்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**அது என்னவாக இருக்கும்?**

அதாவது, ஏறக்குறைய **சமுதாயத்தின் ஒவ்வொரு அடுக்குகளும்** அவர்கள் நினைத்த... கர்த்தருடைய வரவிருக்கிற மற்றும் உடனடியான "**நியாயத்தீர்ப்பு நாள்**" – குறித்து எதிர்வினையாற்றுவதை இங்கே விவரிக்கப்பட்டுள்ளதாக நாம் காண்கிறோம்!

## இது எப்படி நடந்தது?

ஆ! ஆம்! இது இங்கு குறிப்பிடப்படுகிற ஆறாம் சபையின் காலம் அல்லது பிலதெல்பியாவின் **கடைசி நிகழ்வுக்கு** நம்மை அழைத்துச் செல்கிறது!

**ஆம், அது தான்... மில்லரைட் இயக்கம் (Millerite movement)... 1829 முதல் 1844 வரை.**

**வில்லியம் மில்லர்,**
ஒரு பேப்டிஸ்ட் சபை போதகர், அவர் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும், முக்கியமாக, அதனைப் பின்தொடர்ந்து வரும் **நியாயத்தீர்ப்பினைப்** பற்றியும் பரவலாகப் பிரசங்கித்தவர்.



ஆம், மில்லர் இயக்கம் என்றழைக்கப்பட்ட இவ்வியக்கமானது, கீழேயுள்ள **தானியேல் புஸ்தகத்தின் 12 – ஆம் அதிகாரத்தில்** காணப்படும் இயேசுவின் இரண்டாம் வருகையைப் பற்றிய குறிப்புடன், **முதல் இரண்டு** காலத்தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றத்திற்கு வழிவகுத்ததன் வெளிப்பாடாகும் –

**தானியேல் 12:11**

**“...பாழாக்கும் அருவருப்பு ஸ்தாபிக்கப்படுங்காலமுதல் ஆயிரத்திருநூற்றுத் தொண்ணூறு நாள் செல்லும்”.**

மேலும் இந்த சகோ.மில்லர் உடைய ஊழியத்தின்போதும், மிகவும் பரவலான தாக்கத்தை ஏற்படுத்தும்வண்ணமாக, அவர் வேதவசனங்களிலிருந்து பிரசங்கித்து, பிரகடனப்படுத்தி வந்தபோதும்தான், இங்கு குறிப்பிடப்படுகிறபடி, **பகிரங்கமான எதிர்விளைவானது** வெளிப்பட்டது!

இந்த அனைத்து தீர்க்கதரிசன வசனங்களின் முக்கியத்துவத்தை நன்கு

புரிந்துகொள்ள, நாம் **வரலாற்றை** ஆராய்ந்து, சகோ.மில்லர் பிரசங்கித்தவை **யாது,** அந்த நாட்களில் **என்ன** சூழ்நிலைகள் இருந்தன என்பவைகளை நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

இணையத்திலும், **கூகிள்** தேடுபொறி மூலமாகவும் இந்தத் தகவலைப் பெறலாம் ... விக்கிபீடியாவில் வில்லியம் மில்லர் பற்றி ஒருவர் அதிகம் கற்றுக்கொள்ளலாம்.



அவர் **1782 – ஆம் ஆண்டு பிப்ரவரி 15 – ஆம் தேதி அமெரிக்காவில் மாசசூசெட்ஸின் பிட்ஷெல்டில்** பிறந்தார். அவருக்கு முறையான கல்வி இல்லை என்றாலும், **அவர் ஒரு சிறந்த வாசகராக இருந்தார்**...! **அவர் இராணுவ பணியில் சேர்ந்தார், 1815 – இல்**, அவர் இராணுவத்திலிருந்து விடுவிக்கப்பட்டு **ஒரு விவசாயியாக வாழ்க்கையை** வாழத் துவங்கினார்.

ஆனால் அடுத்தடுத்து நிகழ்ந்திட்ட அவரது தந்தை மற்றும் சகோதரியின் மரணமும், போரில் இருந்தபோது அவர் கண்ட மரணமும் அவரை ... **மரணம் மற்றும் மரணத்திற்குப் பின்னான** வாழ்க்கை பற்றி சிந்திக்க வைத்தது.

ஒரு நாள், அவர் பேப்டிஸ்ட் (Baptist) சபையில், நம்முடைய பாவங்களின் பாரத்தைச் சுமக்கும் அளவுக்கு **இரக்கமும் மனதுருக்கமுள்ள** ஓர் இரட்சகரைப் பற்றி **ஒரு பிரசங்கத்தை வாசிக்கும்**போது, அவர் **ஒரு நாத்திகராக இருந்ததிலிருந்து,** ஒரு விசுவாசியாக மாறினார்.

இவ்வாறு அவர் வேதாகமத்தையும், தானியேல் 8:14 மற்றும் “**இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல்**” தீர்க்கதரிசனத்தையும் ஆராயத் துவங்கினார்... அவர் இதை **கி.மு. 457 – இல்** இருந்து கணக்கிட ஆரம்பித்து, **கி.பி. 1843 என்னும் ஆண்டினைப்** பெற்றார்.

பிறகு... **1818 – ஆம் ஆண்டில்தான், அவர் இந்தத் தேதியைக் கண்டுபிடித்தார்**, இது இரண்டாம் வருகைக்குரிய தேதியாக இருக்கும் என்று எதிர்பார்த்தார். அவர் அடுத்த 5 ஆண்டுகளில் 1823 வரை தொடர்ந்து இதைப்பற்றி ஆராய்ச்சி செய்தார்.

**1843 – ஆம் ஆண்டு கர்த்தரின் இரண்டாம் வருகையின் தேதி என்று அறிவிக்கும் ஒரு முறையான 20 புள்ளிகள் கொண்ட ஒரு ஆவணத்தை அவர் தயார்செய்தார்.**

**1832 – இல்,** மில்லர் தனது தொடர் ஆராய்ச்சிகளை ஒரு பேப்டிஸ்ட் (Baptist) சபையின் செய்தித்தாளில் வெளியிடுவதற்குச் சமர்ப்பித்தார், அது பின்னர் மில்லரை **தனது பரவலான பிரசங்க ஊழியத்தைத் துவக்குவதற்கு** வழிவகுத்தது. ஆரம்பத்தில் அவர் **ஒரு தேதியைப் பிரசங்கிக்காமல், 1843 என்னும் ஆண்டை** மட்டுமே பிரசங்கித்தார், ஆனால் அவ்வருடம் நெருங்கியவுடன் அவர் முதலில் –

**#1 ) மார்ச் 21, 1843 முதல் மார்ச் 21, 1844 வரை** எந்த நேரத்திலும் நடக்கலாம் என்றார்.

பிறகு...

**#2) ஏப்ரல் 18, 1844** என்ற தேதியையும் கூறினார்.

**ஆனால் இவர் கூறியபடி நடக்காதபோது மில்லர் பின்வருமாறு பதிலளித்தார், "நான் என் தவறையும் என் ஏமாற்றத்தையும் ஒப்புக்கொள்கிறேன். ஆனாலும், கர்த்தருடைய நாள் நெருங்கிவிட்டது என்பதையும், வாசலருகே வந்திருக்கிறது என்பதையும் நான் இன்னுமே நம்புகிறேன்"**



ஆகவே **ஆகஸ்ட் 1844** – இல்தான், **அக்டோபர் 22, 1844** என்னும் தேதி தீர்மானிக்கப்பட்டது.

**அந்த நாள் தான் இப்போது பொதுவாக**

**மாபெரும் ஏமாற்றம்... என்றழைக்கப்படுகிறது.**

இப்போது வில்லியம் மில்லரின் இந்தப் **பார்வைகள்** மற்றும் **போதனைகள் பத்திரிகை சக்தியின்** மூலமாகவும், குறிப்பாக **ஜோஷ்வா டைம்ஸ்** என்ற பெயரிலிருந்த ஒரு வெளியீட்டாளர் மூலமாகவும், “**காலத்தின் அறிகுறிகள்**” என்கிற மாதம் இருமுறை வரும் ஒரு பத்திரிகையின் மூலமாகவும் மிகவும் பரவலாகவும் ஒரு தேசிய இயக்கமாகவும் மாறியது.




**[இந்தப் பத்திரிகை இன்றும்கூட செவென்த் டே அட்வென்டிஸ்ட் சபையால்** (Adventist Church) **வெளியிடப்படுகிறது]**

**உண்மையில்** 1844 வருவதற்கு சற்று முன்பதாக, சுமார் **48 மில்லரைட்** பருவ இதழ்கள் (millerite periodicals) புழக்கத்தில் விநியோகிக்கப்பட்டன!!!

**சரி அதன் செய்தி என்னவாக இருந்தது??**

என்னவெனில், இரண்டாம் வருகைப் பற்றின போதனைகளுக்கு வில்லியம் மில்லர் பயன்படுத்திய அனைத்து **வேதவசனங்களும் சொல்லர்த்தமாக கையாளப்பட்டிருந்தன**... உதாரணமாக...

**வெளிப்படுத்தல் 1:7**

“**இதோ, மேகங்களுடனே வருகிறார்**”

இவ்வாறு **வானத்தில் ஓர் அகலப் பரவலான காட்சியுடன் ஒரு கண்ணுக்குப் புலப்படும் வருகை** எதிர்பார்க்கப்பட்டது!



**மத்தேயு 25:6**

**"நடுராத்திரியிலே...."**

ஆ! இதனால் இராத்திரியிலே வருகை இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது .... ஆம்! ... நடுராத்திரியிலே!!

**2 தெசலோனிக்கேயர் 1:7,8**

**"...நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு,.... ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும்".**

இது இரண்டாம் வருகையின் எதிர்பார்ப்புகளின் **அனல் கக்குகிற மற்றும் பயமுறுத்தும்** பகுதியாக இருந்தன!

ஏழாம் சபையான லவோதிக்கேயாவின் காலம் இன்னும் வராத காலம் அது, **புரிதலின் கண்கள் இன்னும் பிரகாசமாகத் திறக்கப்படவும்,** "**சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுக்கவும்**" (**2 தீமோத்தேயு 2:15**), இந்த வசனங்களின் அடையாளத்தன்மையைக் கிரகித்துக் கொள்ளவும் மற்றும் கர்த்தர் தமது இரண்டாம் வருகையில் "**இரவிலே திருடன் வருகிறவிதமாய்**" (**1 தெசலோனிக்கேயர் 5:2**) வருவார் என்பதையும் புரிந்துகொள்ளவும்பட வேண்டியிருந்தது.

ஆகவே, ஜனங்களின் இருதயங்களில் **மிகுந்த அச்சத்தையும், நியாயத்தீர்ப்பு நாளின் பயங்கரமான அச்சத்தையும் உண்டாக்குவதாக** பொதுவான முடிவு இருந்தது ... இது கீழே உள்ள வார்த்தைகளில் முழுமையாகவும் பொருத்தமாகவும் சுருக்கமாகக் கூறப்படுகிறது –

**வசனம் – 17**

**"அவருடைய கோபாக்கினையின் மகா நாள் வந்துவிட்டது, யார் நிலைநிற்கக்கூடும் என்றார்கள்."**

இப்போது 16 – ஆம் வசனம் மற்றும் வார்த்தைகளின் பயன்பாட்டினை –

**"பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி: நீங்கள் எங்கள்மேல் விழுந்து..."**

**எதிர்மறையாகவோ** அல்லது **அழிவுகரமாகவோ எடுக்கக்கூடாது.**

("**எங்கள்மேல் விழுந்து**" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தைக்கு "**எபி / epi**" (ஸ்ட்ராங்க்ஸ் # 1909) என்பது கிரேக்க வார்த்தையாகும், இதை மேலும் சிறப்பாக "**நமக்கு குறுக்கே/நம்மைத் தாண்டி விழும் [அல்லது] நம்மைச்சுற்றி விழும்**" "**fall across or about us**" என்று மொழிபெயர்க்கலாம்)

இது **பாதுகாப்பு தேடுவதைக்** குறிக்கிறது... இது வேத வசனத்தில், "**வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும் மறைத்துக்கொள்ளுங்கள்**" எனும் வார்த்தைகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இப்போது "**மலைகளில்**" உள்ள "**குகைகள்**" மற்றும் "**பாறைகள்**" ஆகியன, **சமூகங்கள், சங்கங்கள், குழுக்கள், தொழிற்சங்கங்கள், கழகங்கள், அறக்கட்டளைகள்** போன்ற சமுதாயத்திற்குள்ளிருந்த சமூக அமைப்புகளை அடையாளப்படுத்துகின்றன, அவை சில நேரங்களில் மதச்சார்பற்ற அடிப்படையிலான அல்லது மத அடிப்படையிலானவையாக இருந்தன!

இவை பொதுவாக உறுப்பினரின் நலனுக்காக இருந்தன. ஆனால், .... இங்கே கேள்வி என்னவென்றால்.....

**இந்த வேத வசனம் சரியாக எதைக் குறிக்கிறது?**

கர்த்தரின் இரண்டாம் வருகைக்கான நேரம் நெருங்க நெருங்க, பெரும்பான்மையான மக்கள், ஆம் ... கிறிஸ்தவர்களே தேவன்மீதும் அவருடைய வார்த்தையின்மீதும் நம்பிக்கையை இழந்து, தேவனைப் பற்றிய **தவறான மற்றும் எதிர்மறையான கருத்துக்களை வளர்த்துக் கொண்டு,** கீழே தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்ட நிலையை விரைவாக அடைந்தார்கள் என்பதே இங்கே குறிக்கப்படுகிறது என்று நாங்கள் ஆலோசனையாகக் கூறுகிறோம்.

**லூக்கா 18:8**

"**ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ**"?

இவ்வாறு 1874 – க்கு முந்தைய காலத்தைப் பற்றி **சுருக்கமாகக் கூறப்பட்டது**, இதைப்பற்றி **பின்வரும் வேத வசனங்கள் வெளிப்படுத்துகின்றன –**

**தானியேல் 12:12**

"**காத்திருந்து சேருகிறவன் பாக்கியவான்...**"

ஆ! ஆம்! **புரிந்துகொள்ளும் வெளிச்சத்திற்குக்** காத்திருந்த ... பல தவறான–புரிதல் (Misunderstanding) இருந்துள்ளது.

மேலும் கூடுதலாக, 1844 – இல் மாபெரும் ஏமாற்றம் ஏற்பட்டது ... அது **உண்மையான நிறைவேற்றத்திற்காகக்** காத்திருந்தது.

இவ்வாறாக **1874** மற்றும் **பிலதெல்பியா சபையினுடைய** காலப்பகுதியின் **முடிவுக்கு** நம்மை கொண்டுவரும் மனநிலையை நாம் கண்டு புரிந்துகொள்ள வேண்டும்!

## ஏழாம் முத்திரையின் முன்னிகழ்வு

**வெளிப்படுத்தலின் 8 – ஆம் அதிகாரத்திலுள்ள** ஏழாம் முத்திரையின் விளக்கத்திற்கும் அதன் விவரங்களுக்கும் இப்போது வேதவாக்கியங்கள் நம்மைக் கொண்டுச் செல்வதற்கு முன்பு, முழு

**7 – ஆம் அதிகாரமானது**
இடையில்
அமைந்திருக்கிறது.



இந்த இடைப்பட்ட அதிகாரத்தைப் பற்றி நாம் **என்ன** புரிந்துகொள்ள வேண்டும்?

முத்திரைகள் பற்றிய தொடர்ச்சியான விளக்கத்தின் தறுவாயில் இந்த அதிகாரம் **எங்கிருந்து** வருகிறது?

இது **ஆறாம் முத்திரையினுடைய** நிகழ்வுகளின் ஒரு **நீட்டிப்பா**?

இந்தக் கேள்விகளுக்கான பதில் **“முத்திரைகள்”** மற்றும் **“எக்காளம்”** என இரண்டிலும் காணப்படுகிற விசித்திரமான அம்சத்தைப் புரிந்துகொள்வதில் காணப்படுகிறது... **ஏழாம் காலக்கட்டத்தின்** நிகழ்வுகள் வெளிப்படுத்தப்படுவதற்கு சற்று **முன்னும், ஆறாம் காலக்கட்டத்தின்** நிகழ்வுகள் விவரிக்கப்பட்ட **பின்னும்,** ஒரு முழு அதிகாரமே ஒதுக்கப்பட்டுள்ளது.

நாம் அதை எங்கே பார்க்கிறோம் என்றால் –

- **7 – ஆம் அதிகாரத்தில்** (“**முத்திரைகள்**” விஷயத்தில்)
- **10 – ஆம் அதிகாரத்தில்** (“**எக்காளம்**” விஷயத்தில்)

**இதன் பொருள் என்ன?**

என்னவென்றால்... எஜமான் திரும்பி வந்து, பிரசன்னமாயிருக்கிற மற்றும் கீழ்க்காணும் பல **மகிமையான நிகழ்வுகள்** நிறைவேறத் துவங்கியிருக்கிற **லவோதிக்கேயா** எனும் ஏழாம் சபையின் **மகிமையான** மற்றும் **முடிவான காலக்கட்டத்திற்கான** இவையெல்லாம் முன்னோட்டங்கள் அல்லது முன்னிகழ்வுகள் என்று நாம் அறிவுறுத்துகிறோம்...

**“இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்”**

**(வெளிப்படுத்தல் 3:20)**

**(திரும்பி வந்து, பிரசன்னமாகியிருக்கும் கர்த்தர் இயேசு)**

**...மேலும்...**

**“இதோ, வெண்மையான மேகத்தையும், அந்த மேகத்தின்மேல் மனுஷகுமாரனுக்கொப்பானவராய்த் தமது சிரசின்மேல் பொற்கிரீடத்தையும் தமது கையிலே கருக்குள்ள அரிவாளையுமுடைய ஒருவர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டேன்.”**

**(வெளிப்படுத்தல் 14:14)**

**(ஆளும் இராஜாவாகவும், பிரதான அறுவடையாளராகவும் தற்போது இருக்கும்)**

**...மேலும்...**

**“நடுராத்திரியிலே: இதோ மணவாளன் வருகிறார், ... என்கிற சத்தம் உண்டாயிற்று...”**

**(மத்தேயு 25:6)**

**(ஆட்டுக்குட்டியானவரின் கலியாணத்தில் மணவாளனாக தற்போது இருக்கும்)**

**மேலும் கூடுதலாக...**

**“தங்கள் எஜமான் கலியாணத்திலிருந்து வந்து தட்டும்போது, ... எப்பொழுது வருவார் என்று காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாகவும் இருங்கள்...”**

**(லூக்கா 12:36)**

**( “கலியாணம்” அல்லது முதலாம் உயிர்த்தெழுதல் என்பது, வருகைக்குப் பின் துவங்கி லவோதிக்கேயா காலம் முழுவதும் தொடர வேண்டியிருக்கிறது)**

**ஆம்! மெய்யாகவே “ஏழாவது” ஒரு மகிமையான காலம்தான் !!**

**நாம் மேலும் வலியுறுத்துவது என்னவென்றால், இந்த இரண்டு முன்னோட்டங்களும் "ஏழாம்" காலக்கட்டத்தில் விவரிக்கப்பட வேண்டிய விஷயங்களை விஸ்தரிக்கின்றன (AMPLIFY) என்பதே!**

அது எவ்வாறு என்பதை இப்போது பார்க்கலாம் –

7 – **ஆம் அதிகாரத்தைப்** பொறுத்தவரையில் அறுவடை பணிகள்மீது கவனம் செலுத்தப்படுகிறது, அதே சமயம் **10 – ஆம் அதிகாரத்தில்** "**தேவ எக்காளம்**" (**1 தெசலோனிக்கேயர் 4:16**) – ஆகவும் இருக்கிற அறுவடையின் செய்தியின்மீது கவனம் செலுத்தப்படுகிறது.

இப்போது **7 – ஆம் அதிகாரத்தைச் சுருக்கமாக ஆராய்ந்து** புரிந்துகொள்ளலாம்.

**வெளிப்படுத்தல் 7:1**

"**இவைகளுக்குப்பின்பு, பூமியின் நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்று, பூமியின்மேலாவது, சமுத்திரத்தின் மேலாவது, ஒரு மரத்தின்மேலாவது, காற்று அடியாதபடிக்கு, பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருக்கக்கண்டேன்.**"

இந்த அதிகாரத்தினுடைய முதலாம் வசனத்தின் ஆரம்ப வார்த்தைகளை நாம் குறிப்பாக கவனிக்க வேண்டும்...

"**இவைகளுக்குப்பின்பு**" –

இதனை, முந்தைய அதிகாரத்தின் கடைசி வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ள நிகழ்வுகளின் தொடர்ச்சியாகவோ மற்றும் ஆறாம் முத்திரையைப் பற்றியதோ என்று நாம் **கருதிவிடக்கூடாது**. மாறாக, சொல்லப்போனால் இது ஒரு **பிரிப்பான் / இடையீட்டுப்பிரிவாகும்**, ... நாம் **இப்போது** பார்த்து, படிக்கப்போகின்றவை, ஆறாம் முத்திரை தொடர்பான விஷயங்களின் விளக்கத்திலிருந்து **வேறுபட்டது** மற்றும் **மாறுபட்டது** என்று இது நமக்குத் துவக்கத்திலேயே சொல்கின்றது.

"**இவைகளுக்குப்பின்பு**" என்ற இந்த வார்த்தைகள் **1874 – ஆம் வருஷத்தோடு** தொர்டபுடைய ஓர் அர்த்தத்தைக்கொண்டிருக்கிறது என்பதையும் நாங்கள் அறிவுறுத்துகிறோம்! இந்த அதே ஆண்டில்தான், **செப்டம்பர்** மாதத்தின் முடிவோடு **பிலதெல்பியா** சபை காலக்கட்டம் முடிவடைந்து, **அக்டோபர்** மாத துவக்கத்தில் லவோதிக்கேயா சபை காலக்கட்டமானது துவங்கியது.

ஆகவே, சபையின் ஆறாம் காலக்கட்டத்தில் விவரிக்கப்பட்ட பல நிகழ்வுகளும், முக்கியமான "**மில்லர் இயக்கம்**" மற்றும் கர்த்தருடைய இரண்டாம் வருகையின் எதிர்பார்ப்புகளுடன் தொடர்புடைய மாபெரும் ஏமாற்றம் ஆகியவற்றுடன் முடிவடைந்த **பிறகு**, சபை வரலாறானது இப்போது ஒரு **புதிய கட்டமான – ஏழாம்** மற்றும் கடைசிக் கட்டமான அக்டோபர் **1874** – துவக்கி இருந்து வருகிற லவோதிக்கேயா காலக்கட்டத்திற்குள் நுழைந்தது.

**ஏற்கனவே குறிப்பிட்டபடி, இந்த 7 – ஆம் அதிகாரத்தின் 17 வசனங்களும், ஏழாம் முத்திரையின் நிகழ்வுகளை விவரிக்கும் ஒரு முன்னோட்டமாகும். இவை, வெளிப்படுத்தல் 8 – ஆம் அதிகாரத்தில் ஏழாம் முத்திரையின் உள்ளடக்கங்களின் விளக்கத்தில் தனது வெளிப்பாட்டைக் காணாத ஏழாம் சபை காலத்தின் ஏதோவொன்றை விரிவாக விவரிக்கின்றன..**

**அது என்னவாக இருக்கும்?**

இந்த அதிகாரம் மீதான பல விளக்கவுரைகளை மற்றும் கருத்துகளை வாசித்த பிறகு, இந்த 7 – ஆம் அதிகாரத்தில், அக்டோபர் 1874 மற்றும் நமது கர்த்தரின் இரண்டாம் வருகைக்குப் **பிறகு நடந்த இரண்டு நிகழ்வுகள்** பற்றி விவரிக்கப்பட்டுள்ளதைக் காணலாம் என்று நாங்கள் உறுதியாக **அறிவுறுத்துகிறோம்.** அவை...

**சாத்தானின் கட்டப்படுதல்**

மற்றும்...

**சபையினுடைய அறுவடை**

இது **சத்தியத்தின் வெளிப்பாட்டால்** கொண்டுவரப்பட்டது,
இதைப்பற்றி
**ஆபகூக் 2:2**
இல்...
"**நீ தரிசனத்தை எழுதி, அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படிப் பலகைகளிலே தீர்க்கமாக வரை**" என்று விவரிக்கப்பட்டுள்ளது.

இப்போது இந்த அதிகாரத்தினுடைய **விரிவான ஆய்வில்** இறங்குவதற்கு முன்பாக, **கர்த்தரின் இரண்டாம் வருகையைப்** பற்றிய வழக்கத்திற்கு மாறான **குறிப்பினைத்** தங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம் ...

## வசனம் – 2

**"ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக் கோலையுடைய வேறொரு தூதன் சூரியன் உதிக்குந்திசையிலிருந்து ஏறிவரக்கண்டேன்..."**

இப்போது "**சூரியன் உதிக்குந்திசையிலிருந்து ஏறிவர**" என்று விவரிக்கப்படுகிற இந்த வசனம் **சற்று விசித்திரமாக** நமக்குத் தெரிகிறது, இது உண்மையில் கர்த்தருடைய இரண்டாம் வருகையைப் பற்றிய குறிப்பு, ஆனால் மொழிபெயர்ப்பாளர்கள் **சரியாக** மொழிபெயர்ப்பு **செய்யவில்லை**!

ஆம்! குறிப்பானது கர்த்தருடைய இரண்டாம் வருகைக்கும், எதிர்பார்ப்பு கர்த்தர் **இறங்கிவருவதாகக் (1 தெசலோனிக்கேயர் 4:16)** காணப்படுவதற்கும் உள்ளபோது... இங்குள்ள வசனம் ஏறி **வருவதைக்** குறிப்பது மிகவும் **விசித்திரமானதாகத்தான்** உள்ளது!! இது மெய்யாகவே மிகவும் குழப்பமாக இருந்தது! வேறு பல வேதாகம மொழிபெயர்ப்புகளில் தேடும்போது, **அனைத்துமே** "**தூதன்**" **ஏறி வருவதையே** குறிக்கிறதாகக் காண்கிறோம்.

ஆக நாம் ஸ்ட்ராங் அகராதியைப் (Strong's Concordance) பார்த்தோம், "**ஏறிவர**" என்ற பதத்திற்குக் கிரேக்க வார்த்தை - "**அனாபெய்னோ**" ("anabaino" – **ஸ்ட்ராங்கின் கிரேக்கம் #305**) ஆகும், இதன் பொருள் - "**எழுவது** / to arise" அல்லது "**மேலே வா** / come up" என்பதாகும்

ஆங்கிலத்தில் வருகிற மற்றொரு வார்த்தையான "east" என்பதற்கான கிரேக்க வார்த்தைகள் "**அனடோல்**" ("anatole") மற்றும் "**ஹீலியோஸ்**" ("helios") (**ஸ்ட்ராங்கின் கிரேக்கம் # 395 மற்றும் 2246**) என்பதாகும்; இதன் பொருள் "**ஒளியின் ஓர் உதயம்** / a rising of light" அல்லது "**சூரியன்** / The Sun" மற்றும் "**கிழக்கைக் குறிக்கின்றது** / by implication the east" என்பவைகளே.

எனவே, ஆங்கிலத்தில் இந்த வார்த்தையின் அர்த்தங்களிலிருந்து பகுப்பாய்வு செய்யும்போது "ascending from the east" என்ற இந்த வினோதமான மொழிபெயர்ப்புக்கு ஒரு **மாற்று மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மொழிபெயர்ப்பு** உள்ளது!

அது "ascending / **ஏறுதல்**" என்பதற்குப் பதிலாக "to arise / **எழுவது**" (அ) "the rising of / **உதிப்பது**" என்றும், "from the east / **கிழக்கிலிருந்து**" என்பதற்குப் பதிலாக "The Sun / **சூரியன்**" என்றும் மாற்றுவதே ஆகும்.

**எனவே இன்னும் சரியான மொழிபெயர்ப்பு யாதெனில்**
**“ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக் கோலையுடைய வேறொரு தூதன் சூரியனின் உதயத்திலிருந்து (உதயம்போல) வரக்கண்டேன்.”**
**இங்கே, இந்த வெளிப்படுத்தல் 7:2 – ஆம் வசனத்தின் “சினாய்டிக் கோடெக்ஸ்” கையெழுத்துப் பிரதியிலிருந்து வரிகளுக்கிடையில் பல்மொழி மொழிபெயர்ப்புகொண்ட பகுதியானது, கீழே கிரேக்கத்திலும் ஆங்கிலத்திலும் கொடுக்கப்பட்டுள்ளது (சகோ. ரிச்சர்ட் டி. டாக்டர், சிகாகோ, அமெரிக்கா – அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்)**

*2* και ειδον αλλον αγγελον αναβαινοντα απο
And *I* saw another angel coming up from

ανατολη? ηλιου εχοντα ?φαγιδα <u>ΘΥ</u> ζωντο?
rising of *the* sun having seal of God living

και εκραξεν φωνη μεγαλη τοι? τε??αρε?
and cried voice great to the four

αγγελοι? οι? εδοθη αυτοι? αδικη?αι
angels to whom was given to them to hurt

την γη και την θαλα??α
the earth and the sea

**மேலும், மெய்யாகவே!** கர்த்தரின் இரண்டாம் வருகையானது எப்போதும் சூரியனுடனும் அதன் உதயத்துடனும் **அடையாளரீதியில் தொடர்புடையதாக இருக்கின்றது** !!

**மத்தேயு 24:27** – இல் கர்த்தர் தம்முடைய **பரோசியாவை சூரியனின் உதயத்துடன்** ஒப்பிடுவதாக நாம் வாசிக்கின்றோம் அல்லவா??

இவையெல்லாவற்றிக்கும் மேலாக, கர்த்தருடைய இரண்டாம் வருகை வெளிப்படுத்தல் புஸ்தகத்தில் **சூரியனுக்கும் சூரிய ஒளியுடனும்** ஒப்பிடப்படுகிறது

**வெளிப்படுத்தல் 10:1**

**“பின்பு, பலமுள்ள வேறொரு தூதன் … இறங்கிவரக்கண்டேன்… அவனுடைய முகம் சூரியனைப்போலவும்…”**

மீண்டுமாக….

**வெளிப்படுத்தல் 18:1**

**"இவைகளுக்குப்பின்பு, வேறொரு தூதன்... இறங்கிவரக்கண்டேன்... இவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று"**

**ஆ! ஆம்! இது மிகவும் தெளிவாக உள்ளது!**

**இப்போது 7 – ஆம் அதிகாரத்தின், 1 – ஆம் வசனத்துக்கு** வரலாம் –

**வசனம் – 1**

**"இவைகளுக்குப்பின்பு, பூமியின் நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்று, பூமியின்மேலாவது, சமுத்திரத்தின் மேலாவது, ஒரு மரத்தின்மேலாவது, காற்று அடியாதபடிக்கு, பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருக்கக்கண்டேன்..."**

ஆம்! பின்வரும் துவக்க வார்த்தையானது –

**"இவைகளுக்குப்பின்பு..."**

... ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, ஆறாம் முத்திரையின் நிகழ்வுகளுக்கும் அதன் நிறைவேற்றத்திற்குமான **ஒரு குறிப்பாகும்**

... மேலும், குறிப்பாக 6 – ஆம் அதிகாரத்தின் கடைசி வசனங்கள், **வசனம் 15 – 17**

... அது **மில்லரைட் இயக்கம் பற்றின** குறிப்புதான் என்று நாம் **ஏற்கனவே பார்த்தோம்.**

**ஆம்! மில்லர் இயக்கத்தைத் தொடர்ந்து என்ன வந்தது?**

**1844 – ஆம் ஆண்டின் மாபெரும் ஏமாற்றமும்,** நமதாண்டவரின் இரண்டாம் வருகையைப் பற்றிய **சரியான புரிதலை** எதிர்பார்த்துக் கொண்டிருத்தலும் இருந்தது. ஆனால் தீர்க்கதரிசனமாகப் பேசுகையில் மில்லர் இயக்கத்தைத் தொடர்ந்து என்ன வந்தது எனத் தேடும்போது, **தானியேல் புஸ்தகம் 12 – ஆம் அதிகாரத்திற்கு** நாம் வர வேண்டும்...

**தானியேல் 12:12**

**"ஆயிரத்து முந்நூற்று முப்பத்தைந்து நாள்மட்டும் காத்திருந்து சேருகிறவன் பாக்கியவான்."**

ஆ! ஆம்! நமதாண்டவரின் **உண்மையான** இரண்டாம் வருகை **அக்டோபர் 1874** – இல் நிகழ்ந்தது

## 1874 – ஆம் வருஷம் அக்டோபர் துவக்கமானது, லவோதிக்கேயாவின் ஏழாம் சபை காலக்கட்டத்திற்கு நம்மைக் கொண்டு வருகிறது

**1874 – இல் முடிவடைந்த** சபையின் **பிலதெல்பியா** எனும் **ஆறாம் காலக்கட்டமும், அதே ஆண்டின் செப்டம்பர் மாதத்தின் இறுதி வரை இருந்தது** என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும்! இதற்குப் பிறகுதான், அக்டோபர் மாதத்தின் துவக்கத்துடன், கர்த்தருடைய மிகவும் எதிர்பார்க்கப்பட்ட **இரண்டாம் வருகை** நிகழ்ந்தது... மேலும் அவரது "**பரோசியா**"வும் துவங்கியது ... இது சபையின் ஏழாம் மற்றும் லவோதிக்கேயா காலக்கட்டத்தையும் துவக்கியது.

ஆம்! மெய்யாகவே! "**இவைகளுக்குப்பின்பு...**" என்பது **பிரிவின் / SEPARATION** தெளிவான சொற்றொடராகும் ... சொல்லப்போனால் ஒரு திரைச்சீலை, அப்போதுதான் முடிவடைந்த சபையின் ஆறாம் காலக்கட்டத்தையும் **புதிதாக துவங்கிய ஏழாம் காலக்கட்டத்தையும்** பிரித்தது!!

இதைப் புரிந்துகொண்டபின், **வெளிப்படுத்தலின் இந்த 7 – ஆம் அதிகாரத்தின் 1 – ஆவது வசனத்தில்** வருகிற மீதமுள்ள விஷயங்கள், **1874** – ஆம் ஆண்டில் நிகழ்ந்த **வேறொன்றையும்,** ஆனால் **வரிசைப்படி பார்த்தால்** இரண்டாம் வருகைக்குச் **சற்று முன்னதாக** நிகழ்ந்த ஒன்றைக் குறிப்பதாகக் காண்கிறோம். (**செயலின் முன்னுரிமையில் உள்ளதைப் போல**)

**உங்களுக்கு அது எதுவென்று தெரியுமா?**

ஆ! அது நம்முடைய **கர்த்தரின் வார்த்தைகளில்** நாம் வாசித்தவையே –

**மத்தேயு 12:29**

"**அன்றியும் பலவானை முந்திக் கட்டினாலொழியப் பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து, அவன் உடைமைகளை எப்படிக் கொள்ளையிடக்கூடும்...**"

ஆ! ஆம்! நம்முடைய கர்த்தராகிய இயேசுவால் **சாத்தான் கட்டப்படுவதாகும் !**

சாத்தான் **முதலில் பிணைக்கப்படும்** வரை அல்லது... **தெய்வீகமாக நியமிக்கப்பட்ட** கட்டப்படுதலின் செயல்முறை துவங்கும் வரையில் இரண்டாம் வருகை நிகழ**முடியாது!**

**இவ்வாறாக 1 மற்றும் 2 ஆகிய வசனங்களின் வரிசையிலே இந்த மாபெரும் சத்தியம் குறிப்பிடப்பட்டுள்ளதாக நாம் காண்கிறோம், அந்த 2 – ஆம் வசனத்தில் சாத்தானின் கட்டப்படுதலுக்கு அடுத்ததாக இரண்டாம் வருகை என விவரிக்கப்பட்டுள்ளது!**

இதனைப் புரிந்துகொண்ட பிறகு, **1 – ஆம் வசனத்தில்** உள்ள **பாஷையின்** விவரங்களுக்கு வரலாம் – இங்கே "**பூமியின் நான்கு திசைகளிலும்**" நின்று "**பூமியின் நான்கு காற்றுகளையும்**" பிடித்திருந்த "**நான்கு தூதர்கள்**" இருக்கிறார்கள்.

**இவற்றுக்கெல்லாம் என்ன அர்த்தம்?**

முதலாவதாக, இங்கே "**பூமி**" என்பது நேரடி கிரகத்தினைக் குறிக்கவில்லை...மாறாக அது 2 பேதுரு 3:10 – இல் உள்ள நான்கு "**பூதங்கள்**" அல்லது **பகுதிகள்** உள்ளடக்கிய **கண்ணுக்குத் தெரிகின்ற பூமிக்குரிய அரசாட்சி** என்பதற்கான ஓர் அடையாளக் குறிப்பாகும்.

மேலும் உறுதிப்படுத்த, இங்கே "**பூமி**" என்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தை "**ஜீ / ge**" (ஸ்ட்ராங்கின் – கிரேக்கம் #1093) ஆகும், இது **வெளிப்படுத்தல் 21: 1 மற்றும் 20:11** ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் **அதே வார்த்தையாகும்**.

**அப்படியானால் இந்தப் "பூமியின் நான்கு காற்றுகள்" என்பது எவற்றைக் குறிக்கும்?**

இது கீழேயுள்ள வசனத்திற்கான ஒரு நேரடி குறிப்பாகும் –

**தானியேல் 7:2**

**"இராத்திரிகாலத்தில் எனக்கு உண்டான தரிசனத்திலே நான் கண்டது என்னவென்றால்: இதோ, வானத்தின் நாலு காற்றுகளும் பெரிய சமுத்திரத்தின்மேல் அடித்தது."**

ஆம்! இங்கே தானியேல் தான் வாழ்ந்த நாளின் **அரசாட்சியை அடையாளமாக** விவரிக்கிறார், இங்கு "**வானம்**" என்பது சாத்தான் மற்றும் அவனது தூதர்களின் **கண்ணுக்குத் தெரியாத ஆவிக்குரிய அரசாட்சியைக்** குறிக்கிறது, அவர்கள் **கண்ணுக்குத் தெரிகின்ற பூமிக்குரிய அரசாட்சி** அல்லது "**பூமி**" மூலமாகவும் இங்கு "**நான்கு காற்றுகள்**" என்று அடையாளப்படுத்தப்பட்ட அதன் **நான்கு**

**பகுதிகளின்** மூலமாகவும் தங்கள் சக்தியைப் **பயன்படுத்தவும் கையாளவும்** செய்கிறார்கள்..

இங்கேயுள்ள "**பெரிய சமுத்திரம்**" என்பது இந்தத் தீமையினுடைய செல்வாக்கின் கீழிருக்கும் உலக மனுக்குலத்தைக் குறிக்கும் (ஏசாயா 57:20).

ஆகவே இங்கேயுள்ள "**பூமியின் நான்கு காற்றுகள்**" தற்போதைய தீமையினுடைய செல்வாக்கின் கீழிருக்கும் கண்ணுக்குத் தெரிகின்ற பூமிக்குரிய அரசாட்சியைக் குறிக்கின்றதாய் இருக்கின்றன.

இப்போது இந்த முதலாம் வசனத்தில் வருகிற இந்தப் "**பூமியின் நான்கு காற்றுகள்**" என்ன என்பதைப் புரிந்துகொண்டுள்ளோம்... அடுத்து "**பூமியின் நான்கு திசைகள்**" என்பது எதைக் குறிக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ளப்போகிறோம்.

இது நான்கு காற்றுகளுக்கு மிகவும் ஒத்திருக்கிறது ... **ஆனால் ஒரு முக்கியமான வித்தியாசத்துடன் ஒத்திருக்கிறது.**

ஆம்! "**பூமியின் நான்கு திசைகளும்**" **அதே** கண்ணுக்குத் தெரிகின்ற பூமிக்குரிய அரசாட்சியைக் குறிக்கின்றன... ஆனால் **வேறு கண்ணோட்டத்திலிருந்து குறிக்கின்றன!**

இங்கே இது கண்ணுக்குத் தெரிகின்ற பூமிக்குரிய அரசாட்சியின் **நான்கு பிரிவுகள்** அல்லது **பாகங்கள்** அல்லது "**பூமியின் பூதங்கள்**" பற்றிய சாதாரணக் குறிப்பாக மாத்திரம் உள்ளது.

அடுத்து நாம் "**நான்கு தூதர்கள்**" க்கு வரலாம்.

இவை "**பூமியின் நான்கு காற்றுகள்**" மீது மிகுந்த கட்டுப்படுத்தும் சக்தியைக் கொண்டுள்ளன என்று கூறப்படுவதைக் கவனியுங்கள்.

இந்த "**நான்கு தூதர்கள்**" என்பதின் மூலம் யார் குறிப்பிடப்படுகின்றார்?

**ஆ! இந்த "நான்கு தூதர்கள்" என்பவைகள் யாவை? எனக் கேள்வியானது மாற்றியமைக்கப்பட வேண்டும்...**

**ஏனென்றால் இந்த "நான்கு தூதர்களும்" அடையாளத்தில் தேவனுடைய தெய்வீகக் குணலட்சணமான வல்லமையைக் குறிக்கின்றனர்!**

**இதைத்தான் இயேசு சாத்தானைக் கட்டுவதிலும் பயன்படுத்தவும், கையாளவும்செய்கிறார்.**



மெய்யாகவே, நாம் கீழே வாசிக்கிறபடி இயேசு தமது இரண்டாம் வருகையின்போது **மாபெரும் தெய்வீக வல்லமை**யுடன் பூமிக்குத் திரும்பி வந்தார் –

**வெளிப்படுத்தல் 18:1**

**"இவைகளுக்குப்பின்பு, வேறொரு தூதன் மிகுந்த அதிகாரமுடையவனாய், வானத்திலிருந்து இறங்கிவரக்கண்டேன்...."**

மீண்டும் வாசிக்கிறோம் –

**மத்தேயு 28:18**

**"அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது."**

ஆ! ஆம்! இது தெளிவாக உள்ளது! ... **"சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது"** என்பது அவர் **பெற்றுக்கொண்ட தெய்வீக வல்லமையையும் அதிகாரத்தையும்** குறிக்கிறது என்பதைத் **தயவுகூர்ந்து கவனிக்கவும்!**

இப்போது, **ஏன்** இங்கே தேவனுடைய குணலட்சணமான வல்லமையானது **"நான்கு தூதர்களால்"** குறிக்கப்படுகிறது? என யாராவது கேட்கலாம்.

ஆ! **அதற்கான பதில் எசேக்கியேல் புஸ்தகத்தில்** காணப்படுகிறது –

**எசேக்கியேல் 1: 15, 16**

**"நான் அந்த ஜீவன்களைப் பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, பூமியில் ஜீவன்களண்டையிலே நாலு முகங்களையுடைய ஒரு சக்கரத்தைக் கண்டேன்..... அவைகள் நாலுக்கும் ஒரேவித சாயல் இருந்தது; அவைகளின் ரூபமும் அவைகளின் வேலையும் சக்கரத்துக்குள் சக்கரம் இருக்குமாப்போல் இருந்தது."**

ஆ! ஆம்! இங்கே **வல்லமை, நீதி, அன்பு** மற்றும் **ஞானம்** ஆகிய **தேவனுடைய நான்கு தெய்வீகக் குணலட்சணமும்** **"நான்கு முகங்களாக"** குறிப்பிடப்படுகின்றன, ஆனால் அவை –

- **"ஒரேவித சாயல்"** – இல் இருந்தன

மற்றும்

- **"சக்கரத்துக்குள் சக்கரம் இருக்குமாப்போல்"** ... இருந்தன

ஆம்! பிரியமான சகோதர சகோதரிகளே, தேவனுடைய குணலட்சணங்கள்

**அனைத்தும்** ஒன்றிணைந்து **முழுமையான ஒற்றுமையுடனும் இணக்கத்துடனும்** செயல்படுகின்றன என்பதே மாபெரும் மற்றும் அற்புதமான சத்தியமாகும்.

ஆகவே தேவனுடைய குணலட்சணமான **வல்லமையானது** தனியாகவோ அல்லது **தனித்துப்** பயன்படுத்தப்படுவதோ இல்லை, மாறாக அது –

**"நீதியான, அன்பான மற்றும் ஞானமான வல்லமை"**
**– ஆக உள்ளது**

ஆம்! இது சாத்தானுடைய வல்லமை அல்லது மனித வல்லமையைப் போல அறவே அல்லாத, **தெய்வீக வல்லமையாகும்**!!

ஆ! ஆம்! இதுதான் "**நான்கு தூதர்கள்**" என்பதன் பொருளாகும்

ஆகவே, **7 – ஆம் அதிகாரத்தின் 1 – ஆவது வசனம், அடையாளத்தில்,** 1874 ஆம் ஆண்டில் நடைபெற்ற சாத்தானின் கட்டப்படுதலை மிகவும் **அற்புதமாக** விவரிக்கிறது, அங்கு பூமிக்குத் **திரும்பிவந்திருந்த புதிய இராஜாவாகிய** கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, தெய்வீக அதிகாரம் காலாவதியான **பழைய இராஜாவை,** .... "**ஆகாயத்தின் அதிகாரப் பிரபுவை**" ... **தெய்வீகக் கட்டுப்பாட்டின்** கீழ் வைத்தார், இது வேதவாக்கிய பாஷையில் சாத்தான் கட்டப்படுதலின் "**சங்கிலி**" நிலை என்று விவரிக்கப்படுகிறது –

**வெளிப்படுத்தல் 20:2**

**"பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து"**

ஆம்! "**பிடித்து**" என்பது அந்தத் தெய்வீக வல்லமையைப் **பயன்படுத்தி கட்டுப்படுத்தப்படுவதாகும்.**

**வெளிப்படுத்தல் 20:1 முதல் 3** வரையிலான அடையாள பாஷையில் விவரிக்கப்பட்டுள்ள "**சாத்தானின் கட்டப்படுதல்**" பற்றிய விளக்கத்திலிருந்து நாம் கவனிக்க வேண்டிய சில குறிப்பிட்ட விவரங்களை வாசகரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம். மூன்று வெவ்வேறு நடைமுறைகள் விவரிக்கப்பட்டுள்ளன, இவை அனைத்தும் **ஒருசேர** பின்வருமாறு

குறிப்பிடப்படும் காலத்தை எடுத்துக்கொள்கின்றன –

**"அதை (சாத்தானை) ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து"**
**வெளிப்படுத்தல் 20:2**

**கீழே உள்ள அட்டவணையைப் பார்க்கவும்...**

**சாத்தானின் கட்டப்படுதல் செயல்முறைகளைப் புரிந்துகொள்வது (வெளிப்படுத்தல் 20:1 முதல் 3 வரையுள்ள வசனங்களின் வெளிச்சத்தில்)**

| **வழிமுறை #1** | **வழிமுறை #2** | **வழிமுறை #3** |
|---|---|---|
| **"அவன் பிடித்து..." (வெளிப்படுத்தல் 20:2)** | **"அதை... கட்டிவைத்து..." (பெரிய சங்கிலியால்) (வெளிப்படுத்தல் 20: 2, 1)** | **"அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான்..." (வெளிப்படுத்தல் 20:2)** |
| அக்டோபர் 1874 – இல் திடீரென்று நடந்த இந்த **"கட்டப்படுதல்"** செயல்முறையின் ஆரம்பம் **(மத்தேயு 12:29)** இது பின்னர் கட்டப்படுதலின் **"சங்கிலி"** நிலைக்கு வழிவகுத்தது! | **"பெரிய சங்கிலி"** கொண்டு கட்டப்படும் செயல்முறையின் நீண்ட காலமானது, **"இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தின்" (கலாத்தியர் 1:4)** "வானமும் பூமியும்," சாத்தானின் அமைப்புகள், மரபுகள் மற்றும் பொய்கள் ஆகியவற்றைப் பற்றின அறிவொளி கிடைக்கப்பெற்று, அவை சிதைவுறும் படிப்படியான செயல்முறையில், கடந்துபோகும் வரை நீட்டிக்கப்படுகிறது. **(வெளிப்படுத்தல் 20:11 / 2 பேதுரு 3:10 / ஏசாயா 26:9)** | சாத்தானும் அவனது **"அமைப்புகளும்"** மிக நீண்ட காலம் **முற்றிலும் செயல்பட முடியாத** ஒரு நிலைமையில் **(ஏசாயா 29:20)** அவை கட்டப்படுதல் ... அப்போது, மனுக்குலம் இரட்சிப்பு மற்றும் நியாயத்தீர்ப்பின் போது **எந்த வஞ்சனையையும்** அனுபவிக்க முடியாது! |

| | | |
|---|---|---|
| அக்டோபர் 1874 – இல் கர்த்தர் திரும்பிவந்த தருணத்தில் நடந்தது! | அக்டோபர் 1874 துவக்கி நடந்து வருகிறது, மேலும் தேவனுடைய இராஜ்யத்தின் **கண்ணுக்குத் தெரியாத பாகத்தின்** காலம் வரை நீடிக்கும். | அர்மகெதோன் காலத்துடன் தொடங்கி, அக்டோபர் 2874 – இல் "**ஆயிரம் ஆண்டுகள்**" **முடிவடையும்** வரை... சரியாக தேவனுடைய இராஜ்யத்தின் **கண்ணுக்குப் புலப்படுகிற பாகம்** முழுவதும் நீடிக்கும். |
| **இந்த மூன்று வழிமுறைகளும் சேர்ந்து "ஓராயிர வருஷ" காலத்தில் நடக்கிறது** | | |

இப்போது இறுதியாக நாம் **கட்டுப்படுத்தப்படுவதின் பொருளை இறுதி வார்த்தைகளில்** காணலாம் –

**வசனம் – 1**

**"பூமியின்மேலாவது, சமுத்திரத்தின் மேலாவது, ஒரு மரத்தின்மேலாவது, காற்று அடியாதபடிக்கு"**

இங்கே நிச்சயமாக, நாம் ஏற்கனவே பார்த்ததுபோல "**பூமி** " என்னும் அடையாளம் அதன் நான்கு பிரிவுகள் கொண்ட கண்ணுக்குத் தெரிகின்ற பூமிக்குரிய அரசாட்சியை அடையாளப்படுத்துகிறது.

நாம் முன்னர் பார்த்ததுபோல, "**சமுத்திரம்**" என்னும் அடையாளம் தீமையின் தற்போதைய செல்வாக்கின் கீழுள்ள **உலக மனுக்குலத்தைக்** குறிக்கிறது.

இறுதியாக "**மரம்**" என்னும் அடையாளம் **விசுவாச வீட்டாரைக்** குறிக்கிறது, அவர்கள் ஜீவனுக்கான நீதிமானாக்கப்படுதலைப் பெற்றிருக்கின்றனர் **(சங்கீதம் 1:1 – 3)**

**1 – ஆம் வசனத்தின் இந்தக் கடைசி வார்த்தைகளின் சரியான அர்த்தம் என்ன?**

திரும்பி வந்த கர்த்தர், தமது ஆயிர வருட அரசாட்சியைத் துவக்குவதும், சாத்தானைத் **தெய்வீக வல்லமையைப்** பயன்படுத்தி கட்டுவதும், இதையெல்லாம் **3 – ஆவது வசனத்தில்** விவரிக்கப்பட்டுள்ள **குறிக்கோளை** மனதில் கொண்டு செய்கிறார் என்று தோன்றுகிறது – **(வசனம் – 3)**..."**நாம் நமது தேவனுடைய**

**ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள்."**

**அடுத்த 2 வசனங்களை** ஆராயும்போது, அந்த விவரங்களையும் அர்த்தங்களையும் நாம் ஆராயலாம்!

**ஆக இந்த வார்த்தைகளின் சரியான அர்த்தம் என்ன?**

இது 1874 அக்டோபரில் துவங்கப்பட்ட சாத்தானின் கட்டப்படுதல் செயல்முறை **தொடர்பான தெய்வீக கட்டளைகளுடன்** தொடர்புடையதாகும்! அடுத்த 2 வசனங்கள் இந்த வார்த்தைகளின் அர்த்தம் மற்றும் முக்கியத்துவம் பற்றிய நுண்ணறிவுகளை நமக்கு வழங்கும்.

சாத்தான் கட்டப்படுவதன் ஆரம்பமானது **வெளிப்படுத்தல் 20:1 – இல்,** "**பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக்கொண்டு**" என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளதை நாம் உணரும்போது, **இங்குள்ள இந்த வார்த்தைகள்** சாத்தானைக் கட்டுப்படுத்தும் இந்த வேலைக்கு **ஒரு முறையும்**, **நோக்கமும்** இருப்பதைக் குறிக்கின்றன என்பதைக் காணலாம்! "**பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக்கொண்டு**" என்பது சாத்தானின் அந்தகாரம் மற்றும் பொய்கள் அடங்கிய ஆட்சியை அகற்றுவதற்காக ஒளியின் படிப்படியான மற்றும் தொடர்ச்சியான வெளிப்பாடுகளால் (**ஒரு சங்கிலியின் இணைப்புகளாக**) மனுக்குலத்தின் மீதான அவனது செல்வாக்கும் அதிகாரமும் கட்டுப்படுத்துவதைக் குறிக்கிறது.

**கூடுதலான புரிதல்** அடுத்த இரண்டு வசனங்களில் **சற்றே அப்புறம் பார்க்கப்போகிறோம்**!

**இப்போது நாம் அடுத்த வசனத்துக்கு வரலாம் –**

**வசனம் – 2**

"**ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக் கோலையுடைய வேறொரு தூதன் சூரியன் உதிக்குந்திசையிலிருந்து ஏறிவரக்கண்டேன்; அவன், பூமியையும் சமுத்திரத்தையும் சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம்பெற்ற அந்த நான்கு தூதரையும் நோக்கி:**"

**முன்பே ஆராய்ச்சி செய்தபடி,** இது அக்டோபர் 1874 – இல் நடந்த கர்த்தருடைய இரண்டாம் வருகையைப் பற்றிய குறிப்பாகும்.

**இப்போது** "**ஜீவனுள்ள தேவனுடைய முத்திரை**" **என்பதின் அர்த்தம் என்ன?**

சிலர் இது **ஏழாம் முத்திரை** என்று நினைக்கிறார்கள் ... ஆனால் இது அவ்வாறு

இல்லை, ஏனென்றால் “**நமது தேவனுடைய ஊழியக்காரரின்**” “**நெற்றிகளில் முத்திரைபோட**” இந்த “**முத்திரை**” பயன்படுத்தப்படுவதாக அடுத்த வசனத்தில் வாசிக்கிறோம்.

இந்த “**முத்திரை**” எதைக் குறிக்கிறது என்பதற்கான பதில் பின்வரும் வசனத்தில் காணப்படுகிறது –

**வெளிப்படுத்தல் 14:1**

**“பின்பு நான் பார்த்தபோது, இதோ, சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேரையும் நிற்கக்கண்டேன்.”**

**ஆம்! இந்த “முத்திரை”**

**“தேவனுடைய நாமமே”**

இந்தத் “**தேவனுடைய நாமம்**” அல்லது “**முத்திரை**” தான் “**அவர்கள் நெற்றிகளில்**” எழுதப்பட்டிருந்தது என்பது இப்போது தெளிவாகத் தெரிகிறது ... இது பிதாவாகிய தேவனைப் பற்றிய ஏதோவொரு **அறிவுசார்ந்த புரிதலுக்கான** குறிப்பு என்பதை இது குறிக்கிறது.

**அது என்னவாக இருக்கும்?**

தேவனுடைய வார்த்தையில் பதிவு செய்யப்பட்டுள்ள தேவனுடைய தெய்வீகத் திட்டத்தினுடைய **சத்தியத்தையும்**, அதன் அனைத்து ஆழம் மற்றும் அம்சங்களையும் இது குறிக்கிறது. இந்தச் சத்தியம்தான் நாம் கீழே வாசிக்கும்படி புது சிருஷ்டியை ‘**ஜெநிப்பித்து**’ **உருவாக்குகிறது.....**
**இரண்டையுமே** செய்கிறது –

**யாக்கோபு 1:18**

**“...அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார்...”**

மீண்டும் நாம் வாசிக்கிறோம்...

**யோவான் 17:17**

**“... உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்.”**

ஆனால் இந்தச் சத்தியம் என்பது **வெறும் அறிவு மட்டுமல்ல** … மாறாக, நாம் கீழே வாசிக்கிறபடி, அது தேவனுடைய ஆவியினை ஆதாயப்படுத்துவதாகும் –

யோவான் 14:16, 17

**"…நான் பிதாவை வேண்டிக்கொள்வேன், அப்பொழுது … வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்… உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் … இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது…"**

சத்தியமும், தேவனுடைய பரிசுத்த ஆவியும் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்திருக்கின்றன, இதனால் சத்தியம் என்பது வெறுமனே "**தலையிலிருக்கும் அறிவு**" மாத்திரமல்ல, மாறாக, இது பரமபிதாவின் **மனதையும், தனித்தன்மையையும், நோக்கங்களையும்** வெளிப்படுத்தும் எல்லையற்ற ஒளியின் பெருங்கடலாகும்….

இது "**நல்ல நிலத்தில்**" (மத்தேயு 13:23) அல்லது நல்ல இருதயங்களில், **ஆச்சரியம், பிரமிப்பு மற்றும் பணிந்துகொள்ளுதல்** ஆகியவற்றை வெளிப்படச்செய்யும்; மேலும் குறிப்பாக "**முதற்பேறானவரும்**" **மிகவும் மூத்த சகோதரருமான கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்** முன்மாதிரியில்மிகவும்




அற்புதமாக காட்சிப்படுத்தப்பட்ட பரமபிதாவின் சித்தமும் இதுவென்பதை உணர்ந்த பிறகு, அந்தச் சாயலை அடைய ஏற்படும் **ஒரு தேடல்** மற்றும் **ஏக்கம்** ஆகியவற்றையும் வெளிப்படச் செய்யும்.

சகோ. ஃபிராங்க் ஷேலியு, "The Keys of Revelation" எனும் தனது புஸ்தகத்தில் பக்கம் 190 – இல், இந்த முத்திரையைப் பற்றி பின்வருமாறு எழுதியிருக்கிறார் –

**"முத்திரையிடப்படுவது என்பது – தேவன் மற்றும் அவருடைய வார்த்தையைப் பற்றிய அறிவு, கிறிஸ்து இயேசுவில் இருந்த மனத்தாழ்மை, கிருபையிலும் பரிசுத்த ஆவியின் கனிகளிலும் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சி: சிந்தை மற்றும் இருதயம் இரண்டிலும் நோக்கத்தின் நிலைத்தன்மை மற்றும் குணலட்சணத்தினை உறுதியாக்குதல்; பரம அழைப்பின் இலக்கு அல்லது தரநிலையை அடைதல் மற்றும் அதில் உறுதியாக நிலைநிற்றல்; மரணப்பரியந்தம் உண்மையுள்ளவர்களாக இருத்தல் – இவை போன்றவைகளைத் தற்போதுள்ள வாழ்க்கையில் பெற்றடைவதைக் குறிக்கிறது – இவையனைத்துமே மாம்சீக அனுபவத்தின் திரையைத் தாண்டி மகிமையில் பரிசுத்தவான்களின் பரிசுக்கான தெரிந்துகொள்ளுதலை உறுதியாக்குவதற்கு அவசியமானதாகக் கருதப்படுகின்றன"**

ஆ! ஆம்! "**ஜீவனுள்ள தேவனுடைய முத்திரையின்**" மூலம் 1,44,000 பேர்கள் முத்திரையிடப்படுவார்கள்.

ஆ! இது இரண்டாம் வருகை மற்றும் அந்தக் காலக்கட்டத்தின் சித்திரமாக இருக்கிறதென்றால், **உண்மையில் அப்போஸ்தலர்கள் மற்றும் பெந்தெகொஸ்தே காலங்களிலிருந்து இந்த 144,000 பேர் "முத்திரைபோடப்பட்டு" வருகின்றனர் என்பதை நாம் எவ்வாறு புரிந்துகொள்வது?** என யாராவது கேட்கலாம்.

**4 – ஆம் வசனத்திற்கான** எங்களுடைய **விளக்கத்தில்** இதற்கான பதிலை அளிக்கவுள்ளோம்.

நாம் மேலும் தொடர்வதற்கு முன்பதாக, "**நெற்றிகளில் முத்திரைபோட்டு**" என்றுள்ள குறிப்பிற்கு **மற்றொரு அர்த்தத்தை ஆலோசனையாக முன்வைக்க** விரும்புகிறோம்! தேவனுடைய வார்த்தையிலிருந்து **சத்தியத்தின் அறிவு** மற்றும் **புரிதலின்** முக்கியத்துவத்தை / அர்த்தத்தை நாம் உட்கிரகித்துக் கொண்டிருக்கிறோம், அதேசமயம் இது, புதுசிருஷ்டி மற்றும் அதன் இருப்பிடம் பற்றின குறிப்பாகவும் இருக்கிறது என்று நாங்கள் நினைக்கின்றோம் ...

ஆம்! வார்த்தையின் சத்தியமானது, "**ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதலையும்**" மற்றும் ஆவிக்குரிய சிந்தையின் வடிவத்தில் புது சிருஷ்டியின் கருத்தரித்தலையும் ஏற்படுத்துகிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் அச்சிந்தையானது இப்போது நாம் கீழே வாசிக்கும்வண்ணமாக மாம்ச சரீரத்தில் செயல்பட வேண்டும், வளர வேண்டும்...

**2 கொரிந்தியர் 4:7**

**"இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்."**

இந்தப் "**புது சிருஷ்டி**" அல்லது **புதிய** "**ஆவிக்குரிய சிந்தையின்**" இருப்பிடமானது தலையின் முன்பகுதியில் அல்லது "**நெற்றியில்**" உள்ளது என்று நம்புவதற்கு வலுவான காரணம் நமக்கு உள்ளது, இது கீழே குறிப்பிடப்படுகிற "**பழைய மனுஷன்**" என்று சொல்லப்படும் "**மாம்ச சிந்தை**" உடன் மோதவும் மற்றும் முரண்படவும் / சண்டையிடவும் வைக்கும் –

**கொலோசேயர் 3:9,10**

**"ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய (மனுஷனைத்) தரித்துக்கொண்டிருக்கிறீர்களே."**

(மேலும் – **எபேசியர் 4:22–24 / உரோமர் 6:4–6** – இலும் காணப்படுகிறது)

ஒருவருக்குள் நடக்கும் இந்த உள்ளான "**முரண்**" **யுத்தம்** பற்றி பின்வரும் வசனத்திலும் விவரிக்கப்பட்டுள்ளது

**கலாத்தியர் 5:17**

**"மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது."**

ஆம்! **மாம்ச சரீரத்தின்** மூலம் வெளிப்படும் வெளிப்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக "**நெற்றியில்**" உள்ள "**புது சிருஷ்டியானது**" பழைய சிருஷ்டியுடன் அல்லது "**மாம்ச சிந்தையுடன்**" **போரிடுகின்றது!**
புது சிருஷ்டியை ஆவியினால் "**ஜெநிப்பித்த**" "**சத்திய வார்த்தை**" ஆனது (**யாக்கோபு 1:18**), தொடர்ந்து இந்தப் புது சிருஷ்டியின் **வளர்ச்சிக்கு உணவாக இருந்து வருகிறது,** இந்த முழு செயல்முறையுமே "**நெற்றியில் முத்திரைபோடுதல்**" என்று குறிப்பிடப்படுகின்றது !!

இப்போது நாம் **2 – ஆம் வசனத்திற்குத்** திரும்பவும் வரலாம் –

**"...அவன், பூமியையும் சமுத்திரத்தையும் சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம்பெற்ற அந்த நான்கு தூதரையும் நோக்கி..."**

**இதன் பொருள் என்ன?**

முன்பே பார்த்தபடி, இந்த "**நான்கு தூதர்கள்**" தெய்வீக வல்லமையைக் குறிக்கின்றன. இது இப்போது உன்னதத்திற்கு உயர்த்தப்பட்டுள்ள கர்த்தராகிய இயேசு எனும் "**தூதன்**" அல்லது **பரம பிதாவின் பிரதிநிதி** – எவ்வாறு அந்த வல்லமையைக் **கையாளுகிறார்** என்பதற்கும், எவ்வாறு **முழு கட்டுப்பாட்டில்** வைத்திருக்கிறார் என்பதற்குமான ஓர் அடையாளக் குறிப்பாகும்.

எனவே, இந்தச் சத்தியத்தைக் குறித்து மிகவும் தெளிவாக பின்வரும் வசனத்தில் வாசிக்கின்றோம் –

**எபிரெயர் 1:3**

**"இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், ..., உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார்."**

இப்போது நாம் இந்த "**நான்கு தூதர்கள்**" குறித்து கூறப்பட்டுள்ள பகுதிக்கு வரலாம் –

**"பூமியையும் சமுத்திரத்தையும் சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம்பெற்ற"**

இரண்டாம் உலகத்தையும் அதன் அமைப்புகளையும் துடைத்தெறியப்போகிற இந்த **உபத்திரவக்காலமானது, இங்கே** "**நான்கு தூதர்கள்**" பற்றின **இந்த வார்த்தைகளில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளபடி முற்றிலுமாக** தேவனுடைய அனுமதியுடனும், அவருடைய தெய்வீக அதிகாரத்தினுடைய வல்லமையின் கீழாகவும் எவ்வாறு இருக்கின்றதைக் குறித்து இவ்வாக்கியம் குறிக்கின்றது.

**மீண்டுமாக** இதனை நாம் இப்போது **தொடர்ச்சியான வேத வசனங்களின் மூலம்** காணவிருக்கிறோம், **துவங்கலாம்** –

**மல்கியா 4:6**

**"நான் வந்து பூமியைச் சங்காரத்தால் அடிக்காதபடிக்கு, அவன் பிதாக்களுடைய**

**இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்."**

ஆம்! "**மகா உபத்திரவத்தின் காலம்**" என்பது தம்மிடமிருந்து நேரடியாக வருவதாக தேவன்தாமே பேசியிருக்கிறார்.

**மீண்டுமாக பின்வரும் வசனத்திலும் வாசிக்கிறோம் –**

**வெளிப்படுத்தல் 14:14**

**"பின்பு நான் பார்த்தபோது, இதோ, வெண்மையான மேகத்தையும், அந்த மேகத்தின்மேல் மனுஷகுமாரனுக்கொப்பானவராய் ... ஒருவர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டேன்"**

ஆம்! இங்கே "**மேகம்**" என்பது "**இக்கட்டு நாளுக்கான**" (**செப்பனியா 1:15**) ஓர் அடையாளமாகும்... மேலும் அது **வெண்மையாய் இருப்பது** என்பது அதின் **ஊற்றுக்கண்ணையும், நோக்கத்தையும்** குறிக்கின்றதாய் இருக்கின்றது.

**ஆம்! அது...**

- **தேவனுடையதே..., அது தேவனுடைய அனுமதியைப் பெற்றிருந்தது,**

**மேலும்...**

- **... இது உலக மனுக்குலத்தைப் பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்படுதல் எனும் உன்னத நோக்கத்திற்காகவே இருக்கின்றது.**

**மீண்டுமாக பின்வரும் வசனத்திலும் வாசிக்கிறோம்**

**வெளிப்படுத்தல் 4:6**

**"அந்தச் சிங்காசனத்திற்கு முன்பாகப் பளிங்குக்கொப்பான கண்ணாடிக்கடலிருந்தது....."**

ஆ! ஆம்! இது சர்வவல்லமையுள்ள பரமபிதாவின் நான்கு குணலட்சணப் பண்புகளை நமக்குக் காட்டும் **மிகவும்** பரிச்சயமானதொரு வசனமாகும். நாம் நன்கு அறிந்துள்ளபடி, இந்த **வெளிப்படுத்தல் 4 – ஆம் அதிகாரம் முழுவதுமே**, சர்வமகிமையிலிருக்கும் பரமபிதாவை அடையாளத்தில் விவரிப்பதற்காக **அர்ப்பணிக்கப்பட்டுள்ளது / ஒதுக்கப்பட்டுள்ளது.** அதனால்தான் இந்த

**வெளிப்படுத்தல் 4** – ஆம் அதிகாரத்தைத் “**தேவனுடைய அதிகாரம்**” என்று நாம் பிரியமாக குறிப்பிடுகின்றோம், ஏனெனில் இதில்தான் பிரபஞ்சம் மற்றும் சகல சிருஷ்டிகளின் **மாபெரும் கண்ணுக்குப் புலப்படாத தேவன்** பற்றிய விவரங்கள் அடையாளங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

“**கண்ணாடிக்கடல்**” எனும் இந்தக் குறிப்பிட்ட வார்த்தையானது, முதலாம் இரண்டாம் உலகங்கள் மீது இருந்த **தீமைக்கான அனுமதி** குறித்த தேவனுடைய **முன்னறிவைப்** பற்றின ஓர் அடையாள விளக்கமாகும். “**கடல்**” என்பது தீமையினுடைய செல்வாக்கின்கீழ் இருக்கும் உலகத்திற்கான ஓர் அடையாளமாகவும் (**ஏசாயா 57:20**), “**கண்ணாடி**” என்பது **வெளிப்படைத்தன்மைக்கான** ஓர் அடையாளமாகவும், அதேசமயம் “**பளிங்கு**” என்பது **முழுமையான தெளிவுக்கான** ஓர் அடையாளமாகவும் இருக்கின்றன.

மேலும் மெய்யாகவே தேவன் தீமையின் அனுமதி குறித்து **சகலத்தையும் அறிந்திருக்கிறார்**, இதுகுறித்து நாம் **மிகவும் அப்பட்டமாகவும் தெளிவாகவும்** பின்வரும் வசனத்தில் வாசிக்கின்றோம் –

**தானியேல் 2:22**

“**அவரே ஆழமும் மறைபொருளுமானதை வெளிப்படுத்துகிறவர்; இருளிலிருக்கிறதை அவர் அறிவார்; வெளிச்சம் அவரிடத்தில் தங்கும்.**”

ஆம்! மிகவும் தெளிவாக உள்ளது!

இப்போது, தீமையின் அனுமதி மற்றும் அதற்கான காலத்தைப் பற்றிய தேவனுடைய முன்னறிவினைக் குறிக்கின்ற இந்தக் “**கண்ணாடிக் கடல்**” ஆனது, **சபையின் அறுவடை காலத்தில்** நேரிடும் “**உபத்திரவக் காலம்**” குறித்த வேத வசனத்திலும் காட்டப்பட்டுள்ளது, இதைப்பற்றி நாம் பின்வரும் வசனத்தில் வாசிக்கின்றோம் –

**வெளிப்படுத்தல் 15:2**

“**அன்றியும், அக்கினி கலந்த கண்ணாடிக் கடல்போன்ற ஒரு கடலையும்... கண்டேன்**”

ஆ! அப். “**யோவான்**” விவரிப்பதற்கு **ஆச்சரியமூட்டுகின்றதாய் இருந்திருக்கக்கூடிய** என்னே ஓர் **அடையாளம்** இது!

ஆம்! “**அக்கினி**” என்பது **அக்டோபர் 1874** முதல் நடந்து வருகிற தேவனுடைய **நியாயத்தீர்ப்புகளாகும்**... இது **படிப்படியாக முன்னேறி**, இறுதி மகா உபத்திரவத்தைக் கொண்டு வரும்.

**இறுதியாக ஒரு படத்தைப் பார்க்கலாம் –**

**மத்தேயு 14: 25. 26**

**"இரவின் நாலாம் ஜாமத்திலே இயேசு கடலின்மேல் நடந்து, அவர்களிடத்திற்கு வந்தார். அவர் கடலின்மேல் நடக்கிறதைச் சீஷர்கள் கண்டு, கலக்கமடைந்து...."**



கர்த்தர் கலிலேயா கடலில் நிகழ்த்தின மிகவும் **அர்த்தமுள்ள ஒரு நிழலான படம்** இங்கே உள்ளது....

இது "**கடல்**" அல்லது தீமையின் செல்வாக்கின் கீழிருக்கும் அமைதியற்ற பெருந்திரளான மனுக்குலத்தின் மீது அவர் செலுத்துகின்ற தெய்வீக அதிகாரத்தைக் காட்டுகிறது, இவர் மூலம் தற்போதைய இரண்டாம் உலகத்தின் முழுமையான அழிவு வரும் என்று நாம் கீழே வாசிக்கின்றோம் –

**யோவேல் 2:2, 3**

**"அது இருளும் அந்தகாரமுமான நாள்... ஏராளமான பலத்த ஒரு ஜாதி தீவிரமாக வந்து பரவும்; அப்படிப்பட்டது முன்னொரு காலத்திலும் உண்டானதுமில்லை... அவைகளுக்கு முன்னாக அக்கினி பட்சிக்கும்... அவைகளுக்குப் பின்னாகப் பாழான வனாந்தரத்தைப்போலவும் இருக்கும்; அவைகளுக்கு ஒன்றும் தப்பிப்போவதில்லை."**

ஆம்! இப்படியாக **தேவன் எவ்வாறு தம்முடைய மாபெரும் நீதியும், அன்பும், ஞானமுமான வல்லமை**யைப் பயன்படுத்தி, **அவரது கருவியாம் இயேசு** மற்றும் பல்வேறு முகவர்கள் **மூலம்** இறுதியாக "**மகா உபத்திரவக் காலத்தினைக்**" கொண்டு வருவார் என்பதைக் காண்கிறோம்.

**இவ்வாறு இந்தச் சூழலிலும் பொருளிலும் தான்... இந்த... "நான்கு தூதர்கள்" குறித்து "பூமியையும் சமுத்திரத்தையும் சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம்பெற்ற" என்று குறிப்பிடப்பட்டுள்ளதாக நாம் வாசிக்கிறோம்...**

இங்கே **மீண்டும்**, **வசனம் 1** இன் "**நான்கு தூதர்கள்**" ஐயும், அவர்களைக் குறித்து கூறப்பட்டுள்ள **வசனம் 2** இன் "**பூமியையும் சமுத்திரத்தையும் சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம் பெற்ற**"தையும், இறுதியாக **வசனம் 3** இன் "**...பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள்**" என்கிற வார்த்தைகளையும் வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

அக்டோபர் 1874 – இல் **தமது இரண்டாம் வருகையில்** வந்திருந்து அது முதற்கொண்டு இருந்து வருகிற **கர்த்தராகிய இயேசுவிற்கான** குறிப்பாக இருக்கின்ற **வசனம் 2** – இல் வருகிற "**ஏறிவருகிற வேறொரு தூதன்**" உடைய கட்டுப்பாட்டின் கீழாக இருக்கின்ற தெய்வீக வல்லமையே இந்த "**நான்கு தூதர்கள்**" என நாம் புரிந்துகொண்டிருக்கும் அதேசமயம், இப்படத்தில் விழுந்துபோன தூதர்களுடைய நிலைமையையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்!

**சகோ. ரசல் அவர்களுடைய (வசனம் 1 மற்றும் வசனம் 3 – க்கான) விளக்கவுரையிலிருந்து** பின்வரும் கருத்துக்களை நாம் வாசிக்கலாம் –

- "விழுந்துபோன தூதர்களைத் திடீரென **விடுவிப்பது,** வரவிருக்கும் உபத்திரவத்தின் திடீர்த்தன்மைக்கான காரணமாக இருக்கும்" (R4823/Q738)
- அறுவடை வேலை முடிவடையும் வரையிலும் **தெய்வீக வல்லமையால்** மகா உபத்திரவக்காலமானது **கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்படுகின்றது** (R4822).
- தேவனுடைய ஊழியக்காரர்களின் நெற்றிகளில் முத்திரைபோட்டுத் தீருமளவும், **விரைவில் கட்டவிழ்க்கப்பட்டு**, பயங்கரமான "**புயலை**" உருவாக்கப்போகிற வன்முறையின் காற்றுகள், அடியாதபடிக்கு பிடித்து வைக்கப்பட்டிருக்கின்றன (SM187).
- "**அளவும்...**" தெய்வீக வல்லமையால் பிடித்துவைக்கப்பட்டிருக்கிற அமளி, அராஜகம் என்கிற மகா உபத்திரவக்காலத்தை இந்த அடையாள காற்றுகள் குறிக்கின்றன (R4822).
- **தெய்வீக வல்லமை கட்டுப்படுத்தி வைத்திருக்காவிட்டால்,** பொல்லாத தூதர்கள் என்றைக்கோ அடையாளமான பூமிக்கும், சமுத்திரத்துக்கும், மரத்துக்கும் சேதத்தை உண்டாக்கியிருப்பார்கள் (R4822).

➡ இந்த மேற்கூறிய விளக்கவுரைகளிலிருந்து, அறுவடை வேலை நடைபெற்று

வருகிற **அக்டோபர் 1874 துவக்கி, தெய்வீக வல்லமையைக்** குறிக்கும் "**நான்கு தூதர்கள்**" கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் அந்த "**நான்கு காற்றுகளால்**" விழுந்துபோன தூதர்களுடைய வல்லமையும் செயல்பாடும் குறிப்பிடப்படுகின்றது என்பதை நாம் தெளிவாகக் காண்கிறோம்.

இந்த விழுந்துபோன தூதர்களைக் குறித்து நாம் **2 பேதுரு 2:4 –** இல் **(யூதா 1:6 – இலும்)** நாம் வாசிக்கின்றோம்.

"**பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே (கிரேக்கம் - G5120 – "டார்டரூ / tartaroo") தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து;** "

**[ யூதா 1:6 – "மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று" ]**

நோவா நாளின் ஜலப்பிரளயத்திற்குப் பிற்பாடு, விழுந்துபோன தூதர்களின் இந்தத் தெய்வீகமாக தடைசெய்யப்பட்ட நிலையானது, **அக்டோபர் 1874 – இல் தொடங்கிய கிறிஸ்துவின் கீழான** "**மகாநாளின் நியாயத்தீர்ப்பு**" வரையிலும், அதாவது, ஆயிரமாண்டு நியாயத்தீர்ப்பு (**அப்போஸ்தலர் 17:31**) வரையிலும் அப்படியாகவே இருக்கின்றது என்று இந்த வேதவாக்கியங்கள் நமக்குச் சொல்கின்றன.

**இது எதனை அர்த்தப்படுத்துகின்றது?**

**அக்டோபர் 1874** இல் தொடங்கிய உலகின் **நியாயத்தீர்ப்பு நாள்** மற்றும் சாத்தானுடைய கட்டப்படுதலுடனேகூட, இவையே விழுந்துபோன தூதர்களின் **இறுதி விசாரணைக்கான** (நியாயத்தீர்ப்புக்கான) சூழ்நிலைகளாக இருக்கும் என்கிற உண்மையை இது குறிக்கின்றது, அவர்களில் சிலர் மனந்திரும்பி, தேவனிடம் மன்னிப்பு கேட்பவர்களாய் இருக்கின்றார்கள். சாத்தான் "**கட்டுப்பட்டிருக்கும்**" போதே … இந்த **விழுந்துபோன தூதர்கள்** "**கட்டவிழ்க்கப்படுவார்கள்**" என்பதை இது அர்த்தப்படுத்துகின்றது!

**இதை நாம் ஒரு வேதவாக்கியத்திலிருந்தும், சகோ. ரசல் அவர்களுடைய சில விளக்கங்களிலிருந்தும் புரிந்துகொள்ளுகிறோம்.**

**கொலோசெயர் 1:20**

"**அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று.**"

### யூதா 1:6 – க்கான சகோ. ரசல் அவர்களுடைய விளக்கங்கள்:

- மனித ரூபமெடுத்தல் மற்றும் மனுக்குலத்துடன் தொடர்புகொள்ளுதல் என்பதற்கான வழிகளைக் கண்டுபிடித்து பயன்படுத்துவதற்கான அனுமதியானது, விழுந்துபோன தூதர்களுக்கு விசேஷித்த சோதனையையும் பரீட்சையையும் கொண்டுவரும். அவர்களில் யார் பாவத்திற்காக வருந்தி, இருதயத்தில் இப்போது தேவனுக்கு நேர்மையாக இருக்கிறார்கள், யார் அவ்வாறு இருக்கவில்லை என்பதை இது நிரூபிக்கும். அது மனிதனுடைய உபத்திரவ நாளின் காலகட்டத்திற்குள்ளாகவே நடைபெறும் **(R4070).**

- “**அளவும்**” (யூதா 1:6 – இல்) என்பது நாம் அந்தக் காலத்தை அடையும் போது, கட்டுப்பாடுகள் உடைக்கப்பட்டு, மனிதன் போல ரூபமெடுத்தல் மீண்டும் சாத்தியமாகும் என்பதைக் குறிப்பதாக தெரிகின்றது.**(Q464 / R3490 / R2171).**

இவ்வாறு, மேற்கூறியவற்றிலிருந்து, முடிவாக, தெய்வீக வல்லமையாகிய “**நான்கு தூதர்கள்**” பல்வேறு பிரதிநிதிகளைப் பயன்படுத்தி “**மகா உபத்திரவக் காலத்தை**” கொண்டு வருவதை முற்றிலும் மேற்பார்வையிடுவார்கள் என்று கூற விரும்புகிறோம், அந்தப் பிரதிநிதிகளில் மிகவும் முக்கியமானது, இறுதியான “**சூழற்காற்றைக்**” கொண்டுவரும் “**நான்கு காற்றுகளாகிய**” மனந்திரும்பாத விழுந்துபோன தூதர்களாக இருப்பார்கள்!

**இப்போது நாம் அடுத்த வசனத்துக்கு வரலாம்**

**வசனம் – 3**

**“நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான்.”**

இது நிச்சயமாக, திரும்பி வந்துள்ள கர்த்தராகிய இயேசு, **அக்டோபர் 1874 – ஆம் ஆண்டுத்துவக்கி** பூமியின்மேல் செலுத்தி வருகிற **தெய்வீக வல்லமை** மற்றும் **அதிகாரத்தைக்** குறித்து **2 – ஆம் வசனத்தில்** நாம் வாசித்தவற்றின் தொடர்ச்சியாகும்..

**மேலும் கட்டுப்பாட்டின் நோக்கம் இங்கே விளக்கப்பட்டுள்ளது…**

ஆம்! **பிரதான அறுவடையாளராக,** அக்டோபர் **1874** – இல் பிரசன்னமாகியிருந்த நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையுடன் துவங்கிய “**முத்திரைப் போடப்படுதலின்**” வேலையினை அல்லது சுவிசேஷ யுகத்தின்

**அறுவடையினை செயல்படுத்துவதே** அந்நோக்கமாக இருக்கின்றது.

**ஓ! ஆம்! வெளிச்சமானது “அந்தகார” உலகத்தின் கிரியைகளை வெட்டவெளிச்சமாக்கவும் பட்சிக்கவும் துவக்கும்போது, சாத்தான், அவனது தூதர்கள் மற்றும் மனிதர்கள் என்பவர்களுடைய கொந்தளிப்பான உணர்ச்சிகளும், சீற்றமும், மகிமையில் கிறிஸ்துவின் சரீரம் நிறைவடைய வேண்டிய முக்கியமான பணியில் குறுக்கிடவோ இடையூறு செய்யவோ அனுமதிக்கப்படாது.**

நாம் இப்போது பின்வரும் வார்த்தைகளுக்கு நம் கவனத்தைக் கொண்டு வரலாம் –

**“...முத்திரைபோட்டுத் தீருமளவும்...”**

முதலாவதாக, “**அளவும் (till)**” என்கிற வார்த்தையானது, இரண்டாம் உலகத்தைத் துடைத்தெறியும் **சுழற்காற்றை** அல்லது “**மகா உபத்திரவக் காலத்தை**” ஏற்படுத்தும் நான்கு காற்றுகள் வீசப்படும் காரியமானது, அறுவடை முடிந்து, சபை நிறைவடைந்த **பின்னர் மட்டுமே அதின் கிரியையைச் செய்ய அனுமதிக்கப்படும்** என்பதை நமக்குத் தெளிவாகக் கூறுகின்றது.

இதனைப் **பின்வரும் இரண்டு வசனங்களிலிருந்து** உறுதியுடன்/நம்பிக்கையுடன் நாம் உணர்கிறோம் –

**மல்கியா 3:17**

**“என் சம்பத்தை நான் சேர்க்கும் அந்நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ்செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறதுபோல நான் அவர்களைக் கடாட்சிப்பேன்.”**

**இதைப்பற்றி** மீண்டுமாக பின்வரும் வசனத்தில் **வாசிக்கிறோம் –**

**லூக்கா 21:36**

**“ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்.”**

ஆ! ஆம்! அதிலுள்ள முக்கியமான வார்த்தைகள் பின்வருபவைகளே –

**“அவர்களைக் கடாட்சிப்பேன்”**

**மற்றும்...**

**“தப்பிக்கப்... பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு....”**

**ஆ! மிகவும் தெளிவாக உள்ளது!**

**இப்போது, கீழுள்ள வார்த்தைகளின் அர்த்தம் என்ன என்பதைப் பார்க்கலாம் –**

**“நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோட்டு”**

இங்கு கர்த்தராகிய இயேசுவே பேசுகிறார் என்பதையும், அவர் “**நாம்**” என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். சரி, “**நாம்**” என்று கூறி – இந்தக் கிரியையில் கர்த்தர் தம்முடன் சேர்த்துக் கூறும் மற்றவர்கள் **யார்?**

இங்கு கர்த்தர் குறிப்பானவகையில், இந்த “**முத்திரைபோடுதலின்**” வேலையில் தாம் பயன்படுத்தும் மற்றொரு **நபரைக்** குறித்து பேசுகிறார் என்று நாங்கள் அறிவுறுத்துகிறோம்!

ஆம்! அதற்கான பதிலைக் கீழே காண்கிறோம் –

**எசேக்கியேல் 9:4**

**“கர்த்தர் அவனை நோக்கி: நீ எருசலேம் நகரம் எங்கும் உருவப்போய், அதற்குள்ளே செய்யப்படுகிற சகல அருவருப்புகளினிமித்தமும் பெருமூச்சுவிட்டழுகிற மனுஷரின் நெற்றிகளில் அடையாளம் போடு என்றார்.”**


ஆம்! இது இரண்டாம் வருகையின் காலமான அக்டோபர் 1874 – க்குப் **பிறகு** கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடமிருந்து “**சணல்நூல் அங்கிதரித்து, தன் அரையில் கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருக்கிற ஒரு மனுஷன்**” பெற்றுக்கொண்ட **விசேஷித்த பொறுப்புரிமையாகும் / கட்டளைப் பணியாகும்.**

ஆம்! “**இஸ்ரயேலின் தேவனுடைய மகிமை**” – இடமிருந்த !

ஆ! ஆம்! இது நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் வலதுகரத்தில் ஏழாம் “**நட்சத்திரம்**” ஆகவும், ஏழாம் சபைக் காலக்கட்டமான லவோதிக்கேயாவின் **தூதனாகவும்** இருந்த

**பாஸ்டர் சார்லஸ் டேஸ் ரசல்**

அவர்களையே குறிக்கின்றது!



ஆனால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏழாம் சபையின் தூதரான சகோ.ரசல் அவர்கள் எப்படி கர்த்தராகிய இயேசுவுடன்கூட **இந்த மாபெரும் அறுவடை வேலையினைச் செய்ய** சென்றிருப்பார்?

**அதற்கான பதிலைக் கீழே வாசிக்கிறோம் –**

**ஆபகூக் 2:2**

**"அப்பொழுது கர்த்தர் எனக்குப் பிரதியுத்தரமாக: நீ தரிசனத்தை எழுதி, அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படிப் பலகைகளிலே தீர்க்கமாக வரை."**

**ஆம்! சகோ. ரசல் அவர்கள் பின்வருவனவற்றை எழுதியுள்ளார் –**

- **வேதாகமப் பாடங்களின் ஆறு தொகுதிகள்**

**மற்றும்**

- **விசேஷித்த பலிகளின் ஆசரிப்புக்கூடார நிழல்கள்**

**இது தான் "முத்திரைபோடப்படுதல்" நிறைவேறிவருவதற்கான வழிமுறையாக இருந்துள்ளது இன்னமும் இருக்கின்றது. இவ்வாறு கூறப்பட்ட மற்றும் கர்த்தரால் குறிப்பிடப்பட "நாம்" என்பது, பிரதான அறுவடையாளராகிய கர்த்தருக்கும், "அறுவடையின் செய்தி" என்றழைக்கப்படும் தன்னுடைய எழுத்துக்களுடன் கர்த்தரின் கருவியாகயிருந்த சகோ.ரசல் அவர்களுக்குமான ஒரு குறிப்பாகும்.**

(எவ்வாறு கர்த்தராகிய இயேசு, தமது இரண்டாம் வருகையில், "**தேவ எக்காளமான**" **(1 தெசலோனிக்கேயர் 4:16) அறுவடையின் செய்தியைச்** சுமந்து வந்தார் என்பது பற்றியும், எவ்வாறு அவரது மனித கருவியாக **சகோ.ரசல்** இருந்தார் என்பது பற்றியும், எவ்வாறு அவர்கள் இருவரும் ஒன்றிணைந்து செயல்பட்டார்கள் என்பது பற்றியுமான மிக **அற்புதமான விவரங்கள் வெளிப்படுத்தல் 10 – ஆம் அதிகாரத்தில் வசனம் - 2 மற்றும் 3 –** இல் காணப்படுகின்றன)

இதுகுறித்த தெளிவான குறிப்பானது பின்வரும் வசனத்தில் நமக்குக் காணப்படுகின்றது -

**சகரியா 13:7**

**"பட்டயமே, என் மேய்ப்பன்மேலும் என் தோழனாகிய புருஷன்மேலும் எழும்பு என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்..."**

ஆம்! சகோ.ரசல் அவர்கள்தான் இங்கே "**என் தோழன்**" என்று குறிப்பிடப்படுகிறார்.

ஆம்! குறிப்பாக "**நாம் முத்திரைபோட்டுத் தீருமளவும்**" என்பதன் மூலம், மேற்கொள்ளப்பட வேண்டிய முத்திரைபோடுதலின் வேலை பற்றிய குறிப்பின் வெளிச்சத்தில் உள்ள இந்த **வெளிப்பாட்டின்** பயன்பாடு எவ்வளவு **ஆழமானதாய்** இருக்கின்றது!

**வெளிப்படுத்தல் 7:3** எனும் இந்த வசனத்திற்கான **வேதாகம விளக்கவுரைக்கு (EBC) இந்தச் சந்தர்ப்பத்தில்** வாசகரின் கவனத்தை ஈர்ப்பது சரியானதாயிருக்கும்...

**"நாம் ... அளவும்" – தேவனுடன் முழு இசைவிலுள்ளவர்களே அவருடைய ஊழியர்களாக இருக்க முடியும் (R4880:5). தெரிந்துகொள்ளப்பட்டவர்களைக் கூட்டிச்சேர்த்து, சத்தியத்தின் அறிவைக் கொண்டு நெற்றியில் (அறிவுப்பூர்வமாக) முத்திரையிடும் ஒரு முக்கியமான பணி, திரைக்கு இப்பக்கத்தில் இருப்பவர்களுக்கு இருக்கின்றது. (C303) பரிசுத்தவான்களின் முத்திரைபோடுதல் முடிந்தவுடன், நான்கு காற்றையும் (பிடித்து) வைத்திருக்கும் இந்த நான்கு தூதர்களும் அவற்றை அவிழ்த்து விடுவார்கள். (R4880:5 / 519:5)**

**சகோ. ரசல்** அவர்களின் விளக்கங்கள், "**நாம்**" என்பவர்களின் இந்தப் பணியில் "**நெற்றிகளில் முத்திரைபோடும்**" **அறுவடைப் பணியில் பரிசுத்தவான்களை உள்ளடக்கியிருக்கும்** என்று சுட்டிக்காட்டும் அதேவேளையில், இந்த வேலையைச் செய்வதற்கான வழிமுறைகள் அல்லது "**முத்திரை**" அல்லது **சத்தியத்தின்** "**அரிவாள்**" – என்பது சகோ. ரசல் அவர்களின் **எழுத்துக்களே** என்பதை நாம் உடனடியாக உணர்கிறோம்.

ஆகவே, "**நாம்**" என்பது **முதன்மையான அர்த்தத்தில் கர்த்தராகிய இயேசு** மற்றும் **சகோ.ரசல்** ஆகியோரையும், **இரண்டாம்நிலை அர்த்தத்தில்** அனைத்து **அறுவடை ஊழியக்காரர்களையும்** குறிக்கின்றது.

நிச்சயமாக, சகோ.ரசல் அவர்கள் இந்த "**நாம்**" என்பதின் **முதன்மை** அர்த்தத்தில், அதன் நிறைவேற்றமாக **தன்னைச் சுட்டிக்காட்டுவார்** என்று எதிர்பார்க்க முடியாது !!

**இப்போது நாம் அடுத்த வசனத்துக்கு வரலாம் –**

**வசனம் – 4**

**"முத்திரைபோடப்பட்டவர்களின் தொகையைச் சொல்லக்கேட்டேன்; இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரைபோடப்பட்டவர்கள் இலட்சத்துநாற்பத்து நாலாயிரம்பேர்."**

ஆ! யோவான் "**முத்திரைபோடப்பட்டவர்களின் தொகையைச் சொல்லக்கேட்ட**" முக்கியமான தகவல் இங்கே வருகின்றது! அவர்கள் முத்திரைபோடப்பட்டதை அவர் பார்க்கவில்லை!

**இது உண்மையே!**

ஏனென்றால், இங்கே "**யோவான்**" என்பவர், இயேசுதாமே விவரித்து குறிப்பிட்ட **ஒரு வகுப்பாரைக் குறிக்கின்றார் –**

**யோவான் 21:22**

**"அதற்கு இயேசு: நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன..."**

ஆம்! "**யோவான்**" என்பவர், அக்டோபர் 1874ல் நிகழ்ந்திட்ட இரண்டாம் வருகைக்குப் **பிறகும்**, தொடர்ந்து மாம்சத்தில் தரித்திருக்கின்ற அல்லது "இருக்கின்ற" லவோதிக்கேயா சபையைக் குறிக்கின்றார்.




ஆம், மெய்யாகவே! இது **1874 – க்குப் பிறகுதான்**, ஏழாம் தூதரான **சகோ.ரசல்** அவர்களுடைய ஊழியத்தின் மூலமாகவும், குறிப்பாக அவரது **எழுத்துக்களாகிய**

**தொகுதி – 3 – "உம்முடைய இராஜ்யம் வருவதாக"**

**மற்றும் ...**

**தொகுதி – 6 – "புது சிருஷ்டி"**

ஆகியவற்றின் மூலமாகவுமே லவோதிக்கேயா சபை அல்லது "**யோவான்**" வகுப்பார், "**மணவாட்டி**" குறித்தும், "**முத்திரைபோடப்பட்டவர்களின் தொகை**" குறித்தும்கூட உள்ள **விவரங்களையும் ஆழத்தையும் புரிந்துகொள்ளத் துவங்கினார்கள்.**

இந்த "**முத்திரைபோடுதல்**" ஆனது, இந்தக் காலகட்டத்தில் துவங்கவில்லை, மாறாக பரிசுத்த ஆவியின் ஊற்றப்படுதலுடன் **பெந்தெகொஸ்தே நாளன்றே துவங்கிவிட்டதென்பதையும்**... ஆனால், இங்கு அறுவடை காலத்தின்போது நடந்திட்ட அந்த **முத்திரைபோடுதல் வேலையின் இறுதியான படங்களாக** விவரிக்கப்படுகின்றன என்பதையும் இது குறிக்கின்றது.

சபைக்கு அதின் முதல் ஆறு காலகட்டங்கள் ஒவ்வொன்றிலும் அவற்றின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் சத்தியமானது எப்போதுமே வழங்கப்பட்டிருந்தது... ஒவ்வொரு சபைக்கும் அதன் "**ஏற்றக்கால போஜனம்**" கிடைக்கப்பெற்றிருந்தன, அது அவர்களுக்கு **அக்காலத்திற்கே உரிய சத்தியமாக** இருந்தது... உதாரணமாக, "பாவமன்னிப்பு" (**ரோமர் 1:17**) என்கிற மாபெரும் சத்தியம் **மார்ட்டின் லூதருக்கும், ஆறாம் சபையான** பிலதெல்பியாவுக்கும் ஏற்றக்கால போஜனமாக இருந்தது...

**இவ்வாறு சகோ.ரசல் அவர்கள் இதனை R5232 – இல் பின்வருமாறு விவரிக்கின்றார்**

**..."தெரிந்துகொள்ளப்பட்டவர்களை முத்திரைப்போடும் காரியமானது கிட்டத்தட்ட பத்தொன்பது நூற்றாண்டுகளாக நடந்து வருகின்றது"...**

ஆனால் நம்முடைய கர்த்தராகிய இயேசு என்னும் இந்தத் "**தூதரின்**" கைகளில் உள்ள "**ஜீவனுள்ள தேவனுடைய முத்திரை**" என்றுள்ள படமானது, நாம் கீழே வாசிக்கும்படிக்கு இந்தக் காலத்தைக்குறித்த மிகவும் சிறப்பானதொரு காரியமாக இருக்கின்றது

**வெளிப்படுத்தல் 10:6 (தமிழில்)**

**"ஆனாலும் தேவன் தம்முடைய ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளுக்குச் சுவிசேஷமாய் அறிவித்தபடி, ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிறபோது தேவரகசியம் நிறைவேறும்...."**

ஆம்! தெய்வீகத் திட்டத்தின் முழுமையான வெளிப்பாடும், புரிதலும் கொடுக்கப்பட வேண்டியதாயிருந்தது! இந்த "**ஜீவனுள்ள தேவனுடைய முத்திரை**" தான், **1 தெச. 4:16** – இல் "**தேவ எக்காளம்**" என்றும் குறிப்பிடப்படுகிற "**ஏழாம் எக்காளம்**" ஆகும். இது **வெளிப்படுத்தல் 10 – ஆம் அதிகாரத்தில்** "**சிறு புஸ்தகம்**" என்றும் அழைக்கப்படுகிறது. ஆம், இது அறுவடையின் செய்தி என்றும் குறிப்பிட முடியும்!

ஆகவே, நாம் இப்போது கற்றுக்கொண்ட அனைத்தின் வெளிச்சத்திலும், **3 – ஆம் வசனத்தில்** காணப்படுகிற குறிப்பானது பின்வருமாறு மொழிபெயர்க்கப்படுவது மேம்பட்டதாக இருக்கும் என்பது **தெளிவாகிறது** –

> **"நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் (முத்திரைபோடுதலை நிறைவேற்றித்தீருமளவும்)"**

ஆம்! **1,44,000** எண்ணிக்கையிலான இந்த **வகுப்பாரைக்** கண்டுபிடித்து "**முத்திரையிடும்**" இந்த நீண்டகாலப் பணியின் **முடிவான/நிறைவான** படங்கள்!

**4 – ஆம் வசனத்திற்கு** மீண்டும் வருகையில், இப்போது நாம் அந்த வசனத்தின் கடைசிப் பகுதியைக் கவனிக்கலாம் –

> **… "இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும்."**

இந்த வார்த்தைகளின் பயன்பாடானது, பெயர்க்கிறித்தவ அமைப்பினுடைய பெரும்பான்மையானவர்களின் "கண்களை" **அதில் உள்ள மாபெரும் சத்தியத்திற்கு மூடச்செய்து**, இது மாம்சீக இஸ்ரயேல் தேசத்திற்கும், அவர்களின் 12 கோத்திரங்களுக்குமான ஒரு குறிப்பு என நினைக்கச் செய்தது!

ஆனால் **வெளிப்படுத்தலின் 7 – ஆம் அதிகாரத்தில்** பட்டியலிடப்பட்டுள்ள பன்னிரண்டு கோத்திரங்களின் பெயர்களை **ஆதியாகமத்தின் 49 – ஆம் அதிகாரத்தில்** உள்ள யாக்கோபின் பன்னிரண்டு குமாரர்களின் பட்டியலுடன் ஒப்பிட்டுப் பார்த்து, எளியதொரு **ஆராய்ச்சியை** மேற்கொண்டாலே, அவை ஒரே மாதிரியாக இல்லை என்பதை உடனடியாக வெளிப்படுத்தி விடும்!

> **யாக்கோபின் குமாரர்களில் ஒருவரும், இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரங்களில் ஒன்றுமான தாண் கோத்திரமானது வெளிப்படுத்தல் பட்டியலில் காணப்படுவதில்லை, அதேசமயம் யாக்கோபின் பேரனும், யோசேப்பின் குமாரனும், ஒரு கோத்திரமாய் இராதவருமான மனாசே, வெளிப்படுத்தல் 7 – ஆம் அதிகாரத்தின் பதிவில் தாணின் இடத்தைப் பிடித்துள்ளார் என்பதாகக் காணப்படுகின்றது.**

சொல்லர்த்தமாக, மாம்சீக இஸ்ரயேலில் **இதுபோன்ற எந்தவொரு நிகழ்வும்** நடக்கவில்லை!

ஆகவே, இந்த **வெளிப்படுத்தல் 7 – ஆம்** அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இஸ்ரயேலும் அதின் "**கோத்திரங்களும்**" கீழேயுள்ள வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள **மற்றொரு இஸ்ரயேலைக்** குறிப்பதாக நாம் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது

**கலாத்தியர் 6 : 15,16**

**"கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; புது சிருஷ்டியே காரியம். இந்தப் பிரமாணத்தின்படி நடந்துவருகிறவர்கள் எவர்களோ, அவர்களுக்கும், தேவனுடைய இஸ்ரவேலருக்கும், சமாதானமும் இரக்கமும் உண்டாயிருப்பதாக."**

ஆம்! இந்த "**தேவனுடைய இஸ்ரயேலர்**" என்பவர்கள் ஆவிக்குரிய இஸ்ரயேலர் ஆவார்கள், இவர்களுக்கு மாம்சீக இஸ்ரயேல் தேசம் ஒரு நிழலாக (Shadow & Type) இருந்தது.

**இறுதியாக** "**இஸ்ரயேல் புத்திரர்**" என்ற வார்த்தைகளின் பயன்பாடு பற்றிய ஒரு கருத்தைக் குறித்து பார்க்கலாம்.

நிச்சயமாக இது சொல்லர்த்தமானது அல்ல! சிறு பிள்ளைகள் இங்கே "**முத்திரைபோட**"ப்படவில்லை! இங்கே "**புத்திரர்**" பற்றிய குறிப்பானது சரீரரீதியாக அல்லாமல், "**இவ்வளவு பெரிதான இரட்சிப்பில்**" ஆவிக்குரியரீதியில் "புத்திரராய்" இருப்பவர்களைக் குறிக்கின்றது.

**இப்பதிவினில், யாரெல்லாம் "முத்திரைபோடப்பட்டு", "பரம அழைப்புக்கு" ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுகிறார்களோ அவர்கள் அனைவரும் [ஆவிக்குரிய ரீதியில்] புத்திரராக இருக்கின்றார்கள்.**

இவ்வாறு இயேசு தம்முடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, ஆவியில் பிறந்திட்ட நிலையில் முழு "**புதுச்சிருஷ்டியின்**" வளர்ச்சியை அடைந்தவராய், சீஷர்களைச் சந்தித்தப்போது, நாம் கீழே வாசிப்பதுபோன்ற **வகையில்** அவர்களை அழைத்தார்

**யோவான் 21:5**

**"இயேசு அவர்களை நோக்கி: பிள்ளைகளே, புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா? என்றார்…"**

தன்னுடைய பூரண முதிர்வயதில், முழு **“புதுச்சிருஷ்டியின்”** வளர்ச்சியை அடைந்தவராய் **அப்போஸ்தலர் யோவானும்** கூட, சபைக்கு எழுதும்போது **இதைப்போலவே எழுதுகிறார்** –

**1 யோவான் 5:21**

**“பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்வீர்களாக.”**

ஆம்! **“பிள்ளைகள்”** எனும் குறிப்பானது ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, அதன் மூலமாக **“புதிய சிருஷ்டிகளாக”** வளர்ச்சியடைவதில் உள்ள ஆரம்பக்கட்டத்தைக் குறிக்கின்றது!

மேலும் இந்த வசனமானது, **வெளிப்படுத்தல் 7:3**ல் வருகிற **“முத்திரைபோடப்படுதல்”** எனும் குறிப்பானது ஒரு **“புதுச்சிருஷ்டியின்”** ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதல் செயல்முறையின் **ஆரம்பத்தினைக்** குறிக்கின்றது என்பதற்கான குறிப்பிடத்தக்க ஆதாரமாக இருக்கின்றது – இந்த ஜெநிப்பிக்கப்படுதல் செயல்முறையானது 1,44,000 எனும் எண்ணிக்கை நிறைவடைந்தவுடன் **“நாம் … முத்திரைபோட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள்”** எனும் காரியம் அனுமதிக்கப்படுவதற்கு வழிவகுத்திடும்.

**(ஆவிக்குரிய நிலைகளில் இந்த ஆரம்பக்கட்ட “குழந்தை” பருவத்தையும், அடுத்து வருகிற “பிள்ளை” பருவத்தையும், அதற்கு அடுத்து வருகிற “முதிர்ந்த/கனிந்த” பருவத்தையும் குறித்து மார்ச் 9ம் தேதி இனிய இரவின் கீதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.)**

இந்த விஷயத்தின் ஒரு அழகான உருவக (**கலாத்தியர் 4:24 – “தொடர் உருவகம்” – திருவிவிலியம்**) சித்திரமானது **மாற்கு 10:13 – 16** ஆகிய வசனங்களில், அதிலும் குறிப்பாக **வசனம் – 14** இல் உள்ள வார்த்தைகளில் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது

**“சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது”**

ஆம்! இயேசுவின் அண்டை சேர்வதற்குப் பிரயாசைப்படும் இந்த **முதல் சிறு பிள்ளைகளின் வகுப்பாரே, “இராஜ்ய”** வகுப்பாரே – சபையையும் அவர்களுடைய **“இவ்வளவு பெரிதான இரட்சிப்பு” வாய்ப்பின்** ஆரம்பக் கட்டத்தையும் அடையாளப்படுத்துவதாகக் கூறப்படுகின்றது!

ஆம்! **“தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது”**

நிச்சயமாகவே இந்த வார்த்தைகளுக்கு அதிக ஆழம் இருப்பதோடுகூட, கற்றுக்கொள்ளப்பட வேண்டியதற்கான பல பாடங்களும் உள்ளது. ஆனால் எப்படி பிள்ளைப் பருவம் என்பது முதிர்ச்சியும் முழு வளர்ச்சியும் இல்லாத வாழ்க்கையின் ஆரம்ப வளர்ச்சிக் காலமாக இருக்கின்றதோ, அதுபோல இங்கேயும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக "புதுச்சிருஷ்டி"களாக இருப்பதற்காக **ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுடைய ஆரம்பத்திலிருக்கும்** அந்த ஆவிக்குரிய நிலைமையைக் காண்பிக்கிறதற்காய்க் கொடுக்கப்பட்டுள்ளது!

மேலும் அடுத்துள்ள **(மாற்கு 10ம் அதிகாரம்) 15ம் வசனத்தில்**, தங்களுடைய இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும் காலத்தின்போது இருக்கப்போகிற, அதாவது, "நித்திய ஜீவன்" எனும் வாய்ப்புக்கான தங்களுடைய பிரயாணத்தின் துவக்கக்கட்டத்தில் இருக்கப்போகிற **உலக மனுக்குலத்திற்கான** குறிப்பொன்று உள்ளது.

இப்போது நாம், தங்களுடைய நாமத்துடன் "**முத்திரைபோடப்பட்ட**" **பன்னிரண்டு கோத்திரங்களையும்**, ஒவ்வொன்றிலும் 12,000 பேர் இருந்தனர் என்பதையும் விவரிக்கின்ற **வெளிப்படுத்தல் 7:5 – 8** – எனும் வசனப்பகுதியை வாசிக்கலாம்.

**வசனம் – 5-8**

**"யூதா கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். ரூபன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். காத் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். ஆசேர் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். நப்தலி கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். மனாசே கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். சிமியோன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். லேவி கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். இசக்கார் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். செபுலோன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். யோசேப்பு கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். பென்யமீன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம்."**

**12 கோத்திரங்களில் உள்ள இந்த 12,000 மொத்தம் 144,000ஐ உருவாக்குகின்றது,** இது தேவனுடைய சித்தத்தின்படி, நிலையானதும், முன்னரே தீர்மானிக்கப்பட்டதுமான எண்ணிக்கையாகும்.

இப்போது இந்தப் பன்னிரண்டு கோத்திரங்களின் நாமங்கள் அதிக முக்கியத்துவத்தைக் / அர்த்தத்தைக் கொண்டுள்ளன, மேலும் அடிப்படையில் ஆவிக்குரிய இஸ்ரயேலிலுள்ள **பன்னிரண்டு குணவாரியான பிரிவுகளை** வெளிப்படுத்துகின்றன, நாம் இங்கு அதைக் குறித்து மிகவும் ஆழமாய்ப் பார்க்கப்போவதில்லை. மாறாக பின்வருமாறு காரியமானது சுருக்கமாக கொடுக்கப்பட்டுள்ளது.

| ஆதியாகமம் 49ம் அதிகாரத்தில் பட்டியலிடப்பட்டுள்ள இஸ்ரயேலின் கோத்திரங்கள் (யாக்கோபின் குமாரர்) | வெளிப்படுத்தல் 7ம் அதிகாரத்தில் பட்டியலிடப்பட்டுள்ள இஸ்ரயேலின் கோத்திரங்கள் (ஆவிக்குரிய இஸ்ரயேல்) | |
|---|---|---|
| 1. ரூபன் | 1. யூதா | (4) |
| 2. சிமியோன் | 2. ரூபன் | (1) |
| 3. லேவி | 3. காத் | (8) |
| 4. யூதா | 4. ஆசேர் | (9) |
| 5. செபுலோன் | 5. நப்தலி | (10) |
| 6. இசக்கார் | 6. மனாசே | (7) |
| 7. தாண் (X) → | 7. சிமியோன் | (2) |
| 8. காத் | 8. லேவி | (3) |
| 9. ஆசேர் | 9. இசக்கார் | (6) |
| 10. நப்தலி | 10. செபுலோன் | (5) |
| 11. யோசேப்பு | 11. யோசேப்பு | (11) |
| 12. பென்யமீன் | 12. பென்யமீன் | (12) |

**முந்தைய பக்கத்தில் உள்ள விளக்க அட்டவணையையும், யாக்கோபுடைய பன்னிரண்டு குமாரர்கள்** பற்றிய இரண்டு பட்டியல்களையும், இங்கே வெளிப்படுத்தலில் **தாணுக்குப்** பதிலாக **மனாசே** கொடுக்கப்பட்டுள்ள வேறொரு வரிசைப்பட்டியலையும் பார்க்கும்போது, இது வெளிப்படுத்தல் புத்தகம் என்பதையும், இது **அடையாள** பாஷையில் எழுதப்பட்டது என்பதாக பார்க்கப்படவும் புரிந்துகொள்ளவும் வேண்டும் என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்!

பன்னிரண்டு கோத்திரங்கள் மற்றும் அவர்களின் **பெயர்கள்** மற்றும் **வரிசை**யின் பட்டியலிலிருந்து **நாம் பல பாடங்களையும் சத்தியங்களையும் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது!**



... இது **ஆவிக்குரிய இஸ்ரயேல்** ஆகும், மேலும் பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் கொடுக்கப்பட்ட நாமங்கள் இந்த ஒவ்வொரு கோத்திரப் பிரிவுகளின் **குணாதிசய** பண்புகளையும், **கிரியைகளின் பலனையும்** விவரிப்பதற்கான அடையாளமாக உள்ளன என்பதே முதலாம் பாடமாக இருக்கின்றது. ஆதியாகமம் 49ம் அதிகாரத்தில் யாக்கோபு தனது ஒவ்வொரு குமாரரிடமும் பேசிய வார்த்தைகளையும், அகராதியில் கொடுக்கப்பட்டுள்ள பெயர்களுடைய அர்த்தங்களையும் ஆராய்வதன் மூலம் இதைப் பற்றிய **அறிவினை** நாம் பெற்றுக்கொள்ளுவோம்.

"**நீங்களும் பன்னிரண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பீர்கள்**" **(மத்தேயு 19:28)** எனப் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒவ்வொருவரையும் குறித்து கர்த்தர் பேசுகிறார் என்பதும், புதிய எருசலேம் ("**பரிசுத்த எருசலேமாகிய மகா நகரம்**") பன்னிரண்டு அப்போஸ்தலரின் நாமங்கள் பதிந்திருந்த "**பன்னிரண்டு அஸ்திபாரக் கற்களை**" கொண்டிருந்தது **(வெளிப்படுத்தல் 21:14)** என்பதும் இந்த **ஆவிக்குரிய இஸ்ரயேலின்** பன்னிரண்டு கோத்திரத்தின் ஒவ்வொரு கோத்திரமும் ஒரு அப்போஸ்தலரால் தலைமை தாங்கப்படும் என்பதை நமக்குப் பரிந்துரைக்கின்றது.

**நாங்கள் இங்கு இரண்டு அப்போஸ்தலர்களின் அடையாளத்தை பரிந்துரைத்துள்ளோம் மேலும்... மீதமுள்ளவர்களைப் பற்றி நீங்கள் ஆராய்ந்துபார்க்கும்படிக்குக் கேட்டுக்கொள்கிறோம்!**

அந்த ஆவிக்குரிய இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரங்கள் தொடர்பான நாமங்களைக் குறித்து சுருக்கமான சத்திய பாடங்களை நாம் இப்போது கற்றுக்கொள்ளப்போகிறோம்

## நாமங்களின் அர்த்தமும் குணாதிசயங்களும்

| | |
|---|---|
| **1. யூதா** (ஆதியாகமம் 49:8) "**புகழப்படுபவன்**" விசேஷமான வகுப்பார், அவர்களது ஜீவியம் தேவனுக்குப் புகழ்ச்சியைக் கொண்டுவரும். **அப்போஸ்தலனாகிய பவுலே யுக** முழுவதும் இருக்கின்ற மாபெரும் அங்கத்தினரடங்கிய இந்தக் கோத்திரத்துக்குத் தலைமை தாங்குகிறவராய் இருக்கின்றார்! | **2. ரூபன்** (ஆதியாகமம் 49:3) "**விசேஷமானவன்**" ஐந்து தாலந்துகள் கொண்ட வகுப்பார்! ஆம்! பரிசுத்தவான்களின் இந்த வகுப்பார் **நேரம், ஆரோக்கியம், செல்வம், அறிவுத்திறன், செல்வாக்கு** ஆகியவற்றைப் பெற்றிருப்பதோடுகூட, தேவ ஊழியத்துக்கென்று அவைகளைக் கொடுப்பதற்கும் அவர்களால் முடியும். |
| **3. காத்** (ஆதியாகமம் 49:19) "**ஏராளமாகிறது**"/"**நல்ல வளம்**" "**பிள்ளைப்பேற்றினாலே**" **(1 தீமோத்தேயு 2:15)** தங்கள் பிள்ளைகளைச் சத்தியம் மற்றும் நீதியின் பாதையில் வளர்த்திடும் ஆசீர்வாதமான வேலையில் இருக்கும் சகோதரிகளைக் குறித்திடும். அநேகமாக **அப்போஸ்தலனாகிய யோவான்** இந்த "கோத்திரத்துக்கு" தலைமை தாங்குகிறவராக இருக்கலாம், இதில் மிகவும் **உயர்ந்த கனத்துக்குரிய** அங்கத்தினராக இயேசுவின் தாயாகிய மரியாள் இருப்பார் என்று நாங்கள் நம்புகிறோம்! **(அப்போஸ்தலர் 1:13,14)** | **4. ஆசேர்** (ஆதியாகமம் 49:20) "**மகிழ்ச்சி**" வாழ்க்கையில் போராட்டங்கள் இருக்கின்றபோதிலும் எப்போதும் மகிழ்ச்சியாகவும் சந்தோஷமாகவும் இருக்கும் ஒரு வகுப்பார். அவர்கள் **மற்றவர்களைப்** பெரிதும் ஊக்கப்படுத்தி, **உற்சாகப்படுத்துவார்கள்.** அவர்கள் பிலிப்பியர் 4:4ல் உள்ள அப்போஸ்தலருடைய வார்த்தைகளின் உருவமாக இருப்பவர்கள். |

**5. நப்தலி**
**[ஆதியாகமம் 49:21; 30:8]**
"**போராட்டம்**"
தேவனுடன் ஜெபத்தில், முழங்காலிட்டு போராடும் ஒரு வகுப்பார்! அவர்கள் தேவனுடைய ஊழியத்தில் ஜெப வீரர்களாக இருக்கின்றார்கள்! இந்த வகுப்பாரில் பலபேர் தங்களுடைய ஊழியத்தில் வெளியே தெரியாத வண்ணமாக இருந்து வருகின்றனர்! (**பிலிப்பியர் 1:19**)

**6. மனாசே**
"**மறத்தல்**"
(ஸ்ட்ராங்ஸ் # 3128 கிரேக்கம்)
தங்களது ஆவிக்குரிய ஜீவியத்தை உண்மையாகத் தொடர வேண்டி தங்களின் பல்வேறு பூமிக்குரிய கஷ்டங்களையும் சோதனைகளையும் **மறக்க** முடிகிற ஒரு வகுப்பாரை அடையாளப்படுத்துகிறது!

**7. சிமியோன்**
**[ஆதியாகமம் 29:33]**
"**கேட்கப்படுதல்**"
தாங்களே கடினமான தனிப்பட்ட அனுபவங்களை அனுபவித்ததன் காரணமாக மற்றவர்களிடம் அனுதாபத்துடனும் பொறுமையுடனும் இருப்பவர்கள்.

**8. லேவி**
**[ஆதியாகமம் 29:34]**
"**சேர்ந்திருத்தல்**"
தேவனுடைய ஊழியத்தில் முழு நேர ஊழிய வகுப்பார்.
அவர்களில் பலர் பரலோகராஜ்யத்தினிமித்தம் தங்களை அண்ணகர்களாக்கிக்கொண்டவர்களாய் இருக்கிறார்கள்! (**மத்தேயு 19:12**)

**9. இசக்கார்**
**[ஆதியாகமம் 49:14]**
"**பலத்த கழுதை**"
இவர்கள் பாரம் தாங்கும் வகுப்பார் ஆவர்! இவர்கள் "**திரை மறைவாக**" கர்த்தருடைய ஊழியத்தில் **அயராது உழைக்கும் ஊழியக்காரர்கள்**, இவர்களின் முயற்சிகளும் பிரயாசங்களும் பொதுவாக பெரிதும் கவனிக்கப்படுவதில்லை, ஆனால் அவை ஆண்டவரால் கவனிக்கப்படுகின்றன.
"**இரண்டு பொதியின் நடுவே**" என்பது தங்களது சொந்த இரட்சிப்புக்காகவும், மற்றவர்களுடைய இரட்சிப்புக்காகவும் வேலைசெய்வதற்கான ஒரு குறிப்பாக இருக்கக்கூடும் (**1 தீமோத்தேயு 4:16**)

**10. செபுலோன்**
**[ஆதியாகமம் 49:13]**
"**குடியிருக்குமிடம்**"
**லூக்கா 9:58**-ல் உள்ள **இயேசுவினுடைய** வார்த்தைகளின் ஆவிக்கு ஏற்ப, தங்களுக்கென்று **எந்தவொரு குறிப்பிட்ட வசிப்பிடம்** இல்லாமல் தங்கள் வாழ்நாள் முழுவதும் கர்த்தருக்கு ஊழியம் செய்யும் ஒரு ஆவிக்குரிய வகுப்பார். சுவிசேஷ ஊழியத்திற்காக அவர்கள் ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு, ஏன் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாடுக்கு கூட செல்பவர்களாய் இருப்பார்கள்!

| **11. யோசேப்பு** | **12. பென்யமீன்** |
|---|---|
| **(ஆதியாகமம் 49:22)**<br>"**கனிதரும்**" / "**சேர்த்துத் தருதல்**"<br>இவர்கள் பலனளிக்கும் மற்றும் சேர்த்துத் தரும் தன்மையைக் கொண்ட ஒரு வகுப்பார்!<br>இவர்கள் கர்த்தருக்கான தங்களது ஊழியங்களில் பல குணங்களை கொண்டிருப்பார்கள்!<br>இவர்கள் தங்களது வைராக்கியம் மற்றும் உற்சாகத்தினால், எத்தயக்கமுமின்றி சுவிசேஷ ஊழியத்தில் உள்ள பல வாய்ப்புகளைத் தேடிச்சென்று கைப்பற்றியும் விடுகின்றனர்!<br>இவர்கள் **கர்த்தருடைய ஊழியத்தில் மிகவும் மதிப்புமிக்கவர்களாய் இருக்கின்றார்கள்!** | **(ஆதியாகமம் 49:27/35:18)**<br>"பெனொனி" "**பென்யமீன்**"<br>ஆனது ('என் வேதனையின் மகன்' என்பது 'என் வலதுப்பாரிசத்தின் மகன்' என்றானது)<br><br>இவர்கள் கர்த்தரால் தீவிரமாகவும் பெரிதும் பயன்படுத்தப்படுபவர்களுக்கு உதவியாளர்களாகவும் நெருங்கிய உடன் ஊழியஞ்செய்பவர்களாகவும் இருந்து வருகிற ஒரு வகுப்பார்!<br>**உதாரணமாக** : தீமோத்தேயு மற்றும் சீலா, பர்னபா மற்றும் லூக்கா என்பவர்கள் **அப்போஸ்தலனாகிய பவுலுக்கும்**, மாற்கு என்பவர் **அப்போஸ்தலனாகிய பேதுருவுக்கும்** உதவிக்காரர்களாக இருந்தார்கள்!!<br>உடன் ஊழியக்காரர்களாக இவர்களுடைய ஊழியம் மதிப்புமிக்க ஊழியமாக இருக்கின்றது! |

இப்படியாக, இந்தப் பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் கொடுக்கப்பட்ட பெயர்களின் அர்த்தத்தைக் குறித்து சுருக்கமாகப் பார்த்த பிறகு, இப்போது நம்முடைய கவனத்தை, "**யூதா**" கோத்திரம் முதலாவதாக குறிப்பிடப்பட்டிருக்கும் கோத்திரப் பட்டியலின் வரிசையினிடமாகத் திருப்புவோமாக!!

ஆனால் பன்னிரண்டு கோத்திரங்களின் வரிசையில் முதலில் பட்டியலிடப்பட்டுள்ள "**யூதா கோத்திரம்**" ஆனது, **மாம்சீக இஸ்ரயேலில்** மற்றும் **ஆதியாகமத்தின் 49ம் அதிகாரத்தில்** பட்டியலிடப்பட்டுள்ள யாக்கோபின் குமாரர்களில் உள்ளது போலல்லாமல் **வழக்கத்திற்கு மாறானதாய்** இருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். யூதா "**முதற்பேறானவர்**" அல்ல, அவர் அந்த அதிகாரத்தில் "**நான்காவது**" ஆகவே வருகின்றார்.

அப்படியானால், "**யூதா கோத்திரம்**" எனும் ஆவிக்குரிய இஸ்ரயேலர் ... இங்கு முதலில் குறிப்பிடப்படுவதில் **ஏதேனும் விசேஷமான முக்கியத்துவம்/அர்த்தம்** உள்ளதா?

இந்த 5ம் வசனத்திற்கான விளக்கவுரையில் (EBC) **பக்கம் 839** – இல் **சகோ.ரசல்** அவர்களின் கருத்துக்களை நம்மால் காண முடிகின்றது.

**யூதா கோத்திரம் – நம்முடைய கர்த்தர் "யூதா கோத்திரத்துச் சிங்கம்" (வெளி. 5:5) என்பதால், இந்தக் கோத்திரத்தில் சில விசேஷமான தரநிலைகள் இருக்கலாம் என்பதற்கான போதுமான சாத்தியக்கூறுகள் இருக்கின்றது.**

**தீர்க்கதரிசனமாக** எடுத்துக் கொண்டால், தன் குமாரன் **யூதா**வைப் பற்றிய **யாக்கோபின் வார்த்தைகளை** நிதானித்து பார்க்கையில், "**யூதா கோத்திரம்**" தொடர்பான பின்வரும் காரியத்தை கூடுதலாக வலியுறுத்த முடியும் என்று நாங்கள் கூறுகிறோம்,

**ஆதியாகமம் 49:8**ஐ நாம் வாசிக்கலாம் –

"**யூதாவே, சகோதரரால் புகழப்படுபவன் நீயே;**"

**ஆவிக்குரிய இஸ்ரயேலில்** உள்ள இந்த "**யூதா**" கோத்திரத்தார் 12,000 பரிசுத்தவான்களடங்கிய ஒரு கூட்டத்தைக் குறிக்கக்கூடும் என்று நாங்கள் பரிந்துரைக்கிறோம்; சுவிசேஷ யுகக் காலம் முழுவதும், **கர்த்தருடைய ஊழியத்தில்** அவர்கள் காண்பித்திட்ட வாழ்க்கை **சாட்சிகளும்**, செலுத்திட்ட தனிப்பட்ட **பலிகளும்**, "**குமாரனுடைய சாயலுக்கு**" மிகவும் நெருங்கியதாக இருந்தது மற்றும் பெரிதும் **புகழப்படுவதற்குத் தகுதியானதாயுமிருந்தது!** அவர்கள் **அப்போஸ்தலனாகிய பவுலின் தலைமையின்கீழ்** இருப்பார்கள்… மேலும் அவர்களில் பெரும்பாலானோர் **மத்தேயு 13:23**ன் "**அறுபது**" மடங்கு பலன்கொடுக்கும் வகுப்பாராக இருக்கலாம் … அவர்களின் வாழ்க்கை, வேலைகள், ஊழியம் மற்றும் சாட்சிகள் ஆகியன கிறிஸ்துவின் முழு மகிமைப்படுத்தப்பட்ட சரீரத்திலிருந்து, அதாவது "**உன்னுடைய சகோதரர்கள்**" இடமிருந்து பின்வரும் அந்த வார்த்தைகளை **இறுதியாக உதிர்க்கச்செய்திடும்**:

"**யூதாவே, சகோதரரால் புகழப்படுபவன் நீயே**"

**நிச்சயமாக இங்கே சிந்தனைக்கு அதிக தீனியுள்ளது!**

தவிர, யாக்கோபினுடைய குமாரர்களின் வரிசையிலுள்ளது போல் **அல்லாமல், வெளிப்படுத்தல் 7ம் அதிகாரத்தில்** உள்ள மற்ற கோத்திரங்களின் வரிசையானது, அநேகமாக இங்கே புரிந்துகொள்ளுவதற்கு ஆவிக்குரிய

இஸ்ரயேலின் “**கோத்திரங்களைப்**” பற்றி சில **தரநிலை** மற்றும் **ஆழமான சத்தியம்** இருக்கக்கூடும் என்பதைக் கூடுதலாக அறிவுறுத்துகின்றது. இவர்களின் தனிப்பட்ட நபர்களைப் பற்றி நமக்கு, **அப்போஸ்தலர் பவுலால்** மற்றொரு இடமாகிய **1 கொரிந்தியர் 15:41, 42**ல் சொல்லப்பட்டுள்ளது –

**“...மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது. மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும்.”**

ஆம்! எப்படி கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக இருக்கும் “**ஸ்திரீகளை**” பெரிய அளவில் அடையாளப்படுத்தும் காத் கோத்திரத்தார் இந்தப் பட்டியலில் மூன்றாம் இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும், தொடர்ந்து ஆசேர்... பிறகு நப்தலி... பிறகு மனாசே, முதலானோர் வைக்கப்பட்டுள்ளனர் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும் !

இதைப் பற்றின **கூடுதல் அறிவு** “**திரை**”க்கு **மறுபக்கத்தில்** காத்திருக்கின்றது !!!

இங்கே இந்தப் பட்டியலில் தாண் கோத்திரத்தாருக்குப் பதிலாக மனாசே வந்துள்ளது பற்றி ஒரு சில இறுதியான வார்த்தைகளைப் பார்த்திடலாம்! இங்குள்ள ஆவிக்குரிய இஸ்ரயேலின் இந்தப் பன்னிரண்டு கோத்திரத்தாரின் பெயர்கள், இந்தக் கோத்திரங்கள் ஒவ்வொன்றின் குணாதிசயங்கள் மற்றும் கிரியைகளின் பலன்களை மாத்திரம் குறிக்காமல்... ஒவ்வொரு கோத்திரத்தாருக்கும் ஒரு “**சிங்காசனம்**” இருப்பதையும் (**மத்தேயு 19:28** - “**பன்னிரண்டு கோத்திரங்கள்**”), இப்படியாக அது ஒவ்வொரு கோத்திரத்தாருக்கென்றுள்ள ஒரு குறிப்பிட்ட **அப்போஸ்தலருக்கு** உரித்தாயிருக்கும் என்பதையும் நாம் நினைவில் வைக்க வேண்டும்! **யூதா கோத்திரத்திற்கு அப்போஸ்தலனாகிய பவுலையும்... காத் கோத்திரத்திற்கு அப்போஸ்தலன் யோவானையும்** பரிந்துரைத்துள்ளோம்... இவ்வாறு ஒவ்வொரு கோத்திரத்திற்கும் ஒருவரை அடையாளம் காணலாம்!

இப்போது இந்தப் பட்டியலில் **தாண்** கோத்திரத்துக்குப் பதிலாக **மனாசே** வந்துள்ள காரியத்திற்கு வரலாம்... இது அடையாளமான வகையில் முற்றிலும் மாறுபட்ட விஷயத்தை சித்தரிப்பதாக இருக்கின்றது!

ஆம்! இயேசுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட அப்போஸ்தலர்களில் ஒருவரான யூதாஸ்காரியோத்து, இந்த அப்போஸ்தல ஊழியத்தில் தனக்கான இடத்தை இழக்க நேரிட்டார், இதுகுறித்து பின்வரும் வசனத்தில் நாம் வாசிக்கலாம் –

**அப்போஸ்தலர் 1:25**

**"இவ்விரண்டு பேரில் தேவரீர் தெரிந்துகொண்டவனை எங்களுக்குக் காண்பித்தருளும் என்று ஜெபம்பண்ணி;"**

ஆம்! யூதாசின் "**அப்போஸ்தல**" ஸ்தானமானது, பின்னர் "**தமஸ்குவிற்கு செல்லும் வழியில்**" இயேசுவால் தெரிந்துகொள்ளப்பட்ட ஒருவரால் நிரப்பப்பட்டது –

**அப்போஸ்தலர் 9:15**

**"அதற்குக் கர்த்தர்: நீ போ; அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்."**

ஆம்! அவர் வேறு யாருமல்ல, பிற்பாடு மகா அப்போஸ்தலனாகிய பவுலாக மாறிய "**தர்சுபட்டணத்தானாகிய சவுல்**" தான் அந்த நபராவார் (**கலாத்தியர் 1:1 / 1 கொரிந்தியர் 9:1**)

இவ்வாறு இந்த **7ம் அதிகாரத்தின் அடுத்து** புரிந்துகொள்ள வேண்டிய **பகுதிக்கு** வருகிறோம்.

**ஆம்! தரிசனம் மாறுகின்றது!**

இப்போது **9 முதல் 17** வரைக்குமுள்ள வசனங்கள் மணவாட்டி **அல்லாத** ஒரு **பரலோக** மற்றும் **ஆவிக்குரிய** வகுப்பாரின் மற்றொரு படத்தை விவரிக்கின்றது!

**வசனம் – 9 – 17**

**"இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைகளிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன். அவர்கள் மகா சத்தமிட்டு: இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள். தூதர்கள் யாவரும் சிங்காசனத்தையும் மூப்பர்களையும் நான்கு ஜீவன்களையும் சூழநின்று, சிங்காசனத்திற்குமுன்பாக முகங்குப்புற விழுந்து, தேவனைத் தொழுதுகொண்டு: ஆமென், எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக; ஆமென், என்றார்கள். அப்பொழுது, மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: வெள்ளை அங்கிகளைத்**

**தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள்? என்று கேட்டான். அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார். இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை; வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை. சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார் என்றான்."**

ஆம்! **பல வேறுபாடுகிற** கருத்துகள் இங்குள்ளன...

# 1. அவர்களின் எண்ணிக்கை மணவாட்டி போல குறிப்பிட்ட எண்ணிக்கையில் **இல்லை** ...மாறாக "**ஒரு திரள் கூட்டம்**" என இருக்கின்றது.

# 2. சிங்காசனத்தில் **அமர** அழைக்கப்பட்ட மணவாட்டியைப் போலல்லாமல், அவர்கள் சிங்காசனத்தின் முன் **நிற்பவர்களாகக்** காணப்படுகிறார்கள் **(வெளிப்படுத்தல் 3:21)**

# 3. ஆட்டுக்குட்டியானவருக்கு **அடுத்து** அமர்ந்திருக்கும் மணவாட்டியைப் போலல்லாமல், அவர்கள் ஆட்டுக்குட்டியானவருக்கு **முன்** நிற்பவர்களாகக் காணப்படுகிறார்கள்.



# 4. "**பொற்சரிகையாயிருக்கிறது**" (**சங்கீதம் 45:13**) என்று விவரிக்கப்பட்டுள்ள உடையை, உடையுடுத்திருப்பதாக காட்டப்படும் மணவாட்டியைப் போலல்லாமல், இவர்கள் "**வெள்ளை அங்கி**" தரித்தவர்களாகக் காணப்படுகிறார்கள்

# 5. "**ராஜாக்களும் ஆசாரியர்களும்**" (**வெளிப்படுத்தல் 1:6**) ஆக முடிசூட்டப்படப்போவதாக வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மணவாட்டியைப் போலல்லாமல், **தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து**ள்ள–வர்களாகக் காணப்படுகிறார்கள்.

**ஓ! மிகவும் தெளிவாக உள்ளது!**

**ஆம்! 9 முதல் 12** வரைக்குமுள்ள வசனங்கள் தேவனுடைய "**சிங்காசனத்திற்கு**" **முன்பும்**, பரலோகத்தில் **தெய்வீகப் பிரசன்னத்தினுடைய** துதி மற்றும் மகிமை செலுத்தும் "**தூதர்கள்**" **மத்தியிலுமுள்ள** ஒரு பரலோகக் காட்சியைத் தெளிவாக விவரிக்கின்றது!!

இது மாபெரும் தெளிவுடனும் எந்தச் சந்தேகமுமில்லாமல் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது !

ஆயினும் **10ம் வசனத்தில் கவனிக்க வேண்டிய ஒரு விஷயம் உள்ளது** –

**வசனம் – 10**

**"அவர்கள் மகா சத்தமிட்டு: இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்."**

இது எல்லாம் **அடையாளப்** பாஷையில் இருக்கிறது என்பதை நாம் எப்போதும் நினைவில் வைத்திருப்போமேயானால் … நாங்கள் இங்கே **ஒரு காரியத்தை அறிவுறுத்த** விரும்புகிறோம்!

அதற்காக நாம் இப்போது **2 இராஜாக்கள் 2ம் அதிகாரம் வசனம் 14** – க்கு வரலாம்

**2 இராஜாக்கள் 2:14**

**(2 இராஜாக்கள், 2ம் அதிகாரம்)**

**"எலியாவின்மேலிருந்து கீழே விழுந்த சால்வையைப் பிடித்து: எலியாவின் தேவனாகிய கர்த்தர் எங்கே என்று சொல்லித் தண்ணீரை அடித்தான்; தண்ணீரை அடித்தவுடனே அது இருபக்கமாகப் பிரிந்ததினால் எலிசா இக்கரைப்பட்டான்."**

இந்த அதிகாரத்தில், **1 முதல் 14** வரையிலான வசனங்களில் காணப்படுகிற

எலியா மற்றும் **எலிசா** என்கிற **இரண்டு** தீர்க்கதரிசிகளின் இந்தப் படமானது, **அக்டோபர் 1874** துவக்கி லவோதிக்கேயா காலகட்டத்தில் இருக்கிற "**புத்தியுள்ள கன்னிகைகள்**" மற்றும் "**புத்தியில்லாத கன்னிகைகள்**" எனும் **இரண்டு வகுப்பாரைக்** குறித்து **தீர்க்கதரிசனமாக** விவரிக்கின்றது. நாம் தியானிக்கும் **14ம்** வசனமானது **எலிசா** வகுப்பாரின் "**பூமிக்குரிய**" பயணத்தின் நிறைவு பற்றிய விவரங்களை விவரிக்கின்றது. இப்போதும் "**எலியா**" சிறு மந்தை வகுப்பாராகப்போகிற "**புத்தியுள்ள கன்னிகளைக்**" குறிக்கின்ற அதேவேளையில், "**எலிசா**" இங்கே திறள்கூட்ட வகுப்பாராகப்போகிற "**புத்தியில்லாத கன்னிகளைக்**" குறிக்கின்றார்.

இப்போது இந்த இரண்டு தீர்க்கதரிசிகளுடைய பெயர்களின் முக்கியத்துவத்தை நாம் பார்க்கும்போது... முக்கியமான விஷயமொன்றைக் கற்றுக்கொள்கிறோம் என்பதை நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்!

"**எலியா**" என்கிற பெயரானது **எபிரெய / ஸ்ட்ராங்கின் # H452 ல்** "God of Jehovah / **யாவே தேவன்**" என்று பொருள்படுகின்றது.

"**எலியா முந்தி வருவான்**" என **மல்கியா 4:5 & 6** இல் உள்ள பழைய ஏற்பாட்டின் இறுதி வார்த்தைகளில் குறிப்பாகக் காணப்படுவது போல், எலியா தீர்க்கதரிசியின் **வாழ்க்கையும் பெயரும்** சுவிசேஷயுகக் காலத்தில் "**மாம்சத்தில்**" இருந்த கிறிஸ்துவுடன் மிகவும் **நெருக்கமாக** தொடர்புடையது என்பதை இங்கே நாம் மனதில் கொள்ள வேண்டும்.

**( "யுகங்களைப் பற்றிய தெய்வீகத் திட்டம்" எனும் முதலாம் தொகுதியில், அத்தியாயம் 8, பக்கம் 249 – 266 இல் விவரங்கள் காணப்படுகின்றன )**

ஆகவே, "**யாவே தேவன்**" எனப் பொருள்படும் எலியா என்கிற பெயரானது, சுவிசேஷ யுகத்தின் தேவனுடைய கைவேலையாகிய "புதுசிருஷ்டியைக்" குறிக்கின்றது...

➡ "**தேவர்களுக்கு**" உரித்தாயிருக்கும் "**திவ்ய சுபாவத்தையே**" குறிக்கின்றது (**சங்கீதம் 82:6**)

➡ "**தேவனுடைய சிருஷ்டி**"யைக் குறிக்கின்றது ! (**பிலிப்பியர் 2:13 / எபேசியர் 2:10**)

➡ இன்னொரு வகையில் பார்த்தால், எபிரெய / **ஸ்ட்ராங்கின் # 477**ல் "**எலிஷா / எலிசா**" என்கிற பெயர் - "God is salvation / **தேவனே இரட்சிப்பு**" என்று பொருட்படுகின்றது.

எவ்வாறு இந்தச் சுவிசேஷ யுகத்துப் பரிசுத்தவான்கள் **பரம அழைப்பில் தோல்வியடைந்தாலும்,** தேவனிடமிருந்து **கிருபையையும்**... மேலும் **1 கொரிந்தியர் 3:13 முதல் 15 வரை** அப்போஸ்தலன் பவுல் விவரித்த இரட்சிப்பையும் பெறுகிறார்கள் என்பதை இது குறிக்கின்றது –

**வசனம் – 15 –** "**ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினது போலிருக்கும்.**"

ஆம்! "**அவன் நஷ்டமடைவான்**" என்றாலும், தேவனுடைய கிருபையாலேயே இந்த வகுப்பார் "**இரட்சிக்கப்படுவார்கள்**" !

**இப்போது, .... நாம் மீண்டும் வெளிப்படுத்தல் 7: 10 க்குச் சென்று, "இரட்சிப்பின் மகிமை.. எங்கள் தேவனுக்கு... உண்டாவதாக" என்று சொல்லும் இந்தத் "திறள்கூட்டத்தின்" வார்த்தைகளை வாசிக்கும்போது ... அவர்கள் உண்மையிலேயே "எலிசா" வகுப்பார் என்கிற தங்கள் அடையாளத்தையே வெளிப்படுத்துவது போலுள்ளது! [லவோதிக்கேயாவில் உள்ள "திரள்கூட்ட" வகுப்பாரின் கடைசி அங்கத்தினர்.]**

மணவாட்டியார் **அல்லாத** இந்தப் பரலோக ஆவிக்குரிய வகுப்பார் பற்றிய இந்தப் **புரிதலும்**கூட பரி.யோவானுக்குத் தெரியாததாயும் விளங்காததாயும் இருந்ததாகத் தெரிகின்றது, அதைப்பற்றி கீழே வாசிக்கலாம் –

**வசனம் – 13-14**

**அப்பொழுது, மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள்? என்று கேட்டான். அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன்...**

இங்கே "**யோவான்**" என்பவர் இந்த வகுப்பாரின் இருப்பு மற்றும் விவரங்களை அறியாததாகக் காட்டப்பட்டுள்ளது என்பது அநேகமாக லவோதிக்கேயா காலத்தின் ஆரம்பத்தில், 1874 க்குப் பின், சுவிசேஷ யுகத்தினுடைய இரட்சிப்பின் "**ஆவிக்குரிய**" மற்றும் "**பரலோக**" அம்சங்கள் குறித்த அறிவின் "**வெளிச்சம்**" மற்றும் விவரங்கள் ஆகியன **வெளிப்படையாகி வருவதின் வெறும் ஆரம்பமே** என்பதற்கான குறிப்பாக இருக்கும்.

**உண்மையில், ஏழாம் சபை தூதரான சகோ.ரசல் அவர்கள், R3825ல் (ரீப்ரிண்ட்ஸ்) தனது சொந்த வேத ஆராய்ச்சி குறித்து தனது சொந்த வார்த்தைகளில் இந்த அறிவொளியை/பிரகாசிக்கப்படுதலைப் பற்றி அதிகமான விளக்கமளிக்கின்றார்.**

### இந்த அறிவொளி/வெளிச்சம் எப்படி வந்தது?

அது நிச்சயமாக வேதப்பாடங்கள் மற்றும் தீர்க்கதரிசன ஆய்விலிருந்துதான் வந்தது. மேலும் இந்த விஷயத்தில் நிச்சயமாக இது மிகவும் குறிப்பிட்டதொரு தீர்க்கதரிசனமாக – இருபத்து நான்கு மூப்பர்களில் பேசுகின்ற ஒரு **"மூப்பர்"** ஆக இருக்கின்றது!

ஆம்! இது **"மூப்பர்களில்"** ஒருவராகும், இன்னும் தெளிவாக கூறவேண்டுமெனில், தேவனுடையத் திட்டம் மற்றும் இராஜ்யத்தைப் பற்றிய **இருபத்து நான்கு தெய்வீகத் தீர்க்கதரிசனங்களில்** ஒன்றாகும்.

**"மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி "** என்ற குறிப்பில் **"யோவான்"** தொடர்பாகவுள்ள ஒரு படத்திற்கு **இரு மடங்கு** பயன்பாடு உள்ளது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறோம் – ஒன்று **பொதுவான** பயன்பாடு மற்றொன்று **விசேஷித்த** (specific) பயன்பாடு ...!

**[அன்பான வாசகரே, நீங்கள் முதன்முதலில் சத்திய "வெளிச்சத்தில்" பிரவேசித்தபோது, இந்த விவரங்கள் யாவும் உங்களுக்கு எப்படி முழுமையாக அறியப்படாமல் இருந்தது என்பது நினைவிருக்கின்றதா?]**

**பொதுவான பயன்பாடு:**

தனது ஆவிக்குரிய அறிவொளி பிரகாசிப்பிக்கப்படுதலின் ஆரம்ப கட்டங்களில், "**யுகங்களைப் பற்றிய தெய்வீகத் திட்டம்**" எனும் "**முதலாம் தொகுதியை**" எழுதுவதற்கு முன்பாக இருந்த "**ஏழாம் தூதனான**" **சகோ.ரசல்** அவர்களையே – இங்கே இந்த "**வகுப்பாரை**" அறியாதவராய் இருக்கும் "**யோவான்**" முதலில் அடையாளப்படுத்துகின்றார். நிச்சயமாக இதுகுறித்து அவரே R3825ல் சாட்சியளிக்கின்றார்.

பின்னர், இந்தக் காரியத்தில், நீங்கள் உட்பட, **அறிவொளியை** மெதுவாகவும் படிப்படியாகவும் பெற்றுக்கொண்ட **லவோதிக்கேயா** சபையின் அங்கத்தினர்கள் **அனைவருக்கும்,** "**யோவான்**" – இன் அர்த்தமானது விரிவடைகின்றது!

இப்போது "**முப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி**" என்னும் இந்தப் படத்தின் பொதுவான பயன்பாடானது, இது **தீர்க்கதரிசனத்தையும், "யோவான்"** வகுப்பாருக்கு அறிவைக் கொண்டு வர உதவிய **தீர்க்கதரிசன ஆராய்ச்சியையும்** குறிக்கின்றது என்பதை அடையாளப்படுத்துகின்றது. இவ்வாறாக இது **சகோ.ரசல்** அவர்களின் விஷயத்திலும் கூட இருந்தது!!

**விசேஷித்த பயன்பாடு:**

ஆனால், இங்கே "**முப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி**" குறித்துள்ள படத்தின் **இரண்டாவது** பயன்பாட்டைப் பார்க்கும்போது … அதற்கு ஒரு **விசேஷித்த** பயன்பாடும் இருப்பதாகக் காண்கிறோம். "**இருபத்து நான்கு முப்பர்கள்**" அல்லது பழைய ஏற்பாட்டின் இருபத்து நான்கு தீர்க்கதரிசனங்களை அறிந்தவர்களுக்கு … எந்த "**முப்பர்**" இங்கே குறிப்பிடப்படுகிறார் என்பது தெளிவாகத் தெரியும்.

ஆம்! இது **ஓசியா புஸ்தகத்தில்** உள்ள தீர்க்கதரிசனமே –

**ஓசியா 7:8 & 11**

"**எப்பிராயீம் அந்நியஜனங்களோடே கலந்திருக்கிறான்; எப்பிராயீம் திருப்பிப்போடாத அப்பம்.**"

"**எப்பிராயீம் பேதையான புறாவைப்போல் இருக்கிறான், அவனுக்குப் புத்தியில்லை; எகிப்தியனைக் கூப்பிடுகிறார்கள்; அசீரியனிடத்துக்கும் போகிறார்கள்.**"

ஆம்! "**புத்தியில்லாத கன்னிகைகளின்**" (மத்தேயு 25:2, 3) இந்தப் "**பேதையான புறா**" வகுப்பார் இங்கே "**எப்பிராயீம்**" அடையாளத்தின் கீழாக விவரிக்கப்படுகின்றனர்.

"**திருப்பிப்போடாத அப்பம்**" மற்றும் "**எகிப்தியனைக் கூப்பிடுகிறார்கள்; அசீரியனிடத்துக்கும் போகிறார்கள்**" போன்ற அடையாளப் பாஷை இங்கே பயன்படுத்தப்பட்டாலும்,

…சந்தேகத்திற்கிடமின்றி இது, ஆவிக்குரிய இஸ்ரயேலின் திறள்கூட்ட வகுப்பாரில் காணப்படுகிற **ஆவிக்குரிய முதிர்ச்சியின்மை** மற்றும் **முழு ஆவிக்குரிய வளர்ச்சி இல்லாமைக்கான** குறிப்பாக இருக்கின்றது.

"**எப்பிராயீம்**" அடையாளத்தின் கீழுலுள்ள திறள்கூட்ட வகுப்பாரைக் குறிக்கும்வண்ணமாக **ஓசியா புஸ்தகத்தில்** வருகிற இந்த "**முப்பர்**" குறித்த மேலும் **உறுதியான ஆதாரங்களைத்** தேடுவோருக்கு, நாம் காண்பிப்பது பின்வரும் வசனமே –

**ஓசியா 13:13**

**"பிரசவஸ்திரீயின் வேதனை அவனுக்கு வரும்; அவன் (எப்பிராயீம்) விவேகமில்லாத பிள்ளை; பேறுகாலமட்டும் அவன் நிற்கவில்லை."**

ஆம்! "**விவேகமில்லாத பிள்ளை**" பற்றிய குறிப்பையும் … "**பிறப்பில் / பேறுகாலத்தில்**" சம்பந்தப்பட்ட உபத்திரவங்களையும் கவனியுங்கள். மெய்யாகவே! ஓசியா புஸ்தகத்தில் காணப்படுகிற இந்த "**மூப்பர்**" அல்லது **தீர்க்கதரிசனம்** என்பது, தேவனுடைய தெய்வீகத் திட்டத்தில் திறள்கூட்டமான இந்த வகுப்பாரைக் குறித்த அறிவொளியாக இருக்கின்றது! **24 மூப்பர்கள்** பட்டியலில் இது **12ம் மூப்பராக** இருக்கின்றது!

**(53 அடிப்படை பாடங்களில் பாடம் #27)**

**இங்கே சற்றே இடைநிறுத்தி ஒரு சில காரியங்களைப் பார்க்கவிருக்கிறோம்…!**

இந்த "**இருபத்து நான்கு மூப்பர்களின்**" அடையாளம் குறித்து சகோதரர்களிடையே கீழுள்ள காரியங்கள் வாதிடப்பட்டு விவாதிக்கப்பட்டது…

**அவையாவன…**

***# 1.*** **1 நாளாகமம் 24: 3 – 5**ல் விவரிக்கப்பட்டுள்ள, **ஆசாரியத்துவத்தின் இருபத்து நான்கு தளவரிசைகள்**… இது **மணவாட்டியை** அல்லது **வருங்கால** அல்லது **எதிர்ப்பார்க்கப்படுகிற** அர்த்தத்தில் **திருச்சபையினை** அடையாளப்படுத்துவதாகக் கூறப்படுகின்றது.

(இந்தப் பார்வையை முக்கியமாக **சகோ ஆர்.இ. ஸ்ட்ரீட்டர்** மற்றும் பல சகோதரர்கள் ஆதரித்தனர்.)

***# 2.*** வேறொரு பார்வையும் உள்ளது அது – **அம்மூப்பர்கள் எபிரெய ஏற்பாட்டின் இருபத்து நான்கு புஸ்தகங்களைக் குறிக்கின்றனர்** என்று கூறுகின்றது.

இப்பார்வையையை, முக்கியமாக **சகோ.பிராங்க் ஷேல்யூ** தனது "***Keys to Revelation***" எனும் புஸ்தகத்தில் ("**வெளிப்படுத்தலுக்கான திறவுகோல்கள்**") குறிப்பாக **ப. 126**ல் ஆதரித்திருக்கின்றார்… அந்தப் பக்கத்தின் அடிப்பகுதியில், **1923**ல் அச்சிடப்பட்ட, **ஐசக் லீசர்** என்பவருடைய "***Twenty-four books of the Holy Scriptures***" ("வேதாமத்தின் இருபத்து நான்கு புஸ்தகங்கள்") என்று தலைப்பிடப்பட்ட எபிரெய ஏற்பாட்டின் **அட்டைப் பக்கத்தின்** சான்றாதாரம் உள்ளது.

**இந்த நம்முடைய மரியாதைக்குரிய மூத்த சகோதரர்கள் எங்களிடமிருந்து கவனமான சீரிய யோசனையைப் பெற்றிருக்கையில்... இவை வெளிப்படுத்தலிலுள்ள “இருபத்து நான்கு மூப்பர்கள்” பற்றின ஒவ்வொரு பதிவின் பார்வையிலிருந்து நம்மை இசைவான வகையில் திருப்திப்படுத்தாததால், இவை சரியான விளக்கமாக இருக்க முடியாது என்கிற முடிவுக்கு வருகிறோம்.**

(தமிழில் – அப். 3:21) “**உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள்**” ஆகிய தெய்வீகத் திட்டம் மற்றும் இராஜ்யத்தின் வாக்குத்தத்தங்கள் குறித்துள்ள **இருபத்து நான்கு குறிப்பிட்ட தெய்வீகத் தீர்க்கதரிசனங்களின்** அடையாளங்களாக இந்த “**மூப்பர்கள்**” இருக்கிறார்கள் என்று **R529**ல் – கூறப்பட்டுள்ள **சகோ. டபிள்யூ.ஐ.மன்னின்** ஆலோசனையில் நாங்கள் முழுமையாக திருப்தி அடைகிறோம்...

மேலும், **வெளிப்படுத்தல் 7:13, 14**ல் திறள்கூட்டத்தாரைக் குறித்து அப்.யோவானுக்கு அறிவொளி வீசுவதற்காக “**யோவான்**” உடன் பேசும் “**மூப்பர்**” ஆன தீர்க்கதரிசனமானது, **ஓசியா தீர்க்கதரிசி**யின் “**வாயினால்**” உரைக்கப்பட்டது என்பதை காண்கையில் **நாம் இன்னுமதிக உறுதியாக நம்புகிறோம்.**

நிச்சயமாக, ஆசாரியக்கூட்டத்தாரின் இருபத்து நான்கு தளவரிசைகளில் **ஒன்று** இந்தச் செய்தியை வெளிப்படுத்தியிருக்கும் என்கிற கருத்தாயினும் சரி, எபிரெய ஏற்பாட்டின் ஏதோ **ஒரு** புஸ்தகம் “**திறள்கூட்ட**” வகுப்பாரை வெளிப்படுத்துவதற்குப் பிரத்யேகமாகவும் முழுமையாகவும் அர்ப்பணிக்கப்பட்டிருந்தது என்கிற கருத்தாயினும் சரி, முற்றிலும் ஆதாரமற்றதும், சாத்தியக்கூறுகளின் வரம்புகளுக்கு அப்பாற்பட்டதாகவும் இருக்கின்றது.

மேலும் **வெளிப்படுத்தல் 4:8**ல் உள்ள காரியத்தின் **ஆவிக்குரிய சூழலைக்** கூடுதலாகச் **சுட்டிக்காட்ட விரும்புகிறோம்** – “**அந்த நான்கு ஜீவன்களிலும் ஒவ்வொன்று அவ்வாறு சிறகுகளுள்ளவைகளும்**”
[ **இந்த இருபத்தி நான்கு சிறகுகள் மனிதனுக்கான தேவனுடைய மாபெரும் மகத்தான தெய்வீகத் திட்டத்தை வெளிப்படுத்தும் இந்த மகத்தான 24 தீர்க்கதரிசனங்களையே மீண்டும் குறிக்கின்றது!!** ]

**மேலும் இந்த "இருபத்து நான்கு மூப்பர்கள்" ஒவ்வொருவரின் தீர்க்கதரிசன சாட்சியும் வேதவசனங்களில் கூடுதலான மற்றும் விரிவான ஆதாரத்தைக் கொண்டிருக்கிறது என்பதில் உறுதியாக உள்ளோம்.**

**அப்படியாகவே, இந்த "மூப்பர்" உடனும் உள்ளது!**

"**திரள்கூட்ட**" வகுப்பார், ஆதியாகமந்துவக்கி வெளிப்படுத்தல் வரைக்குமுள்ள வேத வாக்கியங்கள் முழுவதிலும் குறிப்பிடப்பட்டு, சித்தரிக்கப்பட்டிருக்கின்றனர்.

**சில உதாரணங்கள் –**

- ஏதேனிலிருந்து வெளிவந்த நான்கு நதிகளில் **இரண்டாம் நதியான கீகோன் (ஆதியாகமம் 2:13)** இந்த வகுப்பாருக்குரிய **இரண்டாம் உயிர்த்தெழுதலைக்** குறிக்கின்றது!

- **பிறகு**... ரெபேக்காள் ஈசாக்கைத் திருமண செய்துகொள்வதற்காகப் பிரயாணஞ்செய்தபோது அவருடன் சென்ற "**வேலைக்காரிகளில்**" அவர்கள் அடையாளப்படுத்தப்படுவதை நாம் காண்கிறோம், அங்கு ரெபேக்காள் மணவாட்டியான சபையைச் சித்தரிக்கிறாா், அவருடன் வந்தவர்கள் திரள்கூட்ட வகுப்பாரைச் சித்தரிக்கின்றனர் **(ஆதியாகமம் 24:61)**

- **பிறகு**... கடும்வேதனைக்குப் பிறகு பெற்றெடுத்து, இறந்துவிட்ட ராகேலுக்கு **பென்யமீன் பிறந்ததிலும்** அவர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக நாம் காண்கிறோம். **(ஆதியாகமம் 35:17, 18)**. அத்துடன் ராகேல் ஏற்கனவே யோசேப்பு என்கிற ஒரேயொரு குமாரனைப் பெற்றெடுத்திருந்தாா் – இதில் யோசேப்பு **மணவாட்டியை** அடையாளப்படுத்துகிறாா் ... அதேசமயம் ராகேல் புது சிருஷ்டியை உருவாக்கும் "**கிருபையின் உடன்படிக்கையை**" அடையாளப்படுத்துகிறாா், மேலும் அவர் பென்யமீன் பிறப்பின்போது சரியாக மரித்தது என்பது திறள்கூட்டம் நிறைவடைந்தபின் அந்த உடன்படிக்கை **நிறுத்தப்படுவதை** அடையாளப்படுத்துகின்றது.

- **பிறகு**... பாவநிவாரணநாள் பலிகளின் "**போக்காடு**" ஆனது **பலியிடப்படவில்லை**, மாறாக மரிப்பதற்காக வனாந்தரத்துக்கு அனுப்பப்பட்டது இதிலும் இந்த வகுப்பார் குறித்த மற்றொரு படம் இருக்கின்றது. **(லேவியராகமம் 16:21, 22)**.

**பிறகு... ராகாப்** – இல் அவர்கள் நிழலாகக் காண்பிக்கப்படுவதாகக் காண்கிறோம் (**யோசுவா 6:22, 23**), அவள் ஒரு "**வேசி**" என்று கூறப்பட்டாலும், அவளும் "**அவள் குடும்பத்தார் அனைவரும்**" எரிகோ சுட்டெரிக்கப்பட்டு, அழிக்கப்படுவதற்கு முன்பாக காப்பாற்றப்பட்டனர்.

**பிறகு**... முழங்கால் ஊன்றிக் குனிந்து தண்ணீர் குடித்தபோது, 10,000 பேரில் கிதியோனின் "**சேனையாக**" இராதபடிக்கு தேவன் நிராகரித்த **9700** பேர்களில் அவர்கள் அடையாளப்படுத்தப்படுவதாக நாம் காண்கிறோம் (**நியாயாதிபதிகள் 7:6, 7**)

**பிறகு... உன்னதப்பாட்டில்** "**கதவைத்தட்டின**" தனது நேசருக்கு மிகவும் தாமதமாக எழுந்த "**சகோதரி**"ல் அவர்கள் அடையாளப்படுத்தப்படுவதாக நாம் காண்கிறோம். (**உன்னதப்பாட்டு 5:3 – 6**).

**ஆம்! பட்டியல் நீண்டு கொண்டே போகும்!**
**2 இராஜாக்கள் 2ம் அதிகாரத்தில் காணப்படுகிற "எலிசா," பிறகு, சங்கீதம் 45 மற்றும் 14ம் வசனத்தில் காணப்படுகிற "அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகள்" போன்றவை.**

மெய்யாகவே... "**திரள்கூட்டம்**" என்பவர்கள் வேதவாக்கியங்களில் **மிகத் தெளிவாகவும் மீண்டும் மீண்டுமாகவும் வெளிப்படும்** ஒரு வகுப்பாராவர்!

**வெளிப்படுத்தல் 7:14ம் வசனத்தில்** உள்ள "**மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்**" ஆக இருக்கப்போகிற திறள்கூட்டம் குறித்துள்ள படமானது, எலியா எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு எலிசா இருந்ததில் **நிழலாகக் காண்பிக்கப்பட்டுள்ளபடி,** சபையின் நிறைவுக்குப் பின்னால் "**மகா உபத்திரவத்தின் காலத்தில்**" சிக்கிக்கொள்ளவிருக்கிற இந்த வகுப்பாரின் **கடைசி அங்கத்தினர்களுக்கு** மாத்திரமாக உள்ள ஒரு குறிப்பு **இல்லை!**

**இது உண்மையாக இருந்திருக்குமேயானால்,** இந்த 7ம் அதிகாரத்தில் காணப்படும் இந்த வகுப்பார் முழு "**திரள்கூட்ட**" வகுப்பாரைக் குறிக்காது, மாறாக "**மணவாட்டி**" எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர், "**மகா உபத்திரவத்தின் காலத்தின்**" ஊடாக கடந்துசெல்லும் அந்த வகுப்பாரின் எஞ்சிய கடைசி அங்கத்தினர்களை மாத்திரமே குறிப்பதாக இருக்கும்.

**ஆனால் அது உண்மையாக இருக்க முடியாதே!**

ஏனெனில், இங்கேயுள்ள இந்தப் படமானது மாம்சத்திலிருக்கும் "**திறள்கூட்டம்**" குறித்துள்ள படம் **அல்ல**, மாறாக பரலோக தேவதூதர்களைப் போல **ஆவிக்குரிய சரீரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக தாங்கள் உயிர்த்தெழும் நேரத்திலிருக்கும்** "**திறள்கூட்டம்**" குறித்துள்ள படமாகும்.

**அப்படியானால், "மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்" எனும் இந்தக் குறிப்பானது, பெந்தெகொஸ்தேதுவக்கி இந்த வகுப்பாரின் கடைசி அங்கத்தினர் "மகா உபத்திரவத்தின் காலத்தின்" போது இந்த "மிகுந்த உபத்திரவத்தில்" பங்கெடுக்கும் வரையுள்ள இந்த வகுப்பாரின் இறுதி அனுபவங்களைப் பற்றிய பொதுவான மற்றும் எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒரு குறிப்பாக இருக்க வேண்டும்.**

இந்தக் கருத்திற்கு ஒரு சான்றாதார வசனப்பகுதி –

**1 கொரிந்தியர் 5:5**

**"அப்படிப்பட்டவனுடைய ஆவி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும்படி, மாம்சத்தின் அழிவுக்காக, ... அவனைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று தீர்ப்புச்செய்கிறேன்"**

ஆ! **கொரிந்து சபையின்** இந்த நிலை, ஆவிக்குரிய இரட்சிப்புக்கு ஆவிக்குரியரீதியில் "**இரட்சிக்க**"ப்படப்போகிற "**திறள்கூட்ட**"த்தின் இரட்சிப்பைக் சுட்டிக்காட்டுகின்றது, ஆனால் "**மிகுந்த உபத்திரவம்**" அல்லது "**மாம்சத்தின் அழிவுக்கு**" உட்படுத்தப்பட்டப் பிறகுதான் அவர்கள் இரட்சிப்படைவார்கள்.

மெய்யாகவே! இந்தத் "**திறள்கூட்ட**" வகுப்பார் "**மேல்வீட்டறையில்**" **(அப்போஸ்தலர் 1:13 முதல் 15 வரை)** ஒன்றாக கூடியிருந்த **120 பேர்** துவக்கி, பெந்தெகொஸ்தே நாளில் யூதர்களிடமிருந்து ஞானஸ்நானம் பெற்ற **3000 பேரிலும் (அப்போஸ்தலர் 2:41, 42)** ... யூத விசுவாசிகளின் எண்ணிக்கையான **5000 பேரிலும் (அப்போஸ்தலர் 4:4)** ... யுகம் **முழுவதிலும்**, மேலும் சபையின் ஏழு **காலக்கட்டங்களிலும்** காணப்பட்டு வருகின்றனர். இந்த வகுப்பாரே, பிரதான ஆசாரியனாகிய ஆரோனால் "**இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையுங்குறித்துச் சீட்டு**" போடப்பட்டதில் **(லேவியராகமம் 16:8)** குறிப்பிடப்பட்டபடி, **பலிசெலுத்துவதற்கான** வாய்ப்பு தெய்வீகமாக **நிராகரிக்கப்பட்ட** "**போக்காடு**" இல் குறிப்பிடப்படுகின்றனர்.

இப்போது **முடிவாக**, அதிகாரத்தின் கடைசி வசனங்களைக் காணலாம் –

**வசனம் – 15-17**

**"ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார். இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை; வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை. சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார் என்றான்."**

இப்போது இந்த வசனங்கள், இந்த வகுப்பார் மற்றும் அவர்களின் எதிர்கால பரலோக பரிசும் குறித்துள்ள மாபெரும் விவரங்களையும் நமக்குக் கொடுக்கின்றன.

அந்த ஆரம்ப வார்த்தை "**ஆனபடியால்**" என்பது **அர்த்தம் நிறைந்ததாயிருக்கிறது.** எதையாவது **தொகுக்க** அல்லது ஒரு **முடிவை** வழங்க இது பயன்படுத்தப்படுகின்றது.

**மெய்யாகவே, எவ்வளவு பொருத்தமாயுள்ளது!**

ஏனெனில், இந்தப் "**பரிசுத்தவான்கள்**" வகுப்பாரே சுவிசேஷ யுகத்தின் "**இவ்வளவு பெரிதான இரட்சிப்புக்கு**" **அழைக்கப்பட்டுள்ளார்கள்**, இதுவே "**உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு**" **(எபேசியர் 4:4)** என்று விவரிக்கப்படுகிறது – ...ஆனால் தங்களுடைய பலியினாலான உடன்படிக்கைக்குப் போதுமான **வைராக்கியம் காட்டாமலும், உண்மையாகவும்** இல்லாததினிமித்தமாக, "**கிறிஸ்துவின் மணவாட்டி**" எனும் மகா மகத்தான சிலாக்கியத்தை அடையாமல் "**நஷ்டமடைய**" வழிவகுத்தது **(1 கொரிந்தியர் 3:15)**.

திரள் கூட்ட வகுப்பாரின் இந்த அம்சத்தைக் குறித்து, நாம் சகோ. ரசல் அவர்களின் எழுத்துக்களடங்கிய... **"WHAT PASTOR RUSSELL TAUGHT"** எனும் புஸ்தகத்தில் **பக்கம் 11**ல் வாசிக்கலாம்...

"இரண்டாவதாக, அதே பலியினாலான உடன்படிக்கையைச் செய்திருந்த போதிலும், கர்த்தருடைய ஊழியத்தில் தங்களுடைய ஜீவனைக் கையளிப்பதற்குக் கீழ்ப்படிதலுடன் செல்லத் தவறிய சபையின் மற்றொரு

வகுப்பார் இருக்கின்றனர். இவர்கள் பாவத்திற்கும் மரணத்திற்கும் திரும்புவதில்லை என்றாலும், இவர்கள் பலிச்செலுத்தும் நிலைக்கும் செல்லுவதில்லை; எனவே இவர்கள், முதலாம் வகுப்பாரின் வேலையாட்களாகிய இரண்டாம் வகுப்பராக இருப்பார்கள். ஆசாரியர்களின் வேலையாட்களாக இருந்த லேவியர்களில் இவர்கள் நிழலாகக் காட்டப்பட்டனர். இவர்கள் இராஜரீக ஆசாரியக்கூட்டமாகிய பலிச்செலுத்தும் ஆசாரியர்களுடன் சிங்காசனத்தின் மீது அமர மாட்டார்கள், மாறாக தேவனுடைய ஆலயத்தில் அவருக்கு ஊழியஞ்செய்வார்கள். அவர்கள் மகிமையின் கிரீடங்களைப் பெற்றுக்கொள்ள மாட்டார்கள், மாறாக இறுதியில் வெற்றியின் குருத்தோலைகளே அவர்களுக்கு வழங்கப்படும்.

**(WHAT PASTOR RUSSELL TAUGHT, பக்கம் 11, பத்தி 2)**

“**உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு**” என்கிற இந்தக் கருத்தானது கீழேயுள்ள வேத வாக்கியத்தில் கர்த்தரால் குறிப்பிடப்படுகிறது –



**யோவான் 15:2**

“**என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்.**”

“**மெய்யான திராட்சச்செடி**” என்பது மணவாட்டி வகுப்பாராவதற்கான கிறிஸ்துவுக்குள்ளான “**அழைப்பாகும்**”. திராட்சத்தோட்டக்காரர் (பரமபிதா) “**செடியிலிருந்து**” ஒரு கொடியை “**அறுத்துப்போடுவது**” என்பது, “**திரள்கூட்ட**” வகுப்பாராகத் தள்ளப்படுவதைக் குறிக்கிறது.

**இவ்வாறாக கர்த்தருடன் சிங்காசனத்தில் அமர்ந்திருக்கும் மகிமையான நிலைமையானது “சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து/நின்றுகொண்டு” என்பதாகக் குறைக்கப்படுகிறது.**

ஆனால் மறுபுறம், இவர்கள் உபத்திரவ அனுபவத்தின் மூலம் தங்கள் தோல்விகளுக்காக தாங்கள் காட்டும் **மனமார்ந்த மனந்திரும்புதலின் வாயிலாக, கர்த்தருக்காகவும், நீதிக்காகவும் தங்கள் அன்பை** வெளிப்படுத்துவதால், இவர்கள் பின்வருமாறு விவரிக்கப்படுகிறார்கள்…

**"தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்."**

… இந்த **15 – 17 வசனங்களில்** விவரிக்கப்பட்டுள்ளபடி இவர்கள் கர்த்தரிடமிருந்து **ஏராளமான பரிசைப்** பெறுவார்கள்.

**இவை எதைக் குறிக்கின்றன என்பதை இப்போது பார்க்கலாம் –**

**"…இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து"**

இந்தத் **"தேவனுடைய சிங்காசனம்"** பிரபஞ்சத்தினுடைய **தெய்வீக அதிகாரத்தையும் ஆளுகையையும்** குறிக்கின்றது. இயேசு அந்தத் தெய்வீக அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கான கருவியாக இருக்கின்றார், இது **எபிரெயர் 1:3** மற்றும் **சங்கீதம் 110:1**ல் உள்ள **"வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார்"** எனும் சொற்றொடரால் குறிக்கப்படுகிறது. மணவாட்டியாகிய சபை தங்கள் **தலையும் கணவருமாகிய** இயேசு மூலமாக அந்த அதிகாரம் பிரயோகிக்கப்படுவதில் **பங்கடைவார்கள்.** (திருவிவிலியம் – **ஏசாயா 53:12**இல் வரும் **"அவரும் வலியவரோடு கொள்ளைப் பொருளைப் பங்கிடுவார்"** எனும் வார்த்தைகளைக் கவனிக்கவும்)

மறுபுறம் **"திரள்கூட்டம்"** அந்தச் சிலாக்கியத்தை இழந்து, **தெய்வீக அதிகாரம் மற்றும் ஆளுகையின் ஊழியத்தினைக்** குறிக்கிற **"சிங்காசனத்திற்கு முன்பாக"** இருக்கும் நிலையில் இருப்பார்கள்.

பின்வரும் வசனத்தில் **தேவனுடைய ஊழியர்களான அவருடைய பரிசுத்த தூதர்களைக்** குறிக்க அதே பாஷை பயன்படுத்தப்படுவதைப் பார்க்கும்போது, இது உண்மை என்று மேலும் நிரூபிக்கப்படுகின்றது –

**தானியேல் 7:10 – "அக்கினி நதி அவர் சந்நிதியிலிருந்து புறப்பட்டு ஓடினது; ஆயிரமாயிரம்பேர் அவரைச் சேவித்தார்கள்; கோடாகோடிபேர் அவருக்கு முன்பாக நின்றார்கள்…"**

**ஆம்! இது மிகவும் தெளிவாக உள்ளது!**

**யாரேனும் பின்வருமாறு கேட்கலாம்...**

**அவர்கள் தூதர்களுக்குச் சமமாக இருப்பார்களா அல்லது தூதர்களைப்பார்க்கிலும் உயர்ந்தவர்களாக இருப்பார்களா?**

இந்தக் கேள்விக்கு விடையை, இந்த அதிகாரத்தில் மீதமுள்ள வசனங்களையும் அதன் கருத்துகளையும் தியானிப்பதன் மூலம் பெற முடியும்...

**பிறகு நாம் வாசிக்கிறோம் –**

**"இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்"**

ஆம் இங்கே **"ஆலயம்"** என்பது தெய்வீகச் சுபாவத்திலிருக்கும் தலையும் சரீரமுமாகிய கிறிஸ்துவையே குறிக்கின்றது. **"திரள்கூட்டம்"** என்பவர்கள் கிறிஸ்துவுக்கும், சபைக்கும் மற்றும் **சீயோன் அரசாட்சிக்கும்** ஊழியர்களாய் இருப்பார்கள். **"இரவும் பகலும்"** என்கிற வார்த்தைகள் இது ஒரு **நிரந்தர நிலையாக/ஸ்தானமாக** இருப்பதைக் குறிக்கின்றது. **"இரவும் பகலும்"** என்கிற இந்தச் சொற்றொடருக்கு ஒத்திருக்கும் ஒரு பயன்பாட்டை **வெளிப்படுத்தல் 20:10**லும் நாம் காண்கிறோம், அதுவும் மீண்டுமாக **நிரந்தரமான** மற்றும் **என்றென்றுமுள்ள** போன்ற அர்த்தத்தையே கொடுக்கின்றது!

அவர்களுடைய ஊழியத்தின் தன்மை குறித்து **நாங்கள் பின்வருவனவற்றை பரிந்துரைக்கிறோம்** –

1. அவர்கள் **"புதிய வானம்"** மற்றும் **"புதிய பூமி "** என்பவைகளுக்கு இடையே செய்தியைக் கொண்டுசெல்பவர்களாக அல்லது தூதர்களாக இருப்பார்கள். இந்தச் சிந்தனைக்கு அடிப்படையாக, **ஆதியாகமம் 28:12**ல் **"ஏணியில்" "தேவதூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள்"** என்பது உள்ளது

ஆம்! இந்தத் **"தேவதூதர்கள்"** முதலில் பூமிக்குரிய தோற்றத்திற்குரியவர்களாக ஏறி, பின்னர் அவர்கள் பூலோகத்திற்கான **பரலோக தூதர்களாக** மாறினவர்களாக **இறங்குகிறார்கள்** ... எப்படியெனில் வானத்தைப் பூமியுடன் **இணைக்கும் "ஏணியின்"** வாயிலாக இறங்குகிறார்கள் **– அந்த ஏணி இயேசுவையும் அவரது இராஜ்யத்தின் அரசாட்சியையும் (யோவான் 1:51) குறிக்கின்றது!**

ஆ! **சீயோன் அரசாட்சியின் ஊழியர்களாக** தங்கள் ஊழியத்தில் இருக்கும்

திறள்கூட்டத்தை எவ்வளவு அழகாக இந்தத் தேவதூதர்கள் அடையாளப்படுத்துகிறார்கள்.

● 2. பின்னர் அவர்கள் இராஜ்யத்தின் “**கண்ணுக்குத் தெரிகின்ற பாகத்தின்**” **ஆவிக்குரிய காவல் படையாகவும்** இருப்பார்கள் என்பதைப் பரிந்துரையாகக் கூறுகிறோம்.

நாம் பின்வரும் வசனத்தை வாசிக்கையில் **இந்தக் கருத்தைப் பெறுகிறோம்** –

**ஏசாயா 11:9**

**“என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை...”**

இந்த வேதவசனம் நிறைவேற்றப்பட வேண்டுமெனில், குற்றமும் குற்றச் செயல்களும், அவை **சிந்தனையில் எழும்போதே அல்லது உள்நோக்க நிலையிலேயே** தடுக்கப்பட/இடைமறிக்கப்பட வேண்டும்! ஏனெனில் ஒவ்வொரு **செயலும் வார்த்தையும் வெளிப்படுவதற்கு முன்பு** அவை ஒரு **சிந்தனையாய் இருக்கும்** என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும்!

இதைப்பற்றி நாம் பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் –

**யாக்கோபு 1:14,15**

**“அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்.”**

ஆம்! இங்கே “**இச்சை**” என்பது சிந்தனையில் உள்ள **பாவமுள்ள ஆசையாகும்/வாஞ்சையாகும்!**

இவ்வாறு **பலவீனங்களிலும், விழுந்துபோன மாம்சீகச் சுபாவத்திலும்** தங்கள் சொந்த **அனுபவங்களைப்** பெற்றவர்களாய், “**திறள்கூட்டம்**” ஆனவர்கள் இவ்வகையான எண்ணங்களை **கண்காணிப்பதற்கும் இடைமறிப்பதற்குமான** தகுந்த நிலையில் இருப்பார்கள்...!

இந்தச் சிந்தனையின் அடிப்படையை நாம் பின்வரும் வசனத்தில் காணலாம் –

**ஏசாயா 30:21**

**“நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்.”**

இந்த வேதவசனம் செவியால் கேட்கக்கூடிய ஒரு வழிகாட்டுதல் முறையாக

இருக்கும் என்பதை அறிவுறுத்துகிறது ... இதுவே அவர்களுடைய கண்ணுக்குப் புலனாகாத இருப்பை **தெளிவாக நிலைநாட்டுவதற்காக**, இராஜ்யத்தின் புலப்படும் மற்றும் சமாதானமான பாகத்தின் துவக்க பகுதியில் புலப்படும்வகையில் **சிறிது நேரத்தில் வெளிப்பட்ட** பிறகு இருக்கப்போகிற **கண்ணுக்குத் தெரியாத** ஆவிக்குரிய காவற்படையான "**திரள்கூட்டத்தினரால்**" பின்பற்றப்படும் "**செயற்படுமுறையாக**" (modus operandi) இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆகவே அதன்பிறகு மாம்சத்தில் தோன்றுவதற்கும் (materializing), புலப்படுவதற்கும் **எந்த அவசியமுமிருக்காது**... ஏனெனில் வழிகாட்டுதல் மற்றும் எச்சரிக்கையின் கேட்கக்கூடிய வார்த்தைகள் மாத்திரம் போதுமானதாக இருக்கும்!!

அடுத்து நமக்குள்ள பகுதி **(வெளி 7:15) ...**

➤ "**சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்.**"

இங்கே "**அவர்**" என்பது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிப்பதாக நம்புகிறோம், அவரே "**என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்காரும்**" (**வெளி. 3:21**) அற்புதமான மகிமையைக் கொண்டிருக்கிறார். இது அவர்கள் மத்தியில் "**வாசமாயிரு**"ப்பதற்கான ஒரு குறிப்பாகும். இங்கே "**வாசமாயிருப்பது**" என்பது "**ஸ்கெனாவ்** / **skenoo**" (**ஸ்ட்ராங்கின் கிரேக்கம் R4637**) என்னும் கிரேக்க வார்த்தையாகும், இதன் பொருள் ... "**குடியிருப்பது** / **to occupy**" "**கூடாரமிடுவது** / **to tent**" மற்றும் "**வசிப்பது** / **to reside**" என்பதாகும்.

ஆகவே, இது இயேசு இராஜாவோடு ஒரு "**நெருங்கிய**" **ஐக்கியத்திற்கான** சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்ளும் "**திரள்கூட்டத்தாரைக்**" குறிக்கும், ஏனெனில் அவர் அவர்களை இராஜ்யத்தின் ஏற்பாடுகளின் தெய்வீக ஊழியத்திலும், பின்னர் அநேகமாக அதன் பின்னர் வரவிருக்கும் யுகங்களிலும் பயன்படுத்துகிறார்.

**இயேசு இராஜாவுடனான ஒரு விசேஷித்த "நெருங்கிய" ஐக்கியங்கொள்ளுவதற்கான இந்த வாக்குத்தத்தமே, ஆவிக்குரிய தூதர் சுபாவத்திலுள்ள திரள்கூட்டமானது தேவதூதர்களைக் காட்டிலும் தெய்வீகக் காரியங்களின் திட்டத்தில் உயர்ந்த இடத்திலிருப்பார்கள் என்கிற முடிவுக்கு வருவதற்கான அடிப்படையாகும் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.**

மேலும், "**திரள்கூட்ட**" வகுப்பார் கர்த்தருடன் இந்த அருகாமையில் இருப்பதைச் சுட்டிக்காட்டும் இந்த வசனத்தின் அடிப்படையில் :- **ஆதியாகமம் 28: 12**ல் உள்ள "**ஏணி**" மற்றும் "**தேவதூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள்**" (யாக்கோபின் சொப்பனம்) என்னும் தரிசனத்தின் விளக்கத்தைப் பற்றியும், இயேசு இதே விஷயத்தை **யோவான் 1:51**ல் மேற்கோள் காட்டும் ("**தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும்**" என்பதில் அவர் அந்த "**ஏணி**" **தாமே** என்று நமக்குக் காண்பிக்கிறார்) விஷயத்தைப் பற்றியும் நாம் முன்னரே கூறியிருந்த **ஒரு கருத்தினை மீண்டும் சுட்டிக்காட்ட** விரும்புகிறோம்.

ஆம்! வேதாகம விளக்கவுரைகளில் (EBC) **ஆதியாகமம் 28:12** க்கான **பக்கம் 16** மற்றும் **யோவான் 1:51** க்கான **பக்கம் 455** இல், சகோ ரசல் அவர்கள் "**தேவதூதர்களை**" "**பிரபுக்கள்**" என்று விளக்குகிறார் – அதாவது அது முற்பிதாக்கள் ஆவார்கள், மேலும் அவர்கள் பூமியில் தேவனுடைய இராஜ்யத்தில் தெய்வீகத் தொடர்பின் வாய்க்கால்களாக இருப்பார்கள் என்பதாக விளக்குகிறார். இந்தக் கருத்தினை முற்றிலும் மறுக்காமல், அதனுடன் முழு இசைவாக, **நாங்கள் ஒன்றை மாத்திரம் அறிவுறுத்த விரும்புகிறோம்:** பரலோக பாகத்திலிருந்து பூமிக்குரிய பாகத்திற்கும், "**பிரபுகளுக்கும்**" தகவல்களைச் சுமந்துசெல்லும் **இராஜாவின் பரலோக தேவதூதர்கள் என்பவர்கள்** – "**ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய்**" என்று விவரிக்கப்படும் தேவதூதரின் இந்த வகுப்பார் – **திறள்கூட்ட வகுப்பாரைப் பொருத்தமாக விவரிக்கிறார்கள் என்று நாங்கள் நினைக்கிறோம்.**

தொடர்ந்து நாம் வாசிக்கிறோம் – **(வெளி. 7:16)**...

> **"இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை"**

நிச்சயமாக இது "**திறள்கூட்டம்**" மாம்சத்தில் இருந்தபோது ஒரு குறிப்பிட்ட வகையான - "**பசியும் தாகமும்**" அனுபவிப்பதைக் குறிக்கிறது.

**அது** என்னவாக இருக்கும்?

**இந்த "பசியும் தாகமும்" ஒரு குறைபாட்டிற்கான அடையாளமாகும் என்று நாங்கள் அறிவுறுத்துகிறோம்.**

**ஆம்! ஆரோக்கியமான புது சிருஷ்டிகளுக்காக இருக்கும் பல்வேறு ஆவிக்குரிய குணாம்சங்களின் குறைப்பாட்டினையே இது குறிக்கின்றது ...**

- வார்த்தையின் "**ஆகாரத்தினை**" ஜீரணிப்பதற்கான **புரிந்துணர்வின்** குறைபாடு (**நீதிமொழிகள் 31:15**).

- கடினமான சூழ்நிலைகள் மத்தியிலும் கூட, கர்த்தருடைய ஊழியத்தில் பொறுமையாகத் தொடருவதற்கான **வைராக்கியத்தில்** குறைபாடு (**லூக்கா 19:21 – 24**).

- சத்தியத்தின்படி ஜீவித்து நடப்பதற்கு "**விளக்குகளை**" எரிய வைப்பதற்கான "**பாத்திரத்தில்**" "**எண்ணெய்**" ஆக இருந்த **பரிசுத்த ஆவியின்** பற்றாக்குறை (**மத்தேயு 25:2,3**).

- "**கிதியோனின் சேனை**"க்கான தேர்வின் செயல்முறையில் தேவன் 300 பேருக்கு தயவு காண்பித்து, 9700 பேரை நிராகரித்ததில் அடையாளப்படுத்தப்பட்டது போல, **தெய்வீகத் தயவிலும் ஒப்புதலிலும்** குறைபாடு. (**நியாயாதிபதிகள் 7:7**).

- சோதோமில் வாழ்ந்த லோத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, "**நீதியை விரும்புவதற்கு**" மாத்திரமல்லாமல் அக்கிரமத்தை வெறுப்பதற்கான **தைரியம்** இல்லாதது.

- ஆம்! இது அவர்களின் புது சிருஷ்டியின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சியில் அவர்கள் அனுபவித்த – "**பசி .... தாகம் இல்லை**" என்று இங்கு விவரிக்கப்பட்ட – ஆவிக்குரிய "**பற்றாக்குறையின்** / **lack**" ஒரு சிறிய மாதிரி பட்டியலே.

அடுத்தப்படியாக நாம் வாசிக்கிறோம் – **(வெளி. 7:16)**

> **"வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை."**

இங்கே "**சூரியன்**" சுவிசேஷத்தைக் குறிக்கும் (**வெளி. 12:1 / 2 கொரி. 4: 4**) மற்றும் "**வெயில்**" என்பது சத்தியத்தைக் குறிக்கும் (**சங்கீதம் 119: 105**) இது தேவனுடைய வார்த்தையிலிருந்து **வெளிப்படுகிறது** (**யோவான் 17:17**) இங்கே "**உஷ்ணம்**" என்பது சத்திய வார்த்தைக்காக நின்று, அதனுடன் இணைந்திருப்பதால் எழும் **உபத்திரவத்தையும் துன்புறுத்தலையும்** குறிக்கும் (**மத். 13:5 – 6** மற்றும் **20 – 21**).

இப்போது இது, "**திரள்கூட்டம்**" சத்தியம் சம்பந்தமாகப் பெற்ற அனுபவங்களைக் குறிக்கும்.

"**சூரியனின்**" "**வெயிலால்**" "**காயப்படுவது**" என்பது சத்திய வார்த்தையைக் கேட்கும்போது அவர்கள் உணர்ந்த **கண்டனத்தையும் குற்றவுணர்வையும்**

பிரதிபலிக்கிறது, ஏனென்றால் தேவனுடைய வார்த்தையின் வல்லமையைப்பற்றி கீழே நாம் வாசிக்கிறோம் –

**எபிரெயர் 4:12**

**“தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.”**

ஆம்! இங்கேயுள்ள முக்கியமான வார்த்தைகள் “**ஆத்துமாவையும் ஆவியையும்... பிரிக்கத்தக்கதாக**” என்பதாகும்.

ஆம்! “**இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கும்**” “**ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட**” புது சிருஷ்டிகளாக இப்போதிருக்கும் நம் வாழ்வின் **இரண்டு அம்சங்கள்** இவைதான்:

**அவை யாதெனில், நமது பூமிக்குரிய அல்லது மாம்சத்திற்குரிய ஜீவியமும் ... ஆவிக்குரிய ஜீவியமும் ஆகும்.**

ஆம்! “**ஆத்துமா**” என்பது **மாம்சத்திற்குரிய ஜீவியத்தைப்** பற்றிய குறிப்பும், “**ஆவி** ” என்பது **ஆவிக்குரிய ஜீவியத்தைப்** பற்றிய குறிப்பும் ஆகும், அர்ப்பணிப்பு என்பது அப்போஸ்தலர் பவுலின் வார்த்தைகளில் நாம் வாசிக்கும்வண்ணமாக **இந்த இரண்டு அம்சங்களையும் உள்ளடக்கினதாய் இருக்கின்றது** –

**உரோமர் 14: 7, 8**

**“நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை, ஒருவனும் தனக்கென்று மரிக்கிறதுமில்லை. நாம் பிழைத்தாலும், கர்த்தருக்கென்று பிழைக்கிறோம், நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம்; ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்.”**

ஆம்! மிகவும் தெளிவாக உள்ளது! திவ்ய சுபாவத்தை அடையக்கூடிய ஒரு “**புது சிருஷ்டியின்**” வெற்றிக்கான **திறவுகோல்** ...

**தங்களுடைய ஜீவியத்தின் இந்த இரண்டு அம்சங்களிலும் உண்மையாயிருப்பதாகும்.**

## மத்தேயு 25ஆம் அதிகாரம், 3 மற்றும் 4 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கும்படி "**திறள்கூட்டம்**" அவர்களுடைய பாத்திரங்களில் "**எந்த எண்ணெயையும்**" எடுத்துச் செல்லவில்லை!!

ஆம்! **இதனால்** சத்தியத்தையும் அதைக் கேட்பதும் அவர்களுக்கு மிகவும் 'வெட்டுகிற' அனுபவமாக இருந்திருக்கும்!

மேலும், சுவிசேஷ "**உஷ்ணம்**" என்பது சத்தியத்தின் ஊழியத்துடன் தொடர்புடைய உபத்திரவத்தையும் துன்புறுத்தலையும் உண்மையாக சகிப்பதற்கான "**திறள்கூட்டத்தின்**" விருப்பமின்மையைக் குறிக்கும். அறுவடை வேலை மற்றும் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கான பிரயாசங்கள் போன்ற சத்திய ஊழியத்தை **மாத்திரம்** இங்கு நாம் குறிப்பிடவில்லை... அதற்கும் **கூடுதலானவைகளையும் குறிப்பிடப்படுகின்றோம்**, அதாவது, மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் மற்றும் உதவிக்காரிகளின் கடமைகளின் மூலம் திருச்சபைகளில் நடைபெறும் சத்திய ஊழியத்தையும் நாங்கள் குறிப்பிடுகிறோம். இதில் **போதித்தல் (teaching), ஆலோசனை வழங்குதல்** (counselling), **வீடுகளுக்குச் சென்று சந்திப்பது எனும் மேய்ப்பனுக்குரிய ஊழியம்** (pastoral work of house visiting), **மனிதாபிமான அடிப்படையில் உதவுதல் போன்ற** (2 கொரிந்தியர் 12:5, 6, 8 – 10, 28) வேலைகளும் அடங்கும், மேலும் இவைகளுக்குத் **தொடர்ச்சியான அயராத** உழைப்பும் தேவைப்படுகின்றது. இந்த ஊழியங்களை **உண்மையாக** நிறைவேற்றுவதில் ஒரு பகுதியாக காணப்படுகிற உபத்திரவங்கள் மற்றும் துன்புறுத்தல்களின் "**உஷ்ணத்தை**" இந்தத் திரள்கூட்ட வகுப்பார் சகிப்பதற்கு **விரும்பவில்லை** என்று தோன்றுகிறது. அவர்கள் பின்வருமாறு எழுதப்பட்டுள்ள "**மணவாட்டி**" போலல்லாமல் இருந்தார்கள் –

**உன்னதப்பாட்டு 1:6**

**"நான் கறுப்பாயிருக்கிறேன் என்று பாராதேயுங்கள்; வெய்யில் என்மேற்பட்டது..."**

ஆர்ஸ்வி (RSV) மொழிபெயர்ப்பு மிகவும் தெளிவாக உள்ளது –

**... "ஏனென்றால் சூரியன் என்னை வாட்டியது/சுட்டது"**

ஆம்! "**திறள்கூட்ட**" வகுப்பார் தங்கள் "**பலியினாலான உடன்படிக்கைக்கு**" அவசியமான உபத்திரவத்தில் **தானாக முன்வந்து** "**மகிழ்ச்சியுடன்**" பிரவேசிப்பதில்லை.

**ஆகவே, இந்த விஷயத்தில் அவர்களைப் பற்றி பின்வருமாறு வாசிக்கிறோம் –**

**எபிரெயர் 2:15**

**"ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்."**

ஆம்! "**சூரியனின்**" "**உஷ்ணத்தால்**" அவர்கள் சேதமடைந்தனர்!!

**ஆகவே, வெளி. 7 மற்றும் வ. 16 ஆனது மாம்சத்தில் அவர்கள் அனுபவங்களைப் பெற்ற பிறகு, இப்போது அவர்கள் அந்த நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டபடியால், அந்த அனுபவங்களைப் பற்றிய ஆறுதலின் வார்த்தையாகும்!**

இப்போது நாம் கடைசி வசனத்திற்கு வரலாம் –

**வசனம் – 17**

**"சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார் என்றான்."**

இது "**திறள்கூட்டத்தின்**" "**மாம்சீக**" அனுபவத்தின் படமா அல்லது ... இது திரைக்கு அப்பாலுள்ள படமான **பரத்திற்குரிய படமா**??

**இது "திறள்கூட்ட" வகுப்பாரினுடைய இந்த வெளிப்படுத்தலின் இறுதி வசனமாக இருப்பதால், இது "திறள்கூட்டத்தின்" இரட்சிப்பிற்கும், ஒரு பரத்திற்குரிய படத்திற்குமான ஓர் அடையாளத்தை இது குறிக்கும் என்று நாங்கள் அறிவுறுத்துகிறோம்.**

"**ஆட்டுக்குட்டியானவர்**" – நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவர்களின் **இரட்சகராகவும் மீட்பராகவும்** இருக்கிறார், அவர்களுடைய **மேய்ப்பராகவும்** இருக்கப் போவதால் அவர்கள் தங்கள் இரட்சிப்பின் ஆசீர்வாதங்களைப் பெறுவதோடு தொடர்புபடுத்தி, இங்கே சிறப்புக் குறிப்பாக குறிப்பிடப்படுகிறார் ஏனெனில் "**இவர்களை மேய்த்து**" என்ற வார்த்தையின் கிரேக்க வார்த்தையானது "**பொய்மைனோ / poimaino**" (ஸ்ட்ராங்கின் – கிரேக்கம் **#4165**) அதன் அர்த்தம் "**ஒரு மேய்ப்பராக கவனிப்பது**" என்பதாகும்.

இங்கே வருகிற கர்த்தராகிய இயேசுவுக்கான குறிப்பானது "**மணவாளனுக்கு**"

உரியது அல்ல, மாறாக "**ஆட்டுக்குட்டியானவர்**" என்று உள்ளதை நாம் கவனமாகக் கவனிக்க வேண்டும், இது பரலோகத்தில் உள்ள உறவைக் குறிக்கிறது, அத்துடன் கர்த்தராகிய இயேசுவிற்கும் இந்தத் "**திரள்கூட்ட**" வகுப்பாருக்கும் இடையே நித்தியத்துக்கும் இருக்கும் உறவைக் குறிக்கிறது!

ஆம்! "**ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டது**" துவக்கி "**ஆவியின் பிறப்பு**" (இரண்டாம் உயிர்த்தெழுதல்) வரைக்கும் அவர்களின் ஆவிக்குரிய ஜீவனைப் பெறுவதில், "**ஆட்டுக்குட்டியானவர்**" அவர்களின் **மீட்பராகவும் இரட்சகராகவும்** இருந்திருக்கின்றார், தேவதூதர்களைப் போன்று **சாவுக்கேதுவான ஆவிக்குரிய ஜீவிகளாக** இருக்கும் அவர்களின் அந்தப் பரலோக **ஆவிக்குரிய பிறப்பு** நிலையில், மிகவும் உயர்வாக மகிமைப்படுத்தப்பட்டிருக்கும் கர்த்தராகிய இயேசு அவர்களின் **மேய்ப்பராக** இருப்பார் என்பதை இங்கே நாம் கவனிக்க வேண்டும் எப்படியெனில், ஆவிக்குரிய ஜீவிகளாக அவர்களின் **அனைத்து** தேவைகளும் மேற்பார்வையிடப்படும், மேலும் கர்த்தராகிய இயேசுவின் **விசேஷித்த பராமரிப்பின்** கீழ் இருப்பார்கள்! இது முன்பே **வ. 15**ல் வருகிற "**சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்**" எனும் வார்த்தைகளில் காண்பிக்கப்பட்டுள்ளது.

"**இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்**" இந்தச் சொற்றொடரானது, அநேகமாக, அவர்கள் தூதர்போன்ற ஜீவிகளாக, எல்லா சத்தியத்தின் ஊற்றும் "**அஸ்திவாரமுமான**" தேவனுடைய சந்நிதிக்குள்ளாகச் செல்லும் பரலோக இரட்சிப்பை விவரிக்கிறது. இங்கே வரும் "**ஜீவத்தண்ணீர்**" **(வெளிப்படுத்தல் 22:17)** என்பது **ஜீவனுக்கான தேவனுடைய திட்டத்துடன்** தொடர்புடைய சத்தியத்துக்கான அடையாளம் என்று நாங்கள் பரிந்துரைக்கிறோம்; இத்திட்டமானது மனிதனைப் பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் மீட்டு தேவனுடைய "**சாயலுக்கும் ரூபத்துக்கும்**" **(ஆதியாகமம் 1:26ன் நிறைவேற்றம்)** சீர்ப்பொருந்த செய்வதற்கான யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டத்தின் 7000+ வருடங்கள் முடிந்த பிறகு, வேத வாக்கியங்களில் "**வருங்காலங்கள்** / **ages to come**" **(தமிழில் – எபேசியர் 2:6)** எனக் குறிப்பிடப்பட்டுள்ள நித்திய காலத்திற்குள் அடியெடுத்து வைக்கும். இது பல யுகங்களுக்கான எண்ணற்ற நோக்கங்களை உள்ளடக்கிய வண்ணமாக **தேவனுடைய கிரியைகள் இருக்கும்** என்பதை மீண்டும் குறிக்கிறது... சந்தேகத்திற்கிடமின்றி இவையெல்லாம் **ஜீவனை/ஜீவிகளை** சிருஷ்டித்து வாழ வைப்பதற்காக இருக்கும், அதற்கான வழிவகைகளையும், இடங்களையும் தேவன் இன்னும் தெளிவாக வெளிப்படுத்தவில்லை. ஒருவேளை, தேவனுடைய இந்த எதிர்க்கால சிருஷ்டிப்பின்

வேலைகளையும், அவற்றின் விவரங்களையும் தான் இந்த "**தண்ணீருள்ள ஊற்றுகள்**" அர்த்தப்படுத்தலாம். ஆம், "**ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகள்**" என்பதன் பொருள் "**ஆட்டுக்குட்டியானவர்**" மூலம், "**திரள்கூட்ட**" வகுப்பார் **வெளிப்படப்போகும் தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் பற்றிய ஆழமான புரிதலையும் அறிவொளியையும்** நித்தியத்திற்குமாக கிடைக்கப்பெறுவார்கள் என்பதாகும். ஆம், ஆயிரமாண்டு யுகம் மற்றும் "**வரவிருக்கும் யுக**"ங்களின் கிரியைகள் குறித்த விவரங்கள்... அங்கு அவர்கள் கர்த்தராகிய இயேசுவும் அவருடைய மணவாட்டியுமான **மகிமையடைந்த கிறிஸ்து** என்னும் "**ஆலய**"த்தின் விசேஷித்த ஊழியர்களாக இருப்பார்கள்!

**இறுதியான சொற்றொடர் –**

➤ "**...தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார்**"

இது எதைக் குறிக்கும் என்றால், தங்கள் அர்ப்பணிக்கப்பட்ட ஜீவியம் எனும் கிறிஸ்தவப் பிரயாணத்தையும், அதில் அவர்கள் செய்த தொடர்ச்சியான **சமரசங்களையும், வீணடித்த வாய்ப்புகளையும்** அவர்கள் திரும்பிப் பார்க்கையில், மணவாட்டியாக இருப்பதற்கு தாங்கள் தகுதியற்றவர்கள் என்பதை உணர்ந்து, **விசனம்** மற்றும் **வருத்தத்தின்** "**கண்ணீரைச்**" சிந்துவார்கள் என்றாலும், தங்களுடைய "**அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்தத்**" **தவறிவிட்டபோதிலும் கூட** இன்னும் தங்களுக்குக் காட்டப்பட்டிருக்கும் மகத்தான கிருபை மற்றும் பரிசுக்காகவும் தேவனிடம் நன்றியுணர்வோடு களிகூருவார்கள் என்பதாகும்.

ஆ! ஆம்! மேலும் வேத வசனங்களில் **இந்தக் களிகூருதலைக்** குறித்து நாம் வாசிக்கலாம் –

**வெளிப்படுத்தல் 19:7**

**"நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன்."**

**மீண்டும் வாசிக்கிறோம் –**

**ஆபகூக் 3:18**

**"நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்."**

**வெளிப்படுத்தலின் 19ம் அதிகாரத்திலிருந்தும், ஆபகூகின் 3ம் அதிகாரத்திலிருந்தும்** மேற்கோள் காட்டப்பட்ட இந்த முந்தைய வசனங்கள், தங்களுடைய மாம்சீக நிலையில் இருந்துகொண்டு, 'கிறிஸ்துவின் மணவாட்டி வகுப்பார் முழுமையாக மகிமையடைவது எனும் மாபெரும் நிகழ்வின்போது' **சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும்** அனுபவிக்கின்ற "**திரள்கூட்டத்தை**" நன்கு அடையாளப்படுத்தக்கூடும்.... **சங்கீதம் 45:14 மற்றும் 15**ல் உள்ள மற்றொரு வசனத்தை நாங்கள் சுட்டிக்காட்டுகிறோம், இது அவர்களின் பரலோக **ஆவிக்குரிய பிறப்பாகிய** இரண்டாம் உயிர்த்தெழுதலின் நிலைமைகளில் அவர்கள் கொண்டிருக்கும் "**மகிழ்ச்சியையும் களிப்பையும்**" வெளிப்படுத்துகிறது!

**மீண்டும் வாசிக்கிறோம் –**

**சங்கீதம் 45:14,15**

"**அவள் பின்னாலே செல்லும் அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகள் உம்மிடத்தில் கூட்டிக்கொண்டுவரப்படுவார்கள். அவர்கள் மகிழ்ச்சியோடும் களிப்போடும் வந்து, ராஜ அரமனைக்குள் பிரவேசிப்பார்கள்.**"!

மெய்யாகவே, **15 – 17 வசனங்களில்** காணப்படுவது போல், "**திரள்கூட்ட**" வகுப்பாருக்கு மிகவும் ஆசீர்வாதத்தால் நிறைந்த இரட்சிப்பைத் தேவன் திட்டமிட்டுள்ளார், இதனை அவர்கள் தங்களுடைய பரலோக ஆவியின் ஜீவி நிலையிலிருந்து பார்க்கையில், படிப்படியாக

**இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார்.**

ஆம்! அது அவர்களுடைய மாபெரும் ஏமாற்றத்தை **மறக்கச்செய்து,** என்றென்றைக்குமாக "தாங்கள் அழைக்கப்பட்ட ஒரே நம்பிக்கையினை" **இழந்துவிட்டோமே** என வருந்துவதிலிருந்து மனதைத் திரும்ப செய்திடும்!

**ஆகவே, வெளிப்படுத்தலின் இந்த 7ம் அதிகாரமானது, தெய்வீக வல்லமையால் சாத்தான் கட்டப்படுவதைக் குறித்து விவரித்து ஆரம்பிக்கின்றது என்பதையும், பின்னர் அது வழிவகுக்கும் அறுவடை வேலை குறித்தும், இது சுவிசேஷ யுகத்தினுடைய "இவ்வளவு பெரிதான இரட்சிப்பு" (எபி. 2: 3) – இல் உள்ள இரண்டு ஆவிக்குரிய வகுப்பாரின் ஆழமான விவரங்களை வெளிப்படுத்துகிறது என்பதாகவும் நாம் பார்த்தோம்.**

நாம் இப்போது **8ம் அதிகாரத்திலும், ஏழாம் முத்திரையின் "உடைக்கப்படுதலிலும்"** பிரவேசிக்கப்போகிறோம், அதில் ... **1874 அக்டோபர்**

**துவக்கி நடந்துவருகிற நியாயத்தீர்ப்பின்மீதே** கவனம் இருக்கப் போகிறதைக் காணவிருக்கிறோம்.

# ஏழாம் முத்திரை

**(வெளிப்படுத்தல் 8: 1 – 5)**

**சபை காலக்கட்டம் : லவோதிக்கேயா**

**காலப்பகுதி : கி.பி. 1874 – ?**

## { சுவிசேஷ யுகத்தினுடைய நிறைவு }

**வெளிப்படுத்தல் 8:1**

**“அவர் ஏழாம் முத்திரையை உடைத்தபோது, பரலோகத்தில் ஏறக்குறைய அரைமணிநேரமளவும் அமைதல் உண்டாயிற்று.”**

தேவனுடைய **ஏழாம் முத்திரை** என்பது, இந்த **“ஏழு முத்திரைகள்”** குறித்த தீர்க்கதரிசன வெளிப்படுதலில், சபையின் ஏழாம் பாகமான லவோதிக்கேயாவின் காலக்கட்டத்தில் நிகழும் நிகழ்வுகளின் கடைசி தீர்க்கதரிசன சாட்சியாகும் **(வெளிப்படுத்தல் 3:14 – 21)**. **“உபத்திரவக் காலம்”** முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், இஸ்ரயேலில் **தேவனுடைய இராஜ்யத்தின் கண்ணுக்குத் தெரிகின்ற பாகம்** ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னர் இருக்கும் **சுவிசேஷ யுகத்தின் முடிவான படங்களும்** இதுவே. ஆக ஏழு முத்திரைகளின் தொடரில் இந்த முத்திரை மிகவும் முக்கியமானதாயும், **தேவனுடைய வார்த்தையின் ஆர்வமுள்ள மாணாக்கருக்கு** அதிக ஆர்வத்தை அளிக்கிறதுமாய் இருக்கின்றது!

**வெளிப்படுத்தல் 8:1**ல் உள்ள இந்த வசனத்திற்கான விளக்கங்கள் **பல உள்ளன**, மேலும் **“பரலோகத்தில்… அமைதல் உண்டாயிற்று”** என்பதைப் புரிந்துகொள்ளவும் **“அரைமணிநேரமளவும்”** காலப்பகுதியினை அறியவும் முயற்சிகள் ஏற்கனவே ஏறெடுக்கப்பட்டிருக்கின்றன. இங்கே **அடையாள பாஷை** பயன்படுத்தப்படுகிறது என்பதை மனதில் வைத்தவர்களாய், பரலோகத்தில் உண்டான அமைதல் **மற்றும்** கால இடைவெளி ஆகியவற்றின் விளக்கத்திலும், **இரண்டையும் மிகச் சரியாய் இசைவாக்குவதிலுமே** இந்த வசனத்தின் புரிதல் அடங்கியுள்ளது!!!

இந்த ஆய்வில் ஏழாம் முத்திரையையும் அதன் உள்ளடக்கங்களையும் புரிந்துகொள்வதற்கான **புதிய அணுகுமுறையை** நாம் காணப்போகிறோம். ஏனெனில், ஏழாம் முத்திரையைப் பற்றிய வேத வசனங்கள் **வெளிப்படுத்தல் 8:1க்கு** மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளன என்று **நீண்ட காலமாக பல விளக்கவுரையாளர்களால் கருதப்பட்டு வருகிறது**.

**ஆனால் இன்று, இந்த ஏழாம் முத்திரைக்கான வேத வாக்கியங்கள், வ. 1ல் ஆரம்பமாகி, வ. 5 வரைக்கும் செல்வதைக் காணப்போகிறோம்.**

**“சிக்கல்” வசனம் 2**ல் இருப்பதாகத் தெரிகின்றது!

2ம் வசனம் தவறாக இடம் மாற்றி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது; 2ம் வசனத்தில் எக்காளங்கள் கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள ஏழு தூதர்களும் அந்த எக்காளங்களை லவோதிக்கேயா காலத்தில் அல்ல, சுவிசேஷ யுகத்தின் தொடக்கத்திலிருந்தே ஒலிக்கத் துவங்கிவிட்டார்கள் என்பதால், 2ம் வசனமானது **5ம் வசனத்திற்குப் பிறகும், 6ம் வசனத்திற்கு முன்பும்** இருந்தால் சரியான பொருளில் வருமென்று சிலர் கருதலாம்!!

ஆம்! இந்த வசனம் இங்கு வைக்கப்பட்டதின் காரணமாக, ஏழாம் முத்திரையின் வேதாகப்பூர்வ உள்ளடக்கம் அல்லது **காரியமானது வெளிப்படுத்தல் 8:1ல் துவங்கி அதிலேயே முடிவடைகிறது** என்கிற முடிவுக்குப் பலர் வந்துள்ளனர்.

பின்னர், 3 – 5 வசனங்களின் விஷயம் உள்ளது, நாம் அவற்றை எந்த அர்த்தத்தில் புரிந்துகொள்ள வேண்டும்? அவைகள் **லவோதிக்கேயாவையும்**, சுவிசேஷ யுகத்தின் **முடிவையும்** குறிக்கின்றனவா... அல்லது இது சுவிசேஷ யுகத்தின் **துவக்கத்தைக்** குறிக்கின்றதா?

இவை **சுவிசேஷ யுகத்தின் துவக்கத்தில் நிகழ்ந்தவை** எனப் பலர் இந்த வசனங்களுக்கான அர்த்தமாக, விளக்கமாக கொடுக்க விரும்புகின்றனர், அதேசமயம் இவை அனைத்தும் **மிகவும் குழப்பமானதாகவும்**, நியாயமற்றதாகவும் தோன்றுகிறது; இவற்றைக் குறித்து நாம் நம்முடைய ஆய்வில் பார்க்கப்போகிறோம்.

ஆகவே, பெரும்பான்மையான விளக்கவுரையாளர்களிடையே, நடைமுறையில் உள்ள “**பொது சிந்தனை**” என்னவென்றால், ஏழாம் முத்திரையின் தீர்க்கதரிசன வசனங்கள் **வெளிப்படுத்தல் 8:1க்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளன** என்பதே ஆகும்!

**ஆனால், அது எவ்வாறு அப்படி இல்லை என்பதை நாம் தாழ்மையாகப் பார்க்கப்போகிறோம் !!**

**2ம் வசனம் வைக்கப்பட்டுள்ள இடமும்,** **"ஏழு தூதர்கள்"** **"ஏழு எக்காளங்களை"** பெறுவதும் உண்மையில் **ஒத்திசைவு** (Analog) என்று அழைக்கப்படுகிறது! ஆம்! இந்த **2ம் வசனம் வெளிப்படுத்தல் 15:1**க்கு ஒத்திசைவானதாகும், அங்கு **"ஏழு தூதர்கள்"** **"ஏழு கடைசி வாதைகளை"** பெறுவதாகக் காண்கிறோம். முழு சுவிசேஷ யுகத்திலும் **"எக்காளங்களை"** ஒலிப்பதற்காய் உபயோகப்படுத்தப்பட்ட **அதே "ஏழு தூதர்கள்"** இவர்கள்தான், மேலும் **வெளிப்படுத்தல் 15:1**ல் உள்ள ஒரே வித்தியாசம் என்னவென்றால், அவர்கள் **இனி மாம்சத்தில் இராமல் அனைவரும் மகிமைப்படுத்தப்பட்டு, பின்னர்** சபையின் லவோதிக்கேயா காலக்கட்டத்தின்போது **"தேவனுடைய கோபத்தின்" "ஏழு கலசங்களை"** ஊற்றுவதற்கு பயன்படுத்தப்படுகிறார்கள் என்பதே ஆகும்.

ஆ! ஆம்! **மெய்யாகவே**, இவர்கள் சுவிசேஷ யுக சபையின் ஏழு பிரிவுகளில் ஒவ்வொன்றிற்கும் இருந்த அதே ஏழு **"தேவதூதர்கள்"** அல்லது தூதுவர்களே ஆவார்கள்.



**ஆ! இதுகுறித்து நீங்கள் எவ்வாறு இவ்வளவு அறுதியிட்டுக் கூறுகிறீர்கள்? என்று யாராவது கேட்கலாம்!**

அதற்கான பதிலுக்காக நாம் பின்வரும் வசனத்திற்கு வரலாம் –

**வெளிப்படுத்தல் 17:1,2**

**"ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் வந்து என்னோடே பேசி: நீ வா,**

**திரளான தண்ணீர்கள்மேல் உட்கார்ந்திருக்கிற மகா வேசியோடே... அவளுக்கு வருகிற ஆக்கினையை உனக்குக் காண்பிப்பேன்"**

"**ஏழு கலச**"ங்களைக் கொண்டிருந்த **ஏழு தூதர்களில் ஒருவர்** பேசுவதற்காகவும், "**மகா வேசி** "க்கு வருகிற **ஆக்கினையைக்** குறித்து வெளிப்படுத்துவதற்காகவும் அப். யோவானிடம் வருவதாக இங்கே காண்கிறோம்.

**இது புரிந்துகொள்வதற்குக் கடினமா?**
**இல்லை, நிச்சயமாக இல்லை.**

இங்கே, நாம் அனைவரும் அறிந்தபடியே, **யோவான் 21:22**ல் இயேசு அப்போஸ்தலர் பேதுருவிடம் எந்தவொரு வகுப்பாரைக் குறித்து பேசினாரோ, அந்த வகுப்பாரையே "**யோவான்**" இங்கே சித்தரிக்கிறார்

**"...நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன."**

ஆம்! நாம் பின்வருமாறு வாசிக்கும்வண்ணமாக, கர்த்தருடைய இரண்டாம் வருகைக்குப் **பிறகும்**, இன்னுமாக முதலாம் உயிர்த்தெழுதல் துவங்கிய **பின்னரும்** கூட, **மாம்சத்தில் "இருக்கும்"** அல்லது மிஞ்சியிருக்கும் சபையின் லவோதிக்கேயா காலக்கட்டம் அல்லது வகுப்பார் அல்லது சரீரத்தின் ஒரு பகுதியே இவர்கள் ஆவார்கள் –

**1 தெசலோனிக்கேயர் 4:17**

**"பின்பு உயிரோடிருக்கும் நாமும் ... மேகங்கள்மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு..."**

ஆம்! "**பின்பு உயிரோடிருக்கும் நாமும்**" வகுப்பார் என்பது லவோதிக்கேயா சபையைச் சேர்ந்த சரீர அங்கத்தினர் ஆவார்கள். இப்படியாக **வெளிப்படுத்தல் 17:1**ல் வரும் "**யோவான்**" என்பவர், **1874** அக்டோபரில் கர்த்தர் திரும்பி வந்த பிறகும், **இன்னும் மாம்சத்தில் காணப்படுகிற கடைசி** மற்றும் ஏழாம் காலக்கட்ட சபையாகிய **லவோதிக்கேயா** சபையைக் குறிக்கின்றார் என்றிருக்க, இந்த "**ஏழு தூதரில் ஒருவன்**" என்பவர் லவோதிக்கேயா சபைக் காலகட்டத்திற்கான "**தூதனாகிய**" பாஸ்டர் **சார்லஸ் டேஸ் ரசல்** அவர்களைக் குறிக்கின்ற குறிப்பாக இருக்கின்றது!

மேலும், "**நீ வா, திரளான தண்ணீர்கள்மேல் உட்கார்ந்திருக்கிற மகா வேசியோடே... அவளுக்கு வருகிற ஆக்கினையை உனக்குக் காண்பிப்பேன்**" எனும் இந்த

வார்த்தைகளின் நிறைவேற்றமானது, **பின்வரும் அவருடைய எழுத்துக்களில் வெளிப்படுத்தபட்ட** "**பாபிலோன்**" அமைப்புகளின்மீதான நியாயத்தீர்ப்பைக் குறித்த சத்திய வெளிப்பாட்டிற்கான குறிப்பாக உள்ளது –

**... வேதப்பாடங்களின் தொகுதி 4 – "அர்மகெதோன் யுத்தம்" மற்றும்**

**... தொகுதி 2 - "காலம் சமீபமாயிருக்கிறது."**

**இவ்வாறு, லவோதிக்கேயா சபைக்கிருந்த ஏழாம் தூதனே பொற்கலசங்களில் ஒன்றை ஊற்றவதற்கும் பயன்படுத்தப்பட்டார் என்பது தெரிகிறது.**

இப்போது, இந்த ஆதாரம் போதுமானாதாக இல்லை என்றால், இந்த "**ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன்**" உடைய அடையாளத்திற்கு இன்னும் கூடுதலான சான்றாதாரம், அந்தத் தூதன் மேற்கொண்டு "**யோவான்**" உடன் பேசுவதை வாசிக்கையில் நமக்குக் கிடைக்கின்றது

**வெளிப்படுத்தல் 21:9**

**"பின்பு, கடைசியான ஏழு வாதைகளால் நிறைந்த ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் என்னிடத்தில் வந்து: நீ இங்கே வா, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன் என்று சொல்லி"**

இப்போது "**நீ இங்கே வா, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன்**" எனும் இந்த வார்த்தைகளின் நிறைவேற்றமானது, **பின்வரும் அவருடைய எழுத்துக்களில் வெளிப்படுத்தபட்ட** "**ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டி**" மற்றும் அவளுடைய அழகையும் குறித்த சத்திய வெளிப்பாட்டிற்கான குறிப்பாக உள்ளது –

**... தொகுதி 3 - "உம்முடைய இராஜ்யம் வருவதாக"**

**மற்றும்...**

**... தொகுதி 4 - "புதுச்சிருஷ்டி"**

இவ்வாறு ஏழாம் எக்காளத்தை ஊதின ஏழாம் தூதன் "**ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில்**" **ஒருவராக** இங்கே காட்டப்பட்டிருப்பாரேயாகில்,

**மற்ற ஆறு பேரும்** சபைக்கான மற்ற **ஆறு தூதர்களைத்** தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது !!

ஏனெனில், அவர் **வெளிப்படுத்தல் 1:20**ன் "**என் வலதுகரத்தில் நீ கண்ட ஏழுநட்சத்திரங்களில்**" **ஒருவராக இருக்கிறார் அல்லவா?**

சுவிசேஷ யுகத்து திருச்சபையின் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஏழு எக்காளங்களை ஊதிய **அதே** "**ஏழு தூதர்**" தான், "**ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதர்**" என்பதைத் தெளிவாகக் கண்டறிந்த பிறகு, அவர்களைப் பற்றிய மற்றுமொரு **முக்கியமான அம்சத்தைப்** பார்ப்போமாக –

**வெளிப்படுத்தல் 15:6**

"**அந்த ஆலயத்திலிருந்து ஏழு வாதைகளுடைய அவ்வேழு தூதர்களும் சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரந்தரித்து, மார்பருகே பொற்கச்சைகளைக் கட்டிக்கொண்டு புறப்பட்டார்கள்.**"

இந்த "**ஏழு தூதர்**" "**கடைசி ஏழு வாதைகளை**" ஊற்றும் இந்த வேலையை மேற்கொள்ளும்போது, அவர்களின் **மகிமைப்படுத்தப்பட்ட நிலையை அடையாளங்களில்** உள்ள இந்த வேத வாக்கியமானது விவரிக்கிறது மற்றும் **நிரூபிக்கின்றது.** இதனை முதலில், அவர்கள் "**அந்த ஆலயத்திலிருந்து ... புறப்பட்டார்கள்**" என்பதில் பார்க்கிறோம், இது முந்தைய **5ம்** வசனத்துக்கான குறிப்பாகும்... அங்கு "**பரலோகத்திலே... ஆலயம் திறக்கப்பட்டது**" என்று வருகிற குறிப்பானது, **ஏப்ரல் 1878ல்** துவக்கி நடைபெற்று வருகிற **முதலாம் உயிர்த்தெழுதலையும்**, திருச்சபையின் மகிமைப்படுத்தப்படுதலையும் குறிக்கின்றது. இக்காரியம் மேலும், "**ஏழாம் எக்காளத்தின்**" காலத்தின் போது நடந்த இதே விஷயத்தை விவரிக்கின்ற **வெளிப்படுத்தல் 11:19**ம் வசனத்தாலும் ஆதரிக்கப்படுகின்றது!

பின்னர் அவர்கள் "**சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரந்தரித்து**" இருப்பதைக் குறித்து வாசிக்கிறோம், இது அவர்களின் **உண்மையான பரிசுத்தத்தின் நிலைமையைக்** குறிக்கின்றது, எப்படியெனில் "**ஆவியினால் பிறந்து,**" முழுமையாக வளர்ச்சியடைந்துள்ள அவர்களின் "**ஆவி**"க்குரிய புதிய சிந்தைகளுக்குப் பொருத்தமான "**ஆவி**"க்குரிய **பரிபூரண சரீரங்களை** தங்களுடைய முதலாம் உயிர்த்தெழுதலில் அவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள்! ஆம்! "**சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரந்தரித்து**" என விவரிக்கப்பட்டுள்ள இந்த **மகிமையிலிருக்கும்** நீதி அல்லது பரிசுத்தமானது, **வெளிப்படுத்தல் 19:8**ல் "**சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி**" என்று

விவரிக்கப்பட்டுள்ளபடி மாம்சத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்டவற்றுடன் **வித்தியாசப்படுத்தப்படுகின்றது.**

ஆம்! "**சுத்தமும் பிரகாசமுமான**" (வெளி. 19:8 - "clean and white") என்கிற அடையாளமானது "**அசுத்தம்/unclean**" ஆக மாறுவதற்கான வாய்ப்பைக் குறிக்கிறது ... ஆனால் "**சுத்தமும் பிரகாசமுமான**" (வெளி. 15:6 - "pure and white") என்பதோ "**தூய்மையற்றதாக** / impure" ஆக மாற **எந்த வாய்ப்புமில்லை!!** இதுவே பரலோகத்தில் மகிமைப்படுத்தப்பட்ட நிலையில் இருக்கும் **பரிசுத்தத்தின்** பரிபூரணமான மற்றும் நிரந்தரமான நிலையாகும்!

**தமிழ் மற்றும் ஹிந்தி போன்ற, வேதாகமத்தின் பல மொழிபெயர்ப்புகளில் வெளிப்படுத்தல் 15:6ன் "pure and white" மற்றும் வெளிப்படுத்தல் 19:8ன் "clean and white" என்ற தெளிவான வேறுபாடு காணப்படவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ளவும்!!**
**தயவுசெய்து இந்த விஷயத்தை உங்கள் மொழி வேதாகம மொழிபெயர்ப்புகளில் கவனமாக ஆராய்ந்து பார்த்திடுங்கள்!**

**இறுதியாக,** வாசிக்கலாம் –

**வெளிப்படுத்தல் 15:6**

**"மார்பருகே பொற்கச்சைகளைக் கட்டிக்கொண்டு..."**

இதுவும் இந்தத் "**தூதர்களின்**" **மகிமைப்படுத்தப்பட்ட** நிலைமைக்குத் தொடர்புடைய **அடையாளங்களாகும்**. இது அவர்கள் திவ்ய சுபாவத்தில் தேவனுடைய **ஊழியர்களாக** இருப்பது தொடர்பானதாகும்!

நாம் பின்வரும் வசனத்தை வாசிக்கையில், இந்த அடையாள விளக்கத்தை சரிதான் என உறுதிப்படுத்துகிறோம் –

**வெளிப்படுத்தல் 1:13**

**"அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே, நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக்கொப்பானவரையும் கண்டேன்."**

இது சுவிசேஷ யுகம் முழுவதிலும், நமது கர்த்தராகிய இயேசு, தம்முடைய **தலைமை மற்றும் பிரதான ஆசாரியருக்குரிய (தமிழில் – எபேசியர் 1:23) தெய்வீக பணியைச்** செய்து வருவதற்கான குறிப்பாகும்! திவ்ய சுபாவத்தில்

தேவனுக்கு ஊழியஞ்செய்யும் இந்த விசேஷித்த நிலைமையானது "**மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்தது**" என அடையாளமாக குறிப்பிடப்படுகிறது, மேலும் இது "**தேவனுடைய புத்திர**" வகுப்பார், மிகுந்த அன்பு, சந்தோஷம் மற்றும் வைராக்கியத்துடன் **தாங்களாக மனமுவந்து இருதயப்பூர்வமாக** ஏறெடுத்திடும் **ஊழியத்தை** அடையாளப்படுத்தும் **(எபிரேயர் 2:10 / யோவான் 1:12).**

**ஆகவே, 2ம் வசனமானது, இந்த ஏழு தூதர்களை அதிகமாக, அவர்கள் மாம்சத்தில் இருந்தபோது ஏழு எக்காளங்களை ஊதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட அவர்களது இந்தச் சுவிசேஷ யுக ஊழியத்துக்கான ஒரு நினைவூட்டல் அல்லது ஒத்திசைவு எனக் காட்டுகின்றது … ஆனால் இங்கேயோ, லவோதிக்கேயா சபையின் "ஏழாம் முத்திரை" காலத்தில் பாபிலோன் அமைப்புகளின் மீது "தேவனுடைய கோபத்தின்" "பொற் கலசங்களை" ஒவ்வொன்றாக ஊற்றுவதில் ஒவ்வொருவரும் தங்களுடைய மகிமைவாய்ந்த நிலைமையில் ஒரு விசேஷித்த பணியைச் செய்வதாகக் காட்டப்பட்டுள்ளது..**

இப்போது இந்த ஏழாம் முத்திரையின் பின்னணி என்னவென்றால், அது முதலில் பரலோகத்தில் உள்ள "**தேவ ஆட்டுக்குட்டியானவரால்**" திறக்கப்பட்டதாகும் **(வெளிப்படுத்தல் 5:6 & 6:1)**, மேலும் அதில், அக்டோபர் 1874ல் துவங்கி சுவிசேஷ யுகத்தின் இறுதி வரை இயங்குகிறதும், **வெளிப்படுத்தல் 8:5** இல் **அடையாளமாகக்** குறிக்கப்பட்டுள்ள மகா உபத்திரவத்துடன் முடிவடையவும் போகிற **சபையின் லவோதிக்கேயா (ஏழாம்) காலக்கட்டத்தில் நிறைவேறும்** நிகழ்வுகளைப் பற்றிய குறிப்பு உள்ளது.

ஏழாம் முத்திரையின் உள்ளடக்கங்கள் அதன் உடைக்கப்படுதலோடு துவங்குகின்றன, பின்னர் **கிட்டத்தட்ட அதே நேரத்தில்** "**ஏறக்குறைய அரைமணிநேரமளவும்**" நீடித்த "**பரலோகத்தில் அமைதல் உண்டாயிற்று.**"

**இது எதைக் குறிக்கிறது?**

அத்துடன் இங்கே வாசகர் **ஏழு முத்திரைகள்** ஒட்டுமொத்தமாக, **இரண்டு இரகசியங்களையும்** அவற்றின் **ஆரம்பத்தையும், வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும், சீர்த்திருத்தத்திற்கு முந்தைய மற்றும் பிந்தைய நிலையையும், இறுதி நியாயத்தீர்ப்பையும்** வெளிப்படுத்துகின்றன என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இந்த **இரண்டு இரகசியங்கள்** யாவை?

**அவையாவன...**

**1.** **"ஆதிகாலமுதல் அடக்கமாயிருந்த... இரகசியம்" (உரோமர் 16:25, 26) மேலும் மீண்டுமாக "கிறிஸ்துவின் இரகசியம்" (எபேசியர் 3:3, 4). ஆம்! கிறிஸ்து என்ற "இரகசியம்!"**

**...மற்றொன்று...**

**2.** **"அக்கிரமத்தின் இரகசியம்" (2 தெசலோனிக்கேயர் 2:7). ஆம்! இது அந்திக்கிறிஸ்து என்னும் "இரகசியம்."**

பொல்லாங்கனுடைய அந்தப் **பாழாக்கும் அருவருப்பாகிய** "**அக்கிரமத்தின் இரகசிய**"த்திற்கு ஒரு விசேஷித்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, இந்த இரண்டு இரகசியங்களின் **இணையான / சமகாலத்து** வரலாறு (PARALLEL history) முத்திரைகளில் விவரிக்கப்பட்டுள்ளது!

**முதல் நான்கு முத்திரைகள்** முதலில் "**ஒரு வெள்ளைக் குதிரையை**" புறப்படசெய்தன, பின்னர் "**சிவப்பான வேறொரு குதிரை**" வெளிப்பட்டது, இப்படியாக அவைகளின் நிறம் "**வெள்ளை**"இலிருந்து "**சிவப்பு**," பின் "**கருப்பு**," பின் "**மங்கினநிறம்**" என்பதாக **நிறம் மாறினது!** இது நிச்சயமாக இயேசுவும் அப்போஸ்தலர்களும் பிரசங்கித்த "**மகா பரிசுத்தமான விசுவாசத்தினுடைய**" உபதேசம் **சீரழிந்து வந்ததைக்** குறிக்கிறது – இயேசுவின் அப்போஸ்தலர்களின் உபதேசமானது சபையின் முதல் **நான்கு** காலக்கட்டங்களின்போது, தீட்டுப்படவும், அந்தகாரமடையவும் துவங்கி, "**பொல்லாங்கனின்**" மற்றும் **போப் மண்டலம்** எனும் அவனது **அந்திக்கிறிஸ்து** அமைப்பின் செல்வாக்கு மற்றும் முயற்சிகளின் கீழாக முற்றிலுமாக அழித்துப்போடப்பட்டது.



ஐந்தாம் ஆறாம் முத்திரைகள் இந்த இரண்டு இரகசியங்களினுடைய **சீர்த்திருத்தத்திற்கு முந்தைய மற்றும் சீர்த்திருத்தத்திற்குப் பிந்தைய** நிலையைக் குறித்து பேசுகின்றன.

இது ஏனென்றால் **கி.பி.1517** எனும் சீர்த்திருத்த தேதியானது ஐந்தாம் மற்றும் ஆறாம் சபையின் இந்த இரண்டு காலங்களை அல்லது பகுதிகளைப் பிரிக்கின்றது.

**இவ்வாறு இறுதியாக ஏழாம் முத்திரையில், இந்த இரண்டு இரகசியங்களுக்கான நியாயத்தீர்ப்பையும் அதன் விவரங்களையுமே நாம் எதிர்நோக்கிட வேண்டும்.**

எனவே இதை வைத்து **வெளிப்படுத்தல் 8:1 – 5**ன் ஏழாம் முத்திரையின் வேதாகமப்பூர்வ பாஷையானது **இந்த மாபெரும் இறுதி நியாயத்தீர்ப்பைப்** பற்றி பேசும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

நாங்கள் அறிவுறுத்துவது யாதெனில்

**வசனம்** 1 மற்றும் 2, **அந்திக்கிறிஸ்துவினுடைய** இறுதி நியாயத்தீர்ப்புகளைக் குறித்து பேசுகின்றன.

**வசனம்** 3 மற்றும் 4, **கிறிஸ்துவின்** இறுதி நியாயத்தீர்ப்புகளைக் குறித்து பேசுகின்றன.

**இரண்டாம் உலகம்** மற்றும் **சுவிசேஷ யுகத்தினை** முடிவுக்குக் கொண்டுவரும், **உலகத்தின் மீதான** இறுதி நியாயத்தீர்ப்புகளைக் குறித்து **வசனம்** 5 பேசுகின்றது.

**அது எப்படி? என்று பார்க்கலாம்**

பின்வரும் வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள நிஜமான கிரேக்க பதங்களையும் அவற்றின் அர்த்தத்தையும், வசனத்தின் **ஸ்ட்ராங்ஸ் அகராதியிலிருந்து** படிப்பதன் மூலம் துவங்கலாம் –

**வெளிப்படுத்தல் 8:1**

**"அவர் ஏழாம் முத்திரையை உடைத்தபோது, பரலோகத்தில் ஏறக்குறைய அரைமணிநேரமளவும் அமைதல் உண்டாயிற்று."**

"**அமைதல்**" என்பதிலிருந்து ஆரம்பிக்கிறோம், இதின் கிரேக்க வார்த்தை "**சிகே / sige**" (ஸ்ட்ராங்ஸ் எண் – கிரேக்கம் #4602), இது "**அமைதல்**" என்று

மாத்திரம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த வார்த்தையின் அர்த்தத்தை மேலும் விஸ்தரித்துப் பார்க்கையில், "**சியோபாவ்** / **siopao**" (ஸ்ட்ராங்ஸ் எண் – கிரேக்கம் #4623) எனும் வார்த்தையின் அர்த்தத்தை "**சிகே**" உடன் ஒப்பிடுவதற்கான வழிமுறையில் காணப்படுகிறது. அதின் மூலம், இந்த வேத வாக்கியத்தில் வரும் "***அமைதல்***" என்பது இரண்டு விஷயங்களைக் குறிப்பதாகக் காண்கிறோம் –

1. இது பேசாதபடிக்கு **மனமுவந்து** (**voluntary**) மறுத்துவிடுவது அல்லது பேச விரும்பாத மனப்பான்மையை குறிக்கும்...
மற்றும்....

2. இங்கே "***அமைதல்***" என்பது **அனுப்பும் தரப்பிலிருந்து** (**source**) வெளிப்படுகிறது, மாறாக யாரையாவது அமைதிப்படுத்துவதில் உள்ளதுபோல, பெற்றுக்கொள்ளும் தரப்பில் இருந்து வெளிப்படவில்லை.

● **இது கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயமாகும்!**

இப்போது "***பரலோகம்***" என்கிற வார்த்தையானது கிரேக்க வார்த்தையான "**உரனாஸ்** / **ouranos**" (ஸ்ட்ராங்ஸ் எண் – கிரேக்கம் #3772) என்பதிலிருந்து வந்தது, இது (சொல்லர்த்தமான) "**வானம்**" என்றும், "**தேவனுடைய இருப்பிடம்**" என்றும் பொருள்படும்.

இறுதியாக "***அரை மணி நேரம்***" என்கிற வார்த்தையானது கிரேக்க வார்த்தையான "**ஹெமியோரியான்** / **hemiorion**" (ஸ்ட்ராங்ஸ் எண் – கிரேக்க #2256) என்பதிலிருந்து வந்தது, இதன் பொருள் "***அரை மணி நேரம்***" என்பதாகும்.

**எனவே இங்கே –**
**"அரை மணி நேர"மளவும் தேவனுடைய இருப்பிடத்திலிருந்து, பேசாமல் இருப்பதற்கான ஒரு மனமுவந்த மறுப்பு அல்லது விருப்பமின்மை காணப்பட்டது.**

"***அமைதல்***" அல்லது தன்னார்வ மறுப்பு அல்லது பேசுவதற்கான விருப்பமின்மை, (சொல்லர்த்தமான) வானத்திலிருந்து வந்திருக்க **முடியாது**, மாறாக தேவனுடைய இருப்பிடத்திலிருந்தே வந்திருக்க வேண்டும் என நாங்கள் கருதுகிறோம். எனவே இந்த "***அமைதல்***" **தேவனிடமிருந்தே வெளிப்பட்டிருக்க** வேண்டும். மேலும் **இது அடையாள பாஷையாகும்!**

## தேவனிடமிருந்து பேசுவதற்கு ஒரு தன்னார்வ மறுப்பு அல்லது விருப்பமின்மை என்பது எதைக் குறிக்கும்?

சவுல் இராஜாவின் ஜீவியத்தில் இதன் அர்த்தம் **விளங்கி உள்ளதைப் பார்ப்பதன் மூலம்** இதனை நாம் நன்கு புரிந்துகொள்ள முடியும். இராஜாவாக சவுல் அபிஷேகம் செய்யப்பட்டார் (தேவனுடைய ஒப்புதலின்பேரில் நியமிக்கப்பட்டார்), இஸ்ரயேல் தேசத்தின்மீது இராஜாவாக இருப்பதற்கு (**1 சாமுயேல் 10:24**) **தேவனுடைய ஆவியும்** அவருக்கு அருளப்பட்டது (**1 சாமுயேல் 10:6, 10**). அவர் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தார் – **ஆனால் காலம் கழிந்தபோது,** சவுல் தேவனுக்கு முன்பாக **கீழ்ப்படியாமை** மற்றும் **பொறுமையின்மை** போன்ற பொல்லாத காரியங்களைச் செய்யத் துவங்கினார், இதைப்பற்றி பின்வரும் வசனத்தில் வாசிக்கலாம் –

**1 சாமுயேல் 13:9**

**"அப்பொழுது சவுல்: சர்வாங்க தகனபலியையும் சமாதானபலிகளையும் என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்று சொல்லி, சர்வாங்கதகனபலியைச் செலுத்தினான்."**

**கடைசியாக** சவுல் இராஜா **அமலேக்கியரையும்**, அவர்கள் வைத்திருந்த அனைத்தையும் **முற்றிலுமாக அழிக்க வேண்டும்** எனும் தேவக் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் போனார் (**1 சாமுயேல் 15:2 – 3**) அதற்கு மாறாக உச்சிதமான ஆடுகளையும் எருதுகளையும் எடுத்துக்கொண்டு, அவர்கள் இராஜாவாகிய ஆகாகை உயிரோடு விட்டுவைத்தார்.

பின்வருமாறு வாசிக்கும்படி **சவுல் கீழ்ப்படியாமையின் வாயிலாக கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தார்** –

**1 சாமுயேல் 15:18 – 19, 22 – 23**

**"இப்படியிருக்க, நீர் கர்த்தருடைய சொல்லைக்கேளாமல், கொள்ளையின்மேல் பறந்து, கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தது என்ன என்றான். அதற்குச் சாமுவேல்: கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம். இரண்டகம்பண்ணுதல் பில்லிசூனியபாவத்திற்கும், முரட்டாட்டம்பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது; நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தபடியினாலே, அவர் உம்மை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார் என்றான்."**

**பின்னர் என்ன நடந்ததாக நாம் காண்கிறோம்?**

நாம் கீழே வாசிக்கும்படி, **உடனே** கர்த்தருடைய ஆவியானது அவரை விட்டு நீங்கி, **பொல்லாத ஆவிகள் அவரைக் கலங்கப்பண்ண ஆரம்பித்தன** –



**1 சாமுயேல் 16:14**

**"கர்த்தருடைய ஆவி சவுலை விட்டு நீங்கினார்; கர்த்தரால் வரவிடப்பட்ட ஒரு பொல்லாத ஆவி அவனைக் கலங்கப்-பண்ணிக்கொண்டிருந்தது."**

அதன்பின்னர், கர்த்தர் சவுலிடம் "**அமைதலாய்**" இருந்தார் (உத்தரவு அருளாதிருந்தார்), இதை **அவருடைய சொந்த வார்த்தைகளிலேயே** வாசிக்கலாம் –

**1 சாமுயேல் 28:6 & 15**

**"சவுல் கர்த்தரிடத்தில் விசாரிக்கும் போது, கர்த்தர் அவனுக்குச் சொப்பனங்களினாலாவது, ஊரீமினாலாவது, தீர்க்கதரிசிகளினாலாவது மறு உத்தரவு அருளவில்லை."**

**"சாமுவேல் சவுலை நோக்கி: நீ என்னை எழும்பிவரப்பண்ணி, என்னைக் கலைத்தது என்ன என்று கேட்டான். அதற்குச் சவுல்: நான் மிகவும் நெருக்கப்பட்டிருக்கிறேன்; பெலிஸ்தர் எனக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார்கள்; தேவனும் என்னைக் கைவிட்டார்; அவர் தீர்க்கதரிசிகளினாலாவது, சொப்பனங்களினாலாவது எனக்கு மறு உத்தரவு அருளுகிறதில்லை; ஆகையால் நான் செய்யவேண்டியதை நீர் எனக்கு அறிவிக்கும்படிக்கு, உம்மை அழைப்பித்தேன் என்றான்."**

ஆம்! **அந்தத் தருணம் துவக்கி சாமுயேல் தீர்க்கதரிசி மரிக்கும் வரைக்கும்,** தேவனுடைய வாய்க்கருவியாக இருந்த சாமுயேல் தீர்க்கதரிசி மூலமாக கூட, தேவன் சவுலிடம் எத்தொடர்பும் கொள்ளவில்லை **(1 சாமுயேல் 15:35).**

மேலும், கர்த்தருடைய ஆவி சவுலிடமிருந்து நீங்கியப் பின்னர், **தேவனுடைய வெளிச்சமும் சத்தியத்தின் ஒளியும்** அவரை விட்டு விலகிவிட்டன என்பதையும்,

**இருள்** அவரை மிகவும் பிடித்துக் கொள்ளத் துவங்கியதையும் கவனிக்க முடிகிறது. எவ்வளவாய் எனில் தொடர்பு ஊடகங்கள், மந்திரவாதிகள், போன்றவற்றுக்கு எதிராக சட்டங்களை இயற்றிய இராஜாவே (**1 சாமுயேல் 28: 9**) மரித்த தீர்க்கதரிசி சாமுயேலுடன் தொடர்புகொள்ள அவர்களில் ஒருவரைக் கலந்தாலோசிப்பதற்காய் தேடி வந்து கொண்டிருந்தார்!

இதனால் தேவனுடைய "**ஒளியின்**" ஆவி அகற்றப்பட்ட காரியமானது சாத்தானின் "**இருள் மற்றும் தப்பறையின் ஆவி**"ஐ (**ஏசாயா 60:2**) அவர் மீது கொண்டு வந்தது.

**இப்போது சவுலினுடைய வாழ்வில் காணப்பட்ட தேவன் அவருக்கு அமைதலாக இருந்த காலகட்டமாகிய தேவனுடைய ஆவி திரும்ப எடுக்கப்பட்டது மற்றும் பொல்லாத ஆவிகள் கலங்கப்பண்ணியது எனும் இந்த எடுத்துக்காட்டானது, தற்போது ஆராய்ந்துகொண்டிருக்கும் வேத வாக்கியத்தைப் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும்.**

**சவுலின் வாழ்க்கையின் நிகழ்வுகளை எடுத்து, தியானம்செய்துகொண்டிருக்கும் வசனத்தின் "அமைதலுக்கு" பயன்படுத்துவதில் என்ன நியாயமான காரணங்கள் இருக்கக்கூடும்? எனச் சிலர் கேட்கலாம்.**

நாம் பார்க்கப்போகிற அமைதலின் அடையாள அர்த்தம் அனைத்தும் சவுல் இராஜாவின் வாழ்க்கையில் **நிழலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது** என்பதையும், அவரும் அவரின் நாற்பது ஆண்டு "**கால**" ஆட்சியும் (**அப்போஸ்தலர் 13:21**) நிழலில் எதனை அர்த்தப்படுத்தியது என்பதையும் நாம் **அடையாளங்காணும்போது** இதனை நாம் புரிந்துகொள்வோம்!

**வெளிப்படுத்தல் 8:1ல் உள்ள இந்த வசனத்திலுள்ள அடையாளத்தின் புரிதல், "தேவனுடைய ஆவி திரும்ப எடுக்கப்பட்டதை" குறிக்கிறது. இதுவே "பரலோகத்தில் ... அமைதல் உண்டாயிற்று" என்பதன் அடையாள அர்த்தமாகும் என்று நாங்கள் அறிவுறுத்துகிறோம்.**

**இந்த "அமைதல்" இல் யார் குறிப்பிடப்படுகிறார்கள் மற்றும் தேவன் யாரிடமிருந்து "அவருடைய ஆவியைத் திரும்பப் பெற்றார்?" என்கிற கேள்வி இப்போது எழும்புகின்றது.**

பதிலானது 1878 ஆம் ஆண்டுக்கு நம்மை அழைத்துச் செல்கிறது, அநேகமாக **அந்த ஆண்டின்** ஏப்ரல் மாதத்தில் நிகழ்ந்திட்ட நித்திரைசெய்யும் பரிசுத்தவான்களினுடைய முதலாம் உயிர்த்தெழுதலின் துவக்கத்திற்கு **முன்பாக, பெயர்க் கிறிஸ்தவ மண்டலத்தின் வீட்டைக்** கண்டனம் செய்வதும் நிராகரிப்படுதலும் நிகழ்ந்தது, இதை நாம் பின்வரும் வசனத்தில் காணலாம் –

**வெளிப்படுத்தல் 18 : 1 – 2**

**"இவைகளுக்குப்பின்பு, வேறொரு தூதன் மிகுந்த அதிகாரமுடையவனாய், வானத்திலிருந்து இறங்கிவரக்கண்டேன்; இவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று. அவன் பலத்த சத்தமிட்டு: மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது! அது பேய்களுடைய குடியிருப்பும், அசுத்த ஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று."**

அறுவடை நேரம் வரையில், "**பாபிலோன்**" என்று அழைக்கப்படும் பெயர்க் கிறிஸ்தவ மண்டலத்தில் தேவன் **தமது பரிசுத்த ஆவி** வாசமாயிருப்பதற்கு அனுமதித்ததை நாம் கீழே வாசிக்கிறோம் –

**மத்தேயு 13 : 29,30**

**"இரண்டையும் அறுப்புமட்டும் வளரவிடுங்கள். அறுப்புக்காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி: முதலாவது களைகளைப்பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்கு கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்துவையுங்கள் என்பேன் என்று சொன்னான் என்றார்."**

"**பாபிலோனுக்கான**" தேவனுடைய **நீடிய சாந்தமும் பொறுமையும்** நாம் கீழே வாசிக்கும் வார்த்தைகளில் பிரதிபலிக்கிறது –

ஆனால் "**பாபிலோன்**" இடமான தேவனுடைய இந்தப் பொறுமையானது **1878ம் ஆண்டில் நின்றுபோனது, அந்த ஆண்டின் ஏப்ரல் மாதத்தில்** தான் **வெளிப்படுத்தல் 6:11** இன் "**கொஞ்சக்காலம்**" என்னும் தீர்க்கதரிசன "**காத்திருப்பு காலம்**" அல்லது "**குரோனோஸ்**" அல்லது 360 சொல்லர்த்தமான ஆண்டுகளும் முடிவுக்கு வந்தன!

**ஆம்! அந்த ஆண்டில் [மற்றும் மாதத்தில்] பாபிலோனின் வீடு ஒரு அமைப்பாக அல்லது நிறுவனமாக அவரால் நிராகரிக்கப்பட்டது! ஆகவே, அந்நாள் துவக்கி அவருடைய ஆவியைப் பெற்றிருந்து, அவருடைய வீட்டின் அடையாளமாக இருந்த அந்தத் தேவனுடைய வீடு பூமியில் இராமல் போனது. [தயவுகூர்ந்து கவனிக்கவும்: "ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட" புது சிருஷ்டிகளின் சபையானது முற்றிலுமாக உலகத்தால் அறியப்படவில்லை அல்லது அங்கீகரிக்கப்படவில்லை – 1 யோவான் 3:1]**

ஆம்! அப்போதிருந்து பாபிலோன் சாத்தான் மற்றும் "**அசுத்த ஆவிகளின்**" (கள்ள உபதேசங்களின்) காவல்வீடாயிற்று என்று நாம் கீழே வாசிக்கிறோம் –

**வெளிப்படுத்தல் 18:2**

**"அவன் பலத்த சத்தமிட்டு: மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது! அது பேய்களுடைய குடியிருப்பும், அசுத்த ஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று."**

பாபிலோனின் இந்தக் கண்டனத்தில்தான், தேவனுடைய பரிசுத்த ஆவியின் "**வெளிச்சமும்**" "**சத்தியமும்**" அகற்றப்பட்டபோது, அந்தப் பாபிலோன், "**பேய்களுடைய குடியிருப்பும், அசுத்த ஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று**" என்பதாகக் காண்கிறோம்.

**இது பாபிலோன் அல்லது பெயர்க் கிறிஸ்தவமண்டலத்திற்கு எதனை அர்த்தப்படுத்தும்?**

பதில்: அவர்கள் மத்தியில் இருந்த "**சத்திய ஒளி**" (**வெளிப்படுத்தல் 18:23**) பறிக்கப்பட்டு, அது இருளின், "**அசுத்த ஆவிகளின்**" அல்லது எல்லா வகையான கள்ள உபதேசங்களின் **காவல்வீடாக மாறத்** துவங்கியது, மேலும் அது **வேதாகமச் சத்தியத்தில் எது எஞ்சியிருந்ததோ அதை** மாற்றீடு செய்து, அதின் உறுப்பினர்களின் நம்பிக்கைகளாக மாறிப்போன கள்ள உபதேசங்கள் மற்றும் மனித மரபுகளின் குடிலாகவும் மற்றும் உலகத்தின் பொல்லாங்கரின் "**கூடு**" அல்லது வீடாகவும் மாறினது.



**உதாரணம்:** ஓரினச்சேர்க்கை மற்றும் ஒரே பாலின திருமணம்

இப்போது உரோமச் சபை மற்றும் இங்கிலாந்தின் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது!

இவ்வாறாக, **நிழலில் சவுல் இராஜாவின் வாழ்க்கையில் காணப்பட்டதைப் போன்று,** பாபிலோன் இருளினால் சூழப்பட்டுள்ளது. தேவனுடைய உண்மையான இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் முறையின்/விதத்தின் காரியங்களைக் காண்பிக்கும் சில குறிப்பிட்ட நிழலான படங்களை இங்கே சுட்டிக்காண்பிப்பது பொருத்தமானதாயிருக்கும். சவுல் இராஜாவும், அவரது நாற்பது ஆண்டு "**காலமும்**," தேவனுடைய பொறுமையான காத்திருப்பு காலத்திற்குப் பிறகு இறுதியாக ஆக்கினைக்குள்ளாக்கப்பட்ட **பாபிலோனால் நிறுவப்பட்ட கள்ள, அங்கீகரிக்கப்படாத ஆளுகையின் காலத்திற்கு நிழலாக இருந்தது** என்பதை நாம் அடையாளங்காண வேண்டும். ஆம்! இஸ்ரயேலின் **முதல் மூன்று இராஜாக்களுடைய** ஆட்சிகளின் **சிறப்பியல்புகளில்**, பூமியில் தேவனுடைய உண்மையான இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் முறையின் / விதத்தின் மிக முக்கியமான விஷயங்கள் **நிழலாகக் காண்பிக்கப்பட்டுள்ளன.**

- **சவுல் இராஜாவின்** ஆளுகையானது, எவ்வாறு சபையானது ஒரு கண்ணுக்குத் தெரிகின்ற மனுஷத் தலைமையை தேடி, இப்படியாக தேவனால் அங்கீகரிக்கப்படாததும், ஆனால் ஒரு காலத்திற்கு அனுமதிக்கப்பட்டதுமான அந்திக்கிறிஸ்துவின் ஆளுகையைத் துவக்கியது என்பதை அடையாளப்படுத்துகின்றது.

- **தாவீது இராஜாவின்** ஆளுகையானது, 1874ம் ஆண்டுத்துவக்கி இயேசு தமது எதிரிகளுக்கு "மத்தியில்" ஆட்சி செய்துகொண்டு, உலகிற்குப் புலப்படாதவராக இருந்து வருகிற இராஜ்யத்தின் கண்ணுக்குத் தெரியாத பாகத்தைக் குறிக்கிறது, இது அப்சலோம் புலப்படும் வகையில் ஆளுகை செய்துகொண்டிருந்தபோது, தாவீது இராஜா வனாந்தரத்தில் தரித்திருந்து, இஸ்ரயேலுக்குப் புலப்படாதவராக இருந்ததில் அடையாளப்படுத்தப்படுகிறது!!

- இறுதியாக **சாலொமோன் இராஜாவின்** ஆளுகையானது, பிற்பாடு இஸ்ரயேலில் இராஜ்யத்தின் கண்ணுக்குத் தெரிகின்ற பாகமும், சமாதானமான இராஜ்யமும் நிறுவப்படுவதைக் குறிக்கின்றது.

(இந்த நிழலைக் கருத்தில் கொள்ளும்போது, இந்த மூன்று இராஜாக்களினுடைய ஆளுகையின் துல்லியமான காலக்கட்டங்களும், அவர்கள் ஆளுகையின் மற்ற அனைத்து விரிவான அம்சங்களும் இங்கு கருதப்படவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். சில பொதுவான நிழலான அம்சங்கள் மாத்திரமே கருதப்படுகின்றன.)

இப்போது **பாபிலோனின் ஆக்கினைக்குத்** திரும்பி வருகையில், இந்த "**இருள்**" மற்றும் ஆக்கினையானது, 1878இல் "**தேவனுடைய ஆவி நீங்குதல்**" அல்லது அடையாளரீதியிலான "**அமைதலுடன்**" துவங்கியது.

கீழேயுள்ள வசனத்திற்கு நாம் வருகையில் இந்த உண்மை வேத வாக்கியங்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம் –

**ஏசாயா 47:5**

**"கல்தேயரின் குமாரத்தியே, நீ அந்தகாரத்துக்குள் பிரவேசித்து மவுனமாய் உட்காரு; இனி நீ ராஜ்யங்களின் நாயகியென்று அழைக்கப்படுவதில்லை."**

**ஏசாயா 47ம் அதிகாரத்தின் 1ம் வசனத்திலிருந்து** நாம் வாசிக்கும்போது, இது பாபிலோனுக்கான ஒரு **தெளிவான** தீர்க்கதரிசனக் குறிப்பாக இருப்பதைப் பார்க்க முடிகின்றது. "**இருள்**" என்ற குறிப்புடன் "**மவுனம்**" என்பதற்கான குறிப்பும், மேலும் அதே அமைதலான நிலையில் **காத்திருக்கும் காலத்தை** அடையாளமாகக் குறிக்கும் "**உட்காரு**" என்பதற்கான குறிப்பும் உள்ளதைக் கவனியுங்கள் !!

**மிகவும் தெளிவாக இருக்கிறதல்லவா??!**

இதே விஷயம் **இன்னொரு வேத வாக்கியத்தில்** இன்னொரு முறை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை நாம் காணலாம்!

**வாசிக்கலாம் –**

**1 சாமுயேல் 2:9**

**"அவர் தமது பரிசுத்தவான்களின் பாதங்களைக் காப்பார்; துன்மார்க்கர் இருளிலே மௌனமாவார்கள்;"**

ஆம்! சாமுயேல் தீர்க்கதரிசியின் தாயாராகிய **அன்னாளின்** ஜெபமானது தேவனுடைய தெய்வீகத் திட்டம் பற்றின தீர்க்கதரிசனப் படமாகும். இந்த வசனம் **1874ம் ஆண்டின் பிந்தைய காலக்கட்டத்தைக்** குறிக்கிறது, மேலும் இங்கே வரும் "**துன்மார்க்கர்**" என்பது பாபிலோன் எனும் **அந்திக்கிறிஸ்து** அமைப்பைப் பற்றிய குறிப்பு ஆகும், இதுகுறித்து நாம் பின்வரும் வசனத்தில் தெளிவாகக் காண்கிறோம் –

**2 தெசலோனிக்கேயர் 2:8**

**"நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே.... அழித்து .."**

**பாபிலோன் மீதான கண்டனத்தைக்** கவனியுங்கள் –

**"...இருளிலே மௌனமாவார்கள்",**

...அதில் தேவனுடைய பரிசுத்த ஆவியான **"வெளிச்சம்"** இல்லாமல் இருப்பதும், அதற்குப் பதிலாக ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியளவும், **"அசுத்த ஆவிகளுடைய காவல்வீடும்"** என்று அழைக்கப்படுமளவுக்கு அசத்தியம் மற்றும் தவறான உபதேசங்களின் **"இருளால்"** நிரம்பியிருப்பதுமாகிய அந்த அதே நிலைமையை மீண்டும் குறிக்கிறது.

**ஓ! வெளிப்பாடுகள் "...இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாய்" இருக்க, வார்த்தை எவ்வளவு அற்புதமானவகையில் இசைவுள்ளதாயிருக்கின்றது!!**

கி.பி. 33ல் தங்களுடைய **"வீடு அவர்களுக்குப் பாழாக்கிவிடப்பட்ட"** **(மத்தேயு 23:38) மாம்சீக இஸ்ரயேலில் இந்த நிகழ்வுகள் முன்னறிவிக்கப்பட்டிருப்பதாகவும்** நாம் காண்கிறோம்.

இது **அநேக வருஷங்களுக்குப் பிறகு, கி.பி. 70ல்,** அவர்களின் **அழிவுடன்** வரவிருந்த அவர்களின் **கண்டனம்** மற்றும் நிராகரிப்பு ஆகியவற்றைப் பிரதிபலிக்கிறது.

**"அமைதல்"** என்பது தேவனுடைய பரிசுத்த ஆவியின் திரும்ப எடுக்கப்படுவதைக் குறிக்கின்றதென்றால், **இந்த அமைதலின் முடிவானது அவருடைய பரிசுத்த ஆவி மீண்டும் கொடுக்கப்படுவதைக்** குறித்திடும்.

மேலும், வேதவசனம் இந்த அமைதலுக்கு ஒரு **துவக்கமும்** ஒரு **முடிவும்** இருப்பதாகக் கூறுகிறது... அது **"அரைமணிநேரமளவும்"** நீடித்ததாகக் கூறப்படுகிறது.

**அப்படியானால் "அரைமணிநேரமான" இந்தக் காலகட்டத்தின் முடிவில் யார் தேவனுடைய பரிசுத்த ஆவியைப் பெறுவார்கள்?**

இந்த **"அமைதலின்" ஆரம்பம்** என்பது, **ஏப்ரல் 1878**ல் தேவனுடைய பரிசுத்த ஆவி பாபிலோனிலிருந்து திரும்ப எடுக்கப்பட்டதைக் குறிக்கிறது என்பதை இப்போது அறிந்துகொண்டவர்களாய்... இந்த **"அமைதலின்"** காலத்திற்குப் **(வெளிப்படுத்தல் 14: 9 – 11) பிறகு** பாபிலோன் அமைப்புத் தேவனுடைய நியாயத்தீர்ப்புகளினால் **முற்றிலுமான அழிவுக்குச்** செல்லும் என்பதால், பாபிலோனுக்கு இந்தப் பரிசுத்த ஆவியை **மீண்டும் ஒருபோதும் கொடுக்க முடியாது என்பதையும்** நாம்

அறிவோம். இப்படியாக அது அடுத்து **பூமியில் இருக்கும் இன்னொன்றுக்குக் கொடுக்கப்படும்.**

**யுகங்களுக்கு (யூத யுகம் மற்றும் சுவிசேஷ யுகம்) இடையிலான இந்தக் காரியத்தை** "**ஐசுவரியவான் மற்றும் லாசரு**" என்கிற உவமையில் **நிழலாகக் காண்பிக்கப்பட்டுள்ளது –**

**லூக்கா 16:25**

"**அதற்கு ஆபிரகாம்: மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அநுபவித்தான், அதை நினைத்துக்கொள்; இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய்.**"

இங்கே "**நன்மைகள்**" **தேவனுடைய தயவை** அடையாளப்படுத்துகின்றன, மேலும் "**தீமைகள்**" **தேவனுடைய நிராகரிப்பைக்** குறிக்கிறது. ஆகவே, "**ஐசுவரியவானிடமிருந்து**" தேவனுடைய தயவு எடுக்கப்படும்போது, அது "**லாசருவுக்கு**" எவ்வாறு வழங்கப்படுகிறது என்பதை இங்கே காண்கிறோம். ஆம்! இது தேவனுடைய ஆசீர்வாதங்கள் மற்றும் தயவு **மாம்சீக இஸ்ரயேலிலிருந்து** எடுக்கப்பட்டு, **ஆவிக்குரிய இஸ்ரயேலுக்கு** வழங்கப்படுவதற்கான ஒரு படமாகும்.

இப்போது **இது யூத யுகத்தின் முடிவு** மற்றும் சுவிசேஷ யுகத்தின் துவக்கம் **குறித்த ஒரு படமாக** இருந்தது. இப்போது நாம் சுவிசேஷ யுகத்தின் **முடிவிலும்**, ஆயிரவருட யுகத்தின் துவக்கத்திலும் உள்ளோம், மேலும் தேவனுடைய **தயவின் பரிசுத்த ஆவி** இப்போது "**பாபிலோன்**" அல்லது **பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலிலிருந்து** எடுக்கப்பட்டு, **பல வேத வசனங்களிலும்** அவற்றின் சாட்சிகளிலும் நாம் **பார்க்கப்போவதுப்** போல, **இஸ்ரயேல் தேசத்திற்குக்** கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இங்கே "**அமைதலின்**" முடிவில் தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியை **இஸ்ரயேல் தேசத்தின்** மீது ஊற்றுவார் என்பதாக நாம் காண்கிறோம். இது "**யாக்கோபின் இக்கட்டுக்காலம்**" **(எரேமியா 30:7) துவங்கிய பிற்பாடே** இருக்கும், இதைப்பற்றி மிகவும் தெளிவாக பின்வரும் வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது –

**எசேக்கியேல் 37:8 – 10**

"**நான் பார்த்துக்கொண்டிருக்கையில் இதோ, அவைகள்மேல் நரம்புகளும் மாம்சமும் உண்டாயிற்று, மேற்புறமெங்கும் தோலினால் மூடப்பட்டது; ஆனாலும் அவைகளில் ஆவி இல்லாதிருந்தது. அப்பொழுது அவர் என்னைப்பார்த்து: நீ ஆவியை நோக்கித்**

**தீர்க்கதரிசனம் உரை; மனுபுத்திரனே, நீ தீர்க்கதரிசனம் உரைத்து, ஆவியை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், ஆவியே, நீ காற்றுத்திசை நான்கிலுமிருந்து வந்து, கொலையுண்ட இவர்கள் உயிரடையும்படிக்கு இவர்கள்மேல் ஊது என்கிறார் என்று சொல் என்றார். எனக்குக் கற்பிக்கப்பட்டபடி நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன்; அப்பொழுது ஆவி அவர்களுக்குள் பிரவேசிக்க, அவர்கள் உயிரடைந்து, காலூன்றி, மகா பெரிய சேனையாய் நின்றார்கள்."**

இங்கே இந்த "**உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கு**" என்கிற **தரிசனத்தில்,** எசேக்கியேல் தீர்க்கதரிசிக்கு, **இஸ்ரயேல் ஒரு தேசமாக மீண்டுமாக கூட்டிச் சேர்க்கப்படுவதையும் திரும்பவும் கட்டப்படுவதையும்,** அவர்கள் இறுதிக்கட்டமாக **தேவனுடைய பரிசுத்த ஆவியாகிய "ஆவியை / breath"** பெற்றுக்கொள்வதையும், பூமியில் தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் **முதல் தேசமாக** இருக்கப்போவதையும் வரைபடமாகக் காட்டப்பட்டுள்ளது.

**இதுகுறித்து நாம் பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் –**

**எசேக்கியேல் 39:29**

**"நான் இஸ்ரவேல் வம்சத்தார்மேல் என் ஆவியை ஊற்றினபடியினால் என் முகத்தை இனி அவர்களுக்கு மறைக்கமாட்டேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் என்றார்."**

"**ஆவி / breath**" அல்லது பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வது தாமதிக்கப்படும் என்பதாகத் தெரிகிறது. எசேக்கியேல் 37: 9ல் காணப்படுவது போல், "**நான்கு காற்றிலிருந்து**" வரும் "**ஆவி / wind**" என்பதில் அடையாளப்படுத்தப்படும் "**உபத்திரவக் காலம்**" வரையிலும், அதிலும் குறிப்பாக அந்த உபத்திரவக் காலத்தின் கடைசி அம்சமான "**யாக்கோபின் இக்கட்டுக்காலம்**" வரையிலும் அது தாமதிக்கப்படும், இதைப்பற்றி பின்வரும் வசனத்தில் தெளிவாக வாசிக்க முடிகின்றது –

**எசேக்கியேல் 38:14 – 16**

**"ஆகையால் மனுபுத்திரனே, நீ தீர்க்கதரிசனம் உரைத்து, கோகை நோக்கிச் சொல்லவேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்; என் ஜனமாகிய இஸ்ரவேல் சுகமாய்க் குடியிருக்கிற அக்காலத்திலே நீ அதை அறிவாய் அல்லவோ? அப்பொழுது நீயும் உன்னுடனேகூடத் திரளான ஜனங்களும் வடதிசையிலுள்ள உன் ஸ்தானத்திலிருந்து வருவீர்கள்; அவர்கள் பெரிய கூட்டமும் திரளான சேனையுமாயிருந்து, எல்லாரும் குதிரைகளின்மேல் ஏறுகிறவர்களாயிருப்பார்கள். நீ தேசத்தைக் கார்மேகம்போல் மூட, என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு விரோதமாக எழும்பிவருவாய்; கடைசிநாட்களிலே இது சம்பவிக்கும்;**

**கோகே, ஜாதிகளின் கண்களுக்கு முன்பாக உன்மூலமாய் நான் பரிசுத்தர் என்று விளங்கப்படுகிறதினால் அவர்கள் என்னை அறியும்படிக்கு உன்னை என்தேசத்துக்கு விரோதமாக வரப்பண்ணுவேன்."**

இஸ்ரயேலைத் தாக்கும் தேசங்கள் அனைத்தும், இஸ்ரயேலானது **தேவனுடைய வீடு** என்பதை **அறிந்துகொள்வார்கள் மற்றும் சாட்சியிடுவார்கள்,** இதைப்பற்றி நாம் பின்வரும் வசனத்தில் தெளிவாக வாசிக்கிறோம் –

**எசேக்கியேல் 38:23**

**"இவ்விதமாய் நான் அநேக ஜாதிகளின் கண்களுக்கு முன்பாக என் மகத்துவத்தையும் என் பரிசுத்தத்தையும் விளங்கப்பண்ணி, அறியப்படுவேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்."**

**மீண்டுமாக ...**

**எசேக்கியேல் 39:7**

**"இவ்விதமாய் நான் என் ஜனமாகிய இஸ்ரவேலின் நடுவிலே என் பரிசுத்த நாமத்தைத் தெரிவிப்பேன்; என் பரிசுத்த நாமத்தை இனிப் பரிசுத்தக்குலைச்சலாக்கவொட்டேன்; அதினால் நான் இஸ்ரவேலில் பரிசுத்தராகிய கர்த்தர் என்று புறஜாதிகள் அறிந்துகொள்வார்கள்."**

**மீண்டுமாக ...**

**சகரியா 8:23**

**"அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு: தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம்: ஆகையால் உங்களோடேகூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக்கொள்வார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார்."**

**இஸ்ரயேல் தேசத்தின்** மீது தேவன் **தம்முடைய பரிசுத்த ஆவியை** ஊற்றும்போதுதான் இந்த "**அமைதல்**" காலக்கட்டத்திற்கு **முற்றுப்புள்ளி** வரும் என்பதை இப்போது நாம் புரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் இஸ்ரயேலரின் "**கண்கள்**" இயேசுவை அவர்களின் நீண்டகாலமாக எதிர்ப்பார்க்கப்பட்ட அன்பான **மேசியா அல்மாஷியாவாக** "**பார்ப்பதற்காக**" திறக்கும்!

ஆம், பின்வரும் அந்த இரண்டு வசனங்களின் நிறைவேற்றம் இதுவாகும் –

**மத்தேயு 23:39**

**" கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர் என்று நீங்கள்**

**சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்."**

**ஆம்! அந்த "தருணம்" வந்திருக்கும்!**
**.... மீண்டுமாக**

**வெளிப்படுத்தல் 1:7**

**"இதோ மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும், ஆமென்."**

ஆ! ஆம்! இதுவே யெஷுவாவை (**Yeshua**) அவர்களின் அன்புக்குரிய மேசியாவாக "**பார்ப்பதற்கான**" "**தருணம்**" ஆக இருக்கும்!

 **இப்போது என்ன கேள்வி எழுகிறதென்றால்.... !??**

இது எப்போது நடக்கும்?

**இது மூன்றாம் உலகப் போர்** எனும் **இறுதி உலகளாவிய சண்டைக்கு முந்தி** இருக்குமா அல்லது **பிந்தி** இருக்குமா??

ஆ, இந்தக் கேள்விக்கான **பதில் இரண்டு** வேதவாக்கியங்களின் **சூழலைத்** தியானிப்பதன் வாயிலாக கிடைக்கின்றது! முதலாம் வசனம் –

## # 1. எசேக்கியேல் 39:26 – 29

**"அவர்கள் தங்கள் அவமானத்தையும், பயப்படுத்துவார் இல்லாமல், தாங்கள் சுகமாய்த் தங்கள் தேசத்தில் குடியிருக்கும்போது எனக்கு விரோதமாய்த் தாங்கள் செய்த எல்லாத் துரோகத்தையும் சுமந்து தீர்த்தபின்பு, நான் யாக்கோபின் சிறையிருப்பைத் திருப்பி, இஸ்ரவேல் வம்சமனைத்துக்கும் இரங்கி, என் பரிசுத்த நாமத்துக்காக வைராக்கியமாயிருப்பேன். நான் அவர்களை ஜனசதளங்களிலிருந்து திரும்பிவரப்பண்ணி, அவர்களுடைய பகைஞரின் தேசங்களிலிருந்து அவர்களைக் கூட்டிக்கொண்டுவந்து, திரளான ஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக அவர்களுக்குள் நான் பரிசுத்தர் என்று விளங்கும்போது, தங்களைப் புறஜாதிகளிடத்தில் சிறைப்பட்டுப்போகப்பண்ணின நான் தங்களில் ஒருவரையும் அங்கே அப்புறம் வைக்காமல், தங்களைத் தங்கள் சுயதேசத்திலே திரும்பக்கூட்டிக்கொண்டுவந்தேன் என்பதினால், நான் தங்கள் தேவனாகிய கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள். நான் இஸ்ரவேல் வம்சத்தார்மேல் என் ஆவியை ஊற்றினபடியினால் என் முகத்தை இனி அவர்களுக்கு மறைக்கமாட்டேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் என்றார்."**

ஆம்! **வசனம் – 29**ல் உள்ள **"நான் இஸ்ரயேல் வம்சத்தார்மேல் என் ஆவியை ஊற்றினபடியினால்.... என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்..."** எனும் அந்த முக்கியமான வார்த்தைகளை இங்கே வாசிக்கிறோம்.

**ஆனால், இது எப்போது நடக்கும்?**

**பதில் வசனம் 27ல் இருப்பதாகத் தெரிகிறது**

**"...திரளான ஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக அவர்களுக்குள் நான் பரிசுத்தர் என்று விளங்கும்போது..."**

ஆம்! இது அனைத்து தேசங்களுக்கும் எதிரான இறுதி மோதலில் தேவனால் இஸ்ரயேலின் மாபெரும் **விடுதலைக்குப் பிறகாக மாத்திரமே** இருக்க வேண்டும்.

அடுத்த **இரண்டாம் வேதவாக்கியம்** யாதெனில் –

# 2. சகரியா 12:10

**"நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்."**

இந்த வேதவாக்கியம் இஸ்ரயேலின் மீது தேவனுடைய ஆவியை ஊற்றுவதை விவரிக்கும் அதே வேளையில், மேசியாவைப் பார்ப்பதற்கும் அடையாளம் காண்பதற்கும் இஸ்ரயேலரின் "**கண்கள்**" திறக்கப்படும்போது, சமஸ்த இஸ்ரயேலிலும் ஒரு **விரிவான துக்கிக்கும்** நிலை காணப்படும் என்பதை விவரிக்கிறது.

இது மீண்டுமாக இறுதி மோதல் மற்றும் போருக்குப் **பிறகுதான்** இருக்க முடியும்... அதற்கு முன்பாக **அல்ல.**

மேலும் இந்தக் கருத்தானது, தேவனுடைய ஆவி ஊற்றப்படுவது பற்றிய இந்தக் காரியம் விவரிக்கப்பட்டுள்ள **10ம் வசனத்துக்கு முன்பாக வசனங்கள் 8 மற்றும் 9** வந்துள்ளது என்கிற கூற்றால் **அநேகமாக ஆதரிக்கப்படுகிறதாய்** இருக்கின்றது... அங்கே இஸ்ரயேலுக்கு வெற்றியைக் கொண்டுவருவதற்காக, அந்த இறுதிப் போரில், தேவனுடைய **கையும் தலையீடும்** இருக்குமென விவரிக்கிறார், இதனால் அதனைத் தொடர்ந்து வரும் **வசனம் – 10ஆனது**, "**நான் ... ஊற்றுவேன்**" எனும் வார்த்தைகளுடன் தொடங்குகிறது.

இது மீண்டுமாக **முந்தி நிகழாத,** மாறாக **பிந்தி நிகழ்கிற** ஒன்றை விவரிக்கிறது!!

ஆ! ஆம்! “**அமைதலின்**” **இரு முனைகளையும்** இப்போது **நாம் அடையாளம் கண்டுகொண்ட பிற்பாடு,** “**அரைமணிநேரமளவும்**” எனும் கால அளவைப் **புரிந்துகொள்வதும் ஒருங்கிணைப்பதும் அவசியமானதாயிருக்கின்றது.** “**பரலோகத்தில்**” அல்லது தேவனுடைய இருப்பிடத்திலிருந்து “**அமைதல்**” ஏற்பட்டது என்பதாகக் கண்டோம் – இந்த “**அமைதல்**” என்பது தேவனுடைய பரிசுத்த ஆவியைத் திரும்ப எடுக்கப்படுவதற்கான அடையாள பாஷையின் குறிப்பாகும். ஆகவே காலத்தீர்க்கதரிசனம் தொடர்பாக உள்ள தேவனுடைய கால கணக்கீட்டிலிருந்து மட்டுமே இந்தக் கால அளவைப் புரிந்துகொள்ள முடியும்.

**“சிருஷ்டிப்பின் நாட்கள்” கணக்கீட்டில் காணப்படுவது போல், அவருக்கு ஒரு நாள் என்பது 7,000 ஆண்டுகளாக இருப்பதாக நாம் காண்கிறோம்!!**

தற்போது போய்க்கொண்டிருக்கும் மனுக்குலத்தின் வரலாறு “**தேவன் ஓய்ந்திருந்த**” “**சிருஷ்டிப்பின் ஏழாம் நாள்**” ஆகும் (**ஆதியாகமம் 2:2**). இந்த “**ஏழாம் நாள்**” 7000 ஆண்டுகள் நீளம் கொண்டதாகக் கணக்கிடப்படுகிறது என்பதற்கு யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டத்தின் வரைப்படத்தின் காலக்கணக்கீடு சாட்சியமளிக்கிறது (**யோபு 5:19**). இப்படியாக தேவனைப் பொறுத்தவரையிலான காலக்கணக்கீட்டின் இந்தத் “**திறவுகோலைப்**” பயன்படுத்துவதன் மூலம், நாம் இப்போது இந்தக் காலத்தீர்க்கதரிசனத்தைப் புரிந்துகொள்ள வேண்டியிருக்கின்றது.

ஆம்! “**அரைமணிநேரமளவும்**” என்பதை எப்படி நாம் புரிந்துகொள்வது?

இந்த வேத வாக்கியத்தின் வார்த்தைகளில் அதுகுறித்து ஏதோவொரு விசேஷம் இருப்பதைக் கவனியுங்கள்!!

இந்தக் காலத்தைக் குறித்த வியாக்கியானமானது **30 நிமிடங்களுக்குள் கண்டிப்பாக கட்டுப்படுத்தப்பட்டதாகத்** தெரிகிறது.



ஆனால், மறுபுறம், இது, 30 நிமிடங்களுக்கு வெகு அருகாக, முன்னோ பின்னோ இருக்கலாம் எனும் ஒரு கால விளக்கத்தையும் குறிக்கக்கூடும்!

ஆம்! கீழே உள்ள இந்த விளக்கப்படத்தின் மூலம் இந்தக் காலகட்டத்தை இப்போது புரிந்துகொள்வோமாக.

**அமைதலின் காலப்பகுதி**

| 1878 | ( ? ) |
|---|---|
| **தேவனுடைய ஆவி திரும்ப எடுக்கப்பட்டதன் மூலம் பாபிலோனை நிராகரித்தல் (வெளிப்படுத்தல் 18:2)** | **யாக்கோபின் இக்கட்டின் போது இஸ்ரயேல் மீது தேவனுடைய ஆவி ஊற்றப்படுதல் (எசேக்கியேல் 39:20 / சகரியா 12:10)** |


தேவனுடைய காலக்கணக்கீட்டில் 30 நிமிடங்கள் அல்லது **அரை மணி நேரம்** என்பது எவ்வளவு காலம் வரும் என்பதைக் கணக்கிட முதலில் முயற்சிப்போமாக. **24 மணிநேரங்கொண்ட** ஒரு நாளில் 48 அரை மணி நேரம் இருப்பதால், இந்த **7000 ஆண்டுகளை 48 ஆல்** வகுக்க வேண்டும்!

**"பரலோகத்தில்" அரைமணிநேரம் = 7000/48**
**(நமக்கு ஒரு நாளில் 24 மணிநேரமும், 48 அரை மணி நேரமும் உள்ளன) = 145.833 ஆண்டுகள்.**

பரலோகத்தில் **சரியாக அரை மணி நேரம்** என்பது பூலோகத்தில் **145.833** ஆண்டுகள் என்பதைக் **கணக்கிட்டுப் பார்த்த பிறகாக, "அமைதலின்"** காலமானது **கிட்டதட்ட** இந்தக் கால இடைவெளியில் இருப்பதையும், இப்படியாக பரலோகத்தில் **அரை மணி நேர கால** அளவைக் காட்டிலும் **குறைவாக** அல்லது **சற்றே அதிகமாக** இருப்பதையும் **உடனடியாக உணர்கிறோம். "அமைதல்" "அரைமணி நேரமளவும்"** உண்டானது என்றுள்ள வசனத்தைக் குறித்து சொல்லும்போது, மேற்சொன்னதைத்தான் நாம் **எப்போதும்** மனதில் வைக்க **வேண்டும்.**

இப்போது காலம் (TIME) மற்றும் வருடத்தின் அடிப்படையில், இந்த 30 நிமிடங்கள் அல்லது 145.833 வருஷம் எதனைச் சுட்டிக்காட்டுகிறது?
எளிமையாக கணக்கிடலாம் வாருங்கள் –

## 145.833 ஆண்டுக்காலப்பகுதி




**(ஏப்ரல் 1878 துவக்கி இருந்துள்ள 145 ஆண்டுக்காலமானது நம்மை ஏப்ரல் 2023க்கு அழைத்துச் செல்கிறது. மேலும் ஒரு வருடத்தில் .833 எனும் பகுதியானது தோராயமாக 10 மாதங்கள் ஆகும். இது 2024ம் ஆண்டிற்கு வருகிறது!)**

இவ்வாறு, இந்த "**அமைதல்**" என்பது, "**பாபிலோன்**" எனும் அந்திக்கிறிஸ்து அமைப்புகளின் மீதான **நியாயத்தீர்ப்பின் காலகட்டம்**, மேலும் இது **மூன்றாம் உலகப் போருக்குப்** பிறகு **இஸ்ரயேல் தேசத்தின்** மீதான தேவனுடைய பரிசுத்த ஆவியின் ஊற்றப்படுதலுடன் முடிவடையும் என்பதாக உள்ள நமது புரிதலும், வியாக்கியானமும் சரியாக இருக்குமேயானால், பின்னர் இந்த "**அரைமணிநேரமளவும்**" எனும் காலப்பகுதி என்பது... இனி வரும் காலத்தின் மூலம் மாத்திரமே நம் அனைவருக்கும் தெரிய வரும்!

இது **2024 க்கு முன்னோ** அல்லது "**அரைமணிநேர**" காலப்பகுதி முடிந்தும் **சில வருடங்கள்** இருக்குமா ??

**நாம் காத்திருந்துதான் பார்க்க வேண்டும்.**

இப்போது தேவனுடைய நிலைப்பாட்டிலிருந்தும், இன்று **(2021ல் எழுதப்பட்டது)** நாம் எங்கு உள்ளோம் என்பதிலிருந்தும் இந்தக் காலகட்டம் பற்றிய ஒரு கண்ணோட்டத்தை வழங்க வேண்டுமெனில்... **2024க்கு முந்தைய 5 ஆண்டுகளுக்கான கால மதிப்புகளையும்**, ஒரு நாள் **7000 ஆண்டுகள்** எனும் தேவனுடைய காலக் கணக்கீட்டிலிருந்து 30 நிமிடங்கள் அல்லது துல்லியமாக "**அரைமணிநேரத்தின்**" நிறைவு என்பதையும் காட்டுவதற்கான ஒரு சிறிய கணக்கையும் மற்றும் **அட்டவணையையும்** உருவாக்குவோமாக! அல்லது, இது "**அரை மணிநேரம்**" காலத்தைக் கடந்தால், அதற்கும் அப்பால் சில ஆண்டுகளுக்கான கால மதிப்புகளையும் மதிப்பிட்டு வைக்கலாம்!

முதலில் நாம் **1 நிமிடத்தின்** மதிப்பை **பரலோகத்தின்** நேரத்தில் கணக்கிட வேண்டும்.

அதற்கு நாம் **30 நிமிடத்திற்கான** காலப்பகுதியை எடுத்து **30** ஆல் வகுக்கப்போகிறோம்!

**{"பரலோகத்தில்" ஒரு நிமிடம் = 145.833/30 = 4.86 ஆண்டுகள். }**

இப்போது நாம் **அட்டவணையை** உருவாக்கும்போது, **2020/2021/2022/2023 மற்றும் 2024 மற்றும் அதற்கு கொஞ்சம் தாண்டி** உள்ள **கால மதிப்புகளையும்** காண்போம் !

நாங்கள் 1878ம் ஆண்டிலிருந்து "**அமைதலின்**" காலத்தை கணக்கிடவுள்ளோம்!

இதோ அந்த அட்டவணை –

| வருஷம் | காலப்பகுதி (1878ம் வருஷம் துவக்கி) | காலக்கணக்கீடு |
|---|---|---|
| 2020 | 142 வருஷங்கள் | 142 / 4.86 = 29 நிமிடங்கள் 12 வினாடிகள் |
| 2021 | 143 வருஷங்கள் | 143 / 4.86 = 29 நிமிடங்கள் 24 வினாடிகள் |
| 2022 | 144 வருஷங்கள் | 144 / 4.86 = 29 நிமிடங்கள் 36 வினாடிகள் |
| 2023 | 145 வருஷங்கள் | 145 / 4.86 = 29 நிமிடங்கள் 48 வினாடிகள் |
| 2024 | 146 வருஷங்கள் | 146 / 4.86 = 30 நிமிடங்கள் ------------ |
| 2025 | 147 வருஷங்கள் | 146 / 4.86 = 30 நிமிடங்கள் 12 வினாடிகள் |
| 2026 | 148 வருஷங்கள் | 146 / 4.86 = 30 நிமிடங்கள் 24 வினாடிகள் |
| 2027 | 149 வருஷங்கள் | 146 / 4.86 = 30 நிமிடங்கள் 36 வினாடிகள் |
| 2028 | 150 வருஷங்கள் | 146 / 4.86 = 30 நிமிடங்கள் 48 வினாடிகள் |
| 2029 | 151 வருஷங்கள் | 146 / 4.86 = 31 நிமிடங்கள் ------------ |

**நாங்கள் எந்த வகையிலும் "தீர்க்கதரிசிகளாக" இருக்க முயற்சிக்கவில்லை ... மாறாக தீர்க்கதரிசன வார்த்தையின் மாணவர்களாக இருப்பதற்கான பணிவான மற்றும் வைராக்கியமான நிலைப்பாட்டை எடுக்க மாத்திரமே செய்கிறோம் என்பதை இங்கே வலியுறுத்த விரும்புகிறோம்!**



**என்ன நடக்கப்போகிறதென்று நாம் காத்திருந்து, பார்க்கலாம் ... மேலும், கர்த்தரின் வார்த்தையையும் அவற்றின் நிறைவேற்றத்தையும் இறுதியாகப் புரிந்துகொள்வதற்குத் கர்த்தருக்காய்த் தாழ்மையுடன் காத்திருக்கலாம். [உபாகமம் 29:29]**

கிட்டத்தட்ட சபையின் "**லவோதிக்கேயா காலம்**" முழுவதும் சரியாக நடந்திட்ட இந்த அமைதலின்போதுதான் பின்வரும் காலப்பகுதியும் வருகின்றது –

- "**கர்த்தருடைய நாள்**" (ஆமோஸ் 5:18)
- "**நீதியைச் சரிக்கட்டும் நாள்**" (ஏசாயா 61:2)
- "**கர்த்தருடைய கோபத்தின் நாள்**" (செப்பனியா 2:1 – தமிழில்)
- "**தன்னை ஆயத்தம்பண்ணும் நாள்**" (நாகூம் 2:3)

**நியாயத்தீர்ப்புகள் மற்றும் அழிவின் இந்தக் காலக்கட்டத்தில், ஆசீர்வாதம் மற்றும் தயவிற்கான ஓர் அடையாளமாக இருக்கின்ற தேவனுடைய ஆவி பூமியில் முற்றிலும் குறிக்கப்படவில்லை என்று கூறுவதே பொருத்தமானதாயிருக்கும்!**

ஆகவே, பாபிலோனிய **அந்திக்கிறிஸ்து** அமைப்பின் மீதான நியாயத்தீர்ப்பின் **ஏழாம் முத்திரை** ஆனது **1874**ம் ஆண்டில் திறக்கப்பட்டது என்பதையும், **கிட்டத்தட்ட அதே நேரத்தில் 1878ல்** (3½ வருடங்கள் கழித்து) அடையாளமான "**அமைதல்**" அல்லது **கண்டனம், நிராகரிப்பு** மற்றும் பாபிலோனை "**இருளில்**" விட்டுவிட்டு அதிலிருந்து **தேவனுடைய பரிசுத்த ஆவி எடுக்கப்படுதல்** ஆகியன துவங்கியது என்பதாக நாம் பார்த்தோம். சபை வகுப்பார் முழுமையாக நிறைவடைந்து, **கிறிஸ்துவின் சரீரம் முழுமையாக மகிமையடைந்த பிறகு,** பாபிலோனின் இறுதி அழிவு வரைக்கும் இந்தப் புறக்கணிக்கப்பட்ட நிலைமை தொடர்ந்துகொண்டேயிருக்கும். இதுகுறித்து பின்வரும் வசனத்தில் வாசிக்கலாம் –

**வெளிப்படுத்தல் 14:10**

**"அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்குமுன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்குமுன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான்"**

இதற்கிடையில், "**அமைதலின்**" "**அரைமணிநேர**" எனும் காலத் தீர்க்கதரிசனமானது,

**ஒரு தேசமாக இஸ்ரயேல் மீது** பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டு, இஸ்ரயேலில் இராஜ்யத்தின் “**கண்ணுக்குத் தெரிகின்ற**” **பாகத்தை** ஸ்தாபித்தலில் நிறைவடையப்போகிற இந்த அமைதலின் முடிவுக்காகக் காத்திருக்கின்றது.

இப்போது **அடுத்த வசனத்திற்குச்** சென்று ஏழாம் முத்திரையைப் பற்றின **நமது ஆய்வைத் தொடரலாம்** –

**வசனம் – 2**

“**பின்பு, தேவனுக்குமுன்பாக நிற்கிற ஏழு தூதர்களையுங் கண்டேன், அவர்களுக்கு ஏழு எக்காளங்கள் கொடுக்கப்பட்டது.**”

நாம் ஏற்கனவே பார்த்தபடி, இது ஒரு **ஒத்திசைவாகும்**, இங்கு முழு சுவிசேஷ யுகத்தின்போதும், அதின் ஏழு காலக்கட்டத்தின்போதும் “**ஏழு எக்காளங்கள்**” கொடுக்கப்பட்ட “**ஏழு தூதர்கள்**” பற்றிய ஒப்பீடான குறிப்புள்ளது.

**இப்போது இந்த வேத வசனத்திற்கு என்ன ஆழமான அர்த்தம் இருக்கக்கூடும்?**

ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளபடி, **வெளிப்படுத்தலின்** இந்த **8ம் அதிகாரத்தின் 1 மற்றும் 2ம் வசனங்கள்,** “**அக்கிரமத்தின் இரகசியம்**” ஆகிய பாபிலோன் மீதான நியாயத்தீர்ப்புகளை விவரிக்கிறது.

“**பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர்**”

என்று **சர்தையின் பரிசுத்தவான்கள்** விசாரித்ததைக் குறித்து **வெளிப்படுத்தல் 6:10ல்** உள்ள ஐந்தாம் முத்திரையில் நாம் முன்பு கண்டது போல, அந்திக்கிறிஸ்து “**பாபிலோன்**” அமைப்புகளின் நியாயத்தீர்ப்பு செயல்முறை குறித்து நாம் படித்த ஒரு காரியத்தை இங்கே வாசகர்களுக்கு நினைவூட்டுவது பொருத்தமாக இருக்கும்.....

ஆம்! “**நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும்**” என்ற அந்த இரண்டு வார்த்தைகளின் முக்கியத்துவத்தைப் பற்றி **63 ஆம் பக்கத்தில் (ஐந்தாம் முத்திரையின் ஆய்வில்)** வாசித்தோம்! **(தயவுசெய்து மீண்டும் பார்த்து படிக்கவும்)**

மெய்யாகவே, கள்ள பெயரளவிலான “**அந்திக்கிறிஸ்து**” சபை அமைப்புகளின் நியாயத்தீர்ப்பைப் பற்றிய அறிவொளி குறித்து சர்தையின் “**பரிசுத்தவான்கள்**” **விசாரித்ததை** இங்கே **ஐந்தாம் முத்திரையில்** காணலாம், **பின்னர்**

**லூக்கா 15:8**ன் "*விளக்கைக் கொளுத்தி* " என்பதன் "*விளக்காக*" அடையாளப்படுத்தப்படுகின்ற **ஜான் வைக்லிஃப்** என்பவரால் **ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட வேதாகமத்தின்** (வெளிச்சத்தின்) மூலமாக அவ்வமைப்பு யாரென்கிற அடையாளம் வெளிப்படத் துவங்கியது.

(**மத்தேயு 16:16, 17**ல் இயேசுவால் வினாவப்பட்ட கேள்விக்கு அப்போஸ்தலர் பேதுரு அளித்த பதிலைப் போல) எவ்வாறு **பரிசுத்த ஆவியின் ஏவுதலால்**, அந்த வார்த்தைகள் பதிவு செய்யப்பட்டன என்பதையும், இவ்வார்த்தைகள் மூலம் இந்த அமைப்புகள்மீது **எவ்விதத்தில் நியாயத்தீர்ப்பு** வழங்கப்படும் என்பதைப் பற்றிய நுண்ணறிவுகளை நமக்குத் தந்ததையும் நாம் இதுவரைக் கண்டோம். இவ்வாறாக –

## "நியாயத்தீர்ப்பு/JUDGE"

என்பது நாம் பின்வருமாறு வாசிக்கும் வேத வாக்கியத்தை நிறைவேற்றுவதில் **தெய்வீக நியாயத்தீர்ப்பை** அறிவிக்கின்ற திரும்பி வந்த கர்த்தராகிய இயேசுவால் நடத்தப்படும் பாபிலோன்மீதான இந்த நியாயத்தீர்ப்பு செயல்முறையின் **முதல் படியைக்** குறிக்கிறது, –

**வெளிப்படுத்தல் 18:2**

**"அவன் பலத்த சத்தமிட்டு: மகா பாபிலோன் விழுந்தது!"**

இந்த அறிவிப்பானது... கர்த்தர் திரும்பி வந்தது துவக்கி 3½ **வருஷம்** கழித்து **ஏப்ரல் 1878ல்**, ஆவிக்குரிய ரீதியில் அறிவிக்கப்பட்டதைப் பற்றி இங்கு **ஏழாம் முத்திரையிலும்**, "*பரலோகத்தில் ஏறக்குறைய அரைமணிநேரமளவும் அமைதல் உண்டாயிற்று*" என்று வருகிற வசனம் – 1லும் விவரிக்கப்பட்டுள்ளதாகப் பார்க்கிறோம் – இது **கி.பி. 33 (மத்தேயு 23:37, 38)** என்னும் **யூதயுக இணையுடன்** சரியாகப் பொருந்தி வருகிறது.




**1878ல்** துவங்கி ஏற்கனவே **144 வருஷம்** (**2022**ம் ஆண்டில் எழுதப்பட்டது) ஆன **லவோதிக்கேயா சபை** காலம் முழுவதும் இந்த **நியாயத்தீர்ப்பு** நிலைத் தொடர்கிறது என்பதையும் நாம் கண்டோம்.

**பின்னர் இறுதியில் இதனைத் தொடர்ந்து வருவது...**

## "பழிவாங்குதல் / AVENGE"

இந்த நியாயத்தீர்ப்புச் செயல்பாட்டின் **இரண்டாம் படியை** இது குறிக்கிறது, இது **இறுதி அழிவின்போது** இந்த ஒட்டுமொத்த சபை அமைப்புகளின் **முடிவைக்** கொண்டுவரும்: இதுகுறித்து இறுதியாக பின்வரும் வேத வாக்கியத்தில் காண்கிறோம் –

**வெளிப்படுத்தல் 19:20**

**"அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது; மிருகத்தின் முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும் அதின் சொரூபத்தை வணங்கினவர்களையும் மோசம்போக்கின கள்ளத்தீர்க்கதரிசியுங்கூடப் பிடிக்கப்பட்டான்; இருவரும் "கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே" உயிரோடே தள்ளப்பட்டார்கள்."**

ஆம்! இந்த அந்திக்கிறிஸ்து சபை அமைப்புகளின் இந்த நியாயத்தீர்ப்புச் செயல்முறையின் **இறுதி முடிவானது** "**பிடிக்கப்பட்டது**" மற்றும் "**கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள்**" **எனும் அந்த வார்த்தைகளால்** விவரிக்கப்படுகிறது.

**வசனம் – 9, இந்த நியாயத்தீர்ப்புகளின் துவக்க நிகழ்வுகளை விவரிக்கின்ற அதேசமயம், வசனம்– 2ல் இந்த நியாயத்தீர்ப்புகள் எவ்வாறு நிறைவு செய்யப்படும் என்பது மிக நுட்பமாக விவரிக்கப்படுவதாக நாம் காண்கிறோம்!**

ஆம்! **வெளிப்படுத்தல் 8:2** இது எப்படி நிறைவேறும் என்பதை விவரிக்கின்றது!

**இது எப்படி ? என்று யாராவது கேட்கலாம்.**

சரி, பதில் என்னவென்றால், **மொத்தம் ஏழு** "**எக்காளங்களை**" ஊதின இந்த அதே "**ஏழு தூதர்கள்**" தான், தங்களுடைய **மகிமைப்படுத்தப்பட்ட நிலையில்** பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளவற்றை ஊற்றுவதற்கான கருவிகளாக இப்போது தேவனால் பயன்படுத்தப்படுகிறார்கள்.

**வெளிப்படுத்தல் 15:1**

**"பின்பு, வானத்திலே பெரிதும் ஆச்சரியமுமான வேறொரு அடையாளமாகிய கடைசியான ஏழு வாதைகளையுடைய ஏழு தூதரைக் கண்டேன், அவைகளால் தேவனுடைய கோபம் முடிகிறது."**

நாங்கள் முன்பே பக்கம் – 186ல் விளக்கியுள்ளபடி, இந்த "**ஏழு தூதர்கள்**" வேறு யாருமல்ல, "**ஏழு எக்காளங்களை**" ஊதுவதற்காக கொடுக்கப்பட்ட அதே "**ஏழு தூதர்கள்**" தான் – ஆம், ஏழு சபைகளுக்கான ஏழு தூதர்கள் – இவர்களே "**தமது வலதுகரத்திலே ஏழு நட்சத்திரங்கள்**" **(வெளிப்படுத்தல் 1:16 , 20)**

ஆம்! மாம்சத்தில் இருக்கும்போதே, அவர்களுக்கு "**ஏழு எக்காளங்களின்**" ஊழியம் கொடுக்கப்பட்டது... இப்போது இந்த யுகத்தின் முடிவில், லவோதிக்கேயா சபை காலத்தின்போது, **திவ்ய சுபாவத்தின் மகிமைப்படுத்தப்பட்ட** "**ஆவியில் பிறந்த**" நிலையில் இருக்கும் போதே, "**கடைசி ஏழு வாதைகளின்**" ஊழியத்தை மேற்கொள்கிறார்கள்.

இது **வெளிப்படுத்தல் 15:6**ல் காணப்படுகிறது, அங்கு அவர்களின் மகிமைப்படுத்தப்பட்ட நிலையைக் குறித்து பின்வரும் வார்த்தைகளில் குறிப்பிடப்படுகிறது –

"**சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரந்தரித்து....**"

(திவ்ய சுபாவத்தின் பரிபூரண ஆவியின் சரீரங்கள் கொண்ட ஆவியில் பிறந்த நிலையின் உண்மையான புனிதம்!)

மேலும் "**மார்பருகே பொற்கச்சைகளைக் கட்டிக்கொண்டு...**"

(**வெளிப்படுத்தல் 1:13**ல் கர்த்தராகிய இயேசுவைப் பற்றியும் காணப்படுவது போல், திவ்ய சுபாவத்திலிருக்கும் தேவனுடைய ஊழியர்கள்)

இக்குறிப்பே நாம் **வெளிப்படுத்தல் 8:2**ல் புரிந்து கொள்ள வேண்டிய குறிப்பாகும், இங்கு, "**ஏழு எக்காளங்கள் கொடுக்கப்பட்ட**" ஏழு தூதர்கள் குறித்துள்ள நுட்பமான குறிப்பினை, **வெளிப்படுத்தல் 15ம் அதிகாரத்திற்கும்**, பாபிலோனின் இறுதி அழிவை ஏற்படுத்துகிற "**கடைசி ஏழு வாதைகள்**" அவர்களின் ஊழியத்துக்குமான ஒத்திசைவாகவும் (analog), ஒப்பீட்டுக் குறிப்பாகவும் எடுத்துக்கொள்ள வேண்டும்!

ஆம்! **இந்த வசனத்தில் [வெளிப்படுத்தல் 15:1]** "**அவைகளால் தேவனுடைய கோபம் முடிகிறது**" எனும் வார்த்தைகளை நாம் கவனிக்க வேண்டும்.

இது, **வெளிப்படுத்தலின் 16ம் அதிகாரத்தில்** விரிவாக விவரிக்கப்பட்டுள்ள பாபிலோன் மீதான **இறுதி நியாயத்தீர்ப்புகளை**, இந்த "**ஏழு பொற்கலசங்களிலிருந்து**" "**ஊற்றப்படுவதன்**" **(வெளிப்படுத்தல் 15:7)** மூலம் விவரிக்கிறது. "**ஏழாம் கலசத்தில்**" இருந்து ஊற்றப்படுவதில் உண்மையான இறுதி அழிவானது விவரிக்கப்பட்டுள்ளது –

**வெளிப்படுத்தல் 16:19**

**"அப்பொழுது மகா நகரம் மூன்று பங்காகப் பிரிக்கப்பட்டது, புறஜாதிகளுடைய பட்டணங்கள் விழுந்தன. மகா பாபிலோனுக்கு தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரத்தைக் கொடுக்கும்படி அது அவருக்கு முன்பாக நினைப்பூட்டப்பட்டது."**

ஆம்! "**அக்கிரமத்தின் இரகசியம்**" ஆகிய பாபிலோனின் இறுதி அழிவு!

ஏழாம் தூதர் மற்றும் அவர்... "**ஏழாம் கலசத்தை/கிண்ணத்தை**" அல்லது "**ஏழாம் வாதையை**" பெற்றுக்கொண்டு ஊற்றுவதைப் பற்றிய வேதவாக்கிய குறிப்பை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறோம் –

**எசேக்கியேல் 10:1, 2, 6**

**" இதோ, கேருபீன்களுடைய தலைக்குமேல் இருந்த மண்டலத்தில் இந்திரநீலரத்தினம்போன்ற சிங்காசனச் சாயலான ஒரு தோற்றத்தைக் கண்டேன்; அது அவைகளுக்குமேல் காணப்பட்டது. அவர் சணல்நூல் அங்கி தரித்திருந்த புருஷனை நோக்கி: நீ கேருபீனின் கீழ் இருக்கிற சக்கரங்களுக்கு நடுவிலே பிரவேசித்து, கேருபீன்களின் நடுவே இருக்கிற அக்கினித்தழலில் உன் கை நிறைய எடுத்து, அதை நகரத்தின்மேல் இறையென்றார்; அப்படியே அவன் என் கண்காண உள்ளே பிரவேசித்தான்."**

**"அவர் சணல்நூல் அங்கி தரித்திருந்த புருஷனை நோக்கி: நீ கேருபீன்களுக்குள் சக்கரங்களின் நடுவிலிருந்து அக்கினியை எடு என்று கட்டளையிட்டவுடனே, அவன் உள்ளே பிரவேசித்து சக்கரங்களண்டையிலே நின்றான்."**

**முந்தைய அதிகாரமாகிய – எசேக்கியேல் 9ம் அதிகாரம் வசனம் – 1 முதல் 11** வரையிலான வசனங்கள்... "**சணல்நூல் அங்கி தரித்து, தன் அரையில் மைக்கூட்டை வைத்திருக்கிற புருஷனின்**" பூமிக்குரிய ஊழியத்தை விவரிக்கிறது என்பதை பெரும்பாலான வாசகர்கள் அறிந்திருப்பார்கள் என்று நாங்கள் கருதுகிறோம்.

– ஆம்! இது **பாஸ்டர் சார்லஸ் டேஸ் ரசல் அவர்கள்** பற்றினதும், 1874 துவக்கி 1916 வரைக்கும், திரும்பிவந்திருந்த ஆண்டவர் இயேசுவுடன் இணைந்து பணியாற்றினது பற்றியுமாகும். **1916ம் ஆண்டு அக்டோபர் 31ம்** தேதி அவர் மரித்தபோது, அந்தப் பணியை நிறைவு செய்ததை **வசனம் – 11** விவரிக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆனால் இப்போது இங்கே **எசேக்கியேல் 10ம் அதிகாரத்தில் (வசனம் – 2ல்)** "**சணல்நூல் அங்கி தரித்த புருஷன்**" என்று விவரிக்கப்படுவது –

பாஸ்டர் ரசல் அவர்கள் தனது மகிமையான நிலையில், பரலோகத்திலிருப்பதைக் குறிக்கின்றது!

மேலும் ... **குறிப்பாக** அவருக்கு "**ஏழாம்**" மற்றும் கடைசி "**கலசம்**" கொடுக்கப்பட்டது குறித்து பின்வரும் வசனத்தில் விவரிக்கப்பட்டுள்ளது –

**எசேக்கியேல் 10:6 – 7**

**"அவர் சணல்நூல் அங்கி தரித்திருந்த புருஷனை நோக்கி: நீ கேருபீன்களுக்குள் சக்கரங்களின் நடுவிலிருந்து அக்கினியை எடு என்று கட்டளையிட்டவுடனே, அவன் உள்ளே பிரவேசித்து சக்கரங்களண்டையிலே நின்றான். அப்பொழுது கேருபீன்களுக்குள்ளே ஒரு கேருபீன் தன் கையைக் கேருபீன்களின் நடுவில் இருக்கிற அக்கினியில் நீட்டி, அதில் எடுத்து, சணல்நூல் அங்கி தரித்திருந்த புருஷனுடைய கையில் கொடுத்தான்; அவன் அதை வாங்கிக்கொண்டு வெளியே வந்தான்."**

ஆம்! "**ஒரு கேருபீன்**" இடமிருந்து **(கேருபீன் தெய்வீக நீதியைக் குறிக்கும்)** அவர் அக்கினியை எடுப்பது இங்கே காட்டப்பட்டுள்ளது ... இதை "**நகரத்தின்மேல் இறை**"க்க வேண்டுமென அவருக்கு (**வசனம் – 2**இல்) கூறப்பட்டது.

ஏழாம் "**கலசத்தை**" பற்றிய விளக்கத்தைக் குறித்து பின்வரும் வசனத்தில் நாம் படிக்கின்றவற்றுடன் இது முற்றிலும் தொடர்புடையதாய் இருக்கின்றது –

**வெளிப்படுத்தல் 16:19**

**"அப்பொழுது மகா நகரம் மூன்று பங்காகப் பிரிக்கப்பட்டது, புறஜாதிகளுடைய பட்டணங்கள் விழுந்தன. மகா பாபிலோனுக்கு தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரத்தைக் கொடுக்கும்படி அது அவருக்கு முன்பாக நினைப்பூட்டப்பட்டது."**

**பழிவாங்குதலையும், அழிவையும்** கொண்டுவருகிற தெய்வீக நீதி.

**இவ்வாறு "ஏழாம் முத்திரை" பற்றிய வெளிப்படுத்தல் 8ம் அதிகாரம், 1, 2 வசனங்கள், எவ்வாறு "அக்கிரமத்தின் இரகசியமான" அந்திக்கிறிஸ்து மீதான நியாயத்தீர்ப்பையும் அதன் செயல்முறையையும் விவரிக்கின்றன என்பதைப் பார்த்தோம்.**

இப்போது நமது ஆய்வில் "**ஏழாம் முத்திரையின்**" உள்ளடக்கங்களைப் பற்றி தொடர்ந்து புரிந்துகொள்ளப்போகிறோம் –

**வசனம் 3 மற்றும் 4**

**"வேறொரு தூதனும் வந்து, தூபங்காட்டும் பொற்கலசத்தைப் பிடித்துப் பலிபீடத்தின் படியிலே நின்றான்; சிங்காசனத்திற்குமுன்பாக இருந்த பொற்பீடத்தின்மேல் சகல பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தும்படி மிகுந்த தூபவர்க்கம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. அப்படியே பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தப்பட்ட தூபவர்க்கத்தின் புகையானது தூதனுடைய கையிலிருந்து தேவனுக்குமுன்பாக எழும்பிற்று."**

**2ம் வசனத்தின் தவறான புரிதலினாலும்,** ஏழாம் முத்திரையின் உள்ளடக்கங்கள் **வெளிப்படுத்தல் 8:1** எனும் **ஒரு வசனத்திற்கு மட்டுமே** மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்ற எண்ணத்தின் காரணமாகவும், இப்போது இந்த வசனத்தின் விளக்கமானது சுவிசேஷ யுகத்தின் **தொடக்கத்திற்கு** அதின் கால அளவைப் பயன்படுத்த முனைகின்றன.

**எனவே பெரும்பான்மையான விளக்கவுரையாளர்கள்,** "**தூபவர்க்கம்**" மற்றும் "**ஜெபங்கள்**" என்பவைகளைச் சரியாக விளக்குவதில் சிரமப்படுகின்றனர், மேலும் அவர்கள் இங்கு பயன்படுத்தப்படுவது அடையாள பாஷை என்பதையும், அவை **சொல்லர்த்தமாக எடுத்துக்கொள்ளக்கூடாது** என்பதையும் மறந்துவிடுகின்றனர்!

ஆனால் **இந்த வேத வசனத்தின் கால அளவு** மற்றும் அதன் அர்த்தம் லவோதிக்கேயாவின் ஏழாம் சபை காலத்திற்குள்ளாகவே காணப்படுவதை நாம் உணரும்போது … **விஷயம் இன்னும் தெளிவாகிறது**!

இந்த ஆய்வில் நாம் முன்பே அறிவுறுத்தியபடி, இது முழு ஏழாம் முத்திரையின் காலமாகிய லவோதிக்கேயா சபை காலத்தினுடைய நியாயத்தீர்ப்புக் காலத்தின் **நியாயத்தீர்ப்புகளின் இரண்டாவது அம்சத்திற்கான** குறிப்பாக இருக்கின்றது.

ஆம்! அதே 1878ம் ஆண்டில் பாபிலோனில் நியாயத்தீர்ப்புகள் அறிவிக்கப்பட்ட பின்னர் **நடந்த ஏதோவொன்றை** இது விவரிக்கிறது.

**ஆ! ஆம்! இது இரண்டாவது "இரகசியம்" - "வெளிப்படுத்தப்பட்ட இரகசியமாகிய" (உரோமர் 16:25) … கிறிஸ்து எனும் இரகசியத்தின் மீதான நியாயத்தீர்ப்புகளை விவரிக்கிறது.**

இங்கே விவரிக்கப்பட்டுள்ள விஷயத்தை **இப்போது பார்த்து, புரிந்துகொள்வோமாக…**

**முதலாவது யார் இந்த "வேறொரு தூதன்"** ?

ஆ! "**தூதன்**" என்ற வார்த்தை தூதுவரை (messengers) குறிக்கிறது, ஆனால் அவர் **2ம் வசனத்தில்** குறிப்பிடப்பட்டுள்ள "**ஏழு தூதர்களில்**" ஒருவர் அல்ல என்று வேறுபடுத்துவதற்காக அவரை "**வேறொரு தூதன்**" என்று குறிப்பிட்டுள்ளது! இந்தத் தூதன் **தேவனுக்கு முன்பாக** தோன்றி, "**சகல பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும்**" "**தூபவர்க்கம்**" செலுத்தும் ஆசாரிய கடமையைச் செய்கிறார்.

**இவை அனைத்தும் எதைக் குறிக்கின்றன?**

**முதலாவதாக,** இவை எல்லாம் அடையாள பாஷை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

**இரண்டாவதாக,** பயன்படுத்தப்படும் அடையாளங்கள் **ஆசரிப்புக்கூடார பலிகள்** மற்றும் அதின் ஆசரிப்புகளிலிருந்து வந்தவை என்பதாகக் காண்கிறோம்.

ஆம்! இது சபையின் லவோதிக்கேயா காலக்கட்டத்தில் நடைபெறுகின்ற **ஆசரிப்புக்கூடார நிழலினுடைய நிஜத்தின்** படமாகும் அல்லது **நிறைவேற்றமாகும்!**

**ஆசாரியக் கடமையைச்** செய்கின்ற இந்தத் "**தூதன்**" வேறு யாருமல்ல, "**இராஜரீக ஆசாரியக்கூட்டத்தின்**" (எபிரெயர் 4:14 – 15) **பிரதான ஆசாரியனாகிய** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே ஆவார்.

"**வேறொரு தூதனும் வந்து**" என்னும் இந்த வார்த்தைகளைக் கவனியுங்கள்.

ஆம்! இது **கர்த்தராகிய இயேசு தமது இரண்டாம் வருகையின்போது** "**வேறொரு தூதனாக**" வந்ததற்கான குறிப்பாகும்!

இங்கே அடையாளங்களில் காட்டப்பட்டுள்ள படம், அவர் தமது இரண்டாம் வருகையில் **என்ன** செய்கிறார் என்பதினுடையதாகும்!! இது சுவிசேஷ யுகம் முழுவதும் **சபைக்கான அவரது இரண்டு முக்கியமான பொறுப்புகளைச் சித்தரிக்கிறது** –

**ஒன்று...தமது உடன் ஆசாரியர்களாகிய தமது சீஷர்களுக்கான பிரதான ஆசாரியன்**

**மற்றொன்று... மாபெரும் நியாயாதிபதி முன் பரம கிருபாசனத்தின் மீதிருக்கும் ஒரு பரிந்துபேசுகிறவர் (1 யோவான் 2:1).**

**இந்தப் பொறுப்புகள் மூலமாக மட்டுமே** அவரது சரீர அங்கத்தினரின் பலிகள் “**பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமானதாக**” ஆக்கப்படுகின்றன.

ஆகவே இங்குள்ள “**மிகுந்த தூபவர்க்கம்**” என்பது பரிசுத்தவான்களின் **அன்றாட பலிகளை** அடையாளமாகக் குறிக்கின்றது **[ஆசரிப்புக்கூடார நிழல்கள் ஆங்கில பக். 65, பத்தி 3ஐக் காணவும்]**, அதே சமயம் “**மிகுந்த**” என்ற சொல்லானது இந்தப் பலிகள் **சுபாவத்தில் தனிமனிதனுக்குரியதாய்** இருந்து, 144,000 எண்ணிக்கையினர் **கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளாக** பலி செலுத்தி வருவதைக் குறிக்கிறது!

பெரியதும் சிறியதுமான பலிகள் அனைத்தும் மொத்தமாக பார்க்கும்போது நிச்சயம்.... “**மிகுந்தது**” தான் !

இப்போது “**சகல பரிசுத்தவான்களுடைய ஜெபங்கள்**” என்பது அடையாளமாக அனைத்து “**பலி செலுத்தும்**” பரிசுத்தவான்களனைவருக்கும் மிக முக்கியமான மற்றும் **உயிர்நிலையாக** இருக்கின்ற – **பாவங்களை அறிக்கையிடும் ஜெபங்களால்** தங்களின் “**நீதியின் வஸ்திரங்களைச்**” சுத்திகரித்துக்கொள்ளுதலைக் குறிக்கின்றன.



ஜெபங்கள் என்பது ஒரு பொதுவான பதமாக, பின்வருபவை போன்ற பல நோக்கங்களைக் கொண்டிருக்கக்கூடும் என்பதை நாங்கள் இங்கு குறிப்பாக சுட்டிக்காட்ட விரும்புகிறோம்...

... **பிறருக்காக ஏறெடுக்கும்** ஜெபங்கள் **(உரோமர் 1:9 / எபேசியர் 6:18 / பிலிப்பியர் 1:4)**

... **வேண்டுதல்** ஜெபங்கள் (**பிலிப்பியர் 4:6** / தமிழில் – **2 தெசலோனிக்கேயர் 3:2**)

... **நன்றிநவிலும்** ஜெபங்கள் (**எபேசியர் 1:16 / 2 கொரிந்தியர் 1:11**)

... மற்றும் **பாவஅறிக்கையின்** ஜெபங்கள் **(யாக்கோபு 5:16 / 1 யோவான் 1:9)**

“**பலியினாலான உடன்படிக்கையை**” **(சங்கீதம் 50:5)** நிறைவேற்றுவதற்கான **அன்றாட பலிகளைக்** குறிக்கின்ற இந்த “**ஜெபங்களுடன்**” செலுத்தப்படும் இந்த

"**மிகுந்த தூபவர்க்கத்தின்**" பின்னணியில் ... இந்தச் "**சகல பரிசுத்தவான்களுடைய ஜெபங்கள்**" என்பது பாவங்களை ஒப்புக்கொள்வதற்கும், "**நீதியின் அங்கியை**" **சுத்தம் செய்வதற்குமான அநுதின** ஜெபங்களுக்கு ஒரு குறிப்பிட்ட குறிப்பாக இருக்கும் (**ஏசாயா 61:10**) என்கிற முடிவுக்கு வருவது நியாயமானதாயிருக்கும்.

ஆம்! நாம் கீழே வாசிக்கும்படி விலைமதிப்பற்ற வஸ்திரத்தை அவர்கள் **சுத்திகரிப்பதற்கான ஒரே வழி** இதுதான் –

**1 யோவான் 1:9**

**"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்."**

**இரண்டு வேத வசனங்களுக்குத் திரும்புவதைத் தவிர,** பரிசுத்தவான்களுக்கான இந்த விஷயத்தின் முக்கியத்துவத்தை ஒருவர் பொருத்தமாக வலியுறுத்த முடியாது!

ஒன்று பின்வரும் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நமது ஆண்டவரின் வார்த்தைகளாகும்–

***# 1*** **லூக்கா 21:36**

**"ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்."**

ஆம்! இங்கே "**எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்**" என்பது தினந்தோறும், மணிதோறும் ஒருவர் தன்னுடைய சிந்தனைகள், வார்த்தைகள் மற்றும் செயல்களைக் கவனித்து, கிருபாசனத்திடம் சென்று உடனடியாக ஒப்புக்கொள்வதன் மூலம் "**நீதியின் வஸ்திரத்தை**" சுத்திகரித்துக்கொள்ளுவதைக் குறிக்கிறது.... இவ்வாறு வஸ்திரத்தின் **பரிசுத்தம்** பேணப்பட்டு, அன்றாட பலிகள் "**பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமானதாக**" (**ரோமர் 12:1**) இருப்பதற்கு இயலச்செய்திடும்.

இந்தக் குறிப்பிட்ட வேத வாக்கியமும், நமது கர்த்தருடைய வார்த்தைகளும், "**ஆண்டவரின் பெரிய தீர்க்கதரிசனத்தின்**" ஒரு பகுதியாக, **யுகத்தின் முடிவு** மற்றும் லவோதிக்கேயா சபையின் இறுதி நாட்களையும், நாம் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் **காலத்தையும்** கூட, குறிக்கும் ஒரு குறிப்பாக உள்ளது!

(இந்த வசனத்திற்கான எங்களுடைய இந்தக் கருத்துகள், இரண்டாம் வருகை

குறித்தும், கர்த்தருடைய பிரசன்னம் / பரோஷியா குறித்தும் வருகிற **EBC விளக்கவுரையின் பக்கம் 407ல்** உள்ள கருத்துக்களிலிருந்து வேறுபட்டவை என்பதைத் **தயவுகூர்ந்து கவனத்தில் கொள்ளவும்**)

இந்த வசனத்திற்கான எங்களது கருத்துகளுக்கான அடிப்படையை நமது **அடுத்த** வேத வாக்கியத்தின் **சூழலின்** மூலம் எங்களால் அநேகமாக நிரூபிக்க முடியும்!

## # 2 வெளிப்படுத்தல் 16:15

**"இதோ, திருடனைப்போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்."**

இப்போது இந்த வேத வாக்கியம் மீண்டுமாக நமது **கர்த்தரும்** குருவுமானவரின் **வார்த்தைகளாக** இருக்கின்றன (தயவுகூர்ந்து **ரெட் லெட்டர்** KJV பைபிள்களில் சரிபார்க்கவும்!).

சூழலானது "**ஆறாம் கலசத்தின்**" காலப்பகுதியின் முடிவும், "**ஏழாம் கலசத்தின்**" **(வசனம் 17)** ஊற்றப்படுதலுக்குச் சற்று முன்பும் இருந்தது. இது, சபையின் மகிமைப்படுத்தல் முழுமையடைவதற்கு சற்று முன்பான, யுகத்தின் இறுதிக் காலத்தைத் தெளிவாகக் குறிப்பிடுகிறது!

"**...விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன்...**" கர்த்தருடைய **எச்சரிக்கையின்** வார்த்தைகள் "**நீதியின் வஸ்திரத்தின்**" மற்றும் அது சுத்தமாகவும் "**தன் வஸ்திரங்களைக் காத்துக்கொண்டு**" பராமரிக்கப்படுவதைப் பற்றிய தெளிவான குறிப்பாகும்.

இது மீண்டும் வேறொரு வேத வசனமாகிய நாம் தியானித்துக்கொண்டிருந்த வசனத்தில் காணப்படுகிறது –

### வெளிப்படுத்தல் 8:3

**"... சிங்காசனத்திற்கு முன்பாக இருந்த பொற்பீடத்தின்மேல் சகல பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தும்படி மிகுந்த தூபவர்க்கம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது."**

**ஆம்! இரண்டும் கலப்பதை அல்லது சங்கமிப்பதைக் கவனியுங்கள்!**

"**ஜெபங்களோடு**" தூபவர்க்கத்தின் "**மிகுந்த தூபவர்க்கம்**"!

இவ்வாறு இங்கு காண்பிக்கப்படும் திருச்சபையின் **நியாயத்தீர்ப்புச் செயல்பாட்டில்**, “**சகல பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும்**” என்று விவரிக்கப்பட்டுள்ள விதத்தில் “**மிகுந்த தூபவர்க்கம்**” செலுத்துகிற இயேசுவின் மூலம் மாத்திரமே தேவனிடமிருந்து **ஏற்றுக்கொள்ளுதலும் ஒப்புதலும்** கிடைக்கும் என்பதாகக் காண்கிறோம். இங்குள்ள **முக்கிய வார்த்தை** “**ஓடும்**” ஆகும், ஏனெனில், **பாவஅறிக்கையிடும்** “**ஜெபங்கள்**” மற்றும் **தொடர்ந்து** அர்ப்பணிக்க இயலச் செய்யும் **வஸ்திரங்களைச் சுத்திகரித்தல்** போன்றவை இல்லாமல், “**தூபவர்க்கம்**” அல்லது **அநுதின பலிகள்** எதுவும் தேவனுக்குப் பிரியமானதாய் இராது ...

“*...பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலி*” (உரோமர் 12:1)

**தேவனுடைய எந்தவொரு உண்மையான பரிசுத்தவானும் இந்த அறிவில் குறைவுள்ளவராக இருக்க மாட்டார்.**
**அவர்கள் “பயப்படும்” “சிறுமந்தை” என்று அவர்களைப் பற்றி சொல்லப்படுவதில் எந்த ஆச்சரியமுமில்லை (லூக்கா 12:32)**
**ஆம்! அவர்கள் ஏதோவொரு வகையில் “குறைவுள்ளவர்களாக” காணப்படாதப்படிக்குப் பயந்திருக்க வேண்டியிருக்கிறது! (எபிரெயர் 4:1).**

ஆம்! **பிரதான ஆசாரியராகவும், பரிந்துபேசுபவராகவும்** இருக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் “**கைகள்**” (புண்ணியம்) மூலமாக மாத்திரமே, பரிசுத்தவான்கள் **பரிசுத்தமாக வைக்கப்படுகிறார்கள்**, மேலும் “**இடுக்கமான பாதையில்**” தலையின் அடிச்சுவடுகளையும் முன்மாதிரியையும் பின்பற்றுவதில் அவர்களின் அன்றாட பலிகள் தேவனுக்கு முன்பாக **ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாக்கப்படுகின்றன.**

இப்போது இந்த **இரண்டு பொறுப்புகளிலுமுள்ள** கர்த்தரின் வேலையானது **யுகம் முழுவதும்** நடந்து கொண்டிருக்கின்ற அதேவேளையில், ... இங்கே உள்ள இந்தப் படமானது இங்கே நாம் பின்வருமாறு வாசிக்கும்படி இரண்டாம் வருகையில் வெளிப்பட்ட **நியாயத்தீர்ப்பில்** நடந்து கொண்டிருக்கும் வேலையின் **முடிவை குறிப்பாக எடுத்துக்காட்டுகிறது –**

**லூக்கா 19:15**

**“அவன் ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பிவந்தபோது, தன்னிடத்தில் திரவியம் வாங்கியிருந்த அந்த ஊழியக்காரரில் அவனவன் வியாபாரம்பண்ணிச் சம்பாதித்தது இவ்வளவென்று அறியும்படி, அவர்களைத் தன்னிடத்தில் அழைத்துவரச் சொன்னான்.”**

ஆம்! **அப்போஸ்தலர் பேதுருவின்** வார்த்தைகளின் நிறைவேற்றமாக சபையின் **நியாயத்தீர்ப்புடன், நியாயத்தீர்ப்பு நாளானது** அவரது இரண்டாம் வருகையின் போது எவ்வாறு துவங்குகிறது என்பதற்கான தெளிவான படம் இதுவாகும் –

**1 பேதுரு 4:17 – "...நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்கும்..."**

ஆகவே **3ம் வசனத்தில்** இந்த **"மற்றொரு தூதன்"** குறித்து வாசிக்கும்போது, **"வேறொரு தூதனும் வந்து"** என்று நாம் வாசிக்கிறோம்.

ஆ! ஆம்! **"வந்து"** என்பது **இரண்டாம் வருகையாகும்**, அதன் பிறகு தான் சபையின் **இறுதி நியாயத்தீர்ப்புகளின்** இந்தப் படமானது வெளிப்படுகிறது.

இங்கே **நாங்கள் வசனம் – 3**ல் உள்ள **வார்த்தைகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்** –

**வசனம் – 3**

**"வேறொரு தூதனும் வந்து, தூபங்காட்டும் பொற்கலசத்தைப் பிடித்துப் பலிபீடத்தின் படியிலே நின்றான்;... சிங்காசனத்திற்குமுன்பாக இருந்த"**



ஆம்! இந்தப் **"பொற்பீடம்"** **"சிங்காசனத்திற்குமுன்பாக"** இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

இதுவும் **அடையாளப்** பாஷை என்பதை **நாம் மனதில் கொள்ள வேண்டும்.**

**அப்படியானால் இதின் அர்த்தம் தான் என்ன?**

இந்தப் **"பொற்பீடம்"** என்பது, நிஜமான பாவநிவாரண நாளினுடைய பாவநிவாரண பலியின் ஒரு பகுதியாக **"பிரியமான"** பலிகளைச் செலுத்தும் சிலாக்கியத்திலிருக்கும் சபைக்கான ஒரு படமாகும்!

நிழலான ஆசரிப்புக்கூடாரத்தின் **பரிசுத்த ஸ்தலத்திலுள்ள "பொற்பீடம்"** சுவிசேஷ யுகம் முழுதும் **திறந்திருக்கும் இந்த வாய்ப்பைக் குறிக்கிறது!**

**ஆனால் இங்கே உள்ள விஷயம் வேறு!**

**“பொற்பீடத்தில்”** அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுப் போல அந்த வகுப்பாரின் உண்மையான நியாயத்தீர்ப்பை இங்கே இந்த வார்த்தைகள் - **“சிங்காசனத்திற்குமுன்பாக”** என்பது குறிக்கிறது. இந்த வகுப்பார் அந்த வாய்ப்பில் பங்கெடுத்து, **“அந்த நாளில்”** **(2 தீமோத்தேயு 4:8)** எனும் தற்கால யுகத்தின் **முடிவில்,** அந்த நியாயத்தீர்ப்பு காலத்திற்குள் பிரவேசிக்கிறார்கள்.

**மீண்டுமாக இதே கருத்தைக்** கீழுள்ள வசனத்தில் காண்கிறோம் –

**வெளிப்படுத்தல் 20:12**

**“மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்.....”**

ஆம்! ஆயிரவருட யுகத்தினுடைய **நியாயத்தீர்ப்பு** பற்றிய ஒரு சித்திரம்.

ஆகவே, **வசனம் – 3**ல் உள்ள இந்தப் படம் சுவிசேஷ யுகத்தின் **இறுதி நியாயத்தீர்ப்புகள்** பற்றியதாகும், இது ஆசரிப்புக்கூடார நிழல்களின் அடையாளங்களில் காட்டப்பட்டுள்ளது!

**ஆசரிப்புக்கூடாரத்தில் பாவநிவாரண நாள் பலிகளின் நிழலில் அடையாளப்படுத்தப்பட்டதின் நிஜம் இதுவாகும், அங்கு பிரதான ஆசாரியன் “கர்த்தருடைய ஆட்டின்” இரத்தத்தை (இரத்தம் பலியாக்கப்பட்ட ஜீவனைக் குறிக்கும் – லேவியராகமம் 17:11) “மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு” எடுத்துக் கொண்டுபோய் கிருபாசனத்தின்மீது அதனைத் தெளித்தார் (லேவியராகமம் 16:15)**

**“கர்த்தருடைய ஆட்டின்”** பலி **“ஜனங்களுக்காக”** இருக்க வேண்டியிருந்ததை இப்போது நாம் நினைவிற்குக் கொண்டுவர வேண்டும் **(லேவியராகமம் 16:15)** இது **நிஜத்தில்** என்ன பொருளைக் கொண்டிருக்கிறதென்றால்,

**எப்படி** இரட்சிப்பின் ஆசீர்வாதமும் வாய்ப்பும், இயேசுவின் பலியை அடையாளப்படுத்துகின்ற **“காளை”**யின் பலிக்குப் பிறகு, **“தனக்கும்”** மற்றும் சுவிசேஷ யுகத்தின் சபையை அடையாளப்படுத்தும் **“அவருடைய வீட்டிற்கும்”** வந்ததோ,

**அதுபோலவே,** இரட்சிப்பின் ஆசீர்வாதமும் வாய்ப்பும், கர்த்தருடைய ஆட்டின் பலிக்குப் **பிறகு, இஸ்ரயேலில் யூதர்களிடமிருந்து துவங்கி முழு உலக மனுக்குலத்தை** அடையாளப்படுத்தும் **“ஜனங்களுக்கு”** வரும்.

கூடுதலாக **நிஜத்தில்**, பெந்தெகொஸ்தே நாளில் திருச்சபையின் ஆசீர்வாதம் **தொடங்கப்படுவதற்கு** முன்பாக...

- அதற்கு **முதலில் இயேசுவின் உயிர்த்தெழுதல்** தேவைப்பட்டது என்பதையும், **கூடுதலாக...**
- **சீஷர்களிடையே** பூமியில் **40 நாட்கள் காலம்** தேவைப்பட்டது என்பதையும்; பின்னர்
- பரத்திற்கு ஏறி, தேவனுக்கு முன்னிலையில் ... **மேலும் 10 நாட்கள்** தேவைப்பட்டது என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்.

**இவ்வாறு நிஜத்திலும்** இஸ்ரயேலில் நிறுவப்பட்டு, வெளிப்படுத்தப்பட்டிருக்கப்போகிற தேவனுடைய இராஜ்யத்தின் **கண்ணுக்குத் தெரிகின்ற பாகத்துடன்** உலகிற்கான ஆசீர்வாதங்கள் **தொடங்குவதற்கு** முன்பாக ...

- **முதலில்** அதற்கு முழு சரீரத்தின் **முதலாம் உயிர்த்தெழுதலும்**, "**ஆட்டுக்குட்டியானவரின் கல்யாணம்**" (வெளி. 19:7) என்று கூறப்பட்டுள்ள **சகல** அங்கத்தினரின் **மகிமையடைதலும்** தேவைப்படும்,
- **அத்துடன்** கண்ணுக்குத் தெரிகின்ற இராஜ்யத்தின் ஆசீர்வாதங்கள் வெளிப்படுவதற்கு முன்பு **ஒரு காலமும்** தேவைப்படும்.

ஆகவே, **முதலாம் உயிர்த்தெழுதல்** பற்றிய ஒரு படத்தை நாம் கண்டுபிடிக்க வேண்டும், அதை அடுத்த வசனத்திலேயே கண்டுபிடிக்கின்றோம் –

**வெளிப்படுத்தல் 8:4**

**"அப்படியே பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தப்பட்ட தூபவர்க்கத்தின் புகையானது தூதனுடைய கையிலிருந்து தேவனுக்குமுன்பாக எழும்பிற்று."**

ஆம்! எரியும் "**தூபவர்க்கத்தின்**" **விளைவாக** "**புகை**" எழும்பினதைக் கவனியுங்கள். இது பரிசுத்தவான்களின் **வாழ்க்கையிலுள்ள வெளிப்பாடுகளைக்** குறிக்கிறது. இது **அவர்களின் குணலட்சணத்தின் பலன்** என்று குறிப்பிடலாம்... ஆனால் இதற்கான வேத வார்த்தை பின்வரும் வசனத்தில் காணப்படுகிறது ...

**உரோமர் 8:29**

**"...தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு."**

ஓ! ஆம்! புகை "**தூதனுடைய கையிலிருந்து தேவனுக்கு முன்பாக எழும்பிற்று**" என்று நாம் வாசிப்பதற்கேற்ப இந்தப் பலிகள் தேவனால் **ஏற்றுக்கொள்ளப்படுகின்றன** மற்றும் **அங்கீகரிக்கப்படுகின்றன.**

இந்தப் "**புகை**" இவ்வாறாக **முதலாம் உயிர்த்தெழுதலைக்** குறிக்கிறது – இது மரணபரியந்தமான அவர்களின் "**பலியினாலான உடன்படிக்கை**" யிலிருந்த அவர்களின் பலியின் ஜீவியத்தை தேவன் **ஏற்றுக்கொண்டதன் விளைவாக** இந்த உயிர்த்தெழுதல் நடக்கின்றது!

இதுகுறித்து நாம் தெளிவாக பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்...

**உரோமர் 6:5**

**"ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்."**

**ஆம்! இது மிகவும் எளிமையாகவும் தெளிவாகவும் உள்ளது!**

இவ்வாறாக, **ஏப்ரல் 1878ல்**, மேலும் இந்த **நியாயத்தீர்ப்புப் பணியின்** நேரடி விளைவாக, **முதலாம் உயிர்த்தெழுதல் துவங்கியது (1 தெசலோனிக்கேயர் 4:16)**, **அது முதல் இன்றுவரைக்கும் இது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது (1 தெசலோனிக்கேயர் 4:17 / வெளிப்படுத்தல் 14:13)** விரைவில் ஒரு முக்கியமான "**சாட்சியை**" கொடுக்கும்போது (யூத யுகத்தின் முடிவில் **ஸ்தேவானில் நிழலாகக் காண்பிக்கப்பட்டபடி**) 144000 பேர்கொண்ட சரீரத்தின் கடைசி அங்கத்தினர் அல்லது "**குதிங்கால்**" அங்கத்தினர் கொல்லப்படுவதுடன் **இது விரைவில் நிறைவடையும்...**

இது ஒரு "**சாட்சியாக**" **(லூக்கா 21:13)** "**தேவனுடைய கோபத்தினுடைய ஏழாம் கலசத்தில்**" **( வெளிப்படுத்தல் 16:17 – 21 )**உள்ளடங்கியுள்ளது.

"**புகை**" மீதான ... **மற்றுமொரு கருத்து!**

**அக்டோபர் 1874க்குப்** பின் – லவோதிக்கேயா சபையின் இதே காலகட்டத்தில் "**புகை**" பற்றிய மற்றொரு குறிப்பை பின்வரும் வசனத்தில் நாம் காண்கிறோம் –

**வெளிப்படுத்தல் 15:8**

**"அப்பொழுது, தேவனுடைய மகிமையினாலும் அவருடைய வல்லமையினாலும் உண்டான புகையினாலே தேவாலயம் நிறைந்தது; ஏழு தூதர்களுடைய ஏழு வாதைகளும்**

**முடியும்வரைக்கும் ஒருவரும் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கக்கூடாதிருந்தது"**

**இது குறித்து** நாம் சகோ.ரசல் அவர்களின் **விளக்கவுரையிலிருந்தும்** (EBC), R5822 இலிருந்தும் பின்வருமாறு வாசிக்கிறோம்...

> **"முதலாம் உயிர்த்தெழுதலில் "ஜீவனுள்ள கற்களில்" கடைசி கல்லும் ஆயத்தமானதும், தேவாலயம் அவருடைய மகிமையால் நிறைந்து, ஆயிரமாண்டு முழுவதும் தேவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான சந்திப்புக்கான இடமாக இருக்கும்"** [R5822]

**பொதுவான கருத்துக்கள் மாறாக இருந்தபோதிலும்,** இங்குள்ள **"தேவாலயம்"** என்பது **ஏப்ரல் 1878** துவக்கி இருந்து வருகின்ற சபையின் மகிமைப்படுத்தப்பட்ட நிலையையும் **"ஆசரிப்புக்கூடார"** (**"பகுதியாக"** மாம்சத்தில் அல்லது ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட) நிலையில் இருந்து **"தேவாலய"** (ஆவியில் பிறந்த) நிலைக்கு **மறுரூபமாகும் முதலாம் உயிர்த்தெழுதலின்** துவக்கத்தையுமே (**1 தெசலோனிக்கேயர் 4:16 / 1 கொரிந்தியர் 15:51, 52**) குறிக்கிறது.

இங்கே குறிப்பிடப்பட்டுள்ளபடி பின்வரும் வார்த்தைகளால் இந்தச் செயல்முறை அல்லது **முதலாம் உயிர்த்தெழுதல்** நிறைவுறுகிறது –

**"ஏழு தூதர்களுடைய ஏழு வாதைகளும் முடியும்வரைக்கும்"**

**"முடியும்"** என்கிற முக்கிய வார்த்தையானது **சரீரத்தின் நிறைவுக்கு** வழிவகுக்கும் (**வெளிப்படுத்தல் 16:17** - **"ஆயிற்று"**) **ஏழாம் மற்றும் கடைசி "வாதை"** அல்லது கலசத்தைக் குறித்த குறிப்பாக இருக்கின்றது.

ஆம்! எல்லா வாதைகளின், அதிலும் மிக முக்கியமாக **ஏழாம்** மற்றும் **கடைசி "வாதை"**யின் **முடிவுறுதல்** அல்லது நிறைவுறுதல், தீர்க்கதரிசனத்தில் **துன்புறுத்தல்** மற்றும் **இரத்த சாட்சியாக மரித்தல்** என நாம் காணும் விஷயங்களின் மூலம், கிறிஸ்துவின் சரீரத்தை நிறைவடைய செய்ய வழிவகுக்கிறது!

அதின் **தீர்க்கதரிசன** வேதவாக்கிய குறிப்புகள் இதோ...

- **ஆதியாகமம் 3:15** – சர்ப்பத்தின் வித்து மற்றும் ஸ்திரீயின் வித்து – **"நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்"**
- **மத்தேயு 14:6 – 11** – ஏரோதியாள் மற்றும் அவரது மகளின்

வேண்டுகோளுக்கிணங்க, ஏரோது மற்றும் அவனது அதிகாரத்தின் மூலம், சிறையில் **யோவான் ஸ்நானகர் சிரச்சேதம்** பண்ணப்பட்டார்.



- **நியாயாதிபதிகள் 16:28 – 30 – சிம்சோன், வீட்டின் இரண்டு தூண்களை கீழே தள்ளி**, “**அதில் இருந்த எல்லா ஜனங்களையும்**” தன்னையும் கொன்ற காரியம்.

இப்படியாக, **நாம் அறிவுறுத்துவது யாதெனில்,**

☞ “**தேவனுடைய மகிமையினாலும் அவருடைய வல்லமையினாலும் உண்டான புகையினாலே தேவாலயம் நிறைந்தது**”

என்று விவரிக்கப்பட்டுள்ள **புகையின் விளக்கமானது**... முதலாம் உயிர்த்தெழுதலில் **144,000 எண்ணிக்கை முழுவதும் நிறைவடையும்போது** “**தேவாலயத்தை**” நிரப்பிக் கொண்டிருக்கும் **தெய்வீக சுபாவத்தை** அடையாளப்படுத்துவதாக உள்ளது.

இறுதியாக, “**ஒருவரும் ... பிரவேசிக்கக்கூடாதிருந்தது**” எனும் வார்த்தைகள் இராஜ்யத்தின் “**கண்ணுக்குத் தெரிகின்ற பாகத்தில்**” மகிமைப்படுத்தப்பட்ட கிறிஸ்துவின் **மத்தியஸ்த ஊழியத்தைக் குறிக்கிறது**, இது “**தேவாலயம்**” “**நிறையும்**” **மற்றும்** ஏழு வாதைகள் “**முடியும்**” **வரைக்கும்** துவங்க **முடியாது**!

இவ்வாறு **3 மற்றும் 4 வசனங்களின்** நிறைவேற்றம் **1878ல் துவக்கி** இன்றுவரை தொடர்கிறது... விரைவில் அது முடிவுக்கு வரும், **அதன் பிறகு 5ம் வசனத்தின்** நிகழ்வுகள் வரும்!

இறுதி **5ம் வசனத்துக்குச்** செல்வதற்கு முன், **வசனம் – 5ல்** மீண்டும்

குறிப்பிடப்பட்டுள்ள **வசனம் – 3**ல் உள்ள “**பொற்கலசத்தின்**” **அர்த்தம்** என்னவென்று பார்ப்போம்.



**முதலாவது, EBCல் இவ்வசனத்துக்கான விளக்கங்கள் எதுவும் காணப்படவில்லை!**

**எனவே நாம் ஜெபத்துடன் நமது ஆலோசனையை முன்வைக்க வேண்டியிருக்கிறது!**

இது அடையாள பாஷை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும், அதில் இந்தப் “**பொற்கலசம்**” ஒரு அடையாளமாகும்!

சொல்லர்த்தமாக, “**தூபகலசம்**” என்பது பிரதான ஆசாரியராலும் (**எண்ணாகமம் 16:17/46**) உடன் ஆசாரியர்களாலும் தாமிர/செம்பு பலிபீடத்திலிருந்து எடுக்கப்பட்ட நெருப்புத்தணலை (“**அக்கினி**”), “**பரிசுத்த ஸ்தலத்திற்குள்**” கொண்டு சென்று தூபபீடத்தின் மீது போடுவதற்காக பயன்படுத்தப்படுகிற ஒரு கலசமாகும்: அது பலிநிமித்தமான ஆசாரிய ஆசரிப்புகளுக்காக பயன்படுத்தப்பட்ட ஒரு பாத்திரமாகும்!

**இது ஒரு அடையாளமாக இங்கே எதனைக் குறிக்கும்?**

யூதர்களிடையே உள்ள பிரதான ஆசாரியரின் தூபகலசம் தாமிரம்/செம்பு – ஆல் செய்யப்பட்டதாகும் (யாத்திராகமம் 38:3), ஆனால் இங்கோ “**பொன் தூபகலசம்**” என்று குறிப்பிடப்படுகிறது

**இது அடையாளமாக இருப்பதால், இது பின்வருவதை குறிக்கக்கூடும் என்று நாங்கள் பரிந்துரைக்கிறோம்**

***# 1.*** இங்குள்ள ஆசாரியரும் மற்றும் அவரது ஊழியமும் **உயர்ந்த** மற்றும் **ஆகச்சிறந்த** இயல்புடையதாக இருந்தது – இங்கே “**பொன்**” என்பது பரத்திற்குரிய திவ்ய சுபாவத்தில் இருக்கும் போது ஏறெடுக்கப்படும் **தெய்வீக ஊழியத்தைக்**

குறிக்கின்றது. தம் இரண்டாம் வருகையில் இந்த ஊழியத்தை மேற்கொள்ளும்போது உண்மையில் இயேசுவும் இவ்வாறே இருக்கிறார்.

**# 2.** "**பொற்கலசத்தைப் பிடித்திருத்தல்**" என்கிற வார்த்தைகள், இந்த வார்த்தைகள் குறிக்கும் **ஒரு தெய்வீக ஊழியத்தை கர்த்தர் கொண்டிருப்பதைக்** குறிக்கிறது! மேலும் அவர் தேவனிடமிருந்து பெற்ற அந்தத் தெய்வீக ஊழியமானது.... நியாயத்தீர்ப்புக்குரியதாய் இருக்கின்றது... என்று தெளிவாக நாம் பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் –

**அப்போஸ்தலர் 17:31**

"**மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார் என்றான்.**"

இவ்வாறு, இங்கே **வசனம் – 3ல்** நியாயத்தீர்ப்பு வேலை "**தேவனுடைய வீட்டில்**" (அப்போஸ்தலன் பவுல் **2 தீமோத்தேயு 4:8ல்** நமக்குச் சொல்வது போல்) நடைபெறுகிறது என்றும் ... பின்னர் **வசனம் –5ல்... உலகினிடத்திலும்** நடைபெறும் என்பது காட்டப்படுகின்றன. இதுகுறித்து நாம் இப்போது பார்க்கவிருக்கிறோம்!

**இறுதியாக,** நாம் **5ம் வசனத்தின்** ஆய்வுக்குள் நுழைவதற்கு முன்பாக, **கிறிஸ்து** மற்றும் **அந்திக்கிறிஸ்து** எனும் இந்த இரண்டு "**இரகசியங்கள்**" தொடர்பான "**ஏழு முத்திரைகளின்**" விளக்கத்தை **நிறைவுசெய்கிற** இதுவரை பார்த்திட்ட இந்த **4 வசனங்களை** மறுபரிசீலனை செய்து, **இறுதி நியாயத்தீர்ப்புகள்** பற்றியுள்ள சிலவற்றைக் கவனிப்போமாக...

| **அந்திக்கிறிஸ்து** | **கிறிஸ்து** |
|---|---|
| **வெளிப்படுத்தல் 8:1**<br>இது அடையாளங்களைக் கொண்டு இந்த அமைப்பின் மீதான நியாயத்தீர்ப்புச் செயல்முறையைக் குறித்து, தெய்வீகக் கண்ணோட்டத்திலிருந்து விவரிக்கிறது<br>– "**அக்கிரமத்தின் இரகசியம்**"<br>– ஏப்ரல் 1878 துவக்கி நிறைவடையும் வரையிலான பல அமைப்புகள் கொண்ட ஒரு அமைப்பு. | **வெளிப்படுத்தல் 8:3**<br>இது அடையாளங்களைக் கொண்டு கிறிஸ்து மீதான நியாயத்தீர்ப்புச் செயல்முறையைக் குறித்து, தெய்வீகக் கண்ணோட்டத்திலிருந்து விவரிக்கிறது.<br>– உண்மையான சபை – ஏப்ரல் 1878 துவக்கி நிறைவடையும் வரை! |

**வெளிப்படுத்தல் 8:2**

– நீண்ட காலமாக "**கடைசியான ஏழு வாதைகளையுடைய ஏழு தூதரை**" **(வெளிப்படுத்தல் 15:1)** கருவியாகப் பயன்படுத்துவதன் மூலம் இந்த நியாயத்தீர்ப்புகள் எவ்வாறு இந்த அமைப்புகளின் முழுமையான அழிவை **(வெளிப்படுத்தல் 19:20)** கொண்டு வருகின்றன என்பதை விவரிக்கிறது.

**வெளிப்படுத்தல் 8:4**

– இறுதியாக எவ்வாறு ஏப்ரல் 1878ல் துவக்கி நீண்ட காலமாக நடந்து வருகிற கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களுடைய மற்றும் அதனைத் தொடர்ந்து "**உயிருடன் இருக்கும் நம்முடைய**" **(1 தெசலோனிக்கேயர் 4:16, 17)** தனிப்பட்ட நியாயத்தீர்ப்புகள், 1,44,000இலுள்ள ஒவ்வொருவரின் மற்றும் அனைவரின் மகிமைவாய்ந்த திவ்ய சுபாவத்துக்கான **முதலாம் உயிர்த்தெழுதலின்** நிறைவுக்கு வழிவகுக்கிறது என்பதை விவரிக்கிறது

ஆ! என்னே ஒரு வித்தியாசம்!

அந்திக்கிறிஸ்து முழு அழிவுக்குள்ளாகச் செல்லும் அதேவேளையில், துன்புறுத்தப்பட்ட கிறிஸ்துவோ முழு மகிமைக்கும், அழியாமைக்கும் திவ்ய சுபாவத்துக்கும் உயர்த்தப்படுவார்!!

**இறுதியாக இப்போது நாம் இறுதி வசனத்தை தியானிக்கலாம்**

**வசனம் – 5**

"**பின்பு, அந்தத் தூதன் தூபகலசத்தை எடுத்து, அதைப் பலிபீடத்து நெருப்பினால் நிரப்பி, பூமியிலே கொட்டினான்; உடனே சத்தங்களும், இடிமுழக்கங்களும், மின்னல்களும், பூமியதிர்ச்சியும் உண்டாயின.**"

**இவற்றுக்கெல்லாம் என்ன அர்த்தம்?**

இது எப்படி "**தூதனாகிய**" **நம்முடைய கர்த்தராகிய இயேசு, வசனம் 3 மற்றும் 4ல்** குறிப்பிடப்பட்டுள்ள வேலையை **முடித்த பின்னர்**, இந்தப் பணியை மேற்கொள்வார் என்பதைக் குறிக்கிறது. **அதே பொன் தூபகலசத்தை வசனம் 3 மற்றும் 4 மற்றும் வசனம் 5**ன் வேலைக்கு பயன்படுத்தப்படுவதால் இது மிகவும் தெளிவாக உள்ளது!! இதனால், இது முழு கிறிஸ்துவின் சரீரத்தின் **நியாயத்தீர்ப்பையும் முதலாம் உயிர்த்தெழுதலையும்** முடித்த **பிறகு** கர்த்தர் செய்யும் ஏதோவொரு காரியத்தைக் குறிக்கிறது.

**இப்போது இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள அடையாளங்களைப் பார்க்கலாம்!**

**“...அதைப் பலிபீடத்து நெருப்பினால் நிரப்பி, பூமியிலே கொட்டினான்...”**

இங்கே **“நெருப்பு” நியாயத்தீர்ப்புகளை** அடையாளப்படுத்தும் **(ஏசாயா 66:15 – 16)**. **“பூமி”** என்பது பூமிக்குரிய மனிதர்களின் ஆட்சியின் நான்கு அமைப்புகளாகிய – அரசியல், சமுதாயம், மதம் மற்றும் பொருளாதாரம் என்பவைகளை அடையாளப்படுத்தும். இது **இந்த அமைப்புகளின் மீதான தேவனுடைய இறுதி நியாயத்தீர்ப்புகளைக்** குறிக்கிறது, இதனால் அவை முற்றிலும் சரிந்துவிழும்.




இது கிறிஸ்துவின் சரீரம் நிறைவடையும் போது நடக்கும், மேலும் குறிப்பாக **“தேவனுடைய கோபாக்கினையின் ஏழாம் கலசம்”** ஊற்றப்படுவதன் மூலம் **அமைக்கப்படும்.**

**இது அடுத்ததாக நாம் வாசிக்கும் வசனத்திற்கு வழிவகுக்கிறது –**

**"....உடனே சத்தங்களும், இடிமுழக்கங்களும், மின்னல்களும், பூமியதிர்ச்சியும் உண்டாயின."**

இது விரைவாக **"மகா உபத்திரவ காலத்துக்கு"** வழிவகுக்கும் **செயல்முறையை** அடையாளப்படுத்துகின்றது. **"சத்தங்களும்," "இடிமுழக்கங்களும்"** மற்றும் **"மின்னல்களும்"** பற்றிய விரிவான விளக்கத்திற்குள்ளாக இப்போது நாம் செல்ல முடியாது. ஆனால் இவை **"தேவனுடைய கோபாக்கினையின் ஏழாம் கலசத்தில்"** இருந்து ஊற்றப்படுவதன் **விளைவுகளை** விவரிக்கும் **அடையாளங்கள்** என்று சொல்வது போதுமானதாயிருக்கும், இது **திருச்சபையின்** கடைசி அங்கத்தினரின் **இறுதி சாட்சி செய்தியாக** இருக்கும், இது **தொலைக்காட்சி சேனல்கள் மூலம் உலகளாவிய சாட்சியாக** இருக்கும்.

**"ஏழாம் கலசத்தை" பற்றிய விரிவான ஆய்வின் மூலமாகவும், குறிப்பாக வெளிப்படுத்தல் 16:17 மற்றும் "கலசத்திலுள்ளதை ஆகாயத்தில் ஊற்றினான்" என்பதன் மூலமாகவும் இந்த முடிவுக்கு வருகிறோம்.**

**இங்கே இந்த 'ஆகாயம்' என்பது ஸ்ட்ராங்ஸ் #109 'ஏர்' (aer) ஆகும், அர்த்தம்:: 'வளிமண்டலப் பகுதி.' இதற்கான தொடர்புக் குறிப்பொன்று (cross reference) உள்ளது.**

**ஸ்ட்ராங்ஸ் – கிரேக்கம் #5594 - 'சூச்சோ' (psucho) ... இது #109 'ஏர்' என்பதற்கு அடிப்படையாக இருக்கின்றது – இதற்கு "உயிரற்ற காற்று" என்று பொருள்**

**இது, ஆக்சிஜன் [மனிதர்கள் & விலங்குகள்], கார்பன் டை ஆக்சைடு (மரங்கள்) மற்றும் நைட்ரஜன் (தரை) போன்ற ஜீவன் கொடுக்கும் வாயுக்களைக் கொண்டிராத, மின்சார மின்னூட்டமடைந்த அயனிகள் கொண்ட அயனோஸ்பியர் என்னும் வளிமண்டல அடுக்கைக் [ஐந்தடுக்கில் ஒன்றைக்] குறிக்கிறது.**

**ஆம்! உலகெங்கிலும் தொலைக்காட்சி சமிக்ஞைகளைக் கடத்துவதில் கருவியாக இருக்கும் அதே அயனோஸ்பியர் தான் இது! மெய்யாகவே, 'ஏழாம் கலசம்' என்பது கடைசி 'பாத' அங்கத்தினரால் வழங்கப்பட்ட உலகளாவிய சாட்சியாக இருக்கும் – இது மத்தேயு 24:14 மற்றும் வெளிப்படுத்தல் 10: 11 எனும் 2 வசனங்களையும் முழுந்தளவுக்கு நிறைவேற்றும் வண்ணமாக உலகளாவிய தொலைக்காட்சி சேனல்களில் நேரடியாக ஒளிபரப்பப்படும்.**

**இதனால் சுருக்கமாக இந்த அடையாளங்கள் குறிப்பது யாதெனில் –**

● **சத்தங்கள்** ➤ இது **ஊடகம்** என்னும் நவீன தகவல்தொடர்பு சேனலைக் குறிக்கிறது, மேலும் குறிப்பாக **தொலைக்காட்சி செய்தி** சேனல்களான... **சிஎன்என், பிபிசி, அல் ஜசீரா, என்டிடிவி, ஃபாக்ஸ் செய்தி போன்றவை** (CNN, BBC, AL JAZEERA, NDTV, FOX NEWS, etc.). இந்த சாட்சி செய்தியானது, இப்போது பொதுவாகவும் அடிக்கடியும் குறிப்பிடப்படுவது போல – **பிரேக்கிங் நியூஸ்** என்பதாக இந்தச் சேனல்கள் அனைத்திலும், **பிராந்திய மொழி சேனல்களிலும்** கொண்டு செல்லப்படும்.




● **மின்னல்கள்** ➤ இது எதைக் குறிக்கிறதென்றால்: இப்படியாக தொலைக்காட்சி சேனல்கள் எனும் **ஊடகங்கள்** மூலம் **வெளிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து,** இது இந்த விஷயங்களின் உண்மை குறித்து மேலும் **விவாதம், விசாரணை** மற்றும் **அறிவொளி பிரகாசிப்பிக்கப்படுதலுக்கு** வழிவகுக்கும், இவை **அநேகமாக குழு விவாதங்கள்** மற்றும் மீந்திருக்கும் “**திரள்கூட்ட**” வகுப்பாரின் சில அங்கத்தினரை **உள்ளடக்கியிருக்கின்ற** கைதேர்ந்தவர்களின் **கருத்து பகிர்வு** மூலம் நடக்கலாம்! (**2 இராஜாக்கள் 2:13, 14**)

இது **2 இராஜாக்கள் 2:13, 14**ல் அதற்கான அடிப்படையைக் கொண்டிருக்கிறது ... அங்கு நாம் என்ன பார்க்கிறோம் என்றால், (எஞ்சியிருக்கும் திரள்கூட்ட வகுப்பாருக்கான நிழலாகிய) **எலிசா,** (தேவனுடைய ஊழியக்காரனாக கிடைக்கபெற்றிருக்கும் தெய்வீக அதிகாரத்தின் நிழலாகிய) **எலியாவின்**

"**சால்வையை**" எடுத்துக்கொண்டு **யோர்தான் நதிக்குச் சென்று** "**தண்ணீரை அடிக்தார்**" (இது தெய்வீகச் சத்தியம் குறித்த உலகளாவிய சாட்சிப்பகர்தலைக் குறிக்கிறது)

**வெளிப்படுத்தல் 19:6** மற்றும் 7ல் இந்தத் "**திரளான ஜனங்கள் இடும் ஆரவாரத்தின்**" சாட்சியை நாம் வாசிக்கிறோம் (இது திருச்சபை எடுத்துச் செல்லப்பட்ட பிறகு எஞ்சியிருக்கும் இந்தத் திரள்கூட்ட வகுப்பாரை மீண்டும் குறிக்கின்றது)... என்ன அறிவிக்கின்றார்கள் என்றால்...

- **வசனம் – 6** (வெளிப்படுத்தல் 19) "**சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம்பண்ணுகிறார்**" என்று அவர்கள் அறிவிப்பதாகக் காணலாம்... இது அக்டோபர் 1874 துவக்கி நடந்துகொண்டிருக்கும் **இயேசு கிறிஸ்துவின் இராஜ்ய ஆளுகையின்** சாட்சியாக இருக்கும் – ஆம்! மில்லினியம்! (வேத வாக்கியங்களின் "**ஆயிரம் ஆண்டுக்கால**" அரசாட்சி !)

- **வசனம் – 7** இங்கே இந்தத் திரள்கூட்டத்தார் "**ஆட்டுக்குட்டியானவருடைய கல்யாணம் வந்தது**" என்று சொல்கிறார்கள்... இது '**மணவாட்டி**' ஆகிய 144,000 பேர்கொண்ட சபை வகுப்பார் முழு **நிறைவடைந்துவிட்டனர்** என்கிற ஒரு சாட்சியைக் குறிக்கிறது

ஆம், இறுதியாக திரள்கூட்ட வகுப்பார்...**ஆபகூக் 3:17ல்...** "**ஆட்டுமந்தைகள் முதலற்றுப்போனாலும்**" (**எரேமியா 8:20**) என்று அறிவிப்பதாகக் காண்கிறோம். ஆகவே, இதுவே... இங்கே இந்த "**மின்னல்களின்**" ஒரு பகுதியாக இருக்கக்கூடிய பொதுவெளியில் சாட்சிசொல்லும் கடைசியாக எஞ்சியிருக்கும் '**திரள்கூட்ட**' வகுப்பாருக்கான அந்த வேதாகமரீதியிலான அடிப்படையாகும்.

- **இடிமுழக்கங்கள்** ➤ கூடுதலான **சத்தியத்தின் வெளிப்பாட்டைத்** தொடர்ந்து ("**மின்னல்**") இது அதிக சத்தம் மற்றும் **உணர்ச்சிகளுடன்** தொடர்புடைய **வாதங்களுக்கும் சர்ச்சைகளுக்கும்** வழிவகுக்கும் என்பதை இது குறிக்கிறது!

இது பின்னர் "**பூமியதிர்ச்சி**க்கு" வழிவகுக்கும்

இறுதி "**பூமியதிர்ச்சி**" இந்த அமைப்புகளின் **முழுமையான அழிவையும் முறிவையும்** குறிக்கிறது என்பதை **அறிந்துகொள்வது மாத்திரம் போதுமானதாயிருக்கும்,** பின்வரும் வசனத்தில் நாம் வாசிக்கும்படி, இதில் **முதலில்** பாபிலோன் முற்றிலுமாக அழிக்கப்படும்

**வெளிப்படுத்தல் 16:19**

"**...மகா பாபிலோனுக்கு தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள**

**பாத்திரத்தைக் கொடுக்கும்படி அது அவருக்கு முன்பாக நினைப்பூட்டப்பட்டது."**

ஆம்! பின்வரும் வசனத்தில் நாம் வாசிக்கும்படி, இது **உலக நாடுகளின்** (அரசாங்கங்களின்) **அராஜக முடிவுக்கு** வழிவகுக்கிறது

**வெளிப்படுத்தல் 16:20**

**"தீவுகள் யாவும் அகன்றுபோயின, பர்வதங்கள் காணப்படாமற்போயின."**

ஆம்! "**தீவு**" என்ற அடையாளமானது உலகின் **அனைத்து அரசாங்கங்களிலும் பெரும்பான்மையாக** இருக்கிற **ஜனநாயகங்களை [அல்லது குடியரசுகளை கூட]** குறிக்கிறது. "**மலைகள்**" அல்லது **பெரிய நாடுகள்** மற்றும் அவற்றின் அரசாங்கங்கள் முற்றிலும் வீழ்ச்சியடையும்.

இது **பின்வரும் தீர்க்கதரிசன வசனத்தின் நிறைவேற்றத்தின்போது** நடக்கும் –

**எரேமியா 30:11**

**"உன்னைச் சிதறடித்த எல்லா ஜாதிகளையும் நான் நிர்மூலமாக்குவேன்..."**

**ஆம்! மிகவும் தெளிவாக உள்ளது!**

**அனைத்து பூமிக்குரிய அரசாங்கங்களின் இந்தச் சரிவின் உச்சக்கட்டத்தில்,** தேசங்கள் **இஸ்ரயேலைத் தாக்கும்**, வேதவசனங்களில் அதற்கு பெயர் "**யாக்கோபின் இக்கட்டுக்காலம்**" என்றுள்ளது, வாசிக்கலாம் –

**சகரியா 14:2**

**"எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணச் சகல ஜாதிகளையும் கூட்டுவேன்..."**

**இதை மீண்டுமாக பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் –**

**எரேமியா 30:7**

**"ஐயோ! அந்த நாள் பெரியது; அதைப்போலொத்த நாளில்லை; அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம்; ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்."**

ஆம்! வேதவசனங்களில் நாம் வாசிப்பது என்னவெனில், இஸ்ரயேல் **வல்லமையாகவும் அற்புதமாகவும் இரட்சிக்கப்படும்,** மாபெரும் சர்வ வல்லமையுள்ள தேவனாகிய, **சேனைகளின் கர்த்தராம் யாவே [எபிரேயு பாஷையில்] தேவனுடைய மகிமையும் வல்லமையும்** எல்லா தேசங்களுக்கு முன்பாகக் காண்பிக்கப்படும்!!

ஆகவே, திடீரென்று "**சுழல்காற்று**" **(மத்தேயு 24:22)** வரும், மேலும் **தானியேல் 2ம் அதிகாரம் 35ம் வசனத்தில்** நிழலாகக் காண்பிக்கப்பட்டுள்ளபடி, **இஸ்ரயேலில் தேவனுடைய மகிமையான இராஜ்யம் பிரம்மாண்டமாக பூமியில் நிறுவப்படும்,** இங்கு

**... கல்**

(முதல் கட்டத்தில் அல்லது "தன்னை ஆயத்தம்பண்ணும் நாளில்" உலகிற்கு கண்ணுக்குத் தெரியாதவண்ணமாக கட்டுப்பாட்டிலிருக்கும் கிறிஸ்துவின் கீழான தேவனுடைய இராஜ்யத்தைக் குறிக்கிறது.)

**...இரும்பும் களிமண்ணும் வெண்கலமும் வெள்ளியும் பொன்னும் ஏகமாய் நொறுங்குதல்**

(1914ல் துவங்கிய இக்கட்டுக் காலத்தின் பெரிய காலகட்டத்தைக் குறிக்கிறது)

**... பதரைப் பறக்கடிக்கச் செய்தது**

(சாத்தானின் கருவிகள் மற்றும் மனித அரசாங்கத்தின் பலவீனமான உடைந்த மீதங்களைக் குறிக்கிறது)

**... ஒரு பயங்கரமான தூளாக்கும் செயலிலிருந்து வந்த அதே கல் இப்போது நிலையானதாகவும் வளரவும் துவங்குகிறது**

(இராஜ்யத்தின் "ஆக்கப்பூர்வமான கட்டமைக்கப்படுதலின்" பாகத்தைக் குறிக்கிறது)

**...இஸ்ரயேலில் தேவனுடைய இராஜ்யத்தின் "கண்ணுக்குத் தெரிகின்ற" பாகம் ஸ்தாபிப்பதைக் குறிக்கிறது.**

அது "**பர்வதமாக**" வளர்ந்தது என்பது **பிற்பாடு** எல்லா தேசங்களும் எருசலேமில் "**யாக்கோபின் தேவனை**" தேடும் **செயல்முறையை** இது குறிக்கிறது

**ஏசாயா 2:3**

**"திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்."**

...மற்றும்...

**சகரியா 8:22 – 23**

**“அநேக ஜனங்களும் பலத்த ஜாதிகளும் எருசலேமிலே சேனைகளின் கர்த்தரைத் தேடவும், கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம்பண்ணவும் வருவார்கள். அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு: தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம்: ஆகையால் உங்களோடேகூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக்கொள்வார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.”**



...மற்றும்....

**சங்கீதம் 22:27 – 28**

**“பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும்; ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமுகத்தில் தொழுதுகொள்ளும். ராஜ்யம் கர்த்தருடையது; அவர் ஜாதிகளை ஆளுகிறவர்.”**

**... புதிய உடன்படிக்கை ஏற்பாட்டிற்குள்ளாக தானாக மனமுவந்து பிரவேசிப்பார்கள்.**

இது இஸ்ரயேலின் மீது தேவன் தம்முடைய ஆவியை ஊற்றுகிற வேளையாகிய “**யாக்கோபின் இக்கட்டின்**” முடிவில் நிகழ்கிறது (**எசேக்கியேல் 39:29, 22, 7 / சகரியா 12:10**) மேலும் **உயிர்த்தெழுந்த முற்பிதாக்களின் தலைமையிலான இஸ்ரயேலர் அனைவரும் தேவனுடைய மகிமையான இராஜ்யத்தின்** காணக்கூடிய பிரதிநிதிகளாகவும், போதகர்களாகவும் மாறுவார்கள், இதைப்பற்றி நாம் பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் –

**ஏசாயா 1:26**

**“உன் நியாயாதிபதிகளை முன்னிருந்ததுபோலவும் உன் ஆலோசனைக்காரரை ஆதியில் இருந்ததுபோலவும் திரும்பக்கட்டளையிடுவேன்; பின்பு நீ நீதிபுரம் என்றும், சத்தியநகரம் என்றும் பெயர் பெறுவாய்.”**

இந்த **வெளிப்படுத்தல் 8:5** மற்றும் ஏழாம் முத்திரைக்கான எங்கள் தாழ்மையான கருத்துகளின் நிறைவுக்கு வருகிறோம்.

கடந்துபோய்க்கொண்டிருக்கும் தற்போதிருக்கும் “**பூமி**” எனும் தற்கால ஒழுங்குகளின் அழிவுக்குப் பிறகான நிலைமைக் (**வெளிப்படுத்தல் 21:1**) குறித்துள்ள **சில விவரங்கள் மற்றும் வசனங்களை நாம் ஏன் ஆராய்ந்து பார்த்தோம்** என்று யோசிப்பவர்களுக்கு எங்களுடைய தாழ்மையான பதில்:

முற்றிலும் வீழ்ச்சியடையப்போகிற **அரசியல் / சமுதாயம் / மதம் / பொருளாதாரம்** என்பவைகளடங்கிய தற்போதைய அமைப்புகள் எனும்

... இந்தப் “**பூமி**” மீதான நியாயத்தீர்ப்புக்குப் **பிறகு** ...

அது ஒரு புதிய பூமியைக்கொண்டு மாற்றியமைக்கப்படும்... (**வெளிப்படுத்துதல் 21:1**) இஸ்ரயேலில் தேவனுடைய இராஜ்யத்தின் கண்ணுக்குத் தெரிகின்ற பாகத்தின் திறப்புடன், இஸ்ரயேல் தேசத்தில் தொடங்கி, அனைத்து தேசங்களும், இராஜ்ய ஏற்பாட்டிலும், உட்பிரவேசிப்பதற்கான அடிப்படையாகிய புதிய உடன்படிக்கையிலும் சேருவதற்கும், அதின் கீழ் வருவதற்கும் படிப்படியாக புரிந்துகொள்ளவும், அடையாளங்கண்டுகொள்ளவும், தேடவும் செய்வார்கள்... **என்பதைக் காட்டுவதற்காகத்தான் அன்பானவர்களே!!**

**இறுதியாக தானியேலின் காரியத்தில் இருந்ததுபோல நாம் என்ன சொல்லலாம்?**

**ஆ! தானியேல் 2ம் அதிகாரம் வசனங்கள் 20 – 23ல் தானியேல் செய்ததுப் போல நாமும் நம்முடைய தேவனை மகிமைப்படுத்துவோமாக....**

**( புரிந்துகொள்வதற்காக இங்கே வேறு வார்த்தைகளில் வசனத்தைப் பதிவிடுகிறோம் !)**

**“தேவனுடைய நாமத்துக்கு என்றென்றைக்குமாக சதாகாலமும் ஸ்தோத்திரமுண்டாவதாக; ஞானமும் வல்லமையும் அவருக்கே உரியது அவர் கிருபையால் அவருடைய ஆவியால் அவருடைய இரகசியத்தை நமக்கு வெளிப்படுத்தினார். அல்லேலூயா”**

**(தானியேல் 2:20 – 23)**

**இத்துடன்**
**“ஏழு முத்திரைகள்” பற்றிய**
**நமது ஆய்வு**
**நிறைவுறுகிறது!**





இப்போது நாம் அடுத்ததாக
வெளிப்படுத்தல் புஸ்தகத்தின்
# ஏழு எக்காளங்கள்
- இன் ஆய்வுக்குள்ளாக நுழைவோமாக!

*"கர்த்தர் தம்முடைய பரிசுத்த வார்த்தைகளைப் புரிந்துகொள்வதில் அவருடைய ஆசீர்வாதங்களை வர்த்திக்கப்பண்ணுவாராக."*

*ஆமென்.*



ஏதேனும் கேள்விகள், மற்றும் உங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க
தயவுசெய்து தொடர்புக்கொள்ளுங்கள்

**+91 77601 20634**

BIBLE STUDENTS

Food for New Creature